2967

T.N.L.A. Debates

Official ~~Debates~~ Report

Vol 36 — No-3

3rd April 1987

D
V211,31 N87
N87.36.3
136512

வெளியீடு 2-2-1988 Issued 2-2-1988

2967

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

529/A4/88

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 3, 1987-தொகுதி 36-எண் 3
Friday, the 3rd April 1987-Volume 36-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

D
V211,31'N87
N87.36.3
136512
சென்னை-600 008.

# உள்ளடக்கம்.

3-4-1987.

| | பக்கம். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்.— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 447—478 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைப் பெருந்தலைவர்கள் என அழைப்பதை மாற்றியமைப்பது குறித்து .. .. | 479 |
| (ஆ) ஓட்டல்களில்பண்டங்களின் விலையைக் குறைப்பது பற்றி .. .. | 479—480 |
| (இ) சேப்பாக்கம் தொகுதியில் சில பகுதிகளில் குடிசைகள் பிரிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்பு .. | 481 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| (அ) கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூரிலிருந்து சென்ற மீனவர்கள் காணாமற் போனது குறித்து .. | 481—483 |
| (ஆ) திருச்சி மாவட்டத்திலுள்ள சில தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை மற்றும் கழிவு நீரால் பாதிப்பு .. .. .. | 483—490 |
| (இ) சேலம் மாக்னசைட் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை வழங்காமை .. | 490—495 |
| (ஈ) திருச்சி மாவட்டத்திலுள்ள கல் உடைக்கும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகையால் பாதிப்பு. .. | 495—498 |
| (உ) அடையாறு ஓரத்தில் வெள்ளத் தடுப்பு சுவர் எழுப்புவதில் தாமதம் .. | 498—500 |
| 4. அறிக்கைகள் அளித்தல்— | |
| (அ) பொதுக் கணக்குக் குழு. | 500 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு. | 500 |

பக்கங்கள்.


அரசினர் தீர்மானங்கள்.—

(அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.. .. 501

(ஆ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.. .. 501

(இ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.. .. 501

(ஈ) உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.. .. 501

6. அறிவிப்பு.—

பேரவைக் குழுக்களுக்கானத் தேர்தல்கள் குறித்து. .. .. 502

வரவு செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி. 502—638

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை.. .. 502—503

(ஆ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள் நிர்வாகம்.. .. 503—504

(இ) கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு. 504—505

(ஈ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.. .. .. 505—506

(உ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு .. .. .. 506—507

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் .. 507, 546, .. 560—561, .. 614—636

*திரு. துரை கிருஷ்ணமூர்த்தி .. .. 507—513, .. 630—631

திரு. கே. குப்புசாமி .. .. 513—520, .. 570, .. 627—628

திரு. எஸ். ரெத்தினராஜ் .. .. 520—527

டாக்டர் கே. பி. இராமலிங்கம் .. 527—536, .. 628




பக்கங்கள்.


திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. .. 537—546

*திரு. வை. பாலச்சந்திரன் .. .. 547—550

*டாக்டர் அ. பொன்னுசாமி .. .. 550—556

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. . 556—560, .. 561—563, .. 629

திரு. பு. கோ. நாராயணன் .. .. 563—567

*திரு. கே. சுப்பராயன் .. .. 567—570, .. 571, .. 572, 573, .. 574, .. 575—579, .. 627, .. 563—567

திரு. கே. ஆர். கணபதி .. .. 579—583, .. 633

*திரு. பெ. செங்கோட்டையன் .. .. 583—589

திரு. கு. வடிவேல் .. .. .. 590—593

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் .. .. 593—599, .. 630

திரு. க. பாலசுப்பிரமணியன் .. .. 599—602, .. 633

திரு. அ. ஆறுமுகம் .. .. .. 602—605, .. 629

*திரு. டி. ஆர். வேங்கடரமணன் . 605—614, .. 629

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் . 639—641

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை**

**1987 ஏப்ரல் 3, வெள்ளிக்கிழமை,**

**பங்குனி 20, அக்ஷய–திருவள்ளுவர் ஆண்டு 2018.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த
தன்மையான் ஆளப் படும்''.

நன்மையும் தீமையுமாகிய இரண்டையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவன் (செயலுக்கு உரியவனாக) ஆளப்படுவான்.

## 1. வினாக்கள்— விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### கிராம நிர்வாக அலுவலர்கள்.

**262—(*வினா எண் 842) திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்திய கிராம நிர்வாக அலுவலர் தேர்வில் தேர்வு பெற்றும், தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 150-க்கும் மேற்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் இன்னும் வேலையில் அமர்த்தப் படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 76 பேர்களே உள்ளனர்.

(ஆ) இம்மாவட்டத்தில் காலி பணியிடங்கள் 8 மட்டுமே உள்ளதால் மீதமுள்ள நபர்களை பணியிடங்கள் காலியாக உள்ள பிற மாவட்டங்களில் நியமனம் செய்யலாமா என்பது குறித்து தமிழ்நாடு தேர்வாணையத்துடன் கலந்து முடிவெடுக்க வேண்டி உள்ளது. இவர்களுக்குக் கிராம நிருவாக அலுவலருக்கான பயிற்சி அளிப்பது பற்றிய செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தேர்வாணைக் குழு மூலமாக தேர்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர்கள் வேறு மாவட்டங்களுக்குச் செல்வதற்கான ஒப்புதலை அளித்திருக்கிறார்கள் அரசுக்கு. அவர்களுக்கு விரைவிலே பயிற்சி அளித்து, வேறு வட்டங் களிலாவது அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, அந்தக் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதியும் நிச்சயிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இப்படிப் பல்வேறு மாவட்டங்களிலே மொத்தம் 359 பேர்கள் காத்திருப்போர் பட்டியலிலே இருந்து வருகிறார்கள். சில மாவட்டங்களிலே பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. சில மாவட்டங்களிலே காத்திருப்போர் பட்டியல் அதிகம் இருக்கிறது. ஆகவேதான் தேர்வாணைக் குழு வேறு மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கு ஒத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் தேர்வாணைக் குழு அந்தந்த மாவட்டத்திற்கென்று தேர்ந்தெடுத்துத் தந்திருக்கிறது. இப்பொழுது காலியிடங்கள் 195 இருக்கின்றன; 359 பேர்கள் காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறார்கள். இசைவு தந்து 195 இடங்களிலும் போடலாம் என்று குறிப்பிடுவார்களானால், 195 பேர்களையும் போட்டு விடுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற பொழுது, மீதி உள்ளவர்கள் 164 பேர்கள் தான் வருவார்கள். காலி இடங்கள் வருகின்றபொழுது அவர்களை நியமிக்க வாய்ப்பு ஏற்படக் கூடும். அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது பற்றிய செயற்குறிப்பு இருந்து வருகிறது. விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. இராசாங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, காத்திருப்போர் பட்டியலில் உள்ள 195 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். காத்திருப்போர் பட்டியலில் மீதம் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதி தரப்படுமா என்பதைக் கேட்டுக் கொள்வதோடு இப்பொழுது பணியாற்றுகின்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அந்த, அந்த தாலுகாவிலே வேலை தருகின்ற அளவுக்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, காத்திருப்போர் பட்டியலுக்கு வேலை வாய்ப்பு தர தேர்வாணைக் குழு ஒத்துக்கொள்ள வேண்டுமென்று நான் குறிப்பிட்டேன். வேறு எந்த மாவட்டங்களிலே காலி இடம் இருக்கிறதோ அந்தக் காலி இடத்திற்கு வேறு மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை அனுப்புவதற்குத் தேர்வாணைக் குழு ஒத்துக் கொள்ள வேண்டும். அப்படி அனுமதி தருவார்களானால் இந்த



195 பேர்களை வேறு பல மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கு நாம் ஆயத்தமாக இருக்கலாம், அப்படி அனுப்பும் போது இந்தக் காத்திருப்போர் செல்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். அந்த, அந்த தாலுகாவிலே தான அவர்களைப் போட வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர் கூறுவார்களானால், அவர்கள் காத்திருக்க வேண்டியதைத் தவிர, எங்கேயும் காலி இடம் ஏற்படாது. மிகுதி இருப்பவர்களுக்குக் காலி ஏற்படும் போது தான் அவர்களை வைத்து அந்த இடங்களை நிரப்புகின்ற சூழ்நிலை ஏற்படக் கூடும். ஆகவே, தேர்வாணைக் குழு தேர்ந்தெடுத்ததன் காரணமாக, அவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு தந்து விட்டதற்குப் பிறகுதான் வேறு பட்டியல் தயாரிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுமே தவிர, அவர்களுக்குத் தராமல் மற்றவர்களுக்குத் தருகின்ற சூழ்நிலை ஏற்படாது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது தஞ்சை மாவட்டத்திலே 76 பேர்கள் வேலையில் அமர்த்தப்படாமல் இருப்பதாகவும் ஆனால் அந்த மாவட்டத்திலே 8 இடங்கள் காலியாக இருப்பதாகவும் தெரிவித்தார்கள். அந்த 8 இடங்களைத் தாமதம் இல்லாமல் நிரப்புவதற்கு அரசு முன் வருமா? அதோடு மீதிபேர்களை தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலிலே சீனியாரிட்டி அவர்களுக்கு இருக்குமானால் முன்னுரிமை கொடுத்து வேறு மாவட்டங்களில் பணியில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதியிருப்போரின் பட்டியலில் 76 பேர்கள் இருக்கிறார்கள். காலியிடங்கள் எட்டு இருக் கின்றன. காலியிடங்கள் 8 இருப்பதன் காரணமாக 76 பேர்களில் காலியிடங்களை நிரப்புவதில் கடினம் இருக்காது. மிகுதியாக இருப்பவர்களை மற்ற இடங்களிலே அமர்த்துவதற்கு அனுமதிக்க வேண்டுமென்ற நிலை ஏற்படும். ஆகவே தேர்வாணைக் குழு அதை அனுமதித்ததற்குப் பிறகு அதைச் செய்யலாம்.

### பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ்.

263—(*வினா எண் 1335) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் எந்தெந்த பயிர்களுக்கு செய்யப்படுகிறது?

(ஆ) மதுரை மாவட்டத்தில் எந்தெந்த பகுதியில் இது அமல்படுத்தப்படுகிறது?

[1987 ஏப்ரல் 3

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பயிர் ஈட்டுறுதித் திட்டம் தமிழ்நாட்டில் நெல், நிலக்கடலை, எள், சோளம், கம்பு, கேழ்வரகு ஆகிய பயிர்களுக்கு செயல்படுத்தப் படுகிறது.

(ஆ) பயிர் ஈட்டுறுதித் திட்டம் மதுரை மாவட்டத்தில் மதுரை (கிழக்கு), மதுரை (மேற்கு), மேலூர் கொட்டாம்பட்டி, திருப்பரங்குன்றம், திருமங்கலம், கல்விக்குடி, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, செல்லம்பட்டி, சேடபட்டி, கம்பம், பெரியகுளம், உத்தமபாளையம், சின்னமானூர், ஆண்டிப்பட்டி, அலங்கா நல்லூர் ஆகிய வட்டாரங்களில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிர் காப்புறுதித் திட்டத்தின் மூலமாக 1986–87 ஆம் ஆண்டில் பயன் பெற்ற விவசாயிகள் எத்தனை பேர்கள், அவர்களுக்கு நட்ட ஈடாக அரசு அளித்த தொகை எவ்வளவு? மாவட்டங்களிலே சில ஒன்றியங்களிலே தான் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. மாநிலம் முழுவதும் எப்போது இது அமல்படுத்தப்படும் என்ற விவரங்களை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டிலிருந்து நாம் கணக்குப் பார்ப்போமேயானால் 1985 ஆம் ஆண்டு கார் பருவ காலத்திலே விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில் நெல் பயிருக்கு 147 வட்டாரங்களில் செயல் ஆக்கப்பட்டதில் 51,635 விவசாயிகள் 73,195 ஹெக்டேரில் உள்ள நிலங்களை 18 கோடியே 36 லட்சம் ரூபாய்க்கு ஈட்டுறுதி செய்து 36 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் பிரிமியமாகச் செலுத்தினர். 1985 மானாவாரி நிலக்கடலைப் பயிருக்கு இந்த திட்டம் 91 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டதில் 3,194 விவசாயிகள் 5,117 ஹெக்டேர் நிலங்களில் உள்ள பயிர்களை 79 லட்சம் ரூபாய்க்கு ஈட்டுறுதி செய்து 79 ஆயிரம் ரூபாய்களை பிரிமியமாகச் செலுத்தினர். 1985-86 ஆம் ஆண்டு ராபி பருவக் காலத்திலே இந்தத் திட்டத்தில் நெல் இரண்டாம் பயிர்களுக்கு 234 வட்டாரங் களிலும் பாசனப் பயிருக்கு 137 வட்டாரங்களிலும் செயல் படுத்தப்பட்டன....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே ஒரு சட்டமன்றம் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்களும் உறுப்பினர்களும் இதிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தத் திட்டத்தில் 38,527 விவசாயிகள் 54,465 ஹெக்டேர் நிலங்களில் உள்ள பயிர்களை 13 கோடியே 83 லட்சம் ரூபாய்க்கு ஈட்டுறுதி செய்து 27 லட்சத்து 67 ஆயிரம் ரூபாயை பிரிமியமாகச் செலுத்தினர்.



1987 ஏப்ரல் 3]

பாசன நிலக்கடலைத் திட்டத்தில் 12,837 விவசாயிகள் 18,484 ஹெக்டேர் நிலங்களில் உள்ள பயிர்களுக்கு 3 கோடியே 91 லட்சம் ரூபாய் ஈட்டுறுதி செய்து 3 லட்சத்து 91 ஆயிரம் ரூபாயை பிரிமியமாகச் செலுத்தினர். 1986 ஆம் ஆண்டு கார் பருவ காலத்திலே நெல் முதல் பயிர் 250 வட்டாரங்களிலும், மானாவாரி நிலக்கடலை 146 வட்டாரங்களிலும், எள் 77 வட்டாரங்களிலும், சோளம் 100 வட்டாரங்களிலும், கம்பு 79 வட்டாரங்களிலும் கேழ்வரகு 58 வட்டாரங்களிலும் செயலாக்கப் பட்டது. 1986-87 ராபி பருவ காலத்திலே நெல் இரண்டாம் பயிருக்கு 249 வட்டாரங்களிலும் பாசனப் பயிர்களாக நிலக் கடலைப் பயிர் 138 வட்டாரங்களிலும் சோளம் 69 வட்டாரங் களிலும், கம்பு 80 வட்டாரங்களிலும், கேழ்வரகு 90 வட்டாரங் களிலும், எள் 63 வட்டாரங்களிலும் செயலாக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சில தானியங்கள் எண்ணெய் வித்துக்கள் தான் இந்தத் திட்டத்திலே கொண்டுவரப்பட்டு இருக்கிறது என்று தெரிகிறது. மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் வெங்காயம் போன்ற பயிர்களை விவசாயிகள் உற்பத்தி செய்கிறார்கள்.

உண்மையிலே மற்றைய பயிர்களை விட மிகப் பெரிய பாதிப்புக்கு விவசாயிகளை உள்ளாக்குவது இந்தப் பயிர். எனவே, வருகிற ஆண்டிலாவது இந்தப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வெங்காயத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சியினை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கோரிக்கை விவசாயிகளிடத்திலே இருக்கிறது. இதற்கு மைய அரசினுடைய அனுமதி பெற வேண்டும். மைய அரசின் அனுமதி பெற்றதற்குப் பிறகு, பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழும் தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதி திட்டத்தின் கீழும் இணைந்து செயல்படுத்த வேண்டும். மைய அரசுக்கு இந்தக் கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தின் கீழ் எந்த எந்தப் பயிர்கள் இன்ஷூர் செய்யப்பட்டிருக்கின்றன, எத்தனை கோடி என்று சென்னார்கள். எந்தெந்த கம்பெனிகள் மூலம் இன்ஷூர் செய்யப் பட்டிருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த கம்பெனிகள் என்ற விவரங்கள் இல்லை. ஆனால், மைய அரசால் அனுமதிக்கப்பட்ட பயிர் ஈட்டுறுதித் திட்டம் 1-4-1985 முதல் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதி மூலம், பொதுக் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. வேறு கம்பெனிகள் மூலம் செயல்பட்டு வருகிறதா என்ற விவரக் குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வெங்காயம் போன்ற பயிர்களைக் கொண்டு வர மைய அரசிடம் கூறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல், மஞ்சள் மற்றும் பழ வகைகளிலே, திராட்சை போன்ற பயிர்கள் எல்லாம் மிக அதிகமான அளவிலே செலவிட்டு பயிரிடுகிறார்கள். அவை போன்ற பயிர்களையும் பயிர் பாதுகாப்பு இன்ஷுரன்ஸ் திட்டத்திலே சேர்த்துக் கொள்ள மைய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற்குறிப்புகள் இல்லை.

திரு. இரா. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பயிர்ப் பாதுகாப்பு இன்ஷுரன்ஸ் திட்டத்தை அமுல்படுத்த வட்டாரங்களை தேர்ந்தெடுக்கிறபொழுது, எந்த,எந்த அடிப்படையில் அந்த வட்டாரங்களைத் தேர்வு செய்கிறார்கள்? அப்படித் தேர்வு செய்யப்பட்ட வட்டாரங்கள் ஓராண்டு முடிந்த உடனே, அடுத்த வட்டாரத்திற்கு மாற்றுவதற்கான வாய்ப்புக்கு ஏற்பாடு செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, திட்டத்தின்படி ஒரு வட்டாரத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட உறுதியளிக்கப்பட்ட விளைச்சலைவிட அவ்வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட 16 பயிர் அறுவடை பரிசோதனைகளில் 8 கிராமங்களில் 1 கிராமத்தில் 2 பரிசோதனை மூலம் காணப்படும் சராசரி விளைச்சலின் அளவு குறைவாக இருந்தால் அவ்வட்டாரத்தில் ஈட்டுறுதி செய்ய அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் விளைச்சலின் அளவு குறைவாகக் கருதப்பட்டு ஈட்டுறுதி வழங்கப்படும் என்ற முறையின் அடிப்படையிலேதான் இந்தத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. ஆங்காங்கு அவ்வப்போது ஏற்படுகிற சூழ்நிலையை ஒட்டி இந்த ஈட்டுறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 264 மற்றும் 265 சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

விவசாயிகளிடமிருந்து வர வேண்டிய கடன் தொகை.

264.—(*வினா எண். 2204) திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், நிலவள வங்கி மூலமாகவும், வழங்கப்பட்ட கடன்களில் 30-6-1984 முடிய நிலுவையிலுள்ள கடன் அளவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்ட கடன்களில் 30-6-1984 அன்று 31,873.16 இலட்சம் ரூபாயும் நிலவள வங்கிகள் மூலமாக வழங்கப்பட்ட கடன்களில் 18,750.73 இலட்சம் ரூபாயும் நிலுவையாக இருந்தன.

265.—(*வினா எண் 11226) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

30-6-1986 முடிய கூட்டுறவுத் துறைக்கு விவசாயிகளிடமிருந்து வரவேண்டிய கடனில் அசல் மற்றும் வட்டி முறையே எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30-6-1986 முடிய கூட்டுறவுத் துறைக்கு விவசாயிகளிடமிருந்து வரவேண்டிய கடன் ரூ. 434.85 கோடி, வட்டி ரூ. 139.17 கோடி.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலுவையிலுள்ள வட்டியில் இந்த அரசு அறிவித்து இருக்கக் கூடிய சலுகையின் அடிப்படையிலே இதுவரையில் எவ்வளவு தொகை வட்டி தள்ளுபடி சலுகையின் கீழ் விவசாயிகள் பெற்றிருக்கிறார்கள்? அடுத்த தவணை ஜூன் 30-க்குள் கட்ட வேண்டுமென்று சொல்லியிருப்பதை தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய வறட்சியைக் கருதி, 1988 ஆம் ஆண்டு வரையிலே இந்தத் தவணையை ஒத்திவைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 28-2-1987 வரையில் வசூலான தொகை பற்றிய முழு விவரக் குறிப்பும் என்னிடத்தில் இல்லை. ஆனால் ஓரளவுக்கு வசூலாகியிருக்கிறது; இன்னும் வசூலாகிக் கொண்டிருக்கிறது. பாக்கியை பெரும்பகுதியினர் செலுத்தியிருக்கிறார்கள்; முழுமையாகச் செலுத்தியவர்களும் இருக்கிறார்கள்; பாதி செலுத்தியவர்களும் இருக்கிறார்கள். 30-6-1987-க்குள் மொத்தத்தையும் செலுத்த வேண்டும். ஏற்கெனவே இப்படிப்பட்ட ஆணை வந்து, அது நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. கோ. வீரய்யன் : தலைவரவர்களே, 28-2-1987-க்குள் விவசாயிகளில் பலர் முழுமையான கடனையும் பலர் பாதிக் கடனையும் செலுத்தியிருக்கிறார்கள். மேலும் ஜூன் 30-க்குள் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் இருக்கிற வறட்சி நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இன்னும் கொஞ்ச நாட்களுக்கு கருணை அடிப்படையில் தள்ளி வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, 30-6-1986 முடிய அரசுக்கு கூட்டுறவுத் துறையிலிருந்து வரவேண்டிய அசல் 434 கோடி ரூபாய் என்றும் வட்டி 139 கோடி ரூபாய் என்றும் சொன்னார்கள். இதற்கு முன்னால் பல்வேறு நேரங்களில் சொன்னாலும் கூட, நான் இப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்வது, இதுவரை வரலாறு காணாத அளவுக்கு வறட்சி இந்த ஆண்டு கடுமையாக இருக்கிற காரணத்தால் விவசாயிகள் குடிபெயரக்கூடிய அபாயகரமான நிலைமை அவர்களுக்கு உருவாகியிருப்பதால், தினசரி உணவுக்கே போராடிக் கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் தாராளமனதோடு மனிதாபிமான அடிப்படையில் கடன் வசூலை ஒத்திவைக்க இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த ஆண்டு கடுமையான வறட்சியாக இருக்கலாம். இந்தபாக்கி எல்லாம் 10 ஆண்டு, 12 ஆண்டு காலத்திற்கு முன்னாலிருந்தே இருக்கிறது. இதற்கு முன்னால் இப்படிப்பட்ட வறட்சி இல்லை என்பது உண்மை. அப்போது ஏன் அவர்கள் கட்டாமல் இருந்தார்கள்? ஏன் அசட்டையாக இருந்தார்கள்? ஏன் கட்ட மறந்தார்கள் என்பதை மாண்புமிகு சித்தன் அவர்கள் தான் சொல்ல வேண்டும். அப்படிக்கட்டாமல் இருந்ததால், வறட்சி காரணமாக ஓரளவுக்கு முடியாமல் இருந்தாலும், பாக்கி வசூலாக வேண்டுமே என்பதற்காக அரசு சலுகை அளித்திருக்கிறது. 125 கோடி ரூபாய்க்கு அரசு பொறுப்பேற்றிருக்கிறது. தள்ளுபடி, தள்ளுபடி என்பதால் அதற்கு தள்ளிவிட்டார்கள் என்று பொருள் அல்ல. அதற்கு அரசு பொறுப்பேற்றுக்கொள்கிறது என்றுதான் பொருள். 125 கோடி ரூபாய் அரசு நிதியிலிருந்து கூட்டுறவுத் துறைக்கு தருகிறோம் என்று பொருள். அரசு கஜானாவிலிருந்து கூட்டுறவுத் துறைக்கு மாறுகிறது என்பதைத் தவிர விவசாயிகளிடம் வசூல் செய்யாமல் விட்டுவிடுகிறோம் என்று கருதக்கூடாது. ஆகவே, அசல், வட்டி, அபராத வட்டி, சலுகை பற்றி எடுத்துச் சொன்னோம். காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் மற்ற கட்சித் தலைவர்களும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 28-2-1987 வரையில் கருணைகாட்டி கடன் வசூல் ஒத்திவைக்கப்பட்டது;



அவர்களுடைய அறுவடை முழுவதும் கிடைத்து, கட்டக்கூடிய அளவுக்கு 28-2-1987 வரை காலம் நீட்டிக்கப்பட்டது. இந்த அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 28-2-1987 வரை பல்வேறு கட்சித் தலைவர்கள், குறிப்பாக தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒத்திவைக்கப் பட்டதாகச் சொன்னார்கள். அது வரவேற்கத் தக்கது. ஆனால் வறட்சி இவ்வளவு கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்க வில்லை. வசதிபடைத்தவர்களிடம் வசூல் செய்ய வேண்டும்; அவர்கள் கட்டாமல் இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் வறட்சியின் காரணமாக ஒரு வேளை உணவுக்கும் வழியில்லாமல், கட்ட இயலாமல் இருக்கிறவர்களுக்கு, முடியாமல் இருப்பவர்களுக்கு அரசாங்கம் கடனை ஒத்திவைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இயலாதவர்கள் என்ற கணக்கை எந்த அடிப்படையில் நிர்ணயிப்பது, எந்த ஸ்கேலை வைத்து அளந்து பார்ப்பது என்று தெரியவில்லை. இயலாதவர்கள் எல்லாம் திருமணம் நடத்துகிறார்கள், திருவிழா நடத்துகிறார்கள், கும்பாபிஷேகம் பண்ணுகிறார்கள், யாகசாலை நடத்துகிறார்கள், கஜபூஜை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு செலவுகளுக்கு இடம் கொடுக்கும்போது இந்த சாதாரண கடன் பணத்தைக் கட்ட முடியாதவர்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே, இப்போது இருக்கிற நிலைமை நடைமுறையில் இருக்கிறது. நிலைமைகளை அரசு கூர்ந்து கவனித்து வருகிறது.

சைதையில் கூட்டுறவுத் துறை மூலம் சுயசேவை அங்காடி.

266—(*வினா எண். 12155) திரு சைதை சா. துரைசாமி: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைதை தொகுதியில் கூட்டுறவுத் துறையின் சார்பில் புதிய சுயசேவைப் பிரிவு அங்காடி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் மொத்தம் எத்தனை சுய சேவைப் பிரிவு அங்காடிகள் கூட்டுறவுத் துறையில் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? விரிந்து, பரந்துகொண்டிருக்கிற சென்னை

மாநகரில் நுழை வாயிலாக இருக்கிற எனது தொகுதியில் புதிதாக சுய சேவைப் பிரிவு அங்காடி திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-20]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, அண்ணா நகர், திருவல்லிக்கேணி நுகர் கூட்டுறவுச் சங்கம், அண்ணாசாலை காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி, மற்றும் பெசன்ட் நகர். திருவல்லிக்கேணி, அசோக் நகர் ஆகிய இடங்களிலும் கூட்டுறவுவிற்பனைப் பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. பூங்காநகர் மொத்த விற்பனைப் பண்டகசாலை சுய சேவைப் பிரிவை வைத்து நடத்திக் கொண்டு வருகிறது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் காமதேனு மொத்த விற்பனைச் சிறப்பங்காடியானாலும் சரி, திருவல்லிக்கேணி டி.யு.சி. எஸ்-ஆனாலும் சரி இரண்டும் பெரும் நஷ்டத்தில்தான் இயங்கி வருகின்றன. இந்த நிலையிலே விரிவாக்கம் செய்யவேண்டுமா, சைதைக்குப் போனால் இலாபகரமாக இருக்குமா என்பன எல்லாம் சந்தேகத்திற்குரியனவாகத் தான் இருக்கின்றன.

**திரு. சைதை சா. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, காமதேனுவும், டி.யு.சி.எஸ்-ம் நஷ்டத்தில் இயங்குவதற்கு என்ன காரணம்? அப்படி நஷ்டத்தில் இயங்குவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரணங்கள் பலப்பல இருக்கின்றன. அவை அத்தனையையும் எடுத்துச் சொன்னால் நேரம் இடம் தராது. ஆகவே அவற்றை எல்லாம் ஆராய்ந்து நட்டத்திலிருந்து மீட்டு இலாபகரமாக ஆக்கவேண்டும்; அதனுடைய முழுப்பலனை மக்கள் பெறவேண்டும் என்ற அடிப்படையில் முறைப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அப்படி மேற்கொள்ளப்பட்டு வருகிறபோது சைதைப் பகுதியும் பலன் பெறும்.



**தஞ்சை மாவட்டம் குத்தாலம் அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தல்.**

267—(*வினா எண்,7551) **திரு. பாப்பா சுப்பிரமணியன்.** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலத்தில் உள்ள அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தி, அதிக மருத்துவர்களை நியமிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம், குத்தாலம் தொகுதியினுடைய தலைநகராக விளங்குகிற காரணத்தாலும், 350-க்கு மேற்பட்ட புற நோயாளிகள் மருத்துவவசதி பெறுவதற்காக அந்த மருத்துவ மனைக்கு வருகின்ற காரணத்தாலும், மேலும் 150-க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் குத்தாலம் பகுதியைச் சுற்றி இருப்பதாலும், புரட்சித்தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்களின் அரசு குக்கிராமங்களை நகரமாக மாற்றவேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு செயல்பட்டு வருகின்ற காரணத்தாலும், அந்தப் பகுதி மக்களுடைய இப்படிப்பட்ட சங்கடங்களைப் போக்கவேண்டுமென்ற நோக்கத்தோடும் வருகிற ஆண்டுகளிலேயாவது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களின் அரசு இதிலே தனிக் கவனம் செலுத்தி நிர்வாகச் சிக்கல் இருந்தாலும் குத்தாலத்திற்கு என்று ஒதுக்கீடு செய்து முன்னுரிமை தந்து அந்த மருத்துவமனையை விரிவுபடுத்த ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்.** பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரம் சரியாக இருந்தால் இதைப்பற்றி அரசு பரிசீலிக்கலாம்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையிலே இரத்தப் பரிசோதனைப் பிரிவு, மற்றும் எக்ஸ்ரே பிரிவு போன்றவைகள் இல்லை. அதோடு அந்த மருத்துவ மனையில் தண்ணீர் வசதி இல்லை. அதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டிலேயாவது தனி ஒதுக்கீடு செய்து அந்த மருத்துவமனையை முன்னேற்றம் செய்து தர அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனைக்குத் தண்ணீர் வசதி இல்லை என்று சொன்னார்கள். அதை அரசு கவனிக்கும்.

## புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல்.

268—(*வினா எண். 8534) திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் "விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு" ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விபத்து மற்றும் அவசரகால சிகிச்சைக்கான திட்டத்தை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ரூ. 25.51 லட்சம் செலவில் விஸ்தரிப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கின்ற திட்டத்தை அரசு செயல்படுத்த உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை எப்போது ஆரம்பிப்பார்கள்? விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டில் இந்த வேலை தொடங்கப்படும்.

திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் ஆரம்பிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அங்கே நாள் ஒன்றுக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட புற நோயாளிகள் வருகிறார்கள். அவர்களுக்கு பொதுக் கழிப்பிட வசதி அந்த மருத்துவமனையில் இல்லை. இதையும் கருத்தில் கொண்டு பொதுக் கழிப்பிட வசதி செய்து கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவ அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை தனியாக எழுதி கேட்பார்களேயானால் நிச்சயமாக கவனிக்கப் படும்.





திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை தலைமை மருத்துவ மனையில் நுரையீரல் நோய்க்குத் தீவிர சிகிச்சை பிரிவு அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது புதுக்கோட்டை மாவட்டத்தைப் பற்றிய கேள்வி. தனியாகக் கேள்வி போட்டால் விவரமாக பதில் தரப்படும்.

திரு. ஜே. முகம்மதுகனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, புதுக்கோட்டை மருத்துவமனைக்கு இந்த அவசர கால சிகிச்சைப்பிரிவு தருவதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் முத்துலட்சுமி ரெட்டியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிற நேரத்தில் அந்த மருத்துவமனைக்கு 100 படுக்கை வசதி கொண்ட ஒரு வார்டு அமைத்துத் தரப்படுமா? பிணவறை ஒன்றும் கட்டித் தருவதாக இருந்தது. அதுவும் கட்டித் தரப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து மற்றும் அவசரகால சிகிச்சைப் பிரிவு தமிழகத்தில் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் ஆரம்பிக்கப் பட்டு விட்டது புதுக்கோட்டையைத் தவிர. புதுக்கோட்டைக் கும் இந்த ஆண்டு செய்து தரப்படும். மற்ற கோரிக்கைகளைப் பற்றி தனியாக எழுதினால் பதில் தரப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துக்கள் பெரும்பாலும் சாலை ஓரங்களில்தான் அதிகமாக நடைபெறுகின்றன. சாலை ஓர விபத்துக்கள் தான் அதிகமாக இருக்கின்றன. இப்போது சாலை ஓரங்களில் இருக்கும் ஹோட்டல் களுக்கு அருகாமையில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சைப் பிரிவுகளை அமைத்தால் நல்லது. அரசாங்கத்திற்கு எந்தெந்த இடங்களில் விபத்துக்கள் அதிகம் நடைபெறுகிறது என்று குறிப்புகள் இருக்கும். அந்தந்தக் குறிப்புகளுக்கு ஏற்றமாதிரி எந்தெந்த நெடுஞ்சாலையில் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகிறதோ அந்தந்த இடங்களில் இந்த அவசர கால சிகிச்சைப் பிரிவுகளையோ அல்லது நடமாடும் மருத்துவமனையையோ நியமித்தால் பல உயிர்களை காப்பாற்றக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அது பற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அவர்களுடைய துறையின் கீழ் இருக்கும் டெப்போக்களில் ஏறத்தாழ 50 இடங்களில் ஆம்புலன்ஸ் வண்டிகள் வசதிகளைச் செய்து கொடுப்பதாக

இருக்கிறார்கள். அந்த வசதி கிடைக்கும்போது எங்காவது விபத்து ஏற்பட்டால் இந்த வண்டிகள் மூலம் உடனே மருத்துவ மனைக்கு கொண்டு செல்லும் வசதி ஏற்படும். இது போதும் என்று கருதுகிறேன். ஹோட்டல்களுக்குப் பக்கத்தில் மருத்துவ மனையின் அவசரப் பிரிவினை வைப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையில் இருக்கக்கூடிய ஸ்பெஷல் வார்டுகள் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய எங்களைப்போன்றவர்கள் மருத்துவமனைக்குச்சென்று சிகிச்சைப் பெறக் கூடிய நிலைமையில் இல்லை. நீண்டகாலமாக புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையில் அதிகமான ஸ்பெஷல் வார்டுகள் கட்டித்தர வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. அந்த ஸ்பெஷல் வார்டை அமைச்சர் அவர்கள் அமைப்பார்களா என்பதோடு புதுக்கோட்டை இராணியார் மருத்துவமனையில் சுமார் 2 ஆண்டுக் காலமாக பெண் மருத்துவர்களே இல்லாததால் சிகிச்சைக்காக வரும் தாய்மார்களும், பிரசவத்திற்காக வரும் தாய்மார்களும் தஞ்சையை நோக்கி செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது, அது நிவர்த்தி செய்யப்படுமா என்பதோடு 17 மருத்துவர் பணி இடங்கள் காலியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள். இது மானியம் அல்ல நீண்ட சொற்பொழிவு செய்வதற்கு.

**திரு. அ.வெங்கடாசலம்:** 17 மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருப்பதாக தலைமை மருத்துவர் அரசுக்கு கருத்துரு அனுப்பி யிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட கேள்விகளாக கேட்பதால் முதல் கேள்வி என்ன என்பது மறந்து விடுகிறது. இதற்காகத்தான் உறுப்பினர்கள் கேள்விகளை ஒவ்வொன்றாகக் கேட்டால் நலமாக இருக்கும் என்று சொல்வது. பெண் மருத்துவர்கள் இல்லை என்று சொன்னார்கள்; உடனடியாக போட ஏற்பாடு செய்யப்படும். மருத்துவர்கள் பணி இடங்கள் காலி இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. சிவில் சர்ஜன்கள் போஸ்ட் காலி இருந்தால் இருக்கலாம். காரணம் நீதிமன்றத்தில் தடையாணை இருப்பதால் இன்னும் அந்த இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன, மற்ற கேள்விகளை தனியாக எழுதி கொடுப்பார்களேயானால் அது பற்றி அரசு பரிசீலிக்கும்.



## மருத்துவக் கல்லூரிகளில் இடங்களை அதிகரித்தல்.

269—(*வினா எண். 8911) **திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு இடங்களை அதிகரிக்க அரசு ஆய்ந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்சமயம் இல்லை.

(முற்பகல் 10–30)

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் அளித்திருக்கிறார்கள். வளர்ந்து வருகிற தமிழகத்தின் நிலை கருதி, மக்களுக்கு நல்ல மருத்துவ வசதிகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக குறைந்தபட்சம் டி. சி. எச்., டி. ஜி. ஓ.போன்ற அந்த படிப்புகளுக்காகவாவது அதிகப்படியான இடவசதியை செய்து தருகின்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? ஏனென்றால் நிறையபேர் இடம் கிடைக்கவில்லை யென்று எங்களிடம் முறையிடுகிறார்கள். அதை கருத்தில் கொண்டு மேற்கண்ட படிப்புகளுக்கு இடவசதியை அதிகரிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.உ.சண்முகம்:** தலைவர் அவர்களே, இந்திய உப கண்டத்திலேயே தமிழ் நாட்டில் மட்டும்தான் இதுபோன்ற பட்ட மேற்படிப்புகளுக்கு 967 இடங்கள் இருக்கின்றன. இந்தியாவிலேயே நாம் தான் முதலாவதாக இருக்கிறோம். எனவே, இதற்கு மேற்கொண்டு விரிவாக்குவதற்கு இப்போது திட்டமில்லை. அப்படி விரிவாக்க வேண்டுமென்றால் மருத்துவ மனைகளையெல்லாம் விரிவாக்க வேண்டும். இப்படி அதிகமாக மனைகளை விரிவாக்கினால் தான் இந்திய மருத்துவக் கவுன்சில் வசதிகளை அனுமதியளிக்கும். எனவே அந்தத் திட்டம் தற்சமயத்தில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற இடங்களில் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி தீர்ப்பின் வழியாக தலையிட்டு, நம்முடைய மாநில அரசிலே இருக்கிற இடங்களை மத்திய அரசுக்கு ஒதுக்குகிற திட்டம் வருகிறதே, இந்தத் திட்டம் வந்தால் இந்த இடங்களும் பாதிக்கப்படுமே அதற்கு இந்த அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே,
நல்ல வேளையாக மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து உச்ச
நீதிமன்றத்தில் இது பற்றி ஒரு விவரம் கேட்டு மனு தாக்கல்
செய்திருக்கிறார்கள். அதன்மீது உச்ச நீதிமன்றம் எந்தெந்த
மாநிலங்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த
மாநிலங்கள் தங்கள் மனுக்களை, தங்கள் ஆட்சேபணைகளை
தாக்கல் செய்யலாமென்று சொல்லியிருக்கிறார்கள். 6-ம்
தேதிக்குள் மனுவை தாக்கல் செய்ய வேண்டுமென்று ஆணை
பிறப்பித்து இருக்கிறார்கள். இந்த மாதம் விசாரணைக்கு
வருகிறது. நம்முடைய ஆட்சேபணை மனுவை தாக்கல்
செய்வதற்காக ஏற்கெனவே நம்முடைய அதிகாரிகள்
புதுடில்லிக்குச் சென்று இருக்கிறார்கள். ஒரு நல்ல வழக்கறிஞரை
வைத்து அந்த மனுவைத் தாக்கல் செய்து, நாம் அதற்கு இணக்கம்
தெரிவிக்கவில்லையென்று நம் ஆட்சேபணையைத் தெரிவிக்க
விருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்
கிறேன்.

**திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, அப்படி மனு
போடும்போது, அரசியல் அமைப்புச் சட்டத்திலே ஒதுக்கப்
பட்டிருக்கிற ஷெட்யூல்ட் காஸ்ட், நம்முடைய மாநில அரசால்
ஒதுக்கப்பட்டிருக்கிற பேக்வர்ட் கிளாஸ் இந்த இரண்டுக்கு
மாவது உரிமை கேட்டு சுப்ரீம் கோர்ட்டில் நம்முடைய அரசு
வாதாடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே,
முதலாவது இட ஒதுக்கத்தையே நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.
அதுபோல் கொடுக்க முடியாது என்று சொல்வதற்கு அடிப்படை
காரணம் நாம் செலவிடுகிற பணத்திலே மத்திய அரசு மருத்துவத்
துறையில் மாணவர் படிப்பிற்காக சல்லிக்காசுகூட கொடுப்ப
தில்லை. எனவே செலவழிக்காத இடத்தில் கேட்பது சரியல்ல
வென்றும். முறையல்லவென்றும், இதனால் மாநில உரிமைகள்
பாதிக்கப்படுகின்றன என்றும் நாம் வாதிட்டுக் கொண்டிருக்
கிறோம். அப்படி ஒதுக்கித்தான் தீர வேண்டுமென்று மத்திய
அரசில் முடிவு எடுப்பார்களானால், இதை வலியுறுத்துவதற்கும்,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்களை
வலியுறுத்துதெற்கும் நாம் ஆலோசனை சொல்லி அனுப்பியிருக்
கிறோம். அதிகாரிகள் புது டில்லிக்குச் சென்றிருக்கிறார்கள்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே. தற்போது
M.D., D.C.H., D.G.O. ,D.L.O., போன்ற படிப்புகளுக்கான
தேர்வுகள் நடந்து வருகின்றன. இந்த நிலையில் அந்த M.B.B S.
படித்த டாக்டர்கள் உடனடியாகப் பணியில் சேர வேண்டுமென்று
அரசு நேற்றையதினம் உத்தரவிட்டு இருப்பதாக அறிகிறோம்.
அவர்களுக்கு தேர்வுகள் எழுத இன்னும் 6, 7 நாட்கள்தான் இருக்
கின்றன. உடனடியாகச் சேர்வது என்றால் எப்படி முடியும்?
எனவே அவர்களுக்கு விடுப்பு வழங்குவதற்கு அரசு முயற்சிக்குமா?
இதுபற்றி அரசு அறியுமா? இதற்கு அரசு என்ன நடவடிக்கை
யெடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே,
தேர்வு எழுதுவதற்கும் பணியில் சேர்வதற்கும் சம்பந்தம்
இல்லை. தேர்வு எழுதுபவர்களுக்கு எல்லாம் இடம் கிடைத்து
விடப் போவதில்லை. குறிப்பிட்ட இடங்கள்தான் இருக்கின்றன.
குறிப்பிட்ட எண்ணிக்கை இருக்கிற காரணத்தால் பணியில்
சேர்ந்துதான் ஆக வேண்டும். அவர்களுக்கு சேர்வதற்கு இடம்
கிடைத்தால் அதன் பிறகு அவர்கள்விடுப்பில் வரலாம்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** தலைவர் அவர்களே. மருத்துவக்
கல்லூரிகளில் மருத்துவப் பட்ட மேற்படிப்பு துவங்குகிறபோது
சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ரீடர் அல்லது புரபசர்
இருக்க வேண்டுமென்று இந்தியன் மெடிக்கல் கவுன்சில் விதி
முறையை வைத்திருக்கிறது. தமிழகத்தில் பல இடங்களில் அது
பின்பற்றப்படுவதில்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன்.
தஞ்சை மருத்துவக் கல்லூரியில் Diplom in Psychi tric Medicine-ல்
பல ஆண்டுகளாகக் கேட்கப்பட்டும் அங்கே Reader-ஓ Professor-ஓ
இல்லை. எனவே தமிழகத்தில் கண்டிப்பாக அந்த விதிமுறைகள்
பின்பற்றப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை அமைச்சர்
அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக்
கொண்டு வந்ததற்கு நன்றி. இதுபற்றி அரசு நிச்சயம்
நடவடிக்கையெடுக்கும்.

**டாக்டர் த. முகம்மது சலீம்:** தலைவர் அவர்களே, இந்த
Post–Graduate Degree தனியார்மருத்துவமனைகளுக்கு வழங்கப்
பட்டிருக்கிறது. எந்தெந்த தனியார் மருத்துவமனைகளுக்கு
இந்த Post–Graduate Degree-க்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது
என்று அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே,
தனியார் மருத்துவமனைகள் கேட்டதற்கு நாம் எதற்கும்
அனுமதி அளிக்கவில்லை. கண் சிகிச்சைக்கு மட்டும் ஒரு மருத்துவ
மனைக்கு அனுமதி அளித்திருப்பதாக என்னுடைய நினைவு.
மற்றவர்கள் கேட்டார்கள். ஆனால் யாருக்கும் அனுமதி அளிப்ப
தில்லையென்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

## ஆற்காடு வட்டம், கலவை மருத்துவமனையில் படுக்கைகளை அதிகரித்தல்.

270—(*வினா எண். 9473) **திரு. த. பழனி:** மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா—

ஆற்காடு (வட்டம்) தொகுதி, கலவை மருத்துவமனையில்
படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு
அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**வட ஆற்காடு ஜவ்வாது மலை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்.**

*271—(*வினா எண் 9619)* **திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிம்மியம்பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ அரசு ஆணையிட்டிருக்கிறது.

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28.3.1986 ஆம் தேதியிட்ட, 692 அரசு ஆணை பிரகாரம் ஜவ்வாது மலையில் ஜமுனா மருதூர், புதூர் ஆகிய 2 மருந்தகங்களை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது. ஆனால் அமைச்சர் அவர்கள் நிம்மியம்பட்டியில் மட்டும் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசு ஆணையிட்டுள்ளது என்று தெரிவித்து இருக்கிறார்கள். எனவே இதைப் பற்றி விவரம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி, 'ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா என்பதாகும். அதற்கு நான், வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிம்மியம்பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ அரசு ஆணையிட்டிருக்கிறது என்று சொன்னேன். மற்ற விவரங்களைப் பற்றி கேட்கிறார்கள். அவைகளைப் பற்றி தனியாக எழுதிக் கொடுப்பார்களானால், விவரம் சேகரித்துத் தருகிறேன்.

**திரு. எஸ். பி. மணவாளன்:** பேரவைத் தலைவர் அவர்களே. அரசு ஆணை வெளியிட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும், இந்த அரசு ஆணையை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக மலைவாழ் மக்களுக்கு அங்கே போதிய பஸ் வசதி இல்லாத காரணத்தால், அவர்கள் மருத்துவ வசதி பெறக்கூட செல்ல முடியாமல், நோயாளிகளாக இறந்துவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு, உடனடியாக ஆரம்ப சுகாதார நிலையங்களை செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா?





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்று சொன்னால், 10 ஆயிரம் ரூபாய் நன்கொடையாகத் தரவேண்டும். 5 ஏக்கர் நிலம் தரவேண்டும். இவைகளைத் தந்திருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இவைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்று நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த உத்தரவைப் பற்றிய விவரம் என்னிடம் தற்போது இல்லை. தனியாக இதுபற்றி எழுதிக் கொடுப்பார்களேயானால், பரிசீலித்து தகவல் சொல்கிறேன்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சொன்னால், அதற்கு 10 ஆயிரம் ரூபாய் பணம் கட்டவேண்டும், 5 ஏக்கர் நிலம் தரவேண்டும என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆதி திராவிட மக்கள், குறிப்பாக பழங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இதுபோன்று இடங்கள் கிடைப்பது என்பதும், பணம் கட்டுவது என்பதும் அவ்வளவு எளிதல்ல. காரணம் அவர்கள் மிகவும் ஏழைகள், மிகவும் பிற்பட்ட பகுதியாக அந்த இடங்கள் இருக்கின்றன. எனவே இதுபோன்ற இடங்களுக்கு, விதிகளில் சலுகை அளித்து, பணம் கட்டத் தேவையில்லை, அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் என்று அரசு அறிவிக்குமா? குறிப்பாக ஜமுனாமருதூரிலே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஜமுனா மருதூரைப் பற்றி அவர்களுக்குத் தெரியும். நான் வாழ்கின்ற தண்டராம்பட்டு தொகுதியில் 17 கிராமங்களில் மலைவாழ் மக்கள் வாழ்கின்றார்கள். இதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஏன் என்றால், அவர்கள் பாதம் படாத இடங்கள் கிடையாது. எனவே அந்தப் பகுதியில், அரசாங்கமே முழுப் பொறுப்பை ஏற்று, ரெட்டியார் பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கவேண்டும் என்றால், 30 ஆயிரம் மக்கள் தொகை இருக்கவேண்டும், 10 ஆயிரம் ரூபாய் பணமும், 5 ஏக்கர் நிலமும் தரவேண்டும் என்பது மட்டுமல்ல, 8 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு எந்த ஒரு மருத்துவமனையும் இல்லாதிருக்க வேண்டும் என்று அந்த விதிகளில் விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த விதிகளுக்கு உட்பட்ட இடங்களில்தான் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்கும். இதுதான் இந்திய அரசாங்கத்தினுடைய முறையாகும்.

1987 ஏப்ரல் 3]

திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது போன்று, என்னுடைய தொகுதியில் உள்ள மூலனூர் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற மூலனூரில் இருக்கிற பி.எச். சென்ட்ரை அப்கிரேட் பண்ண வேண்டும் என்று கேட்டோம். அவர்கள் சொல்கின்றபடி நாங்கள் ஏற்கனவே பணம் எல்லாம் கட்டி, தயாராக இருக்கிறோம். எனவே அரசு இதை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 140 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் இவைகள் எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் மொரப்பூர் தொகுதியில் பாப்பாரப்பட்டி வட்டாரத்திலே உள்ள பூதநத்தம் என்ற கிராமத்திலே, 1981—82-லே அரசாங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு, 5 ஏக்கர் நிலமும், 10 ஆயிரம் ரூபாயும், டெபாசிட்டாக அந்தப் பகுதி பொதுமக்களால் செலுத்தப்பட்டு இருக்கிறது. இப்படி அரசு நிபந்தனைக்கு உட்பட்டு, 1982-லேயே பணம் எல்லாம் கொடுக்கப்பட்டது. அந்த இலாக்கா அதிகாரிகள் கூட இதற்காக சிபாரிசு செய்து, அரசின் அனுமதிக்காக அனுப்பியிருக்கிறார்கள், பரிந்துரை செய்திருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட அந்த சென்ட்டரை இடங்களில் அமைக்க அரசு அனுமதி வழங்க உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்

(முற்பகல் 10.40)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல 140 ஆரம்ப சுகாதார நிலையங்களை இந்த ஆண்டு துவக்க இருக்கிறோம். அதிலே இவைகள் எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். எங்கெங்கு பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறதோ, இடம் கொடுக்கப்பட்டு இருக்கிறதோ, அவைகள் எல்லாம் கருத்தில் கொள்ளப்படும்.

**பாப்பாரப்பட்டி மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றுதல்.**

272—(*வினா எண். 9637) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பாரப்பட்டியில் இருக்கும் மருத்துவமனை வேறு வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டு விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்?



1987 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாரப்பட்டி பேரூராட்சியாக இருக்கிறது. அங்கே அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சொந்தமான மூன்றரை ஏக்கர் இடம்பற்றி அந்த அரசு உயர்நிலைப் பள்ளி அதிகாரிகளிடத்தில் விவரம் கேட்டு அது அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அதற்கு அனுமதி வழங்கப்படாமல் இருக்கிறது. அந்த பாப்பாரப்பட்டியில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற நிலத்தை மருத்துவத் துறைக்கு மாற்ற ஆணை இன்னும் கிடைக்கவில்லை. ஆணை கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியதற்கு நன்றி. சுமார் 3 ஏக்கர் 8 சென்ட் இடம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சொந்தமானது. சுமார் 3 ஆண்டு காலமாக முயற்சி செய்தும் அது கல்வித் துறையில் இருக்கிறது. மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது என்று அந்த இடத்தை வாங்குவதற்கு அரசு முன் நின்று அதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் குறிப்பிட்டேன். இன்னும் மருத்துவத் துறைக்கு அது மாற்றப்படவில்லை. மாற்றி அமைத்ததற்குப் பின்பு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கூ. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் வட்டம் பாப்பாரப்பட்டியான அந்த நகரத்தைச் சுற்றி குறைந்தது 20, 25 மைல்களுக்கு எந்த விதமான மருத்துவமனையும் இல்லை. இப்போது இயங்கிக் கொண்டு இருக்கின்ற அந்த மருத்துவமனையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த இடத்தை 20, 25 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவு செய்து அந்த பகுதியில் உள்ள மக்களுக்கு நல்ல சுகாதாரம் கிடைக்க, மருத்துவ வசதி கிடைக்க ஏற்பாடு செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28-3-1986 அரசு ஆணைப்படி ஆரம்ப சுகாதார நிலைய இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இந்த இடம் மாற்றப்பட்டு இருக்கிறது. இடம் கிடைத்ததற்குப் பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**அம்பத்தூர் நகரிய துப்புரவுப் பணியாளர்கள்.**

*273—(*வினா எண். 10057)* **திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் நகரியத்திற்கு துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அம்பத்தூர் நகராட்சிக்கு அரசு அனுமதி அளிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தக்கோரும் கருத்துருவை, அதற்கு தேவைப்படும் விவரங்களுடன் உரிய வழியில் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர் அவர்களுக்கு அனுப்பினால் அவர் அதனைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுப்பார்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகரீயத்தைப் போலவே தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பல நகராட்சிகளிலும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தும், அந்த நகர மன்றங்கள் எல்லாம் அரசுக்கு பணியாளர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும் என்று தாக்கீது அனுப்பியும், இதுவரை அரசிடமிருந்து அவர்களுக்கு அனுமதி கிடைக்காத காரணத்தால் துப்புரவு பணியாளர்கள் குறைவாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இதற்கு விரைவான நடவடிக்கை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புரவு பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பது தெரியும். ஆனால் அந்த நகராட்சிகளுடைய நிதிநிலைமைகளை ஆலோசித்து தான் விரிவுபடுத்த முடியுமே தவிர, மேலும் விரிவுபடுத்திவிட்டால் சம்பளம் கொடுப்பதற்கு பணம் இல்லாமல் போய்விடும்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புரவுத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்பது அநேகமாக எல்லா நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும்இருக்கிறது. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது சொன்னார்கள். அங்கே இருக்கிற அதிகாரிகள் எவ்வளவு தேவை என்பதைப் பற்றி எல்லாம் கணக்கு எடுத்து அறிவித்தால் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். அடுத்து அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு பணம் இருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும்என்று சொன்னார்கள். ஆக இந்த இரண்டும் ஒழுங்காக இல்லை என்றால் அங்கே துப்புரவு





சுகாதாரம் நாசம் ஆகிவிட்டது என்று அர்த்தம். கோவை நகரம் மாநகராட்சியாக ஆன பிறகு கூட அந்த துப்புரவுப் பணியாளர்களுடைய எண்ணிக்கை அதிகப்படுத்தப்படவில்லை. பல ஆயிரக்கணக்கான துப்புரவுத் தொழிலாளர்கள் அங்கே தேவை. 4, 5 ஆயிரம் பேர் தேவை என்று நினைக்கிறேன். எவ்வளவு பேர் என்று தெரியவில்லை.

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் கேட்டு இருக்கிற இந்த அம்பத்தூர் நகரீயம், அது நகரீயமாக ஆனதற்கு பிறகு இதுவரையில் எவ்வளவு பேர் களை அதிகப்படுத்தியிருக்கிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூரில் தற்போது 184 துப்புரவுத் தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அம்பத்தூர் நகரீயத்தைப் பொறுத்தவரையில் 267 தொழிலாளர்களைத் தோற்றுவிக்க நகராட்சியிலிருந்து கருத்துரு வந்தது. ஆனால் முழுவதுமாக தோற்றுவிப்பதற்கு ரூ. 18 இலட்சம் செலவாகும். தற்சமயம் அந்த நகராட்சியிடம் ரூ. 18 இலட்சம் கொடுப்பதற்கு வசதியிருக்கிறது என்றாலும், எதிர்காலத்திலே பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதைக் கருத்தில்கொண்டு, மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று அந்த நகராட்சி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**கதர், கிராமத் தொழில் வாரியம் மூலம் செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கிய கடைகள்.**

*280 (*வினா எண். 11004)* **திரு. கே. உச்சி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர், கிராமத் தொழில் வாரியம் மூலம் 1985-ம் ஆண்டு, செருப்பு தைக்கும் தொழிலாளர்கள் எவ்வளவு பேருக்கு புதிய கடைகள் வழங்கப்பட்டன?

(ஆ) நடப்பு ஆண்டில் (1986) எத்தனை தொழிலாளர்களுக்கு புதிய கடைகள் அமைத்துக் கொடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) 1985 ஆம் ஆண்டில் காலணிப் பணிக் கூடங்கள் வழங்கப்படவில்லை.

(ஆ) 1986 இல் 750 காலணித் தொழிலாளர்களுக்கு காலணிப் பணிக்கூடங்கள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 3

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலணி தைக்கும் அந்தத் தொழிலாளர்களுக்கு இந்தக் கடைகள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பதையும் அந்தத் தொழில் செய்கின்றவர்களுக்கு இன்னும் அதிகமான அளவில் கடைகளை விஸ்தரிக்கும் திட்டம் ஏதேனும் உண்டா என்பதையும் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலணி தொழில் செய்கின்ற அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு 'காப்ளர் பங்க்' என்ற வகையில் அவர்களுக்கு கடன் என்ற அடிப்படையில் வழங்காமல், முழுமானியத் தொகையாக கொடுக்கப்படுகிறது. அது கிட்டத் தட்ட நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அதற்காக விண்ணப்பித்த அநேக தொழிலாளர்களுக்கு அந்தக் கடைகள் கொடுக்கப்படவில்லை என்று மனுக்கள் உங்களிடம் வந்துள்ளதா? ஆம் எனில் அதன் அடிப்படையில் அதிக அளவில் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, அப்படி மனுக்கள் எதுவும் வரவில்லை. ஆனால் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், உதகமண்டலத்தில் 20 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கான கடைகள் மாநகராட்சி, நகராட்சியிலிருந்து தான் வழங்கப்படுகிறது. அதுபோன்று பேரூராட்சிகளில் அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு கடைகளைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? இதுவரையில் விண்ணப்பித்து, கொடுக்கப்படாமல் எவ்வளவு கடைகள் இருக்கின்றன? அவர்களுக்கு கடைகளைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1983–84 ஆம் ஆண்டிலிருந்து தான் முதன் முதலாக கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிலே முதலில் 500 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக கிட்டத்தட்ட ரூ. 36,50,000 வழங்கப்பட்டது. 1986–87-ல் 750 பேர்களுக்கு வழங்கப்பட்டு, கிட்டத்தட்ட இதுவரையில் ரூ. 63,76,000 செலவிலே வழங்கப்பட்டிருக்கிறது.

நகராட்சியைப் பொறுத்தவரையில், அதேபோன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்து அனுப்புகின்ற அந்த இடங்களுக்கு அந்தத் திட்டத்தை செயல்படுத்திக்



1987 ஏப்ரல் 3]

கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியின் விவரம் தற்போது என்னிடம் இல்லை. அதற்காக தனியாக ஒரு கேள்வி கேட்டால் விளக்கம் அளிக்கப்படும்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதிதிராவிடத் தொழிலாளர்கள் எவ்வளவு பேர்களுக்கு இத்தகைய கடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும். 1987–88 ஆம் ஆண்டில் புதிய கடைகள் எத்தனை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லப்படும்.

திருமதி இரா. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அந்தப் பெட்டிக் கடைகளை, அவர்கள் ரோடு ஓரங்களில் வைத்திருக்கிறார்கள். ஆனால் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் அடிக்கடி அவற்றை அகற்றிவிடுகிறார்கள். அதனால் செருப்புக் கடை வைத்திருக்கின்ற அந்த ஏழைத் தொழிலாளர்களின் தொழில் பாதிக்கப்படுகிறதே, அதைப்பற்றி அரசுக்கு ஏதேனும் தகவல் வந்திருக்கிறதா? அப்படியானால் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய திட்டம் 'காட்ளர் பங்க்' என்ற வகையில் அந்தத் தொழில் செய்கின்றவர்களுக்கு கடைகளைக் கொடுப்பது தான். அவர்கள் வாங்குகின்ற பணத்திற்கு அவர்கள் இடம் பார்த்து, கடைகளை வைப்பது என்ற பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. ஆனால் உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற தகவல் ஏதும் எங்களிடம் வரவில்லை.

(முற்பகல் 10.50)

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு தலைநாயகர் அவர்களே தமிழக அரசினுடைய திட்டத்தின் மூலமாக இலவச செருப்பு அளிக்கின்ற திட்டம் கதர் வாரியத்தின் மூலமாக நிறைவேற்றப்படுமா? அப்படி வழங்கப்படுகின்றபோது மக்கள் மத்தியிலிருந்து வேலை வாய்ப்பிற்கான விண்ணப்பங்களை பெறுகின்ற சூழ்நிலையை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆண்டு செருப்பு கொடுக்கின்ற அந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரை கதர் துறைதான் அதற்கு

சம்பந்தப்பட்ட துறையாகும். இங்கே நாங்கள் ஒதுக்குகின்ற பணத்தை, கதர்த்துறைக்கு ஒதுக்குகின்றோம். அப்ளிகேஷன் எல்லாம் அவர்களுடைய துறையில்தான் கொடுக்க வேண்டும் என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். பி. மணவாளன்:** தலைவர் அவர்களே, செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் பணிக்கூடம் ஒன்றின்மதிப்பு எவ்வளவு? அதில் மைய, மாநில அரசினுடைய மானிய பங்கு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்;** தலைவர் அவர்களே, முதலிலே 7,300 கொடுக்கப்பட்டது. 1986-87ல் அது போதாது என்று 8,500 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டமே ஸ்பெஷல் காம்போனென்ட் பிளான் என்ற திட்டத்தின் கீழ் மைய அரசினுடைய நிதியோடு வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காலணி தைக்கும் தொழிலாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆதிதிராவிடர் நலத்துறை மூலமும், அதேபோல தச்சுத் தொழில் செய்பவர்களுக்கு மானியம் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதற்கு தேர்ந்தெடுக்கும்போது அரசு ஊழியர்கள் அல்லாதவர்கள் அடங்கிய குழு ஒன்று ஏற்கனவே செயல்பட்டு வந்தது. அப்படிப் பட்ட குழு இப்போது இல்லை என்று தெரிகிறது. அப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை மாவட்டத்திற்கு ஒன்று அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும். அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

**மலைவாழ் மக்களுக்கு தனிக் கடன் நிவாரணச் சட்டம்.**

**281—(*வினா எண். 11940)** திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மலைவாழ் மக்களுக்கு என்று தனிக் கடன் நிவாரணச் சட்டம் இயற்ற அரசிற்கு உத்தேசம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. மா. மணிமாறன்:** தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கு இயற்றுகின்ற நிவாரணச் சட்டத்தைப்போல தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பல இடங்களில் கடன் வாங்கிவிட்டு தொழிலை முறையாக நடத்த தெரியாத காரணத்தினலும், உதவிகள் சரியாக கிடைக்காத காரணத்தினாலும் பல





இடங்களில் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. இழப்பை ஈடு செய்கின்ற அளவுக்கு, அவர்களும் இந்தச் சட்டத்தில் இடம் பெறுவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, இது மலைவாழ் மக்களுக்கென்ற தனி நிவாரணச் சட்டம் இயற்றுகின்ற கேள்வியைப் பற்றியது. தனிக் கேள்வி போடவும்.

**திரு. மா. மணிமாறன்:** தலைவர் அவர்களே. மலைவாழ் மக்களுக்கு இருக்கின்ற சட்டத்தைப்போல ஷெட்யூல்ட் கேஸ்ட்—தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு சட்டத்தை இயற்றுவதற்கு அரசு முன் வருமா? மேலும் டிக் போன்ற ஸ்தாபனங்கள் கொடுக்கின்ற கடனில் அவர்களுக்கு முறையான பயிற்சியும், அறிவாற்றலும் இல்லாத காரணத்தினாலும் முறையாகத் தொழிலை தொடங்க முடியவில்லை. ஆதிதிராவிட நலத்துறை தனியாக ஒரு சிறப்புத்திட்டத்தை உருவாக்கி அவர்களுக்கு பயிற்சி அளித்து கடன் கொடுக்க அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, இந்தியன் கான்ஸ்டிடியூஷன் பொறுத்தவரையில் ஆதிதிராவிட மக்களுக்கு தனியாக சட்டம் இயற்றப்பட்டு அந்த மக்களுக்கு பெர்சன்டேஜ் ஒதுக்கப்பட்டு, இந்த அரசும் அதிலே உன்னிப்பாக இருந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறது. அதற்கு தனியாக ஒரு சட்டம் தேவையில்லை. இருக்கின்ற சட்டத்தை வைத்தே இங்கே நிறையச் சலுகைகளை அரசு செய்துகொண்டு இருக்கிறது.

**திரு. சோ. கலிதீர்த்தான்:** தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கல்ராயன்மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்கு தற்போது சரியான முறையிலே இன்னும் பட்டா வழங்காத காரணத்தினால் அவர்கள் அரசு சார்பாக வழங்குகின்ற கடன் சலுகைகளைப் பெறமுடியாத நிலை உள்ளது. எனவே அவர்கள் கிணறுகளை வெட்டுவதற்கும், மோட்டார், ஆயில் என்ஜின் போன்றவைகளை வைப்பதற்கும் அங்குள்ள நிர்வாக அலுவலர் அவர்களுடைய அனுபவத்தை வைத்து அவர்களுக்குரிய சர்ட்டிபிகேட் வழங்கினால், அரசாங்கம் ஆதிதிராவிடத் துறை மூலமாக தனி நிவாரணம் அளிக்க உதவி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே. வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் அனைத்து பழங்குடி மக்களுக்கும் கடன் நிவாரணம் அளிக்க தனியாக ஒரு கடன் நிவாரணச் சட்டம் வழங்கவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆலோசனையின்பேரில், சட்டம் மற்றும் கல்வித்துறை அமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் பார்த்து, இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணைபெற இருக்கிறது. அதற்குப் பின்னர் மத்திய அரசினுடைய

ஒப்புதல் பெற்றபின் சட்டப் பேரவையிலே நிறைவேற்றப்படும், அதன் பின்னர் அங்கிருக்கின்ற மக்களுக்கு எந்தவிதமான பொருளாதார வருமானத்தையும் கணக்கில் கொள்ளாமல் எல்லாச் சலுகையும் வழங்குவதற்கு இந்தச் சட்டம் உறுதுணையாக இருக்கும்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் ஒட்டுமொத்தமாக பட்டா வழங்குவதால், மிக, மிகத் தாமதப்படுகின்றது. அரசாங்கம், அந்த மானியம் வருகின்ற போதாவது, அனைத்து மக்களுக்கும், எங்கு தாமதப்பட்டிருக்கிறதோ, அங்கு பட்டாக்கள் உடனடியாக வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பிரச்சினை இல்லை. அப்படி இருக்குமானால் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

கொடைகானலிலிருந்து நகரப்பேருந்து,

274—(*வினா எண். 8524) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தனி வட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து கொடைக்கானலிலிருந்து நகரப் பேருந்துகள் விடும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை? எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஆம். கொடைக்கானலில் நகரப்பேருந்து விடுவதற்காக 27-8-1986 தேதிய தமிழ்நாடு அரசிதழில், அதனை நகரமாக அறிவிக்கை செய்யப்பட்டு, முதல் கட்டமாக கீழ்க்கண்ட வழித்தடங்களில் இரண்டு நகரப்பேருந்துகள் ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:

(1) கொடைக்கானல் பேருந்து நிலையம் — பண்ணைக்காடு

(2) கொடைக்கானல் பேருந்து நிலையம்—பூம்பாறை.

(3) கொடைக்கானல் பேருந்து நிலையம் — வில்பட்டி, குறிஞ்சி ஆண்டவர் கோயில் (தொடுதல்)

4) கொடைக்கானல் பேருந்து நிலையம்—பள்ளங்கி.



மதுரை அருப்புக்கோட்டை சாலையில் ரெயில்வே மேம்பாலம்.

275—(*வினா எண். 9702)—திரு. மு, மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை B-3 காவல் நிலையம் அருகில் அருப்புக்கோட்டை சாலையில் ரெயில்வே மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை அருப்புக்கோட்டை சாலையில் கி. மீ. 1/6-ல் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு ஒப்பந்த காரர்களுக்கு வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையான, இந்த அருப்புக்கோட்டை சாலையிலே மேம்பாலம் கட்டுகின்ற பணியை அரசு மேற்கொண்டதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுக்கும் மதுரை மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிகவும் முக்கியமான அந்த ரயில்வே மேம்பாலம் எவ்வளவு விரைவில், எவ்வளவு கால அளவில் கட்டி முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதை விரைவுப்படுத்துவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும். கால அளவைச் சொல்வதற்கு இயலாது.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது விரைவில் ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அங்கு நடக்கின்ற வேலையைப் பார்க்கும்போது இன்றும் போக்குவரத்து இடைஞ்சலாக இருக்கின்றது. பை—பாஸ் வழியாக போக்குவரத்தை டைவர்ஷன் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிவதோடு, அந்த வேலை நடக்கின்றபோது, ஒப்பந்தக்காரர்களுக்கு, பி.டபிள்யூ.டி. மூலமாக, இன்ஜினியர்கள் அந்த கான்க்ரீட் போடுவதை சோதித்துப் பார்ப்பதற்கு, தனியாக என்ஜினீயர்களை நியமித்து, அவர்களுக்கு ஆலோசனை கூற தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே என்னிடத்திலே நேரடியாக சொல்லப்பட்டதன்பேரில், போக்குவரத்தை மாற்றிவிடுவதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி அங்கே கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தனியாக, அதற்கு என்ஜினீயர்கள் நியமிக்கப்படுவார்களா என்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி தனியாக ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

[1987 ஏப்ரல் 3

**திரு. ஆ. சிவக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை சாலையிலே அமைக்கவிருக்கின்ற மேம்பாலத்தின் கீழ்ப் பகுதியில் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் எண்ணம் அரசிற்கு உள்ளதா என்பதை அறிந்துகொள்வதோடு, அது எந்த அடிப்படையில் விடப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, முதலிலே பாலம் கட்டட்டும். பிறகு கடைகள் வாடகைக்கு விடுவதைப் பற்றி யோசிக்கலாம்.

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் அவசர, அவசியமான, மதுரை கோட்ஸ் சாலைக்குப் பக்கத்திலேயும், ரயில்வே நிலையத்திற்குப் பக்கத்திலேயும் உள்ள ரயில் பாதையில் மேம்பாலம் அமைக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இது தனிக் கேள்வியாக வந்தால் சரியாக இருக்கும். இருந்தாலும், உறுப்பினருடைய கருத்துக்களை வைத்து அது என்ன நிலையில் இருக்கிறது என்பதைப் பார்த்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை—மதுரை நெடுஞ்சாலையில், அருப்புக்கோட்டைக்கு அருகாமையில் ஒரு ரயில்வே மேம்பாலம் இருக்கிறது. அந்த பாலம் மழையினால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருக்கிறது. அதில் பல விபத்துக்கள் நடந்திருக்கின்றன. ஆகவே, அந்தப் பாலத்தை மேம்பாடு செய்ய அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அவர் சொல்லியதை வைத்துத்தான் இந்தப் பாலத்தைப் பற்றி என்னால் புரிந்துக்கொள்ள முடிகிறது. அதற்குண்டான விளக்கம் எதுவும் தற்போது என் கையில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டாலோ அல்லது நேரில் சொன்னாலோ, அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

(முற்பகல் 11—00)

**திரு. மு. மாரிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற பணி இன்னும் எப்படியும் ஓராண்டாவது நடைபெறும். அதுவரை போக்குவரத்து நெருக்கடி இச்சாலையில் அதிகமாக இருக்கும். மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை சாலை வழியாகத்தான் மதுரை விமான நிலையத்திற்கும் செல்ல வேண்டும். எனவே, இவற்றையெல்



1937 ஏப்ரல் 3]

லாம் கருத்தில் கொண்டு திருப்பரங்குன்றம், அவனியாபுரம் இடையிலே உள்ள புறவழிச் சாலையையும், அதைப்போல வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத்திலிருந்து சின்ன அனுப் பானடி, சிந்தாமணி வழியாக அருப்புக்கோட்டை நெடுஞ் சாலையை இணைக்கின்ற புற வழிச்சாலையையும் செப்பனிடு கின்ற பணியையும், விரிவாக்குகின்ற பணியையும் மேற்கொள்ள அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று வழி ஏற்படுத்துகிறபோது அந்த வழி சீராக அமைக்கப்படுவதற்கான நடவடிக்கையை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட துறைக்கு அறிவுறுத்தலாம்.

**அரசு பேருந்துகளில் முதல் உதவிப் பெட்டி**

276—(* வினா எண் 10166)—திரு ஜி கே. ஜெ. பாரதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பேருந்துகளில் முதல் உதவிப்பெட்டி இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பெருநகர் பேருந்துகள் தவிர ஏனைய போக்குவரத்துக் கழக அனைத்து பேருந்துகளிலும் முதல் உதவிப்பெட்டி உள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**விருத்தாசலம் நகராட்சியில் நகரப் பேருந்து**

277—(*வினா எண். 10792)—திரு ஆர். தியாகராசன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகராட்சியில் நகரப்பேருந்து விட அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசுக்கு கோரிக்கை ஏதும் வரப் பெறவில்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

**தென்னாற்காடு மாவட்டம் கடலூர் ஓ.டி. இல் ரெயில்வே மேம்பாலம்.**

278—(*வினா எண் 11137)—திரு சா. ஜெயச்சந்திரன் மற்றும் திரு வி கோ. செல்லப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கடலூர் ஓ.டி.—இல் உள்ள ரெயில்வே கேட்டின் மீது மேம்பாலம் கட்ட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மதுரை மாவட்டம், சோழவந்தானிலிருந்து அலங்காநல்லூர் வரை பேருந்து.**

279—(*வினா எண் 12239)—திரு ஆ. சந்திரசேகரன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டிவட்டம், சோழவந்தானிலிருந்து வாடிப்பட்டி வழியாக அலங்காநல்லூர் வரை பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

**மாண்புமிகு திரு சு முத்துச்சாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சோழவந்தானில் பணிமனை கட்டி முடிந்தவுடன் கரப்பேருந்து இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு). ஒரு மணிநேரம்தான் கேள்வி நேரம். இத்தனை நாட்களும் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சருடைய கேள்வி இடம்பெற்றது. அந்தக் கேள்விகள் முதலில் எடுக்கப்பட்டுவிட்டன (குறுக்கீடு). நேரம் இல்லை, எத்தனையோ உறுப்பினர்கள் எத்தனையோ கேள்விகளை கேட்டனர்கள். எல்லோரையும் நான் திருப்திபடுத்தி விட்டேன். (குறுக்கீடு) ஒரு மணி நேரம்தான். ஒரு மணி நேரத்தில் இவ்வளவுதான் எடுக்க முடியும். கேஷீவாலிடி, இன்றைக்கு டிரான்ஸ்போர்ட் மினிஸ்டருடைய கொஸ்டியன்ஸ், அவ்வளவுதான் (குறுக்கீடு) வேறு வழி இல்லை.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



**2. தகவல் கோரல்.**

**(அ) ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைப் பெருந் தலைவர்கள் என அழைப்பதை மாற்றியமைப்பது குறித்து:**

**திரு. வே. இரா. ஜெயராமன்** : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர்கள் தங்களைப் பெருந்தலைவர்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தில் பெரியார் என்றால் ஈ. வெ. ரா. அவர்களையும். பெருந்தலைவர் என்றால் காமராஜர் அவர்களையும், பேரறிஞர் என்றால் அண்ணா அவர்களையும், இதய தெய்வம் என்றால் புரட்சித் தலைவர் அவர்களையும் குறிக்கும் சொற்கள் ஆகும். ஆகவே பெருந்தலைவர் என்கிற சொற்களுக்குப் பதிலாக தகுந்த வேறு பெயரால் அவர்களைக் குறிப்பிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற விவரத்தை உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல நம்முடைய நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் பெருந்தலைவர் என்றால், அது மறைந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களைத்தான் குறிக்கும்; பேரறிஞர் என்றால் அறிஞர் அண்ணா அவர்களைத்தான் குறிக்கும்; மூதறிஞர் என்றால் இராஜாஜி அவர்களைத்தான் குறிக்கும். ஆகவே ஒன்றியப் பெருந்தலைவர்களை ஒன்றியத் தலைவர்கள் என்று அழைக்கலாம் என்று புரட்சித் தலைவருடைய அனுமதி பெற்று அரசு உத்தரவிடும்.

**(ஆ) ஓட்டல்களில் பண்டங்களின் விலையைக் குறைப்பது குறித்து.**

**திரு. கி. மனோகரன்** : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த டாக்டர் நாவலர் அவர்கள் கடைசி நாளன்று அறிவிப்பு நிகழ்த்தும்போது ஓட்டல்களில்..... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : எல்லோரும் என்ன காரணத்தினால் மகிழ்ச்சியோடு இருக்கிறீர்கள் என்று சொன்னால், நாம் எல்லோரும் மகிழ்ச்சியோடு இருக்கலாம்.

**திரு. கி. மனோகரன்** : பண்டங்களின் விலை ஏற்றப்பட்டதால் அதற்கென்று போடப்பட்ட வரியை ரத்து செய்கிறேன், இனிமேல் பண்டங்களின் விலை ஏறாது என்று உறுதிமொழி அளித்ததைத் தொடர்ந்து மீண்டும் அந்த ஓட்டல் உடைமையாளர்கள் பண்டங்களுக்கு விலையைக் குறைக்காத காரணத்தினால் நேற்றைக்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் கேட்ட கேள்விக்கு உணவு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நிச்சயமாக விலை குறைக்கப்படும், இல்லாவிட்டால் அவர்கள் தண்டனைக்கு உரியவர்கள் ஆவார்கள் என்று சொன்னதற்குப் பிறகும் அவர்கள் அடம்பிடித்து விலையை

ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையின் கவனத்
திற்குக் கொண்டு வந்து மாண்புமிகு அமைச்சர் அதற்கு என்ன
நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பதை அறிந்துகொள்ள
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர்
அவர்களே, நேற்றையதினம் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு
இம்மன்றத்தின் சார்பாக அரசின் கருத்தை நாம் வெளிப்படுத்தி
இருக்கிறோம். அப்படி அவர்கள் இன்னும் விலைகளைக்
குறைக்கவில்லை என்ற புகார்கள் இருக்குமானால் அதுபற்றி
சட்டப்படி அரசாங்கம் என்னென்ன நடவடிக்கை எடுக்க
முடியுமோ அவைகளைக் கட்டாயம் எடுக்கும்.

திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,
குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக்காட்டி நினைவூட்டினால் தகுந்த
படி நடவடிக்கை எடுப்பேன் என்று அமைச்சர் அவர்கள்
கூறியதற்கு நன்றி. நான் குறிப்பிட்ட ஓட்டல்களை, நான்
வாங்கி சாப்பிடும் ஓட்டல்களைப் பற்றித்தான் சொல்ல முடியும்
அந்த ஓட்டல்களின் பெயர்களைத் தருகிறேன். அவர்கள்
மேலும் மேலும் விலையை ஏற்றிக்கொண்டு போகிறார்கள்
என்ற வேதனையான செய்தியை நான் அரசுக்குத் தெரிவிக்க
விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையில் நீங்கள் கொஞ்சம்
கடுமை காட்டுவது நல்லது என்பது என்னுடைய தாழ்மையான
கருத்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
அவைத் தலைவர் அவர்களே, ஓட்டல் உரிமையாளர்களுடைய
சங்கத் தலைவர்கூட எல்லா பத்திரிக்கைகளிலும் கட்டம் கட்டி
அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். அரசு இதற்காக விதித்த
வரிகளை ரத்து செய்துவிட்டதன் காரணமாக ஏற்கெனவே
இடையிலே ஹோட்டல் பண்டங்களின் விலையை ஏற்றியவர்கள்
கட்டாயமாகப் பழைய விலைக்கே இறக்க வேண்டும் என்று
அவரே வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அந்த வேண்டுகோளை
ஏற்று ஓட்டல் நடத்துபவர்கள் எல்லோரும் பழைய விலைக்கே
கொண்டுவர வேண்டும். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
அவர்கள் இங்கே அதைக் குறிப்பிட்டு ''அப்படி விலை குறைக்
கப்படாமல் இருந்தால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை
எடுக்கப்படும்'' என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
ஆகவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். எல்லா ஓட்டல்
களின் நிலைமையைப் பார்த்து அறிய முடியாது என்றாலும்
கூட ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளைப் பார்த்து எங்காவது
இப்படி ஏற்றியவர்கள் இறக்காமல் இருந்தால் அவர்கள்மீது
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபடி அரசு தக்க
நடவடிக்கை எடுக்க வேண்டும், எடுக்கப்படும் என்பதை அரசின்
சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



(இ) சேப்பாக்கம் தொகுதியில் சில பகுதிகளில் குடிசைகள்
பிரிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்பு,

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவர்
அவர்களே, என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் லாக் நகர்,
சிந்தாதிரிப்பேட்டை போன்ற பகுதிகளில் பல குடிசைகள் பிரிக்கப்
பட்டு குடிசை வாழ் மக்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.
அவர்கள் எல்லோரும் அங்கே நீண்டகாலமாகக் குடியிருந்து
வருகிறவர்கள், ரேஷன் கார்டுகளை வைத்துக் கொண்டிருப்
பவர்கள். அத்துடன் ஓட்டர்ஸ் லிஸ்டிலும் பெயர்கள்
உள்ளவர்களாக இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது
திடீரென்று எந்தவிதமான அறிவிப்புமில்லாமல் — அவர்களுக்கு
மாற்று இடம்கூட தரப்படாமல் — அவர்களுடைய குடிசைகள்
பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக அவர்கள் பாதிக்கப்
பட்டிருக்கிறார்கள், அவர்கள் வேறு இடத்திலே போய் தொழில்
செய்யவும் முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே
அரசாங்கம் அந்த உத்தரவை நிறுத்தி வைத்து அவர்களுக்கு
உதவிட முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிந்து
கொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

### 3. கவன ஈர்ப்பு.

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூரிலிருந்து சென்ற
மீனவர்கள் காணாமற் போனது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் கவன ஈர்ப்பு பின்னர்
எடுத்துக் கொள்ளப்படும். அடுத்து, திருவாளர்கள் கு. ரமணி,
கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, வி. பி. சிந்தன்,
ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ்
ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம்
கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் இதை மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு
வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ''18–1–1987 அன்று குமரி மாவட்டம்
தூத்தூர் என்ற இடத்திலிருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்ற
மீனவர்களைக் காணவில்லை என்பதால் ஏற்பட்டுள்ள நிலை
குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை
ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூரிலிருந்து ''ஜெய்வின் மெஜோ'' என்ற விசைப்படகில் 18—1—87 அன்று மீன்பிடிக்கச் சென்ற ஐந்து மீனவர்களையும் காணவில்லை என்று மீன்துறை இயக்குநருக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக மீன்துறை இயக்குநர் காணாமற் போன ஐந்து மீனவர்களையும் தேடிக் கண்டு பிடிக்க சென்னையிலுள்ள மெர்க்கண்டைல் மெரைன் துறை முதன்மை செயலர், உதவிப் பொறியாளர் (கம்பி யில்லாத் தந்தி), மாநிலத் துறைமுக அலுவலர், கடலோரக் காவற்படை கமாண்டர் மற்றும் மண்டபத்திலுள்ள கடலோர காவற்படை கமாண்டிங் ஆகியோருக்குத் தகவல் அனுப்பினார். விரைவாக மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்குமாறு தகவல் அனுப்பப்பட்டது இம்முயற்சிக்கு உடனடியாக பலன் கிட்டாத தால் சென்னையிலுள்ள கடற்படையினை ஹெலிகாப்டர் மூலம் வானில் பறந்து தேடிடவும் அரசு கேட்டுக் கொண்டது. இம் முயற்சிகள் யாவும் பலனளிக்கவில்லை. இந்நிலையில் இம் மீனவர்கள் இறந்து போனார்கள் எனக் கருதி குடும்பத்தாரால் சின்னத்துறை பங்குகுருவால் இறுதி மதச் சடங்குகளும் நிறை வேற்றப்பட்டுள்ளன. எனவே காணாமற்போன திருவாளர்கள் ஜீபீத், ஸ்டீபன், தியோன், ரோமன்ஸ் மற்றும் பெர்க்மென்ஸ் ஆகிய ஐந்து மீனவர்களில், மீனவர் கூட்டுறவு சங்க உறுப் பினராக இருந்துள்ள திருவாளர்கள் ஜீபீத், ஸ்டீபன், தியோன் ஆகிய மூன்று மீனவர்களின் வாரிசுகளுக்கு தமிழ்நாடு மீனவ விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் தலா ரூ. 15,000 பெற்று வழங்க 'பிஷ்கோபெட்' (FISHCOFED) புது டில்லிக்கு தஸ்தாவேஜு களை மீன்துறை இயக்குநர் அனுப்பிவிட்டார்.

திரு, ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே இந்த விபத்தில் பாதிக்கப்பட்ட 3 மீனவர்களுடைய குடும்பத் தினருக்கும் தலா ரூ. 15,000 நிவாரணம் கொடுக்கப்பட்டிருக் கிறது என்ற விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்றே இவ்விபத்தில் பாதிக்கப்பட்டு தற்போது மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிற ரோமன்ஸ் மற்றும் பெர்க்மென்ஸ் ஆகிய இரண்டு மீனவர்களின் குடும்பங்களுக்கும் ஏதேனும் நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இப்படிப்பட்ட விபத்துக்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்க்க 'லைப் போட்ஸ்' போன்ற ஏற்பாடு செய்து அவர்களுக்கு இன்னல் வரும் நேரங்களில் உதவிட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் காணாமல் போய்விட்டால் நாம் தற்போது எடுத்து வருகிற நடவடிக்கைகள் எல்லாம் விவர அறிக்கையில் விவரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.



கடலோரத்தில் இருக்கிற காவல் படைக்குத் தகவல் தருகிறோம். ரோந்து வருகிற ஆகாய விமானத்திற்குச் சொல்லி கண்டு பிடிக்கச் சொல்லுகிறோம். இந்த நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து மேற்கொள்கிறோம். ரோமன்ஸ் மற்றும் பெர்க் மென்ஸ் பற்றி குறிப்பிட்டார்கள். அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன இரண்டு பேருமே இந்த விபத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 2 பேரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறோம். எனவே அந்த இரண்டு பேருக்கும் உரிய நிவாரணத் தொகை அளிக்க—அல்லது நிவாரண உதவி அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன ஐந்து மீனவர்களில் மூன்று பேர்கள் மீனவர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினராக இருந்தார்கள். எனவே அவர்களுக்கு நிவாரணம் கிடைத்தது. பாக்கி இரண்டு பேரும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை. எனவே அது தனியாகப் பரிசீலிக்கப்படும்.

(ஆ) திருச்சி மாவட்டத்திலுள்ள சில தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை மற்றும் கழிவுநீரால் பாதிப்பு.

திரு. கே. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருச்சி மாவட்டம் டால்மியா சிமென்ட்ஸ் (பாரத்) லிமிடெட் மற்றும் டால்மியா சிராமிக்ஸ் தொழிற்சாலை களிலிருந்து வெளிவரும் புகைக் கற்றால் அப்பகுதியில் வாழும் மக்களுக்கு காச நோய் வருவது குறித்தும், லால்குடி அருகே உள்ள ரோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் தொழிற்சாலையி லிருந்து வெளிவரும் கழிவுநீர் பங்குனி வாய்க்காலில் கலப்பதால் அப்பகுதி விளை நிலங்களின் பாதிப்பு குறித்தும்'' உள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கையில் அமர்ந்திருப்பது நல்லது.

[முற்பகல் 11.10]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

திருவாளர்கள் டால்மியா சிமெண்ட்ஸ் (பாரத்) லிமிடெட்.

திருவாளர்கள் டால்மியா சிமெண்ட்ஸ் (பாரத்) லிமிடெட், திருச்சி மாவட்டத்தில், டால்மியாபுரத்தில் பழங்காநத்தம் கிராமத்தில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை 1939 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 18,831.12 மெட்ரிக் டன் சாதாரண போர்ட்லாண்ட் சிமெண்டும் 32,420.32 மெட்ரிக் டன் போர்ட்லாண்ட் போஸ்லோனா சிமெண்டும், 966.12 மெட்ரிக் டன் சிறப்பு சிமெண்ட் மற்றும் 130.63 மெட்ரிக் டன் ஆயில்வெல் சிமெண்ட் உற்பத்தி செய்கிறது.

இத்தொழிற்சாலைக்கு தேவையான பிரதான மூலப் பொருட்கள் சுண்ணாம்புக் கல்லும் களிமண்ணும் ஆகும். உடைக்கப்பட்ட சுண்ணாம்புக்கல் மற்றும் களிமண் தூளாக்கப் பட்டு நீர் சேர்க்கப்பட்டு கூழாக்கப்படுகிறது. இக்கலவையானது சூளைகளில் எரியூட்டப்பட்டு கிளிங்கர் தயாரிக்கப்படுகிறது. சாதாரண சிமெண்டானது கிளிங்கரையும் ஜிப்ஸத்தையும் சேர்த்து அரைப்பதால் கிடைக்கிறது. போஸ்லோனோ சிமேண்ட், கிளிங்கர், ஜிப்ஸம் மற்றும் போஸலோனிக் பொருட் களை அரைப்பதன்மூலம் கிடைக்கிறது.

இத்தொழிற்சாலையில் வெர்டிகல் ஷாப்ட் சூளையும் (சூளை எண் : 4) உள்ளது. இச்சூளையில் சுண்ணாம்புக்கல் மற்றும் களிமண் துகள்கள் போடப்பட்டு கிளிங்கராக்கப்படுகின்றன. இக்கிளிங்கர் ஜிப்ஸத்துடன் சேர்க்கப்பட்டு சிமெண்ட் மில்லில் அரைக்கப்பட்டு சிமெண்ட் தயாரிக்கப்படுகிறது.

இத்தொழிற்சாலையில் உள்ள சூளைகள் சிமெண்ட் மில்கள் மற்றும் சிமெண்ட் மூட்டைகள் கட்டும் இடங்கள் தூசுக்கு ஆதாரமாகும்.

இத்தொழிற்சாலையில் 4 சூளைகள் உள்ளன. சூளை எண்:1ல் 30.48 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கி உள்ளது. சூளை எண்: 2 மற்றும் 3-ல் முறையே 60.96 மீட்டர் மற்றும் 60.15 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கிகள் உள்ளன. சூளை எண்: 4-ல் 47.50 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கி உள்ளது. தூசுகள் சூளைகளிலிருந்து வெளியேறுவதை தடுக்க தூசுகளைப் பிரிக்கும் கருவிகள் மற்றும் துணியிலான வடிப்பான்கள் சூளை எண் : 1-ல் அமைக்கப்பட்டுள்ளன சூளை எண்: 2 மற்றும் 3-ல் எலக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்கள் உள்ளன. சூளை எண்: 4-ல் துணியிலான வடிப்பான்கள் உள்ளன.



இத்தொழிற்சாலையில் நான்கு சிமெண்ட் மில்கள் உள்ளன. சிமெண்ட் துகள்களை கட்டுப்படுத்த மூன்று சிமெண்ட் மில் களுக்குப் பொதுவாக ஒரு எலக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபிடேடரும் நான்காவது சிமெண்ட் மில்லில் ஒரு துணியிலான வடிப்பானும் உள்ளன. சிமெண்ட் மூட்டைகளை அடைக்கும் இடத்திலும் தூசுகளை கட்டுப்படுத்த துணியிலான வடிப்பான்கள் உள்ளன.

இத்தொழிற்சாலை தற்போது நவீனமாக்கப்பட்டு வருகிறது. இதன்படி இத்தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 50,000 மெட்ரிக் டன் பலவகைப்பட்ட சிமெண்ட்களை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது. தற்போதுள்ள இரண்டு ஈர முறையிலான சூளைகள் நீக்கப்பட்டு நாளொன்றுக்கு 1,500 டன் திறனுள்ள சூளை பொருத்தப்பட உள்ளது. 1,500 டன் திறனுள்ள சூளைக்கும் நிலக்கரி மில்லுக்கும் எலக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபி டேடர்கள் அமைக்கப்பட உள்ளன. பிளெண்டிங் சைலோ பிரிவிலும் துணியிலான வடிப்பான்கள் பொருத்தப்பட உள்ளன.

இத்தொழிற்சாலையை சுற்றி உள்ள காற்று மண்டலத்தின் தன்மையை அறிவதற்காக சென்னையிலுள்ள திருவாளர்கள் ரிச்சர்ட்ஸன் மற்றும் குருதாஸ் (1972) லிமிடெட் நிறுவனத்தால் 1986-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒரு ஆய்வு நடத்தப் பட்டது. காற்றில் உள்ள துகள்களின் அளவு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள அளவுகளுக்கு உட்பட்டு இருப்பது அறியப்பட்டது.

1981–ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப் பாடு) சட்டத்தின்படி காற்று மாசு கட்டுப்பாடு மண்டலத்தில் தொழிற்சாலையை நடத்த மேற்படி தொழிற்சாலை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் வேண்டி விண்ணப் பித்தது. காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 21வது பிரிவின்படி, வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கேற்ப புகையிலான காற்று மண்டலத்தில் வெளியிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நடைமுறையி லுள்ள இத்தொழிற்சாலைக்கும் அதன் விரிவாக்கத்திற்கும் காற்று மாசுக் கட்டுப்பாடு மண்டலத்தில் தொழிற்சாலையை இயக்குவதற்கு வாரியத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தொழிற்சாலையின் மாசுக்கட்டுப்பாடு முறைகளின் முன்னேற்றம் குறித்து வாரியம் கண்காணித்து வருகிறது.

திருவாளர் ஸ்ரீ நடராஜ் செராமிக்ஸ் மற்றும் கெமிக்கல் தொழிற்சாலை டால்மியாபுரம்.

திருச்சி மாவட்டத்திலுள்ள டால்மியாபுரத்தில் திருவாளர் ஸ்ரீ நடராஜ் செராமிக் மற்றும் கெமிக்கல் தொழிற்சாலை அமைந்துள்ளது. இது டால்மியா செராமிக்ஸ் என்ற பெயரால் ஏற்கனவே நடத்தப்பட்டு வந்தது. இத்தொழிற் சாலை மாதந்தோறும் 2,450 மெட்ரிக் டன்கள் பீங்கான்

பொருட்களும், 850 மெட்ரிக் டன்கள் கற்பாண்டங்கள் மற்றும் 400 மெட்ரிக் டன்கள் சுழற்று குழாய்களையும் உற்பத்தி செய்கிறது. இத் தொழிற்சாலை 1951—ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

களிமண், பாக்ஸைட், சிமெண்ட் மற்றும் மணல் முதலியன முக்கிய மூலப் பொருட்களாகும். பாக்ஸைட்டும், களிமண்ணும் தாடை அமைப்புள்ள அரைப்பானில் அரைக்கப்பட்டு அதற்கு பிறகு நீருடன் கலக்கப்பட்டு அழுத்தும்பகுதிக்கு அனுப்பப் படுகிறது. பின்னர் அக்கலவை சூளையில் போடப்பட்டு, உலர்த்தப்பட்டு பீங்கான் பொருட்களாக்கப்படுகிறது. களிமண், மணல் மற்றும் எரியூட்டப்பட்ட செராமிக் பொருட்கள் தயாரிக்க உதவும் பொருட்கள் அரைப்பானில் முதலில் அரைக்கப்பட்டு நீருடன் கலக்கப்படுகிறது. இக்கலவைகுழாய் வடிவான எக்ஸ்ரூடர் பகுதிக்கு அனுப்பப்பட்டு குழாய் அமைப்புகள் உருவாக்கப்பட்டு பின்னர் அவைகள் உலர்த்தப்பட்டு, சோதனையிடப்பட்டு அனுப்பப்படுகின்றன. சுழற்றுக் குழாய் தயாரிக்கும் பகுதியில், சிமெண்ட், மணல், கருங்கல் சேர்ந்த கலவையில் நீர் ஊற்றப்பட்டு கான்கிரீட் கலவை இயந்திரத்துக்கு அனுப்பப்பட்டு சுழற்றுக் குழாய் உருவத்தில் குழாய்கள் உருவாக்கப்படுகின்றன. பின்பு அவை பரிசோதிக்கப்பட்டு வெளியில் அனுப்பப்படுகின்றன. காற்று மாசு வெளியேறும் முக்கிய இடங்கள், அரைவை இயந்திரப் பகுதி மற்றும் சூளையாகும். இத்தொழிற்சாலையில் கற்குழாய் உருவாக்கும் பிரிவில் 30.5 மீட்டர், 24.35 மீட்டர் மற்றும் 19.67 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கிகள் உள்ளன. பீங்கான் பொருட்கள் செய்யப்படும் பிரிவில் ஏழு சூளைகள் உள்ளன. அவைகளில் பொருத்தப்பட்டுள்ள புகைபோக்கிகளின் உயரம் 18.3 மீட்டர் முதல் 27.43 மீட்டர் அளவில் உள்ளன. வெளியேறும் தூசுகளைக் கட்டுப்படுத்த தூசு சேர்ப்பான்கள் பால் மில்களிலும், எல்லா அரைவை இயந்திரப் பிரிவுகளிலும் பொருத்தப் பட்டுள்ளன. இத்தொழிற்சாலையைச் சுற்றியுள்ள காற்று மண்டலத்தின் தன்மையை அறியவேண்டி சென்னையிலுள்ள திருவாளர்கள் ரிச்சர்ட்சன் அண்ட் க்ருடாஸ் (1972) லிமிடெட் அவர்களால் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. காற்றிலுள்ள துகள்களின் அளவு 200 $Mg/m^3$ கீழ் 140 $Mg/m^3$ மற்றும் 44$Mg/m^3$ ஆக இருந்தது.

1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் பிரிவு 21ன் கீழ் காற்று மாசு கட்டுப்பாடு மண்டலத்தில் மேற்படி தொழிற்சாலையை இயக்க 14–8–1985 நாளிட்ட செயல்முறையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தொழிற்சாலையில் காற்று மாசுபடுவதைக் கட்டுப் படுத்த அமைக்கப்பட்டுள்ள அமைப்புகள் குறித்து இவ்வாரியம் கண்காணித்து வருகிறது.



திருவாளர்கள் கோத்தாரி சர்க்கரை மற்றும் இரசாயனத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தாலுக்கா, காட்டூர் கிராமத்தில் திருவாளர்கள் கோத்தாரி சர்க்கரை மற்றும் இரசாயனத் தொழிற்சாலை அமைந்துள்ளது. இது மாதமொன்றிற்கு சுமார் 5,900 மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்கிறது.

கரும்புகள் சிறு சிறு துண்டுகளாக நறுக்கப்பட்டு ரோலர் மிஷின் மூலம் சாறு பிரித்து எடுக்கப்படுகிறது. பிறகு இத் துடன் தண்ணீர் கலந்து அதிக அளவு சாறு எடுக்கப்படுகிறது. இந்த சாறு ஒரு ஸ்டெயினர் மூலம் செலுத்தப்படுகிறது. பிறகு இந்தச் சாற்றுடன் சுண்ணாம்பு கலந்து சூடேற்றப் படுகிறது.

சூடேற்றப்பட்ட சாறு பிறகு தெளிய வைக்கப்படுகிறது' 'சல்பர்—டை—ஆக்ஸைட்' சாற்றில் செலுத்தப்படுகிறது. பிறகு மீண்டும் சூடேற்றப்படுகின்றது. தெளிவாக்கப்பட்ட சாறு அழுத்தமான அல்லது கனமான திரவமாக்கப் இதன்மூலம் சாறு சிறு கட்டிகளாக மாற்றப்படுகின்றது. மூலச் பட்டு பின்பு சிறு கட்டிகளாக மாற்றப்படுகின்றது. மூலச் சாற்றிலிருந்து சர்க்கரை கட்டிகள் மீது தண்ணீர் தெளிக்கப் பட்டு பிரிக்கப்படுகிறது. மொலாஸஸ் வடிகட்டப்பட்டு வெளி யேற்றப்படுகிறது.

தெளிப்பது, கழுவுதல், ஒழுகுதல், குளிரூட்டப்படும் நீருடன் கலந்த எண்ணெய் மற்றும் சாறு, கழுவுவதால் உண்டாகும் கழிவு முதலியன சர்க்கரைத் தொழிற்சாலை கழிவுநீர் ஆக உள்ளது.

சர்க்கரை ஆலையின் கழிவுநீர் அமிலத் தன்மை உடைய தாகவும் 2000 மில்லி கிலோ லிட்டர் உயிர் இரசாயன உயிரகத் தேவையும் உடையதாக உள்ளது.

இத்தொழிற்சாலை 1974—ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26—வது பிரிவின்படி கழிவு நீர்/தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் வேண்டி விண்ணப்பித்தது. தொழிற்சாலை தனது கழிவுநீரை வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறையின்படி, சுத்திகரிப்பு செய்து வெளியிடவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

அனுமதி வழங்கப்பட்ட பிறகு இத்தொழிற்சாலை ஆலோசகரை அணுகி தற்போது கரும்பு பிழியும் காலம் வருவதற்குள்ளாக சமநிலைப்படுத்தும் தொட்டி, தெளிய வைக்கும் தொட்டி, காற்றேற்றி படிய வைக்கும் வைப்பான், உயர்தர வடிப்பான், சேறு உலர வைப்பான்கள் முதலியவற்றை பொருத்தி உள்ளது.

17-3-1987 அன்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்பொழுது சுத்திகரிப்பு செய்யப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீர் வடிகலத் தண்ணீருடன் கலக்கப்பட்டு மாசு தன்மை குறைக்கப்பட்டு ஒரு பகுதி தொழிற்சாலையின் நிலத்திலும் மீதமுள்ளவை பங்குனி ஓடைக்குச் செல்லும் வாய்க்காலிலும் வெளியேற்றப்படுவது தெரிய வந்தது.

சுத்திகரிப்பு முறை நிலைப்படுத்தப்படாததும் தெரிய வந்தது. எனவே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர நிர்ணயத்தை அடையும் பொருட்டு சுத்திகரிப்பு முறையை மேம்படுத்தி முறைப்படி இயக்கச் செய்ய தொழிற்சாலை அறிவுறுத்தப்பட்டது.

சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கத்தை வாரியம் கண் காணித்து வருகிறது.

**திரு. கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டுள்ள இந்த விவர அறிக் கையில் டால்மியா சிமெண்ட்ஸ் மற்றும் டால்மியா சிராமிக்ஸ் நிறுவனங்களில் 14 புகை போக்கிகள் இருப்பதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இவற்றிலிருந்து வெளி வரும் புகை காற்றால் அப்பகுதி மக்கள் காச நோயால், இருதய நோயால், இரத்த அழுத்த நோயால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த அரசு அறியுமா? இந்த நோய்களைக் கட்டுப்படுத்த என்னென்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க இருக்கிறது? டால்மியாபுரத்தில் ஒரு மணி நேரம் இருந்தால் வேஷம் போட்டது போல'சிமெண்ட் தூசிகளும், கறுப்புப் புகையும் படிந்து அடையாளம் தெரியாத அளவிற்கு ஏற்படுகிற சூழ்நிலையை மாற்ற, அசுத்தப் புகைக் காற்றைத் தடுக்க இந்த அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிமெண்ட் தயாரிக்கத் தேவையான மூலப் பொருள்களான சுண்ணாம்புக்கல், களிமண், பாக்சைட் போன்ற பொருள்களை ஏற்றிச் செல்லும் அவர்களது குட்டி ரெயில் வண்டிகள், லாரிகள் போன்ற வாகனங்கள் இரவு முழுவதும் இயக்கப்படுவதால் அந்தப் பகுதியில் வாழும் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் நிம்மதியாக தூங்க முடியாமல் இருக்கிறார்கள். எனவே இதைக் கருத்திற் கொண்டு அந்த வாகனங்களைப் பகல் நேரத்தில் அல்லது இரவு நேரங்களில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இயக்க இந்த அரசு தகுந்த நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட கேள்வியாக பல கேள்விகளைச் சேர்த்து ஒன்றாகக் கேட்டிருக்கிறார்கள். மேலும் புகை போக்கிகள் சரியாக இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள் வாரியம் நிர்ணயித்துள்ள வரையறைக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது. வாரியம் அதைக்





கண்காணித்துக் கொண்டிருக்கிறது. அதிலே முறைகேடு இருக்குமானால் அது குறித்து வாரியம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். தொழிற்சாலைக்குத் தேவையான பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பரிசீலிக்கும்படி வாரியம் அறிவுறுத்தப்படும். (குறுக்கீடு)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிறைய கேள்விகள் ஏற்கெனவே கேட்டுவிட்டீர்கள். அதுவே போதும் (குறுக்கீடு) ஏற்கெனவே நிறைய கேட்டுவிட்டீர்கள். நம்முடைய பாலிசி ஒரு கேள்வி அல்லது இரண்டு கேள்விகள்தான். ஆனால் ஆறு கேள்விகளைச் சேர்த்து ஒரு கேள்வியாகக் கேட்டிருக்கிறார். இந்த பாலிசி சேருக்கு மட்டுமல்ல, மெம்பர்களுக்கும் சேர்த்துத் தான். பாலிசியின்படி ஒரு கேள்வியாகக் கேட்டால் இரண்டு முறை கேள்வி கேட்க அனுமதிக்கலாம். (குறுக்கீடு) திரு. வேணுகோபால் தயவு செய்து உட்கார வேண்டும். திரு. வெங்கடாசலம் கேட்டால் நான் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங் களைக் கொடுத்திருந்தேன். இரண்டையும் சேர்த்து ஒரே கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இரண்டு பிரச்சினைகள் இருப்பதால் மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

கோத்தாரி சர்க்கரை மற்றும் இரசாயனத் தொழிற்சாலையில் இருந்து வெளி வரும் கழிவு நீரை சுத்திகரிப்புச் செய்து வெளி யேற்றுவதாகத் தெரிகிறது என்றும், தொழிற்சாலை தனது கழிவு நீரை வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறையின்படி சுத்தி கரிப்புச் செய்து வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது என்றும் முன்னுக்குப் பின் முரணாகக் கூறப்பட்டிருக்கிறது. எனவே அந்த சர்க்கரை ஆலையிலிருந்து வெளி வரும் கழிவு நீர் பங்குனி வாய்க்காலில் கலப்பதால் அப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்படுவதை கருத்திற் கொண்டு வாரியம் நிர்ணயித்திருக்கிற வரைமுறையின்படி சுத்திகரிப்புச் செய்து அந்நீரை வெளியேற்ற வேண்டும் என்றும், அதனை முறையாக செய்யவேண்டும் என்றும் கூறி கோத்தாரி நிறுவனத்தின் மீது அரசு தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோத்தாரி நிறுவனம் மட்டு மல்ல, டால்மியா சிமெண்ட்டாக இருந்தாலும் சரி, வாரியம் நிர்ணயித்துள்ள அளவிற்கு மேல் அதிகமாக காற்றுமண்டலத் திலே புகை கலக்கக் கூடாது என்பதையும், கழிவுநீர் சுத்தி

கரிப்புச் செய்யாமல் வெளியேற்றப்படக் கூடாது என்பதையும், மீறினால் நிச்சயமாக நடவடிக்கைக்கு அவர்கள் உள்ளாக்கப் படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(இ) சேலம் மாக்னசைட் தொழிற்சாலையில் தொழிலாளருக்குப் பணிக்கொடை வழங்காமை.**

**திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியத்தில் இருக்கும் தமிழ்நாடு மாக்னசைட்டின் தொழிலாளர்கள், சேலம் மாக்னசைட் லிமிடெட்டில் வேலை செய்த காலத்திற்கு பணிக்கொடை இதுவரை வழங்கப்படாததால், தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

**1977**-ல் சேலம் மாக்னசைட்டின் சுரங்கக் குத்தகை முடிந்த பின் புதுப்பித்தல் மனுவை அரசு பரிசீலித்து 28—11—78-ல் தள்ளுபடி செய்ய முடிவு செய்ததால் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். மேலும் மாக்னசைட் வெட்டி எடுப்பது அன்றிலிருந்து சுமார் 2 மாதகாலம் நிறுத்தப்பட்டது. திருவாளர்கள் சேலம் மாக்னசைட் பிரைவேட் லிமிடெட்டின் மேற்படி தொழிலாளர்கள் தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் மற்றும் தமிழ்நாடு மாக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட் நிறுவனங் களில் புதிய தொழிலாளர்களாக மறுபடியும் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். வேலைக்கு அமர்த்தப்பட்டபோது அவர்கள் முன்பு பணிபுரிந்த நிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய பணிக்கொடை போன்றவைகளை தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் மற்றும் தமிழ்நாடு மாக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட் நிறுவனங்களிடம் கோரக்கூடாது என்று ஒவ்வொரு வரிடமும் உறுதிமொழி வாங்கப்பட்டது. எல்லா தொழிலாளர் களும் மேற்படி நிபந்தனையை ஏற்றுக்கொண்டு பணியில் சேர்ந்தனர்.

2. திருவாளர்கள் சேலம் மாக்னசைட் பிரைவேட் லிமிடெட் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பணிக்கொடை போன்றவை களைக் கொடுக்காததால், அவர்கள் தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் நிறுவனத்தை அவர்களுக்கு சேரவேண்டிய பணிக் கொடை போன்றவைகளை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென தொடர்ந்து வற்புறுத்தி வந்தனர்.



இப்பிரச்சினைபற்றி சமரசப் பேச்சு வார்த்தைகள் பல தடவைகள் நடைபெற்றன. முடிவாக 6—5-1981-ல் புதுடில்லியில் மேற்படி தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு சம்பந்தப் பட்டவர்களிடையே ஒரு ஒப்பந்தம் (Memorandum of settlement) ஏற்பட்டது.

மேற்குறிப்பிட்ட ஒப்பந்தப்படி எடுக்கப்பட்ட முடிவுகளின் விவரம் கீழ் வருமாறு:

1. 1977 மற்றும் 1978ஆம் ஆண்டுகளில் தொழிலாளர் களின் ஈட்டிய விடுப்புக்கு உண்டான தொகையை அளிக்க திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட் ஒத்துக்கொள்கிறது. ஒப்பந்தம் கையெழுத்திட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் இத்தொகை செலுத்தப்படும்.

2. கடைசியாக வாங்கிய சம்பளத்தின் அடிப்படையில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் 2 மாத மொத்த சம்பளத்தை கருணைத்தொகையாக வழங்க திருவாளர்கள் சேலம் மாக்னசைட் பிரைவேட்) லிமிடெட் ஒத்துக்கொள்கிறது.

3. திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட் அந்நிறுவனத்தில் பணிபுரிந்த காலத்திற்கு தொழிலாளர்களுக்கு பணிக்கொடைச் சட்டத்தின்படி செலுத்த வேண்டிய பணிக்கொடைக்காக தமிழ் நாடு அரசுக்கு மொத்த மாக ரூ. 54 லட்சம் வழங்க ஒத்துக்கொள்கிறது. பணிக்கொடை தமிழ்நாடு மாக்னசைட்ஸ் லிமிடெட் மற்றும் தமிழ்நாடு மாக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட் நிறுவனங்களால் பணிக் காலம் முழுவதற்கும் (அதாவது திருவாளர்கள் சேலம் மாக்ன சைட் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் தற்போதுள்ள கம்பெனி களில் பணிபுரிந்ததற்கும் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட கம்பெனிகளிடம் கடைசியாக வாங்கிய சம்பளத்தின் அடிப்படை யிலும்) செலுத்தப்படும்.

4. ஒப்பந்தம் கையெழுத்திட்ட தேதியிலிருந்து திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட் தமிழ்நாடு அரசுக்கு தொகையை செலுத்த வேண்டிய முறை வருமாறு:

(அ) ரூ. 27 லட்சம் வட்டியில்லாமல் 3 மாதங் களுக்குள்

(ஆ) ரூ. 9 லட்சம் 6 மாதங்களுக்குள் வட்டியுடன் (12.5 சதவிகிதம் 3 மாதங்களுக்கு)

(இ) ரூ. 18 லட்சம் 9 மாதங்களுக்குள் வட்டியுடன் (12.5 சதவிகிதம் 6 மாதங்களுக்கு)

5. இனம் 3—ல் குறிப்பிட்டபடி திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பி) லிமிடெட் தமிழ்நாடு அரசுக்கு ரூ. 54 லட்சத்திற்கு வங்கி உத்திரவாதம் பெற்றுத் தரும்.

6. மேலே பத்தி 1, 2 மற்றும் 3—ல் குறிப்பிட்டுள்ள தொகைகளை திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட் செலுத்தினால் அந்நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய எல்லா தொகைகளுக்கான பொறுப்பிலிருந்தும் மேற்படி கம்பெனி விடுபடும்.

7. மேலே பத்தி 1, 2 மற்றும் 3—ல் குறிப்பிட்ட தொகைகள் முடிவானவை என்று சம்பந்தப்பட்ட நபர்கள் ஒத்துக் கொள்கின்றனர்.

8. மேலே பத்தி 4—ல் குறிப்பிட்ட தொகை செலுத்துவதற்கான முறை திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவின் ஒப்புதலுக்கும் தமிழ்நாடு அரசின் ஒப்புதலுக்கும் உட்பட்டதாகும் தொகை செலுத்தும் முறைக்கு 20—5—1981க்கு முன்பு மறுப்பு தெரிவிக்கவில்லையென்றால் இந்த ஏற்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்படும். சம்பந்தப்பட்ட நபர்கள் ஒப்பந்தத்தை முடிவு செய்ய சென்னையில் 20—5—81-ல் கூடுவார்கள்.

3. மேற்படி ஒப்பந்தத்தில் எடுத்த முடிவு 1 மற்றும் 2ஐ சேலம் மாக்னசைட் பிரைவேட் லிமிடெட் நிறைவேற்றியது. முடிவு 3—ன் படி ரூ. 54 லட்சத்தை அரசிற்கு செலுத்த சம்மதித்தது. ஆனால் முடிவு 4-ல் குறிப்பிட்டுள்ள தொகை செலுத்தும் முறைக்கு இயக்குனர்கள் குழு ஒத்துக்கொள்ளவில்லையென்று திருவாளர்கள் சேலம் மாக்னசைட் பிரைவேட் லிமிடெட் புதுடில்லியில் உள்ள தலைமை தொழிலாளர் ஆணையாளருக்கு 15-5—1981 -ல் தெரிவித்தது. ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டபடி அவர்கள் வங்கி உத்திரவாதமும் பெற்றுத்தரவில்லை. சென்னையில் தொழில்துறையின் ஆணையாளர் மற்றும் செயலாளர் 16-6—81-ல் மறுபடியும் ஒரு கூட்டத்தை கூட்டினார். திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பி) லிமிடெட்டின் இயக்குநரான திரு. ஜே. ஆர். மேத்தா அவர்கள் ஆயுள் காப்புறுதி நிறுவனத்திடம் செலுத்தியுள்ள ரூ. 18 லட்சத்தையும், வெட்டி எடுத்து ஆனால் எடுத்துச் செல்லப்படாத மாக்னசைட்டின் மதிப்பான ரூ. 18 லட்சத்தையும் தமிழ்நாடு மாக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட்டின் நிறுவனத்தில் உள்ள பங்கு தொகையை சரிக்கட்டுவதின் மூலம் ரூ. 7 லட்சத்தையும் வழங்க ஒத்துக் கொண்டார். மீதமுள்ள ரூ. 12 லட்சத்திற்கு மட்டும் வங்கி உத்திரவாதம் பெற்றுத்தர அவர் ஒத்துக் கொண்டார். ஆனால் அவர் வங்கி உத்திரவாதம் பெற்றுத்தரவில்லை.





4. புதுடில்லியில் ஏற்பட்ட மேற்படி ஒப்பந்தத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பரிசீலனை செய்து அரசு ஆணை எண் 584 தொழில் துறை நாள் 25—5—84-ல் திருவாளர்கள் சேலம மாக்னசைட்(பி) லிமிடெட்டின் இயக்குநரான திரு. ஜே. ஆர். மேத்தா அவர்கள் தமிழ்நாடு அரசு நிறுவனங்கள் இரண்டும் பணி தொடங்குவதற்கு முன்பு தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பணிக்கொடை போன்றவற்றை வட்டியுடன் வழங்க கடமைப்பட்டவர் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்டின் மேலாண் இயக்குநர் மேற்கூறிய நிலையை தொழிற்சங்கங்களுக்குத் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டார்.

5. மேற்படி அரசு ஆணைக்கு தொழிலாளர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. எனவே அவர்கள் மேலும் டான்மாக் மேலாண் இயக்குநரிடம் பணிக்கொடை அளிப்பது பற்றி வற்புறுத்தி வந்தனர்.

6. வட்டார தொழிலாளர் ஆணையாளரும் (மையஅரசு) பல தடவைகள் இப்பிரச்சினை பற்றி சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார், ஆனால் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

7. இதற்கிடையில், சேலம் மாக்னசைட் தொழிலாளர் சங்கங்கள், அரசு ஆணை எண் 584 தொழில் துறை நாள் 25—5—84 ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் தொழில் தகராறு சட்டம் 1967—ன் படி மேற்படி தகராறை தீர்ப்பாயத்தின் முடிவுக்கு அனுப்ப வேண்டுமென்றும் வட்டார தொழிலாளர் ஆணையாளர் (மைய அரசு) அவர்களைப் பணிக்க வேண்டுமென்றும் கோரி உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு எண் 6967/84—ஐ தாக்கல் செய்தன. மேற்படி ரிட் மனு 19-1-85—ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எல்லா தரப்பினரையும் விசாரித்த பிறகு திருவாளர்கள் சேலம் மாக்னசைட்(பி) லிமிடெட் பணிக்கொடைக்கான ரூ. 54 லட்சம் செலுத்த இன்னமும் தயாராக உள்ளதாலும் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை ஓய்வு பெறும் போது தான் வழங்க வேண்டியுள்ளதாலும், ரூ. 54 லட்சத்தை எந்த வகையிலாவது சரிக்கட்டுவதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நீதிபதி ஆலோசனை கூறினார். திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட் ஓய்வு பெற்ற எல்லா தொழிலாளர்களுக்கும் சேர வேண்டிய பணிக்கொடையை வழங்கி விட்டு அத்தொகையை ரூ. 54 லட்சத்திலிருந்து குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும் நீதிபதி கருத்து தெரிவித்தார்.

8. நீதிபதியின் ஆலோசனைக்கிணங்க 13-3—1985 அன்று தொழிலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்டின் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடனும், திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட்டின் சார்பாக திரு. மேத்தா அவர்களுடனும் விவாதித்து கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன

(திரு. க. இராசாராம்) [1987 ஏப்ரல் 3

(1) திரு. மேத்தா ஏற்கனவே கொடுப்பதாக ஒப்புக் கொண்ட ரூ. 54 லட்சத்தில் முதல் தவணையான ரூ. 27 லட்சத்தை 15 தினங்களுக்குள்ளும் மீதமுள்ள தொகையை ஆறு மாதத்திற்குள்ளும் கொடுக்க வேண்டும்.

(2) மேற்படி தொகையை செலுத்துவதில் ஏற்பட்ட கால தாமதத்தினால் திரு மேத்தா செலுத்த வேண்டிய வட்டித் தொகை பற்றி தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் விவாதித்து முடிவெடுக்க வேண்டும்.

9. அரசு ஆணை எண். 398 தொழில் துறை நாள் 24-4-85-ல் மேற்படி முடிவுகள் பற்றி ஆணை பிறப்பிக் கப்பட்டுள்ளது. மேற்படி அரசு ஆணைக்கிணங்க திரு. மேத்தா அவர்கள் 26-3-85 அன்று முதல் தவணையான ரூ. 27 லட்சத்தை செலுத்தினார்கள். இரண்டாவது தவணையை ஆறு மாத காலத்திற்குள் செலுத்தாததாலும் மாக்னசைட் இருப்பை எடுக்காதிருந்ததாலும் 11-12-85 அன்று மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் திரு மேத்தா அவர்களுடனும் டான்மாக் மேலாண் இயக்குநருடனும் விவாதித்தார். அப்பொழுது திரு மேத்தா அவர்கள் மாக்னசைட் இருப்பை எடுத்த இரண்டு மாதத்திற்குள் ரூ. 27 லட்சத்தைச் செலுத்து வதாக ஒப்புக்கொண்டார்.

10. அதன் பிறகு பல தடவைகள் இது குறித்து பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. ஆனால் திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட் இதுவரையில் மீதமுள்ள ரூ. 27 லட்சத்தை ஒத்துக் கொண்டபடி கொடுக்கவில்லை. மேற்படி தொகையைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது.

11. இதற்கிடையில் அரசு தொழிலாளர்கள் சேலம் மாக்னசைட் (பி) லிமிடெட்டில் பணிபுரிந்த காலத்திற்கு கொடுக்க வேண்டிய பணிக்கொடையில் 50 விழுக்காடு தொகையை அவர்களுக்கு முன்பணமாக கொடுக்குமாறு டான்மாக் மேலாண் இயக்குநருக்கு அறிவுரை வழங்கியுள்ளது. அவ்வாறே டான்மாக் மேலாண் இயக்குநர் ஓய்வு பெற்ற மற்றும் ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்கு அளித்து வருகின்றார். திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட்டிலிருந்து ரூ. 27 லட்சத்தைப் பெற்று மிகுதி 50 விழுக்காடு பணிக்கொடையை தொழிலாளர்களுக்கு கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கே. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவர அறிக்கையில் கூறியுள்ளபடி அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்கிறேன். ஓய்வு பெற்ற மற்றும் ஓய்வு பெறவுள்ள தமிழ்நாடு மாக்னசைட்டின் தொழி லாளர்கள் மிகவும் அவதிப்படுவதால் 50 விழுக்காடு முன்



1987 ஏப்ரல் 3] (திரு. கே. அன்பழகன்)

பணமாகத் தருவதற்குப் பதிலாக முழு கிராஜுவட்டியை தொழி லாளர்களுக்குக் கொடுப்பதோடு, சேலம் மாக்னசைட் லிமிடெட் நிறுவனத்திலிருந்து 27 இலட்சம் ரூபாயைப் பெற்று, தொழி லாளர்கள் கணக்கில் வைத்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது சம்பந்தமாக பல கூட்டங்கள் நடை பெற்று முன்னாள் சேலம் மாக்னசைட் உரிமையாளரிடத்தில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அவர்களிடத்தி லிருந்து 27 இலட்சம் ரூபாயை நாம் பெற்று வங்கியிலே வைத்திருக்கிறோம். மீதி 27 இலட்சம் ரூபாயை அவர்கள் தர வேண்டியிருக்கிறது. அதற்கான நடவடிக்கையை சென்ற வாரம்கூட நாம் மேற்கொண்டிருக்கிறோம். அந்தப் பணத்தை விரைவில் அந்த உரிமையாளரிடத்திலிருந்து பெற்று, தொழி லாளர்களுக்குத் தர ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சேலம் மாக்னசைட் லிமிடெட் இன்னும் கட்ட வேண்டிய 27 இலட்சம் ரூபாயைப் பெற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? அதற்கு ஒரு காலக்கெடு வைத்து, அந்தப் பணத்தைப் பெற்று தொழிலாளர்களுக்குக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 3 மாத காலக்கெடு கொடுக்கப்பட்டு அந்தக் காலக்கெடு முடிந்து விட்டது. எங்களுடைய பொருள்கள் இருக்கின்றன. அவற்றை விற்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை விற்க அனுமதி அளித்தோம். அதை அவர்கள் விற்றுவிட்டார்கள். இப்போது அவர்களுடைய பங்காக பணத்தைத் தர வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அந்தப் பணத்தைப்பெற அதிகாரிகள் மூலமாக தக்க நடவடிக்கைகளை அரசு மேற் கொண்டிருக்கிறது.

(ஈ) திருச்சி மாவட்டத்திலுள்ள கல் உடைக்கும் தொழிற் சாலைகளிருந்து வெளியேறும் புகையால் பாதிப்பு.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, "திருச்சி—தஞ்சை சாலையருகில் புதிதாகத் தோன்றியிருக்கும் கல் உடைக்கும் (Crusher) தொழிற்சாலை களிலிருந்து வெளிவரும் புகையினால், மூக்கிலிருந்து இரத்தம் வருதலும் மற்றும் ஆஸ்துமா போன்ற வியாதியால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் ; மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்
கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

திருச்சி-தஞ்சாவூர் சாலையில் எட்டு கல் உடைக்கும்
தொழிற்சாலைகள் உள்ளன. திருச்சி மாவட்டம் தூவக்குடியில்
திருச்சி-தஞ்சாவூர் சாலையில் உள்ள சிறுதொழில் வளர்ச்சிக்
கழகம் தொழிற்சாலை வளாகத்தில் இரண்டு கல் உடைக்கும்
தொழிற்சாலைகள் உள்ளன.

கற்கள், கல் உடைக்கும் இயந்திரத்தில் உடைக்கப்
படுகின்றன. இவ்வாறு உடைக்கப்பட்ட கற்கள் சல்லடை
அமைப்புகள் வழியாக அனுப்பப்பட்டு சிறு கற்களாகப் பிரித்து
எடுக்கப்படுகின்றன. கற்களை உடைக்கும் போது தூசி
உண்டாகின்றன. இந்த செயல்கள் முழுவதும் திறந்த வெளியில்
நடைபெறுகின்றன. இதனால் தூசிப் பொருட்கள் சுற்றுப்புறங்
களில் பரவுகின்றன.

சிறு தொழிற் வளர்ச்சிக் கழகத் தொழிற்சாலை வளாகத்
தில் உள்ள மேற்படி இரண்டு கல் உடைக்கும் தொழிற்சாலை
களில் ஒன்று, 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும்
கட்டுப்பாடு) சட்டத்தின்படி, வாரியத்தின் அனுமதி கோரி
விண்ணப்பித்துள்ளது. அந்த விண்ணப்பம் வாரியத்தின் பரி
சீலனையில் உள்ளது. மற்றொரு கல் உடைக்கும் தொழிற்
சாலையானது மாநில நெடுஞ்சாலைத் துறையினருக்குச்
சொந்தமானது. மேற்படி தொழிற்சாலை 6-3-87-க்குள்
காற்று மாசினைக் கட்டுப்படுத்த எந்தவிதமான கட்டுப்பாடு
முறைகளைப் பின்பற்றுகிறது என்பதைத் தெரிவிக்குமாறு
கேட்டுக் கொள்ளப்பட்டது. இது தவிர 1981-ஆம் ஆண்டு
காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி
புதிய தொழிற்சாலை ஒன்று தொடங்குவதற்கு அனுமதி கோரி
விண்ணப்பித்துள்ளது.

கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் மற்றொரு தொழிற்சாலை
யானது, சிறு தொழில் வளர்ச்சிக்கழக தொழிற்சாலை வளாகத்
திலிருந்து தூரத்தில் அமைந்துள்ளது. 1981-ஆம் ஆண்டு காற்று
(மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி மற்ற ஆறு
தொழிற்சாலைகள் வாரியத்தின் ஒப்புதல் கோரி இதுவரை
விண்ணப்பிக்கவில்லை. மேற்படி தொழிற்சாலைகளின் மீது
சட்டப்படி நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக வாரியம் பரி
சீலனை செய்ய இருக்கிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு
வாரியம் புதிய கல் உடைக்கும் தொழிற்சாலைகள் அமைப்
பதற்கு கீழ்க்கண்ட வழிமுறைகளை நிர்ணயித்துள்ளது.



(1) தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளிலிருந்து
இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குள் எந்த கல் உடைக்கும்
தொழிற்சாலைகளும் அமைக்கப்படக் கூடாது.

(2) தூசு மாசினைத் தவிர்க்க இரண்டு கல் உடைக்கும்
தொழிற்சாலைகளுக்கு இடைவெளி 4 கிலோ மீட்டர் தூரம்
இருக்க வேண்டும்.

(3) ஒன்றுக்கு மேற்பட்ட கல் உடைக்கும் தொழிற்
சாலைகள் அமைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலையில்
அவை செயல்பட சிரமமின்றி ஒன்றுக்கொன்று எவ்வளவு அருகா
மையில் அமைக்கப்பட வேண்டுமோ அவ்வளவு அருகாமையில்
இருக்க வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் பொழுது அது
ஒரு ஒட்டு மொத்தமான ஆதாரமாகக் கருதப்பட்டு அதற்கேற்
றாற்போல் தூரம் நிர்ணயிக்க வேண்டும்.

சிறுதொழில் வளர்ச்சிக் கழகத் தொழிற்சாலை வளாகத்தில்
ஏற்கனவே நடைமுறையிலுள்ள இரண்டு கல் உடைக்கும்
தொழிற்சாலைகளின் இடங்களும், புதிதாக நிறுவப்பட இருக்கும்
தொழிற்சாலையின் இடமும் திருச்சி கொதிகலன் தொழிற்
சாலையின் சிறு முதலீட்டு உபதொழிற்சாலைகள் அமைந்துள்ள
இடத்திற்கு அருகாமையில் உள்ளன. வாரியம் அந்த இடத்தின்
சுற்றுப்புற காற்றின் தன்மையை ஆய்வு செய்ய உள்ளது.
இந்தத் தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடத்தின் நிலைமை
களுக்கேற்பவும் வாரிய வரைமுறைகளையும் கருத்தில்கொண்டு,
மேற்படி தொழிற்சாலைகளிலிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்
பங்கள் பரிசீலிக்கப்படும்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, விவர அறிக்கையில் துரித நடவடிக்கை
எடுக்கப்படுவதாக அறிவித்திருப்பதற்கு மகிழ்ச்சி. தஞ்சை
மருத்துவ மனையில் நாள் ஒன்றுக்கு 20 லிருந்து 50 நோயாளி
கள் இத்தகைய தொழிற்சாலை புகையால் பாதிக்கப்பட்டு,
சிகிச்சைக்காக வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே நாடு
முழுவதும் இது போன்ற புகையினையும், கழிவு நீரையும்
உண்டாக்கும் தொழிற்சாலைகளைத் தொடங்கும்போது, மாசுக்
கட்டுப்பாடு நிறுவனத்திடமிருந்து 'தடையில்லை' என்று ஆணை
பெற்ற பிறகுதான் இத்தகைய தொழிற்சாலைகளை நிறுவ
வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். மேலும்
இது போன்ற தொழிற்சாலைகளுக்குக் கடன் வழங்கும்போது,
மாசு கட்டுப்பாட்டுத் துறையின் அனுமதியைப் பெற்றவர்
களுக்குத்தான் கடன் வழங்கப்படுமென்ற அறிவுரையை துறை
வழங்குமா?

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, புதிதாகத் துவங்கப்படும் தொழிற் சாலைகள் மாக கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் வருகின்றன. அவர்கள் மனுச் செய்கிறார்கள். அதைப் பரிசீலித்து, இந்த வாரியம் அனுமதித்த பிறகு தான் தொழிற்சாலை இயங்க முடியும்.

**(உ) அடையாறு ஓரத்தில் வெள்ளத்தடுப்பு சுவர் கட்டுவதில் தாமதம்**

திரு. சைதை. சா. துரைசாமி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''அடையாறு ஆற்றின் ஓரத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுகிற பணி துவங்குவதில் கால தாமதம் ஏற்படுவதால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படும் வெள்ள அபாயம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

சென்னையில் உள்ள அடையாறு ஆற்றுக்கு கடந்த 1085 நவம்பர்-டிசம்பர் வெள்ளத்தால், பெரும் சேதம் ஏற்பட்டது. அடையாறு ஆற்றினை மேம்பாடு செய்ய மைய அரசு ரூ. 2 கோடி வழங்கியது. அடையாறு வெள்ளச் சேதங்களை தவிர்ப்ப தற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை தர அரசு 1986 பிப்ரவரி மாதம் ஒரு வல்லுநர் குழு நியமித்தது. அடையாறு ஆற்றுக்கு மேம்பாடு செய்ய ரூ. 12 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ள குழு பரிந்துரை செய்துள்ளது. வல்லுநர் குழு அறிக்கையின் அடிப்படையில், சில முக்கியமான பணிகளை உடனடியாக மேற்கொள்ள ரூ. 2 கோடி மதிப்பீட்டிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

2. இதில் அடையாற்றின் இடது கரையில் ஜாபர்கான் பேட்டை தாழ்பாலம் முதல் மறைமலை அடிகள் பாலம் வரை தடுப்புச் சுவர் கட்டுதலும், நந்தம்பாக்கம் பாலத்திலிருந்து கத்திப்பாரா தாழ்பாலம் வரை ஆற்றை அகலப்படுத்தி, ஆழப் படுத்துதலும் முக்கியமான பணிகளாகும். முதல் கட்டமாக, அடையாற்றில் ஜாபர்கான்பேட்டை முதல் கத்திப்பாரா தாழ்பாலம் வரை ஆற்றின் இடது கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை துவங்கப்பட்டுள்ளது.



3. தடுப்புச் சுவர் கட்டும் பணியினை விரைவாக முடிக்கும் பொருட்டு, இப்பணி 11 சிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, கடைக்கால் முழுவதும் தோண்டப்பட்டு, ஆறு பகுதிகளில் கடைக்கால்கற்காரை (Foundation Concrete) போடப்பட்டுள்ளது. மூன்று பகுதிகளில் கருங்கல் கட்டிடப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிக்கு 28-2-1987 வரை ரூ. 50.00 இலட்சங்கள் செலவிடப்பட்டுளளது. இப்பணி 31-3-1987-க்குள் முழுமையாக முடிக்கப்படும்.

4. இது தவிர, மறைமலை அடிகள் பாலத்திற்கு கீழ் கோட்டூர்புரம், நந்தவனம் பகுதிகளில் ஆற்றின் இரு கரைகளிலும் தடுப்புச் சுவர்/கரைகள் அமைத்தல் சம்பந்தமாக பூண்டியில் மாதிரிப் படிவங்கள் ஆராய்வு செய்யப்பட்டு வருகின்றன.

[முற்பகல் 11—20]

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது போல நந்தம்பாக்கம் பாலத்திலிருந்து கத்திப்பாரா தரைப்பாலம் வரை கரை கட்டவும், அகலப்படுத்தி ஆழப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக் கிறது. அதிலே கத்திப்பாரா தரைப்பாலத்தின் அருகாமையில் ஆற்றின் நடுவில் தனியார் சொந்தமாக இடத்தை வைத்துக் கொண்டு பயிர் செய்து கொண்டிருக்கின்றார்கள். அது வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கின்றது. அரசுக்குச் சொந்தமான ஆற்றின் நடுவிலே தனியார் எப்படி சொந்த பட்டா பெற முடியும். மணல் திட்டாக அந்த பகுதி இருக் கின்றது. அந்தப் பகுதியிலே அடிக்கடி வெள்ள அபாயம் ஏற்படுகின்றது. ஆஸ்பிட்டல் சாலை மற்றும் கஸ்டம்ஸ் காலனி, பாதிக்கப்படுகின்றன. அங்கு தனியார் சொந்தமாக்கிய அந்த நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப் போல அங்கே அரசாங்கத் திற்கு சொந்தமான இடத்தை தனியார் ஆக்கிரமித்து பயிர் செய்து கொண்டு இருக்கின்றார்கள் என்று அரசுக்கு தெரிய வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கரை கட்டுகின்ற வேலை கத்திப்பாரா தரை பாலத்தில் இருந்து நடைபெற்று வருவதாகவும் அது மறைமலை அடிகளார் பாலம் வரை நடப்பு ஆண்டில் தொடங்கி நடைபெறுவதாகவும் இருக்கின்றது. அங்கே கரை கட்டுவதால், இந்த ஆற்றிலே துணி துவைக்கின்ற சலவையாளர்கள்

உள்ளே செல்லமுடியாத நிலை ஏற்படுகிறது. அப்படிக் கட்டப்படுகின்ற கரையில் சலவையாளர்கள் ஆற்றிலே இறங்கி துணி துவைக்கின்ற அளவுக்கு படி வசதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பற்றி அதிகாரிகளோடு கலந்துகொண்டு சாத்தியக்கூறுகள் அறிந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

### 4. அறிக்கைகள் அளித்தல்.

#### (அ) பொதுக் கணக்குக் குழு.

Thiru T. Venkata Reddy: Hon'ble Deputy Speaker Sir, on behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee :

(1) Fifty-fourty Report of the Committee on Public Accounts on the paragraphs pertaining to Revenue Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1982-83. (Revenue Receipts)

(2) fify-fifty Report of the Committee on Public Account on the paragraphs pertaining to Home Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1982-83. (Revenue Receipts).

#### (ஆ) பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொதுப் பணித்துறை குறித்த பத்திகள் மீதான மேற்படி குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை.

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83ஆம் மற்றும் 1983-34ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) மின்னணுவியல், அறிவியல்-தொழில் நுட்பவியல் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை.



13512
600 008.

### 5. அரசினர் தீர்மானங்கள்.

#### (அ) மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 195-வது விதியின் கீழ், 1987-88-ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை இம் மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

#### (ஆ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 203-வது விதியின் கீழ், 1987-88 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்கு குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை இம் மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

#### (இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 211-வது விதியின் கீழ், 1987-88-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை இம் மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

#### (ஈ) உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 227-வது விதியின் கீழ், 1987-88 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை

மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

6. அறிவிப்புகள்.

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல்கள் குறித்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழு (Estimatees Committee) பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee) பொது நிறுவனங்கள் குழு Public undertaking Committee) உரிமைக் குழு (Privileges Committee) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாளை 1987-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7-ஆம் தேதி செவ்வாய் கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1987ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8-ஆம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1987ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9-ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்,

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படு மாயின், குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வாக்கெடுப்பு நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

7. வரவு செலவுத் திட்டம், 1987-88 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 5.62,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்றதலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,62,96,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''





**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தின் அருகில் உள்ள காரைக்கால் பகுதியிலிருந்து சாராயம் கடத்தப்பட்டு கிராமங்கள் தோறும் விற்கப்படுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,62,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மதுமரம் ஏறும் தொழிலாளர்களுக்கு 'காதி கிராப்ட்' மூலம் பனை வெல்லம் காய்ச்சுவதற்குக் கடன் வழங்கப்படுவதை, மூலப் பொருள்களுக்குப் பதிலாக பணமாகக் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 2 மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.5,62,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள் நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,24,59,000-க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

**திரு. எ.எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,24,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,24,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள்கள் பற்றாக்குறை ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,24,59,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகரில் கடந்த மூன்று மாதமாக எந்தவித முத்திரைத் தாள்களும் சரியாகக் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,24,59,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு.

மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,32,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,32,74,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8 32,74,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் வட்டம்— தீவனூர் பகுதியில் பத்திரப் பதிவாளர் அலுவலகம் புதியதாக ஏற்படுத்த வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,32,74,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்."





திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கு உரிய கட்டிடங்கள் இல்லாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,32,74,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 10 —பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,33,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்றரூ. 2,33,21.000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 10— பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,33,21,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. மல்லன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் சேகரிக்கும் நிறுவனத்தை சீர்படுத்த வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,33,21,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(முற்பகல் 11-30)

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னார்குடியில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,33,21,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடவாசல் பேரூராட்சி எல்லையில் பால் வழங்கு திட்டத்தின்கீழ் 30 பேர்களுக்கு கும்பகோணம் சிட்டி யூனியன் வங்கியின் மூலம் வழங்கப்பட்டுள்ள கடனுக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்பட வேண்டியதை இதுவரை வழங்காததால், கடன்பட்டிருப்பவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,33,21,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(உ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 32,15,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,15,25,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 32,15,25,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போரூரில் உள்ள கால்நடை மருத்துவமனையை அபிவிருத்தி செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,15,25,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொருக்கை கால்நடைப் பண்ணையில் பணி புரியும் பணியாளர்களை 13 ஆண்டுகளுக்கு மேலாக தினக்கூலிகளாகவே வைத்திருப்பதால், அவர்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,15,25,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண்—2 மாநில ஆயத் தீர்வைத் துறை, கோரிக்கை எண்-5 முத்திரைத் தாள்கள்—நிர்வாகம், கோரிக்கை எண்—6 பத்திரப் பதிவு, கோரிக்கை எண்—10 பால் வழங்கு திட்டங்கள், கோரிக்கை எண்—22 கால்நடை வளர்ப்பு ஆகியவைபற்றித் தெளிவாக கொள்கை விளக்கக் குறிப்புகள் ** அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்த பின் இறுதியாக எனது பதிலைத் தெரிவிக்கிறேன்.

*திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு கொள்கை விளக்கம் மற்றும் முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் ஆகிய மானியங்களின் மீது நான் சார்ந்திருக்கக்கூடிய இந்திய தேசீய காங்கிரசினுடைய சார்பில் சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். நான் சென்ற ஆண்டே இதே கால்நடை மானியத்தின்மீது சில கருத்துக்களை எடுத்துச் சொன்னேன். அதற்குப் பதிலாக, வாக்குறுதி அளித்த அரசு அவைகளை நிறைவேற்றவில்லை. நான் பேசியவைகளெல்லாம், வாயில்லா ஜீவன்களுக்காகவும், அதற்காகப் பாடுபடுகின்ற அனைத்து ஊழியர்களையும் பற்றியதாலோ என்னவோ என்னுடைய கருத்துக்களுக்குப் பதிலாக அரசு அளித்துள்ள உத்தரவாதம் அத்தனையும் அங்கே மௌன ராகமாகப் போய்விட்டன என்ற எண்ணத்தை இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

** 194–274-ம் பக்கங்களில் இணைப்புகள் I, II, III, IV, V—ஆக அச்சடிக்கப் பெற்றுள்ளன.

இங்கே வரலாற்றிலேகூட ஒன்றைச் சொல்லுவார்கள். மனுநீதி சோழன் காலத்திலே கூட மாடு ஆராய்ச்சி மணியை அடித்து, அங்கே நீதி கிடைத்ததாக வரலாற்றிலே இடம் பெற்றிருக்கக்கூடிய காட்சிகளெல்லாம் நினைவில் இருக்கும் என்று கருதுகிறேன். ஆனால், நாங்கள் கூறுகின்ற கருத்துக்களெல்லாம்- ஊதுகிற சங்கை ஊதி விட்டுப் போவோம், விடிகிறபொழுது விடியட்டும் என்கின்ற நிலைக்கு நாங்கள் சொல்லிய அத்தனை கருத்துக்களும் போய்விட்டன என்பதை மட்டும் இந்த நேரத்தில் மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஏன் இவைகளையெல்லாம் இத்தனை ஆதங்கத்துடன் பேசுகிறேன் என்றால், கடந்த ஆண்டு நடைபெற்ற மானியத்தில் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் முன்னிலையிலேகூட எனக்கு அளித்த அத்தனை உத்தரவாதங்களும், இங்கே அளிக்கப்பட்ட வாக்குறுதி கூட நிறைவேற்றப்படவில்லை என்று நினைக்கின்றபொழுது இங்கே மரியாதைக்குரிய புதிதாகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் மூலமாகக்கூட அந்த வாக்குறுதிகள் மீண்டும் எனக்குக் கிடைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு, அதிலே நான் கூறியிருக்கக்கூடிய சில கோரிக்கைகளை, உங்களுக்கு நியாயமான கோரிக்கைகளாக அவைகள் தெரிந்தால் அவற்றை நிச்சயமாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமாய் அன்போடு உங்களைக் கேட்டுக்கொண்டு, எனக்குஇன்னும் பல கருத்துக்களைக் கூறுகின்ற நல்ல வாய்ப்பைத் தந்ததற்காக நன்றி கூறுகிறேன்.

நான் இத்தனை ஆவலோடும், எதிர்பார்ப்புகளோடும் பேசுவதற்குக் காரணத்தை நியாயமான முறையில் விளக்க வேண்டிய கடப்பாடு உடையவனாக இருக்கிறேன். உங்களுடைய கொள்கை விளக்கத்திலே குறிப்பிட்டிருப்பதைப்போல, கிராம வளர்ச்சிக்கு இன்றியமையாததாக இருக்கக்கூடிய, மகாத்மா காந்தியினுடைய கனவாகிய, இந்தியா கிராமங்களில்தான் உருவாகிறது என்கின்ற பொன்மொழிக்கேற்ப இன்றைய சூழ்நிலையில் கிராமப்புற வேலை வாய்ப்புகளை அளிக்கவும், நிலத்திலிருந்து அதிகமான வருமானங்களைப் பெறவும், நாம் மக்களுக்குச் சத்துணவை அளிக்கவும், ஒரு மனிதன் தன் சொந்தக்காலில் நிற்கவும், இன்னும் சொல்லப் போனால், ஒரு பெண்கூட சுதந்திரமாக, இயற்கையாலும், செயற்கையாலும் தனக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளிலிருந்து தற்காப்போடு வாழ்ந்து காட்டவும், இன்னும் சொல்லப்போனால், கால்நடைகளிலிருந்து கிடைக்கக்கூடிய பொருட்கள் அத்தனையும், இறந்தும் கொடுக்கின்ற, இருந்தும் கொடுக்கின்ற நிலையில் அவைகளினுடைய கொம்பிலிருந்து குளம்புகள் முதற்கொண்டு பல்வேறு தொழில்களை உருவாக்கக்கூடிய நல்ல பணிகளைச் செய்கின்ற அந்தக் கால்நடைகளுக்காக நான் பேசுகிறேன்.



இங்கே ஒரு வீட்டில் ஒரு கறவை மாடு இருந்தால் கூடப் போதும், அங்கே இரண்டு வெள்ளாடுகள் இருந்தால் கூடப்போதும் ஒரு வீட்டிலே ஏறக்குறைய இருபது கோழிகள் இருந்தால்கூடப் போதும்.

கால்நடைகளை வைத்திருக்கிற குடும்பம் தங்கள் சொந்தக் காலிலே நிலைத்து நிற்கக்கூடிய அளவுக்கு இருக்கிற காரணத்தால் அவ்வளவு முக்கியமான கால்நடை மானிய கோரிக்கைமீது பேசுகின்ற கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு பரிசீலனை செய்து, நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே விவசாயம் பொய்த்துவிடுகின்ற காலத்தில் கூட வாய் இல்லாத ஜீவன்களான கால்நடைகள் அரை வயிற்றுக் கஞ்சி கொடுக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை மானியத்தின்மீது நான் கடந்த ஆண்டு பேசும்போது கூறிய சில கருத்துக்களையே மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நல்லமுறையில் நடைமுறையில் இருந்துவந்த கால்நடை அபிவிருத்திக் குழு (லைவ்ஸ்டாக் டெவலப்மென்ட் கமிட்டி) செயல்படவில்லை என்று குறிப்பிட்டு, மீண்டும் அந்தக் குழுவை அமைக்கவேண்டுமென்று நான் சென்ற ஆண்டில் கேட்டேன். அப்போது தமிழக முதல்வர் அவர்கள் தனக்கு அருகில் இருந்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் கூறி, உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று சொல்லி, அவர்களும் உத்தரவாதம் அளித்தார்கள். என்ன காரணத்தாலோ அந்த உத்தரவாதம் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து அந்தக் கமிட்டியை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்தி, ஆண்டுக்கு 350 கால்நடை ஆய்வாளர்களை உருவாக்கித் தந்தார்கள். அதற்குப் பின்னால் அன்றுமுதல் இன்றுவரையில் அந்தப் பயிற்சித்திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. நிறுத்தப்பட்டதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதைத் தொடர்ந்து செயல்படுத்திவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையிலிருந்து ஒவ்வொரு வாரமும் ஆயிரக்கணக்கான மாடுகள் அண்டை மாநிலத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. ஆண்டுக்கு சராசரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால் இலட்சக் கணக்கான மாடுகள் தஞ்சை மாவட்டத்திலிருந்து. இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாட்டிலிருந்து அண்டை மாநிலங்களுக்குச் செல்கின்றன. கடந்த ஆண்டு மானியத்தில் கூட நான்

பேசும்போது தமிழக முதல்வரவர்கள் உடனடியாக அது தடுத்து நிறுத்தப்படும் என்று இந்த அவையிலே உத்தரவாதம் தந்தார்கள். கடத்திச் செல்லப்படுகின்ற மாடுகள் நிச்சயமாக தடுத்து நிறுத்தப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் மாடுகள் யாத்திரை தொடர்ந்து இருந்துகொண்டுதான் இருக்கிறது என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த யாத்திரையைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் மாண்புமிகுஅமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்வது என்னவென்றால் 200 கால்நடைகள் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைத்தால் தான் வளர்ந்து வருகின்ற மக்களின் தேவையை, மக்களின் எண்ணங்களை ஈடுகட்ட முடியும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால் கால்நடைகள் அழிந்துவிடும் சூழ்நிலை உருவாகும்.

அடுத்து, சுமார் 200 கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் பணியிடங்கள் இன்றைக்குக் காலியாக இருக்கின்றன. அந்த இடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் இருந்தால் அவர்களை தேர்வு செய்ய வேண்டும். இல்லையென்றால் அங்கே லைவ்ஸ்டாக் டெவலப்மென்ட் ஆய்வாளர்களாக இருக்கின்றவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து, அவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுத்து, அவர்களை காலியிடங்களில் நியமித்து, அந்த இடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு அதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உலகம் முழுவதும் இருக்கின்ற கறவை மாடுகளைப் பார்த்தால், கரத்தின் அடிப்படையில்,பால் கொடுக்கும் அடிப்படையில் இறைச்சி உற்பத்தியின் அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்தால் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு கிடைக்கும் பாலின் அளவைப் பார்த்தால் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்காவில் 4,154 கிலோ கிராமும், யுனைடட் கிங்டம் என்று சொல்லப்படுகின்ற நாட்டில் 3,951 கிலோ கிராமும் இந்தியாவில் 157 கிலோகிராமும் என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் இருந்து கொண்டிருக்கிறது.

நாம் இறைச்சி உண்ணும் அளவைப்பற்றிச் சொல்லும்போது நம்முடைய முன்னோர்கள் கறி வாங்கும்போது வீசைக் கணக்கில் வாங்கினார்கள் என்று சொல்வார்கள். பின்னாலே அது கிலோ கிராம் அளவுக்கு வந்து, இப்போது அது கிராம் கணக்கிலே வந்திருக்கிறது. டென்மார்க், மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியாவில் ஒருவருக்கு சராசரியாகக் கிடைக்கும் இறைச்சியின் அளவு 1.41 கிராம் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. இந்த அளவை உயர்த்துவதற்கு நம்முடைய கால்நடை துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, நம்முடைய கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் பற்றி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். செயற்கை முறையில் கருவூட்டல்செய்து கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்கு நல்லமுறையில் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்கு இந்தத் துறையில் அதிகாரிகள் நல்லமுறையில் ஒத்துழைத்து, பணியாற்றி வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். செயற்கை முறை கருத்தரிப்பு மூலம் உற்பத்தி செய்கின்ற கால்நடைகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சம் என்று அரசு இலக்கு நிர்ணயம் செய்திருந்தாலும் ஏறத்தாழ 5,13,395 என்ற அளவுக்கு அந்த எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்றால் அது இந்த அதிகாரிகளின் சிறப்பான பணிகளைக் காட்டுகிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரிகளின் முயற்சியால்தான் இலக்கினை இந்த அளவுக்குத் தாண்டியிருக்கிறோம்.

அதைப்போன்று கன்றுகள் பரிசோதனை இலக்கினையும் அதிகாரிகளின் பெருமுயற்சியினாலும் சிறந்த பணியினாலும் நாம் தாண்டியிருக்கிறோம். கன்றுகள் பரிசோதனை மூலமாக கால்நடைகளுக்கு வரக்கூடிய நோய்கள் உரிய காலத்தில் தடுக்கப்பட்டு அவற்றின் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. 'பிரிவென்ஷன் இஸ் பெட்டர் தேன் கியூர்' என்பார்கள். நோய் வருமுன் காக்கக்கூடிய பணியை இந்தத் துறையில் உள்ள அதிகாரிகளும் ஊழியர்களும் நல்லமுறையில் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து தெரிகிறது.

(முற்பகல் 11-40)

அவர்களுக்கு உதவக்கூடிய வகையில் ஆபத்து ஈட்டுப்படியை அவர்களுக்கு வழங்கவேண்டும். அவர்கள் பல்வேறு நோய்களை எதிர்த்துப் போராடுகிற நேரத்தில் அவர்களைக்கூட அந்த நோய் பீடித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பதால் அவர்களுக்கு இந்த ஆபத்து ஈட்டுப்படியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு இதை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது 29-9-86 அன்று இந்து பத்திரிகையில் வந்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தைப் பொறுத்த வரையில் 329 சங்கங்கள் இருந்தாலும் அவற்றில் 120 சங்கங்கள் செயல்படாமல் உள்ளன. 50 சங்கங்களில் கறவை மாடுகளே இல்லை என்றும் ஆனால் தஞ்சை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ஏறக்குறைய நான்காண்டுகளில் சுமார் ஒரு இலட்சம் மாடுகள் தரப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்மூலம் உற்பத்தியாகக்

கூடிய பால் அங்கேயுள்ள இணையத்திற்கு அனுப்பப்படுகிறபோது கிட்டத்தட்ட 7,000 லிட்டர் அளவுக்குத்தான் அனுப்பப்படுவதாக தகவல் வந்திருக்கிறது. அங்கே வழங்கப்பட்ட மாடுகளின் எண்ணிக்கையையும், அவற்றின் மூலம் வருகின்ற பாலையும் கணக்கிட்டுப் பார்க்கிறபோது அந்தப் பாலின் அளவு 10 சதவீதம் கூட இல்லை என்று சொல்லப்படுகிறது. இதில் என்ன தவறு நடக்கிறது என்பது தெரியவில்லை. இது பற்றி இந்து பத்திரிகையில் வந்திருக்கிறது. அங்கே வழங்கப்பட்ட மாடுகள், கறவை மாடுகளா அல்லது காளை மாடுகளா என எண்ணத் தோன்றுகிறது. இந்தத் தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, செயற்கை கருவூட்டலுக்கு ரூ.5 வீதம் அரசு வாங்கி வருகிறது. ஆனால் மற்ற மாநிலங்களில் இலவசமாக இந்த கருவூட்டலைச் செய்து வருகிறார்கள். ஏழை எளியவர்களுக்கு மாடுகளை எல்லாம் வழங்கி இருக்கின்ற நிலைமையில் இந்த உதவியையும் அவர்களுக்குச் செய்தால் பெரிய உதவியாக இருக்கும். எனவே அதனை இலவசமாக செய்து தருகின்ற வாய்ப்பு இருந்தால் செய்து தர வேண்டும் என்று மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் அருகாமையில் இருக்கக் கூடிய ஈச்சங்கோட்டை பால் பண்ணையில் ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிபவர்கள் இருக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய எந்தச் சலுகைகளும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அங்கே இருக்கக்கூடிய டாக்டர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் குழந்தைகள் தஞ்சைக்குச் சென்று படிக்கக்கூடிய வகையில் வாகன வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கக் கூடிய டாக்டர்கள் கிராமப்புறங்களில் இருக்கிறார்கள். ஆனால் தற்போது நகர்ப்புறங்களில் வாழ்ந்து வருகிற டாக்டர்கள் எல்லாம் கிராமப்புறங்களுக்குச் செல்கிற சூழ்நிலையைத் தவிர்த்து வருகின்ற இக்காலத்தில் கிராமப்புறங்களில் பணிபுரிகிற டாக்டர்களுக்கு உதவுகின்ற வகையில், அவர்கள் அங்கே தங்கி பணிபுரிவதற்கு உதவுகின்ற வகையில் வாடகை இல்லாத வீடுகளை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் எந்தவிதமான தொழில் வளமும் இல்லாத மாவட்டமாக இருக்கின்றது. எனவே அங்கே கால்நடைகளின் மூலமாகக் கிடைக்கின்ற உப பொருட்களை வைத்து தோல் பதனிடும் தொழிற்சாலை அல்லது எலும்புகளை அரைக்கின்ற தொழிற்சாலை அல்லது கால்நடை தீவனத் தொழிற்சாலை போன்றவற்றை ஏற்படுத்தினால் உதவியாக இருக்கும். தஞ்சை மாவட்டத்தில் விவசாயமும், கால்நடையும் ஒன்றை ஒன்று



பின்னிய வகையில், வளர்ந்து வருகிற காரணத்தால் அங்கே இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைத்துத் தந்தால் பெரிய உதவியாக இருக்கும். அந்த வகையில் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையிலே பால் பண்ணை அமைத்துக் கொடுப்பதாகவும், 4 கோடி ரூபாய் செலவில் அமைக்கவிருப்பதாகவும் ஆய்வுரையில் சொல்லி இருக்கிறார்கள். இதற்காக நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். அந்தப் பால் பண்ணையை விரைவில் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இந்த நல்ல வாய்ப்பினைத் தந்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றியைக் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**திரு. கே. குப்புசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள கால் நடை வளர்ப்பு, பால்வளம், பத்திரப்பதிவு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்து வைக்க நான் விரும்புகிறேன். தமிழ்நாட்டில் 75 சதவீதம் மக்கள் கிராமப்புறத்தில் வாழ்கிறார்கள். அப்படி கிராமப்புறத்தில் வாழ்கிற மக்கள் பெரும்பாலும் வேளாண்மையை முக்கிய தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். பருவ மழை பொய்க்கிறபோதும், வறட்சி ஏற்படுகிறபோதும், வறுமை ஏற்படுகிறபோதும், விவசாயம் பொய்க்கிறபோதும், அவர்கள் பாதிக்கப்படுவதை நாம் தொடர்ந்து ஆண்டாண்டு காலமாகப் பார்த்து வருகிறோம். விவசாயம் பொய்த்து விடுகிற நேரத்தில் விவசாயி வேறு உபதொழில்களுக்குச் செல்லுகிற வாய்ப்பு வடக்கே இருப்பதைப் போல, பஞ்சாபிலே, ஹரியானாவிலே இருப்பதைப் போல, மேற்கு வங்கத்திலே இருப்பதைப் போல வாய்ப்பு நம்முடைய விவசாயிக்கு இல்லை. பஞ்சாபிலே இருக்கிற விவசாயிக்கு விவசாயமும் பொய்ப்பது இல்லை. அத்தோடு அவர்களுக்கு உப தொழில்களும் ஏராளமாக இருக்கின்றன. இங்கே ஆண்டுக்காண்டு விவசாயம் பொய்த்து வருவதோடு விவசாயி விளைவிக்கின்ற பொருள்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைப்பதில்லை. மற்றைய விலைவாசிகள் ஏறிவிட்ட நிலையில், விவசாய பொருள்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்காத நிலையில் விவசாயிகள் வேலை வாய்ப்பு இன்றி பொருளாதார வளம் குன்றி ஊரை விட்டே இடம் பெயர்கின்ற நிலை வறட்சி காலத்திலே பெரும்பான்மையான இடங்களில் இருந்து வருகிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

விவசாயம் பொய்த்த காலத்தில் வறட்சி கடுமையாக நிலவும் சூழ்நிலையில் விவசாயிகளை காப்பாற்றுகிற ஒன்றே ஒன்று கால் நடை பராமரிப்புத்துறைதான் என்பதை தங்கள் மூலமாக அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் கால்நடைகள் இங்கிருந்து ஏராளமாக வெளி மாநிலங்களுக்கு சென்று விடுவதைச் சொல்லி அவற்றை தடுத்து நிறுத்த வேண்டிய அவசியத்தைப் பற்றியும் பேசினார்கள். ஆண்டுக்காண்டு அதிகமான கால்நடைகள் வெளி மாநிலங்களுக்குச் செல்கின்றன. இப்படி அதிகமாக கால்நடைகள் வெளிமாநிலங்களுக்குச் செல்லுகின்ற நிலையில் 1982 சென்சஸ் படி இன்று 25.14 மில்லியன் கால்நடைகள் தமிழகத்தில் இருக்கின்றன. இவ்வளவுக்கு பிறகும் கூட இத்தகைய எண்ணிக்கையில் கால்நடைகள் இருக்கின்றன என்றால் தமிழ்நாடு அரசு கால்நடை மேம்பாட்டுக்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள், போட்டிருக்கிற திட்டங்கள், ஒதுக்கப்பட்டிருக்கிற நிதிகள் நல்ல முறையில் செயல் பட தொடங்கி இருப்பதைத்தான் காட்டுகிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த வகையிலே எருமையில் முர்ரா, சுருட்டை போன்ற ரகங்களும், பசுவில் ஜெர்சி, ஷெல்டான் போன்ற இனங்களும் பெருகி கிராமப்புறங்களில் கூட அவைகளை காண முடிகிறது. அதன் காரணமாக 14.8 மெட்ரிக் டன் பால் பெருக்கு 1985-86-ல் 36.1 மெட்ரிக் டன்னாக உயர்ந்திருக்கிறது.

அந்த அளவுக்கு இந்திய துணைக் கண்டத்தில் கால்நடை அபிவிருத்தி மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டுகிற வகையில் தமிழகத்தில் இருந்து வருகிறது என்பதை பெருமையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அத்தகைய கால்நடைகள் மேலும் மேலும் அழிந்து போகாமல் இருக்க, கிராமப்புறங்களில் பொருளாதாரம் நசிந்துப் போகாமல் இருக்க, நடவடிக்கை எடுக்க வேண்டிய கடப்பாட்டில் அரசு இருக்கிறது என்பதை உங்கள் மூலமாக அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கேரளாவிற்கு நல்ல மாடுகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. நல்ல கன்றுகள், கலப்பினக் கன்றுகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. விவசாயிகள் மழை இல்லாத நிலையில், தீவனம் இல்லாத நிலையில், அவற்றை வைத்து காப்பாற்ற முடியாத நிலையில், குறைந்த விலைக்கு கலப்பின மாடுகளையும் கன்றுகளையும் விற்று வருகிற நிலைமை கிராமங்களிலே இருந்து வருகிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய காலக் கட்டத்தில் நாம் இருக்கிறோம். ஒருவேளை முற்றிலுமாக தடுக்க முடியவில்லை என்றாலும் கூட, ஆங்காங்கே வெளி மாநிலங்களுக்குச் செல்லுகின்ற வழியில் சோதனைச் சாவடிகளை அமைத்து, நல்ல மாடுகள் செல்வதை தடுத்து மாமிசத்திற்கு மட்டும் உரிய மாடுகள் செல்வதற்கு, அதாவது பால் சொடுக்கின்ற மாடுகள், வேலை செய்கிற மாடுகள் இவற்றை எல்லாம் தவிர்த்து, வயதான மாடுகள், ஊனமுற்ற மாடுகள் எல்லாம் செல்லுகின்ற அளவிற்காவது, தடுத்து நிறுத்த வேண்டிய நிலையில் அரசு இருக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.





அதேபோன்று கால்நடை கலப்பு இனம் இன்றைக்கு நாட்டிலே பெருகி வருகிறது குறிப்பாக, தமிழ்நாட்டில், நீலகிரி பெரியார், அண்ணா, கோவை போன்ற மாவட்டங்களில் கலப்பு இன பசுக்கள் பெருகி வருவதை, அதிகரித்து வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதில் இருக்கிற நடைமுறைச் சிக்கல் ஒன்றை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கிராமங்களிலே 'லிக்குவிட் செமன்' என்று சொல்லப்படும் திரவ விந்து அதிகமாக 'ப்ரோசன் செமன்' என்ற உறை விந்து பல இடங் இருக்கிறது.

(முற்பகல் 11-50)

களில் இருப்பதில்லை. தமிழ்நாட்டில் உறை விந்து தயாரிக்கிற நிலையம் தஞ்சை, திருநெல்வேலி ஆகிய இரண்டு இடங்களில் தான் இருக்கின்றது. இந்த இரண்டு இடங்களிலும் தயாராகிற உறை விந்து தமிழகத்தில் இருக்கிற கால்நடைகளுக்கு கலப்பின ஊசி போடுவதற்கு முற்றிலுமாகப் போதுமானதாக இல்லை. ஆனால் லிக்குவிட் செமன் என்ற திரவ விந்தினைப் பயன் படுத்தலாமென்றால் மூன்று நாட்களுக்கு மேல் அதனைப் பயன் படுத்த முடியாது. ஏனென்றால் அதனுடைய பவர் குறைந்து விடுகிறது. மூன்று நாட்களுக்கு மேல் உள்ள திரவ விந்தினைப் பயன்படுத்துகிறபோது கலப்பின அபிவிருத்தி 50 விழுக்காட்டிற்கும் கீழே வந்து விடுகிறதால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே உறை விந்து ஒவ்வொரு நிலையத்திலும் இருக்கிற தன்மையை நாம் ஏற்படுத்த வேண்டிய காலக்கட்டத்தில் இருக்கிறோம். உறை விந்தினைப் போடுவதால் 100-க்கு 60 விழுக்காடு வெற்றிகரமாக அமைகிறது என்று சொல்கிற நிலை இருந்து வருகிறது. இந்த விழுக்காடு இன்னும் உயர்கிற அளவில், உறை விந்து ஊசி போடுகிற எருமை மாடுகள் 90 சதவீதம் கன்றுகளை ஈனுகின்ற ஒரு நிலையை நாம் உருவாக்க வேண்டும். எனவே ப்ரோசன் செமன் உற்பத்தி நிலையங்கள் மாவட்டத்திற்கு ஒன்றாவது ஏற்படுத்த வேண்டும், அல்லது கான்ட்ராக்ட் பேசிஸ்-ல் நடவடிக்கையெடுத்து மாவட்டத்தில் ஒவ்வொரு கிளை நிலையத்திலும் இந்த ப்ரோசன் செமன் கிடைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல் மாடுகளுக்கு மிகவும் தேவையானது தீவன மாகும். மழைக் காலங்களில் தீவனம் பற்றி பிரச்சனை எழுவதில்லை. வறட்சி காலங்களில் தீவனம் பற்றாக்குறை காரணமாக மாடுகள் விற்கப்படுகின்றன, மாடுகள் நோய்வாய்ப்படுகின்றன, அதன் காரணமாக மாடுகள் இளைக்கின்றன. ஆகவே இந்தப் பற்றாக்குறை காலங்களில், வறட்சிக் காலங்களில் விவசாயிகளுக்கு மாட்டுத் தீவனம் குறைந்தவிலையில் அதிகமாகக் கிடைக்கிற நிலையை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். இப்போது சில இடங்களில் மாதவரம், ஆலந்தூர் போன்ற இடங்களில் மட்டும் மாட்டுத் தீவன உற்பத்தி நிலையம் இருக்கிறது. இதிலே

உற்பத்தியாகிற தீவனம் தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா கால்நடைகளுக்கும் நிச்சயமாக போதுமானதாக இருக்காது. எனவே விவசாயிகளுக்குத் தேவையான கால்நடைத் தீவனங்களை நவீன முறையில் உற்பத்தி செய்வதற்கான ஊக்கத்தை நாம் அளித்தாக வேண்டும். ஆகவே கிடைக்கிற குறைந்த தண்ணீரை வைத்து கறக்கிற மாடுகளுக்கு தீனி கொடுக்கிற அளவிற்கு அவர்களுக்கு உற்சாகத்தை நாம் கொடுத்தாக வேண்டும். பல்வேறு வகையான மாட்டுத் தீவனங்களை உற்பத்தி செய்பவர்களுக்கு நாம் மானியம் வழங்க வேண்டும். அதைப்போல மழைக்காலங்களில், பயிர் அதிகமாக செழிக்கிற காலங்களில் அதிகமாக தீவனப் புல்லை உற்பத்தி செய்து, சத்துக் குறையாமல் பதப்படுத்துகிற ஒரு முறை இருக்கிறது. அதற்கு ஊறுகாய் புல்முறை என்று பெயர். சைலேஜ் முறை என்றும் சொல்வார்கள். பல இடங்களில் இந்த சைலேஜ் முறையை மானியத்தோடு அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். மழைக்காலங்களில் அதிகமாக விளைகிற புல்லை குழிவெட்டி போட்டு வைத்து, பற்றாக்குறை காலங்களில் சத்து குறையாமல் மாடுகளுக்கு தீவனம் கிடைக்கிற ஒரு முறை தான் இந்த சைலேஜ் முறையாகும் என்று சொல்கிறார்கள். இந்த சைலேஜ் முறை தமிழகத்தில் ஒரு சில இடங்களில் தான் இருக்கிறது. அதை எல்லா மாவட்டங்களிலும், எல்லா கேந்திர கிராமங்களிலும் அமல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சைலேஜ் முறை பற்றி விவசாயிகள் புரிந்துகொள்கிற வகையில் அவர்களுக்கு விளக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த கிராமக் கேந்திர நிலையங்களில் பிற்பகலில் லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் இருப்பதில்லையென்று சொல்கிறார்கள். முற்பகலில் மட்டும் தான் அவர்கள் இருக்கிறார்கள். பிற்பகலில் விவசாயிகள் வருகிறபோது மாடுகளுக்கு மருத்துவம் பார்ப்பதற்கு, ஊசி போடுவதற்கு இவர்கள் இல்லாமல் இருப்பதால் அவர்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே பிற்பகலிலும் அந்த ஆய்வாளர்கள் இருக்கிற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாடுகளுக்கு ஏற்படுகிற நோய் கானல் நோய். அதாவது ஃபுட் அண்ட் மவுத் டிசீஸ் என்று சொல்கிறார்கள். இந்த கானல் நோயைத் தீர்க்க ஊசி போடுகிறார்கள். அதற்கு ஒரு ரூபாய் 90 காசு வசூல் செய்கிறார்கள். மத்திய அரசும், மாநில அரசும் கொடுக்கிற மானியத்தோடு இது செயல்படுத்தப்படுகிறது. இன்றைக்கு ஏழை விவசாயிகள் இந்த ஒரு ரூபாய் 90 காசைக் கூட கொடுக்க முடியாதவர்கள் இருக்கிறார்கள். அதே நேரத்தில் என்.டி.டி.பி. மூலமாக, அதாவது தேசிய பால் வள நிறுவனத்தின் மூலமாக, இலவசமாக இந்தத் தடுப்பு ஊசியைப் போட்டு வருகிறார்கள். ஆகவே என்.டி.டி.பி.யைப் போல நமது அரசும் இந்த ஒரு ரூபாய் 90 காசை எடுத்துவிட்டு விவசாயிகளின் கால்நடைகளுக்கு இலவசமாகவே தடுப்பு ஊசி போடுகிற ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதுபோன்று உறைவிந்து ஊசி போடவேண்டும் என்று சொன்னால் 5 ரூபாய் வசூல் செய்கிறார்கள். திரவ விந்து, லிக்குவிட் செமன் போடவேண்டும் என்று சொன்னால், 1 ரூபாய் வசூல் செய்கிறார்கள். இந்த 5 ரூபாய், மற்றும் 1 ரூபாய் எல்லாம் பெரிய தொகையாக அரசுக்கு வந்துவிடப்போவதில்லை. எனவே விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டுமானால் இதையும் கூட இலவசமாகப் போடவேண்டும். கால்நடைகளை வளப்படுத்துவதற்காக, கால்நடைகளின் மூலமாக பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக இந்த உறைவிந்து, மற்றும் திரவ விந்து ஊசிகளை எல்லாம் இலவசமாக விவசாயிகளுடைய கால்நடைகளுக்கு போடவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்களில் விரிவாக்க அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஹெல்த் கவரேஜ் கிடையாது. ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுப்பதை ப்ராசஸ் பண்ணுவதைத் தவிர அவர்களுக்கு வேறு ஹெல்த் கவரேஜ் கிடையாது. மாடுகளை வைத்தியம் பார்க்க, நோய் பார்க்க அந்த ஹெல்த் கவரேஜ் கிடையாது. அதையும் நாம் செய்து கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

அதைப்போல் கிராமத்தில் இருக்கிற விவசாயிகளுடைய மாடுகளுக்கு கடுமையான நோய் வருகிறபோது, உடனடியாகத் தகவல் சொல்ல, கால்நடை மருந்தகங்களில், ஃபோன் வசதி கிடையாது. வெட்டரினரி ஆஸ்பத்திரிகளில் ஃபோன் வசதி கிடையாது. ஃபோன் வசதி இருந்தால், தொலைபேசி மூலமாகத் தகவல் சொன்னவுடன், டாக்டர் உடனடியாக வந்து பார்த்து, மாடுகளுக்கு வைத்தியம் பார்த்துவிட்டுச் செல்வார்கள். இதற்காக அவர்களுக்குக் கூட மோட்டார் சைக்கிள் கொடுக்கலாம். மற்ற துறைகளில் கொடுத்திருப்பதைப் போல இவர்களுக்கும் ஒரு மோட்டார் சைக்கிள் கொடுத்தால், தொலைபேசியில் தகவல் வந்தவுடன் அவர்கள் தோட்டங்களுக்குச் சென்று, கால்நடைகளுக்கு மருத்துவம் செய்கிற ஒரு நிலை ஏற்படும்.

அடுத்து கால்நடைத் துறையிலே உள்ள மருத்துவர்கள் மிகவும் சோர்வுற்று இருக்கிறார்கள். அவர்கள் எம்.பி.பி.எஸ். படித்தவர்களுக்கு இணையாக ஊதியம் வேண்டும் என்று கேட்டு வருகிறார்கள். ஏற்கனவே பி.இ. படித்தவர்கள், எம்.பி.பி.எஸ். படித்தவர்களுக்கு இணையாக சம்பளத்தைப் பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு பே பாரிட்டி இல்லை என்று கடந்த நீண்ட நாட்களாக ஒரு போராட்டம் நடத்தி வருகிறார்கள். 20 ஆண்டுக்காலமாக அவர்களுக்குப் புரமோசன் இல்லை என்று கூட சொல்கிறார்கள். எனவே அவர்களுக்குப் புரமோசன் கிடைப்பதற்கும், வேலையில் சேர்ந்தவுடன் அவர்களுடைய பணியை ரெகுலரைசேசன் செய்வதற்கும், நிரந்தரம் செய்வதற்கும், எம்.பி.பி.எஸ். படித்தவர்களுக்கு இணையாகச் சம்பளம்

பெறுவதற்குமான நிலையை ஏற்படுத்தினால் அவர்கள் மேற்கொண்டு உற்சாகமாகப் பணியாற்றுவதற்கு அங்கே நல்ல வாய்ப்பு ஏற்படும். எனவே அவர்களுடைய நியாயமான கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்தியாவிலே, கால்நடைகளுக்கு என்று தனியாக ஒரு பல்கலைக்கழகம் எதுவும் இல்லை. எனவே தமிழ் நாட்டைப் பொறுத்தவரைக்கும் கால்நடைகளுக்கு என்று தனி பல்கலைக்கழகம் ஏற்படுத்துகிற செயற்குறிப்பை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த பால்வளம், இறைச்சி, கோழி சம்பந்தப் பட்ட நிறுவனங்கள் எல்லாம் இன்றைக்கு விவசாயத்துறையோடு இணைந்திருக்கின்றன. எனவே இவற்றை எல்லாம் சேர்த்து, தனியாக ஒரு பிரிவாக அமைத்து, கால்நடைக்கு என்று தனிச் செயலகம் அமைந்து அதற்கு என்று தனியாக ஒரு கமிஷனர் அண்ட் செக்கரட்ரியைப் போட்டால்கூட இந்தக் கால்நடைத் துறை இன்னும் நல்லமுறையில் செழிப்பாக வளரும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய அண்ணா மாவட்டம் வறட்சியால் பாதிக்கப் பட்ட மாவட்டம். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களும் அந்தப் பகுதியிலே தான் இருக்கிறார்கள். எனவே இதைப்பற்றி உங்களுக்கும் நல்லமுறையில் தெரியும் என்று நான் நினைக்கிறேன். அங்கே கால்நடைகளை வைத்துத்தான் கிராமப்புற மக்கள் எல்லாம் வாழ்ந்து வருகிறார்கள். பல இலட்சக்கணக்கான குடும்பங்களை கால்நடைகள் தான் காப்பாற்றி வருகின்றன. ஆனால் கால்நடை சம்பந்தப்பட்ட பண்ணை அண்ணா மாவட்டத்திலே இதுவரையில் ஏற்படுத்தவில்லை. கால்நடை மேம்பாட்டுக்காக, அண்ணாவின் பெயரால் அமைந்துள்ள அந்த மாவட்டத்தில் கால்நடைப் பண்ணை எதுவும் இல்லை. எனவே இவற்றை எல்லாம் அங்கே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அண்ணா மாவட்டத்தில்தான் பால் உற்பத்தி அதிகமாக ஆகிறது. இதைத் துணைத் தலைவர் அவர்களும் நன்கு அறிவார்கள். அவர்களுடைய தொகுதி, என்னுடைய தொகுதி எல்லாம் பால் வளத்திலே மிகப் பெயர் பெற்ற பகுதி களாகும். எனவே அங்கு உற்பத்தியாகிற பாலை எல்லாம் மதுரைக்குக் கொண்டு செல்லவேண்டிய காலகட்டத்திலே இருக் கிறோம். பால்வள ஒன்றியம் அண்ணா மாவட்டம், மற்றும் மதுரை மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்ந்து மதுரையிலே இருக்கிறது. இதனால் பழனியில் இருந்து 110 கி.மீ. தூரத்தில் உள்ள மதுரைக்குச் செல்வதற்கு விவசாயிகள் மிகவும்



கஷ்டப்படுகிறார்கள். எனவே அதிகமாக பால் உற்பத்தி செய்கிற, அதிகமாக கால்நடைகள் இருக்கிற, அதிகமான மக்கள் கால்நடை- களை நம்பி வாழ்கின்ற இந்த அண்ணா மாவட்டத்தில், தனியாக அண்ணா மாவட்டத்திற்கு என்று, பால்வள ஒன்றியம் ஒன்றை— மதுரையில் இருந்து பிரித்து — தனியாக ஏற்படுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு அமைச்சர் அவர் களைக் கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்த அரசினுடைய செயற்குறிப்பு கூட அனுதாபத்தோடு, ஆதரவோடு இருக்கிறது என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் மற்றும் நாங்கள் எல்லாம் சேர்ந்து பலமுறை அமைச்சர் அவர்களிடம் இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக் கிறோம். எனவே இதைத் தீவிரமாகப் பரிசீலித்து திண்டுக்கல்லை தலைநகராகக் கொண்டு, அண்ணா மாவட்டத்திற்கு என்று தனியாக பால் வள ஒன்றியத்தை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக பத்திரப் பதிவு குறித்து ஒரு முக்கியமான கருத்தை இங்கே நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன். பத்திரப் பதிவுக் கட்டணத்தைப் பொறுத்தவரை இன்றைக்கு 2 மடங்கு ரெஜிஸ்ட்ரேசன் வேல்யூ அதிகரித்து இருக் கிறது. சாதாரணமாக கைட்லைன் வேல்யூ ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாய் என்று போட்டிருந்தால், ரெஜிஸ்ட்ரேசன் வேல்யூ 10 ஆயிரம் என்று ஆகிவிட்டது. ஆனால் அதேநேரத்தில், நிலத்தை அரசு ஆர்ஜிதம் செய்கிறது என்றால், கைட்லைன் வேல்யூவில் பகுதியைத்தான் கொடுக்கிறது.

(நண்பகல் 12-00)

ஆகவே பதிவு செய்யவேண்டும் என்றால் கைடு லைனை விட 2 மடங்கு அதிகமாக ரிஜிஸ்ட்ரேசன் வேல்யூ கட்ட வேண்டி இருக்கிறது. அரசு ஆர்ஜிதம் செய்யும்போது மட்டும் கைடு லைனில் பாதியைத் தான் கட்டுகிறது. ஆகவே, இந்த அனாமலியை போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றைக்கு விவசாய நிலங்களைப் பொறுத்தவரையில் அதற்கும் சாதாரணமாக வீடு கட்டுகிற சைட்டுகளுக்கு போடுவது போல், விலை நிர்ணயிப்பது போல் அதற்கும் நிர்ணயித்து இருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் பல பேர் விவசாய நிலங்களை விற்க முடியாத அளவுக்கு இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஒரு ஏக்கர் 5 ஆயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள விவசாய நிலம் காலி இடமாகக் கணக்கிடப்படும். ஆனால் சென்ட் 5 ஆயிரம் ரூபாயாக ஆகிவிடுகிறது. ஆகவே இந்த Stamp duty, Registration fees அதிகமாகிவிடுகிறது. இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் தவறாகக் கருதிவிடக் கூடாது. நடைமுறையில் ஒரு உண்மையை சொல்லவேண்டுமானால் இது quite abnormal and arbitrary. இப்போது ஏற்றி இருக்கிற கட்டண உயர்வு இடத்திற்கு இடம் ஏற்ற நிலையாக இல்லாமல் மொத்தமாக விவசாய நிலங்களையும் சேர்த்து அவுஸ் சைட் வேல்யூ ஆக ஏற்றி இருப்பது விவசாய

மக்களிடையே மிகுந்த கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மிகுந்த பாரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஓட்டல் பண்டங்களின் விலை ஏறிவிட்டது என்று சொன்னவுடன் தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சாதாரண ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற நிலையில் அதனுடைய வரியை உடனடியாக ரத்து செய்ய ஆணையிட்டார்கள். தமிழகம் அதைப் பாராட்டியது. நாம் எல்லாம் பாராட்டினோம். அதேபோல் விவசாயிகளை பெருமளவுக்கு பாதித்து வருகிற இந்த கட்டண உயர்வை அவர்கள் ரத்து செய்யவேண்டும். பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும். விவசாய நிலங்களுக்கு அங்கே விசாரணை செய்து உரிய கட்டணத்தை நிர்ணயிக்கவேண்டுமே தவிர ஆர்பிட்ரரியாக அதிகாரிகள் நினைத்தபடி அவர்கள் வேல்யூ போடுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். விவசாயிகளை இதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று கேட்டு வாய்ப்பு கொடுத்த மாண்புமிகு துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எஸ். ரெத்தினராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண்கள், 2, 5, 6, 10, 22 ஆகிய மாநில ஆயத் தீர்வைத் துறை, முத்திரைத் தாள்கள்—நிர்வாகம், பத்திரப் பதிவு, பால் வழங்கு திட்டங்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு என்னை அழைத்து இருக்கிறீர்கள். மனு நீதிச் சோழனின் அரண்மனைக்கு முன்னால் பசு ஒன்று மணி அடித்து நீதி கேட்டபோது மனு நீதிச் சோழன் நீதி வழங்கினான் என்பதை இங்கே நம்முடைய இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டினார். மணி அடித்து பேச அழைத்து இருக்கிற நீங்கள், பேச முடியாத கன்று காளைகளுக்காக, மனித சமுதாயத்தை, விவசாயிகளை இன்றைக்கு வாழ வைக்கிற அந்த கால்நடைகளுக்காக பேசுவதற்கு நீங்கள் அதிக நேரத்தை ஒதுக்கித் தரவேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மது விலக்கைப் பொறுத்தவரையில் மது விலக்கு முழுமையாக அமல் செய்யப்படவேண்டும். முழுமையாக கள், சாராயக் கடைகளை மூடியது போல் இன்றைக்கு பிராந்தி, விஸ்கி கடைகளையும் மூடி இருக்கவேண்டும். ஆனால் மது விலக்கை முழுமையாக அமல் செய்யாமல் பிராந்தி, விஸ்கி கடைகளை திறந்து வைத்து இருப்பதன் மூலமாக இன்றைக்கு கள்ளச் சாராயம் ஆறாக ஓடுகிற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. கள்ளச் சாராயம் பெருகி வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறபோது, கள், சாராயக் கடைகளை மட்டும் மூடிவிட்டு பிராந்தி, விஸ்கி கடைகளை மட்டும் திறந்து வைத்ததன் மூலமாக ஏழை, எளிய மக்கள் குடிப்பதற்கு பழக்கப்பட்டவர்கள் இன்றைக்கு பிராந்தி, விஸ்கி போன்ற போதைப் பொருட்களை வாங்கிக் குடிக்கிற காரணத்தால் சாதாரண, நடுத்தர மக்களின் பொருளாதாரம் பாதிக்கப் படுகிறது என்பதை இந்த நல்ல சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



இதற்குப் பிறகு இந்தத் துறையிலே கள் இறக்கும் தொழிலை செய்தவர்கள் 30 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று கணக்கு எடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் மானியமாகவும், ஆயிரம் ரூபாய் கடனாகவும் வழங்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு முழுமையாக, உண்மையாக கணக்கு எடுக்கப் படுமானால் என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே 15 ஆயிரம் தொழிலாளர்கள், இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருந்தவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இங்கே தரப் பட்டிருக்கின்ற கணக்கு மாநிலம் முழுவதும் 30,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதாகத்தான் தரப்பட்டிருக்கிறது. எனவே உண்மையான கணக்கினை எடுத்து, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற அத்தனை பேருக்கும், ஒவ்வொருவருக்கும் தலா ரூ 5,000 வீதம் நிதி கொடுத்து, ரூ. 2,000 மானியமாகவும, ரூ. 3,000 கடனாகவும் வழங்கப்பட வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய காவல்துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகள் கடுமையாக, கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுத்து நிறுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டாலும், நகர்ப் புறங்களில் பகுதிவாரியாக பிரித்துக்கொண்டு, கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற தொழிலில் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சபையில் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கோட்டைக்கு வருகின்ற பேருந்தில் ஏறிவருகின்றபோது, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்காக விடப்படுகின்ற பேருந்தில் அல்ல; சாதாரணமாக வருகின்ற இதர பேருந்துகளில் மாலை நேரங்களில் அல்லது இரவு நேரங்களில் வருகின்றபோது குடிப்பதற்கு கோட்டைக்கு முன்னால் தாராளமாக இறங்கு கிறார்கள் என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கோட்டைக்கு முன்னாலே போர் நினைவு மண்டபம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் கள், சாராயம் தாராளமாக விற்பனையாகின்ற காரணத்தினால், சாதாரண பயணிகள் அந்த வழியாகச் செல்லமுடியாத நிலையிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விருப்புகிறேன்.

இன்னும் சாதாரண மக்களை பாதிக்கின்ற வகையில் இருக்கின்ற இந்தக் கொள்கையை மீண்டும் பரிசீலனை செய்து, பிராந்தி கடை, விஸ்கி கடைகளை உடனடியாக மூடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் தமிழகத்திற்கு வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கொள்கைக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறீர்கள். 1937-ல் இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களுக்கு தமிழகம் முன்னோடியாக இருந்து, இந்த மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டு வந்தது என்று குறிப்பிட்டு இருக்கிற நீங்கள், தமிழகம்

முன்னோடியாக இருக்கவேண்டுமென்று இந்தத் துறையில் வெற்றி பெறுகின்ற நிலைமையை உலகுக்கு எடுத்துக் காட்டுகின்ற வகையில் இங்கே இந்த மதுவிலக்கால் ஏற்படும் ஆபத்தால், அபாயத்தால் ஏற்படுகின்ற உயிர் இழப்புகளைத் தடுக்கின்ற வகையில், எவ்வளவு தான் வருவாய் நஷ்டம் ஏற்பட்டாலும் இந்த மதுவிலக்கை முழுவதுமாக அமல்படுத்தவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மானியம் 5 ல், முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் இங்கே ஸ்டாம்ப் பேப்பர்களைப் பொறுத்த வரையில், ஸ்டாம்ப் டியூட்டியைப் பொறுத்தவரையில், ரிஜிஸ்ட் ரேஷனைப் பொறுத்தவரையில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இப்போது சாதாரணமாக ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், மூன்று ரூபாய்க்கான முத்திரைத் தாள்கள் பல இடங்களில் கிடைக்காமல் தட்டுப்பாடு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய முக்கியமான கடமை என்று கருதுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு மாநிலங்களின் லாட்டரிச் சீட்டுக்களை அச்சடித்து விற்கும் சேகர் ஏஜன்ஸி என்ற ஒன்று இருக்கிறது. தனி நபர் அச்சடித்துக்கொடுத்து வருகின்றார் ஆனால் நம்முடைய அரசு ரூ. 1, ரூ. 2, ரூ. 3 க்கான முத்திரைத் தாள்களை தாராளமாக அச்சடித்து பொதுமக்களுக்குக் கிடைப்ப தற்கு ஏற்பாடு செய்யவில்லை என்றால் நிச்சயமாக இந்த அரசைப் பற்றி என்ன கருதுவார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர வர்கள் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், நம்முடைய உறுப்பினர்கள் வலியுறுத்தியதைப்போல் இங்கே பெரிய மதிப்பீடுகளைப் போட்டு விவசாய நிலங்களை மதிப்பீடு போட்டு, ரிஜிஸ்ட்ரேஷன் ஃபீஸ் அதிகமாக இருக்கிறது என்பதாக அனைவரும் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். இன்னும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, நம்முடைய மாநிலத்திற்கு அண்டை மாநிலமாக இருக்கின்ற கேரள மாநிலத்தில் ரிஜிஸ்ட்ரேஷன் ஃபீஸ் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தினால், இங்கேயிருக்கின்ற மக்கள் அங்கே பத்திரப் பதிவு செய்வதற்காக கேரள மாநிலத் திற்குப் போய் பலரும் பதிவு செய்து கொள்ள வேண்டி நிலைமையில், நம்முடைய மாநிலத்திற்கு வருகின்ற வருவாய அங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்களிய் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நில மாற்றத்தைச் செய்கின்றவர்கள், ஸ்டாம்ப் டியூட்டியைப் பொறுத்தவரையில், சாதாரணமாக ஏழை எளிய மக்கள் நடுத்தர மக்கள் தான் கிராமங்களில் விவசாய நிலங்களை கை மாற்றம் செய்வதில் அடிக்கடி இந்தப் பதிவாளர், அல்லது துணைப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று அங்கே ரிஜிஸ்ட்ரேஷன் செய்கிறார்கள். இந்த ரெஜிஸ்ட்ரேஷனை செய்கின்றபோது



(பிற்பகல் 12-10)

(மாண்புமிகு பேரவை தலைவர் தலைமை

அதிகப்படியான ரெஜிஸ்ட்ரேஷன் ஃபீஸ் கொடுப்பதைத் தவிர்ப்ப
தற்காக, கேரள மாநிலம் செல்வதைத் தடுத்து நிறுத்துகின்ற
வகையில் நம்முடைய ரெஜிஸ்ட்ரேஷன் ஃபீஸை, ஸ்டாம்ப்
டியூட்டியை குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன். இங்கே ஸ்டாம்ப் வெண்டார்களைப் பொறுத்த
வரையில் பட்டதாரிகளாக இருப்பவர்களை ஸ்டாம்ப் வெண்டார்
களாக நியமிக்க வேண்டும் என்று பலர் வெட்டுத் தீர்மானங்கள்
கொடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே பத்திரங்களை பதிவு
செய்வதற்கு முன்னால் டைப் செய்து பத்திரங்கள் பதிவு செய்யப்
பட்டால் அவைகள் பல ஆண்டுக் காலம் அழியாத ஒரு
ரெக்கார்டாக இருக்கும் என்ற காரணத்தினால் மட்டுமின்றி,
டைப்ரைட்டிங் படித்தவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்
என்ற காரணத்தினாலும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் என்னுடைய தாழ்மையான
யோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். இங்கே கால்நடைகளைப்
பற்றி பேசுவதற்கு நம்முடைய சபாநாயகர் அவர்கள் அதிக
நேரத்தை ஒதுக்கிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்
கிறேன். சபாநாயகர் அவர்களே, நம்முடைய தமிழகம் வறட்சியால்
பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் நம்முடைய பகுதியில்
இருக்கின்ற கால்நடைகளை கேரள மாநிலத்திற்கு எடுத்துச்
சென்று அங்கே இறைச்சிக்காக விற்பனை செய்கிறார்கள் என்பதை
நாமெல்லாம் வருத்தத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறோம்
என்றாலும் இந்த நிலையில் மேற்குத் தொடர்ச்சி மலையில் புல்
வளர்ப்பதற்கு கோவை, நெல்லை, அண்ணா, பெரியார், மதுரை,
காமராஜர், கட்டபொம்மன், குமரி ஆகிய மாவட்டங்களுக்கு
ஒரு இலட்சம் ரூபாய் தான் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.
மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு
இலட்சம் மட்டுமே பசுந்தீவனங்களை பயிர் செய்ய ஒதுக்கீடு
செய்யப்பட்டிருக்கிறது. இது கன்றுகாலிகளின் வளர்ச்சியை
உதாசீனம் செய்வதாக அமைந்திருக்கிறது என்பதை சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். தரமான கால்நடைகளை தயார் செய்வ
தற்காக இப்போது பசுக்களுக்கு செயற்கை கருத்தரித்தல் செய்வ
தற்காக ஃப்ரோசன் செமன் பயன்படுத்தப்படுகிறது. அதற்கு
லிக்குவிட் நைட்ரஜன் போதுமான அளவு, சில நேரங்களில் ஜீப்
ரிப்பேராகிவிடுவதால், தகுந்த நேரத்தில் கொண்டுவந்து கொடுக்க
முடியாததால், அது குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த இடத்திற்கு
போய்ச் சேராத காரணத்தினால், இந்த ஃப்ரோசன் செமன் பல
இடங்களில் பயன் அளிக்காததாக, அந்த பசுக்களை கருத்தரிக்கச்
செய்வதாக இல்லை என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுவதை
அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து முன்போல்
லிக்குவிட் செமன் கிடைப்பதற்கான வாய்ப்புகளை கிராமப்புறங்
களில் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத்
துறையில் பணியாற்றுகின்ற பணியாளர்கள், பராமரிப்பு உதவி
யாளர்கள் மருத்துவர்கள் இன்னும் பலர் பல்வேறு கோரிக்கைகளை
அரசுக்கு தந்திருக்கிறார்கள். இந்தத் துறையில் பணி ஆற்றுகின்ற

பராமரிப்பு உதவியாளர்கள் தங்களுக்கென்று தனியாக ஒரு சங்கம் வைத்துக்கொள்வதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதற்கு ஃப்னான்ஷியல் கமிட்மெண்ட் இல்லை என்ற காரணத்தினால், அவர்களுடைய பணி தனி ரகமான பணி என்ற காரணத்தினால், அவர்களுக்கு ஒரு தனி சங்கத்தை வைத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

கீழத் தஞ்சை மாவட்டத்திற்கு உறை விந்துத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில் அரைக்கால் சட்டை அணிந்து கொண்டு வேலை செய்ய வேண்டும் என்று அவர்களை கட்டாயப்படுத்துவது முறையானதாக இல்லை என்பதையும், அவர்களுக்கு பாலிஸ்டர் முழுக் கால் சட்டைகள் வழங்க வேண்டும் என்றும், முழுக்கால் சட்டைக்கான சீருடை வழங்குகின்றபோது அதைத் தைத்துக் கொள்வதற்கான முழுத் தொகையும் கொடுக்கவேண்டுமென்றும் இப்போது கொடுக்கின்ற 100 ரூபாய் போதுமானதாக இல்லை என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடை மருத்துவர்களுக்கு ரூ. 100 ரிஸ்க் அலவன்ஸ் தரப்படுகிறது. அதே போல இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்ற கால்நடை பராமரிப்பு உதவியாளர்களும் அதே பணியைத்தான் செய்கிறார்கள். கால்நடைகளை பிடித்து வைக்கின்ற நேரத்தில் அவற்றின் கால்களால் உதைபடுகிறார்கள். இவர்களுக்கும் சில நேரங்களில் ஆபத்து ஏற்படுகிறது என்ற காரணத்தினால் இவர்களுக்கும் ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய இந்தத் துறையின் முன்னாள் அமைச்சர் அவர்கள் கோவையில் 10-10-85 அன்று நடைபெற்ற மாநாட்டில் இந்த ஊழியர்களுக்குத் தந்த வாக்குறுதிகளை நம்முடைய அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விபத்து நிதி, முழு கால் சட்டை இப்படிப்பட்ட காரியங்களை செய்து கொள்வதற்கு அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையைப் பொறுத்தவரை டெய்லி வேஜஸ்—தினக் கூலிகளாக பலர் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த தினக் கூலிகளை நிரந்தரம் செய்யவேண்டும் என்று—ஆணை எண் 107, தேதி : 5-2-87 ல்—அந்த கன்டின்ஜன்ட் ஸ்டாஃப்களை நிரந்தரம் செய்யவேண்டும் என்று ஆணை பிறப்பித்த பிறகு கூட, 68, 70 தொழிலாளிகள் இன்றைக்கு நிரந்தரம் செய்யப்படாமல் அந்தத் துறையில் வாடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.





இந்தத் துறையைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 6,000 தொழிலாளர்கள் மாநாடு கூடி, நம்முடைய அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் இருப்பதை அமைச்சர் அவர்கள் கவனித்து நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'செமன் மெஸஞ்சர்' என்ற பணியில் அங்கே பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தினக்கூலியாக 10, 15 ரூபாய் தான் சம்பளமாகத் தரப்படுகிறது. அந்தத் தொழிலாளிகள் 10 15 மைல்கள் நடந்து சென்று, சைக்கிளில் சென்று அல்லது சில நேரங்களில் பஸ்களில் சென்று அந்த விந்துகளை அந்த இடங்களுக்கு, சப்-சென்டர்களுக்கு கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு டி. ஏ. பெற்றுக்கொள்வதற்கு போக்குவரத்துப் பயணப்படி பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கோழி நோய்களைத் தடுப்பதற்கு, 'Ran khet Disease Vaccine Komorove' முன்பெல்லாம் இலவசமாகத் தரப்பட்டது. ஆனால் அண்மையில் இலவசமாக அதைத் தர இயலாது என்று இலாகாவே அறிவித்து கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிய வருகிறது. அந்த 'Ranikhet Disease Vaccine Komorove' ஆர். டி. வி. கே. என்ற வேக்ஸின்—கோழிகளைப் பராமரிக்கவேண்டிய மருத்துவமனைகளுக்கு, டாக்டர்களுக்கு அந்த மருந்து கிடைக்காத காரணத்தினால் வெளி மார்க்கெட்டுகளிலிருந்து விற்கப்படுகிறதை, வசதியானவர்கள் மட்டுமே அதைப் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது. விலையும் சற்று அதிகமாக இருக்கிறது. ராணிப்பேட்டையில் உற்பத்தி ஆகின்ற அந்த 'Ranikhe Disease Vaccine' கிராமத்தில் உள்ள மக்களுக்கு கிடைக்காமல் இருக்கிறது என்பதை சுட்டிக் காட்டி, அந்த வேக்ஸின் மருந்தகங்களுக்கு அனுப்பப்படாமல் இருக்கிற குறையை அமைச்சர் அவர்கள் போக்கி மறு உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இலாகாவைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற உயர் அதிகாரிகளில் பலர்—இணை இயக்குநர், கூடுதல் இயக்குநர் உதவி இயக்குநர் போன்ற பதவிகளிலே இருக்கிற பெரிய அதிகாரிகள் ஓய்வு பெறுகிற காலங்களில் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள் அல்லது சஸ்பெண்டு செய்யப்படுகிறார்கள், டிஸ்மிஸ் செய்யப்படுகிறார்கள் என்ற நிலை இருப்பதால் அந்த இலாக்காவில் உயர் பதவிகளிலே இருப்பவர்களின், உதவி இயக்குநராக இருக்கிற பெரிய அதிகாரிகளின் போக்கு அந்த இலாக்காவிற்கு ஒரு மந்தமான நிலையை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பல்வேறு அதிகாரிகள், உயர் அதிகாரிகள், பல டாக்டர்கள் ஓய்வு பெறுகிற காலத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பென்ஷன் வாங்க வேண்டியவர்கள் பென்ஷன் வாங்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிற அந்த நிலைமையை மாற்றினால்தான் அந்த இலாகாவை துரிதமாக மக்களுக்கு பயன் உள்ளதாக பயன்படுத்திக் கொள்ளமுடியும். அந்த இலாக்காவில் பணியாற்றிய பலர், டாக்டர் சேதுராமன், ராமமூர்த்தி, திருநாவுக்கரசு, ராமச்சந்திரன் போன்றவர்கள், இசக்கி போன்ற பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அந்த இலாக்காவில் பணியாற்றிக் கொண்டிருக்கிற பல அதிகாரிகள், நாம் நம்முடைய காலத்தை ஓட்டினால் மட்டும் போதும், அங்கே ஏதாவது செய்து, அந்த இலாக்காவில் நமக்கும் பல சங்கடங்கள் வந்துவிடக்கூடாது, ஒழுங்காக பென்ஷனை வாங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்து கொண்டு, அவர்கள் வாளா இருந்து விடுகிறார்கள். ஆகவே தான் பொது மக்களுக்கு சர்க்கார் செய்கிற அந்தத் திட்டத்தில் செய்கிற பலன் போய் சேரவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், கோழி இன வளர்ச்சிக் கழகம் 1973 இல் ஆரம்பிக்கப்பட்டது. 1985 இல் நெல்லையிலும், கோயில்பட்டியிலும், தர்மபுரியிலும், மதுரையிலும், அருப்புக் கோட்டையிலும், சாரியாபட்டியிலும், 'பௌல்ட்ரி எக்ஸ்டென்ஷன் சென்டர்' ஆரம்பிக்கப்பட்டு அங்கே ஒரு அசிஸ்டென்ட் மானேஜர் மட்டுமே நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இதர எந்தப் பணியாளர்களும் நியமனம் செய்யப்படவில்லை. ஒதுக்கீடுகள் செய்யப்படாததால், அங்கே கோழி உற்பத்தியோ, கறிக் கோழியோ அல்லது முட்டைக் கோழியோ அல்லது முட்டை உற்பத்தியோ—அப்படிப்பட்ட இந்த நாட்டுக்குப் பயனுள்ள உற்பத்தி, எதுவும் அங்கே நடக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, கால்நடை வளர்ப்புத் துறையைப் பொறுத்தவரையில், மாவட்டம் தோறும் இருக்கிற தலைநகரங்களில் இருக்கும் மருந்தகங்களை மருத்துவ மனைகளாக மாற்றவேண்டும். நன்னிலம் வட்டத்தில் இருக்கிற மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்ற வேண்டுமென்றும், அதைப்போல ஒன்றியங்கள் தோறும் இருக்கிற மருத்துவமனைகளின் மருந்தகங்களிலே கோழி நோய்த் தடுப்பு மருந்தும் இதர நோய்த் தடுப்பு மருந்துகளையும் தாராளமாக வழங்க வேண்டுமென்றும் மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

கால்நடைகளைப் பொறுத்த வரையில், தமிழகத்தில் இன்றைக்கு கால்நடைகளின் தரம் உயர்ந்ததாக இருக்கிறதென்ற பெருமையை நாம் பெற்றுக்கொண்டாலும், தமிழகத்தில் கால் நடைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது,





தரமானமாடுகளைப் பொறுத்து, இதர கன்று காளைகளை நாம் கறிக்காக, இறைச்சிக்காக அல்லது ஏற்றுமதி செய்வதற்காகக்கூட நாம் அதைப் பயன்படுத்தினாலும் தரமான கன்று காளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். கன்று காளைகளின் எண்ணிக்கையை அதிகரித்தால்தான் நிச்சயமாக பால் உற்பத்தியைப் பெருக்கிக்கொள்ள முடியும்,

இன்றைக்கு லோன்களை வாங்கிக்கொண்டு பசுக்களை வாங்குகிறார்கள். ஆனால் பசுக்களை பராமரிப்பதற்கு இன்றைக்கு மாட்டு தீவனங்களின் விலைவாசி உயர்ந்துவிட்ட காரணத்தினாலும், வைக்கோலின் விலை அதிகரித்துவிட்ட காரணத்தினாலும் பசு மாடுகளை வைத்து பராமரிக்கிற செலவினம் அதிகமாக ஆகிக் கொண்டு இருக்கிறது. இந்த நேரத்திலே மாட்டுத் தீவனங்களை கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக மலிவு விலையில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், மலிவு விலையில் இத்தகைய மாட்டுத் தீவனங்களைக் கொடுக்கிறபோது, இது கிராமத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு போய் சேரவேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். வைக்கோலை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு போக முடியாத நிலைமை இருக்கிறது. குமரி மாவட்டத்திலிருக்கிற விளவங்கோடு பகுதிக்கும், நெல்லை மாவட்டத்திலிருக்கிற செங்கோட்டை பகுதிக்கும், தோவாளை தாலுக்காவிலிருந்து கல்குளம் தாலுக்காவிற்கு கொண்டுபோகமுடியாத நிலை இருக்கிற காரணத்தால் அந்தப் பகுதிகளில் வைக்கோலின் விலை மிகமிக ஏறிவிட்டது. வண்டியிலோ, லாரிகளிலோ வைக்கோலை கொண்டு வருவதற்கு லாரி உரிமையாளர்கள் மறுக்கிறார்கள். எனவே வைக்கோலை ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு, நம்முடைய மாநிலத்திற்குள்ளேயே கொண்டு செல்வதற்கு தடை விதிக்கக்கூடாது, சிவில் சப்ளைஸ்கார்ப்பரேஷன் மூலமாக தடை விதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைத் துறையில் ஓய்வுபெறும் தருணத்தில் இருக்கிற உயர் அதிகாரிகளின் மந்த நிலையைப் போக்குகிற வகையில் அவர்களைப் பற்றிய கோப்புகள் நிலுவையில் இல்லாமல், அவர்களைப் பற்றிய நடவடிக்கைக் கோப்புகளை அதிக காலம் நிலுவையில் வைக்காமல் இந்தத் துறை கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும், முதல்வர் அவர்கள் கோப்புகளில் காலதாமதமில்லாமல் கையெழுத்திடவேண்டுமென்றும் இந்த நல்ல நேரத்தில் கேட்டு வாய்ப்புக்கு நன்றிகூறி முடிக்கிறேன், வணக்கம்.

டாக்டர் கே. பி இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவரின் சார்பாக சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்சாரத் துறையின் அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே வைத்துள்ள மாநில ஆயத் தீர்வை, முத்திரைத்தாள் பத்திரப் பதிவு, கால்நடை வளர்ப்பு மற்றும் பால் வழங்கு திட்டத்திற்கான மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே வைக்க விழைகின்றேன்.

ஆயத்தீர்வையைப் பொறுத்தவரை, காந்திய வாதத்தைச் சொல்லுகிற கட்சிக்கு சொந்தக்காரர்கள் ஆளுகின்ற மாநிலங்களிலேயெல்லாம் மதுவிலக்கை தீவிரமாக அமல் படுத்தாமல் தளர்த்தி, திறந்து விடுகிற நிலைதான் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே சமுதாய அமைப்பாக இருக்கிறது. ஆனாலும் தொடர்ந்து தான் வாழ்ந்த கலையுலகத்திலே இருந்தாலும் சரி, இன்றைக்கு அரசியல் உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற போதும் சரி, தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள், சினிமா படத்தின் மூலமாக, தனக்கு பணத்தை ஈட்டிக்கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தை வைத்துக்கொள்ளாமல், நாட்டுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்ல வேண்டும், சமுதாயத்திலே மறுமலர்ச்சியை உருவாக்கவேண்டும், சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, ஒவ்வொரு படத்திலேயும், மதுவால் ஏற்படக்கூடிய கொடுமைகளையும், அதனால் ஏற்படுகிற தீமைகளையும், அதனால் இந்த சமுதாயத்தில் ஏற்படுகிற விளைவுகளையும் எடுத்துக் காட்டி, மக்கள் மனதிலே மாற்றத்தை உருவாக்கி ஒரு சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்குவதற்கான முயற்சிகளில் தொடர்ந்து தமிழகத்திலே முதல்வர் அவர்கள் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள். அதைப் போல, அரசியல் உலகத்திற்கு வந்ததற்குப் பின்னாலும், 1972-லே தனியாக இயக்கம் கண்டதற்குப் பின்னாலும்கூட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவு நாளிலேயெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள், புரட்சித் தலைவர் அவர்களை தெய்வமாக வணங்கிக் கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய 20 லட்சம் உறுப்பினர்களும் அண்ணா நினைவு நாளன்று, உறுதிமொழி எடுக்கிற நேரத்தில் ''மதுவைத் தொடமாட்டோம்'' என்று சத்தியம் செய்யச் சொல்லித்தான் தமிழக முதல்வர் அவர்கள் எங்களை உறுதிமொழி எடுக்கச் சொன்னார்கள். இப்படி, படிப்படியாக ஒவ்வொரு வகையிலும் நாட்டு மக்கள் மத்தியிலே கருத்துக்களைச் சொல்லுகிற நேரத்திலெல்லாம் சமுதாயத்திலேயே ஒரு மாற்றத்தை உருவாக்கினால்தான் மதுவை ஒழிக்க முடியும் என்று—நாட்டு மக்களுக்கு அதை எடுத்துச் சொல்லிச் சொல்லித்தான்—ஒரு முழுமையான மதுவிலக்கை அமுல்படுத்த முடியும் என்று—செயல்பட்டு வந்திருக்கிறார்கள். அந்த வகையில் தற்போது ஓரளவுக்கு கள்ளச் சாராயக் கடைகளையெல்லாம் மூடி பாதி மதுவிலக்கை அமுல்படுத்தியிருந்தாலும்—இதனால் நாட்டுக்கும் அரசுக்கும் பல்வேறு விதங்களில் இழப்பு ஏற்பட்டிருந்தாலும்—சமுதாய நலன் கருதி இப்படிப்பட்டதொரு மாபெரும் திட்டத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நடவடிக்கையை வரவேற்று இன்னும் என்ன கடுமையான சட்டங்களைக் கொண்டு வரலாம் அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று கூறுவதில்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் ஈடுபட வேண்டுமே தவிர இதிலே குறை கூறுவதில் தங்கள் நாட்டத்தைச் செலுத்தக் கூடாது என்று நான் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன்.



மொத்தத்தில் ஒரு சமுதாய மாற்றம் ஏற்பட்டால்தான் மதுவிலக்குக் கொள்கையிலே ஒரு முழுமையான வெற்றியைப் பெற முடியும் என்பது எல்லோரும் ஒட்டு மொத்தமாக உணர்ந்திருக்கிற ஒன்றாகும். இதைப் பொறுத்தவரையில் மாநில அரசு கொண்டிருக்கிற நிலையை வரவேற்க வேண்டும் என்று மனதார எண்ணுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே முத்திரைத்தாள், பத்திரத்துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்தில்தான் இன்றைய தினம் அதன் மூலம் அதிகமான வருவாயைப் பெறும் நிலை இருக்கிறது. வருவாயை ஈட்டவேண்டுமென்ற நோக்கம் இருக்கவேண்டியதுதான். ஆனால் இன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு கே. குப்புசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் தமிழகத்தில்தான் பத்திரப் பதிவுக்கான கட்டணம் இரண்டு மடங்காக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும் போது அதன் காரணமாக சார்பதிவாளர் அலுவலகங்களில் இப்போது அதிகமான அளவில் பத்திரங்கள் பதிவாவதில்லை என்ற நிலை உருவாகியிருப்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விவசாயிகள் இன்றைய தினம் பத்திரங்களைப் பதிவு செய்யப் பயப்படுகிறார்கள். காரணம் அவர்கள் வாங்கும் சொத்தின் விலையை விட அதைப் பதிவு செய்ய வேண்டுமானால் அதிகமாக பணம் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறார்கள். இதன் காரணமாக விவசாயிகள் ஒருவருக்கொருவர் பேசி, 2, 3 ஆண்டுக் காலம் நான் இந்த நிலத்தில் விவசாயம் செய்கிறேன் அல்லது இங்கே நான் இருந்து கொள்கிறேன் என்று சொல்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. பத்திரப் பதிவு செய்யாமலேயே காலத்தை ஓட்டுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. ரூ. 50,000-க்கு மேல் உள்ள சொத்து குறித்து எந்தப் பதிவு நடந்தாலும் அதற்கு இன்கம் டாக்ஸ் கிளியரன்ஸ் வாங்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆனால் இன்றைய தினம் ரூ. 50,000 என்பது கிராமப்புறத்தில் கூட சாதாரணமாக ஆகிவிட்ட நிலையாக இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் நமது புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் கிராமப்புறத்திலேகூட பொருளாதாரம் நன்கு வளர்ந்திருக்கிற காரணத்தால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்துவிட்டது. எனவே ரூ. 50,000 க்கு மேற்பட்ட சொத்து விற்பனைக்கு இன்கம்டாக்ஸ் கிளியரன்ஸ் வாங்க வேண்டும் என்பதற்கு பதிலாக ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் போகிற சொத்துக்களைப் பதிவு செய்தால் மட்டும் வருமானவரிச் சான்றிதழ்—இன்கம்டாக்ஸ் கிளியரன்ஸ் சர்டிபிகேட்—வாங்கினால் போதும் என்கிற நிலையை உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்;

கால் நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்த வரையில் வளஒரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கால்நடை சிலபுர்ப், மற்றும் பால் வளப் பாதுகாப்பு, கோழி வளர்ப்பு

ஆகிய துறைகள்தான் இன்றையதினம் கிராமப்புறத்தில் இருக்கிற பொருளாதாரத்தை அதிலும் குறிப்பாக விவசாயிகளுடைய பொருளாதாரத்தை வளர்க்கின்ற—அவர்களுடைய குடும்ப நலனில் அக்கறை கொண்டு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிற ஒரு மிகப் பெரிய துறையாக வளர்ந்திருக்கிறது. இந்தத் துறையின் சிறப்புகளை, இந்தத் துறையினால் நாட்டு மக்களுக்குச் செய்யக்கூடிய காரியங்களை நன்கு உணர்ந்திருக்கிற காரணத்தால்தான் கடந்த 10 ஆண்டுக் காலத்தில் தமிழக முதல்வர் அவர்கள்—1977 முதல் இன்றைக்கு 1987 வரை—பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தியிருக்கிறார்கள். பல்வேறு புதிய சிறப்பான அம்சங்களை உருவாக்கி கடந்த 10 ஆண்டுக் காலத்திலே இந்தத் துறையில் மிகப் பெரிய மறுமலர்ச்சியை இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே 10 ஆவது இடத்தில் இருந்த கால்நடை வளர்ச்சித் துறை இப்போது குஜராத்துக்கும் பஞ்சாப்புக்கும் அடுத்தபடியாக 3-வது இடத்தில் வந்திருக்கிறது. அந்த அளவுக்கு இந்தத் துறையில் ஒரு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் கடந்த 10 ஆண்டுக் காலத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்தத் துறைக்கு தந்திருக்கிற சலுகைகள்தான். இந்தத் துறைக்காக அவர் போட்டிருக்கிற சிறப்புத் திட்டங்கள்தான் ஒரு பெரிய அடித்தளமாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அளவுக்கு மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றிருக்கிற இந்தத் துறையில் இன்னும் விஞ்ஞான பூர்வமான மறுமலர்ச்சியை உருவாக்கிட வேண்டும். அந்த அடிப்படையில் தற்போது கால்நடை மருத்துவத்திற்கு மட்டும்தான் கல்லூரி அமைந்திருக்கிறது. இதிலே நாம் இன்னும் அதிக வளர்ச்சியைப் பெற்றாக வேண்டும். ஒரு காலத்தில் விவசாயத்திற்கு மட்டும் கல்லூரி இருந்த காலம் மாறி, இன்றைக்கு விவசாயத்திலிருந்து பல்வேறு கிளைகள் உருவாக்கப்பட்டு அதிலிருந்து மேலும் என்னென்ன மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமோ அவற்றையெல்லாம் உருவாக்கியிருப்பதைப் பார்க்கிறோம். அறிவியல் வளர்ச்சி காரணமாக அதையடுத்து விவசாயப் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்பட்டு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் விவசாயப் பல்கலைக் கழகம் மிகச் சிறப்பாக இயங்குகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்கிறோம். அதைப்போலவே விவசாயிகளுக்கு உறுதுணையாக கிராமப்புறத்தில் தங்கள் குடும்ப பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளப் பயன்படுகிற ஒன்றாக, கால்நடை வளர்ப்பு மிகப் பெரிய அளவில் வளர்ந்திருக்கிறது என்றாலும்கூட அது இன்னும் விஞ்ஞான பூர்வமான வளர்ச்சியைப் பெற்றாக வேண்டும்.



(பிற்பகல் 12–30)

அப்படிப்பட்டதொரு வளர்ச்சியைப் பெறுவதற்கு ஓரிரு கால்நடை மருத்துவக் கல்லூரிகளை வைத்துக்கொண்டு போவது நியாயமில்லை. இதிலே பல்வேறு ஃபாகல்டிகளை, துறைகளை உருவாக்க வேண்டும். அதற்காக நம்முடைய அரசு ஆல் இந்தியா பவுல்ட்ரி சையன்ஸ்—கோழி வளர்ச்சி அறிவியல் என்று தனியாக உருவாக்கப்படும் நிலையை ஏற்படுத்த வேண்டும். அதைப் போலவே ஃபாகல்டி ஆஃப் அனிமல் புட்ஸ் அண்டு நியுட்ரிஷியஸ் டையட் என்றும் அதைப் போலவே ஃபாகல்ட்டி ஆஃப் அனிமல் பையோ டெக்னாலஜி என்றும், அதைப்போலவே நாய்களை சிகிச்சை செய்வதற்கு என்று உயர் பட்டப் படிப்பையும், போஸ்ட் கிராஜுவேட் டிப்ளமா இன் கனைன் சர்ஜரி, போஸ்ட் கிராஜுவேட் டிப்ளமா இன் கனைன் மெடிசின் போன்ற துறைகளை உருவாக்கி இவைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து ஒரு பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்க வேண்டும். கடந்த பத்தாண்டுக் காலத்திலே ஒரு மறுமலர்ச்சியை இந்தத் துறையிலே உருவாக்கியிருக்கிற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கால்நடைத் துறைக்கென்று ஒரு யூனிவர்சிட்டியை உருவாக்குகிற நிலையை உருவாக்க வேண்டும். இந்தத் துறைக்கு என்று பல பிரிவுகள் இருந்தாலும் இந்தத் துறையில் மிகுந்த அக்கறை காட்டாமல், நோக்கம் காட்டாமல், விட்டதால்தான் இந்தத் துறை வளர முடியாமல் இருந்தது. ஆனால் கடந்த பத்தாண்டு காலத்திலே ஒரு மறுமலர்ச்சியை பெற்று இருப்பதால் இந்த மறுமலர்ச்சியை உருவாக்கிய தமிழக முதல்வர், பொன்மனச் செம்மல் அவர்கள் இந்த கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு இதே மன்றத்திலே நான் குறிப்பிட்டதைப் போல கால்நடை பராமரிப்புத் துறை விவசாயத்தோடு இணைந்த துறையாக இருப்பதால் தலைமைச் செயலகத்திலே கால்நடை பராமரிப்புத் துறைக்கு என்று தனியாக ஒரு கமிஷனர் ஆஃப் அனிமல் ஹஸ்பண்டரி என்ற அலுவலரைப் போடுவதற்கு முயற்சியை இந்த தமிழக அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் ரிஸ்க் அலவன்ஸ் பற்றியும், சிறப்பூதியம் பற்றியும் சொன்னார்கள். தமிழகத்தின் முதல்வர் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு ஆபத்து ஊதியமாக 100 ரூபாய் வழங்கியதற்காக அவருக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனாலே மனித மருத்துவர்களுக்கும் கால்நடை மருத்துவர்களுக்கும் இருந்த சம்பள வித்தியாசம் ரூ. 150 ஆக இருந்தது 50 ஆக குறைந்தது. கடந்த மாதம் இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் மனித மருத்துவர்களுக்கு சிறப்பூதியமாக 150 ரூபாய் கொடுத்ததால் மனித மருத்துவர்களுக்கும் கால்நடை மருத்துவர்

களுக்குப் இடையே 200 ரூபாய் சம்பள வித்தியாசம் உருவாக்கப் பட்டிருக்கிறது. இதைக் குறைக்கும் பொருட்டு மனித மருத்துவர்களுக்கு சிறப்பூதியம் வழங்கியதைப் போலவே கால்நடை உதவி மருத்துவர்களுக்கும் 150 ரூபாய் சிறப்பூதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மட்டும் ரிஸ்க் அலவன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. கால்நடை, மருத்துவமனைகளில் பணியாற்றுகிற மற்றவர்களுக்கு இதனால் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டிருக்கிறது. அங்கே மருத்துவர்கள் மட்டும் கஷ்டப்பட வில்லை ஒவ்வொரு மருத்துவமனையிலும் உள்ள ஆய்வாளர் கள், உதவியாளர்கள் ஆகியவர்களும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் அவர்களது சம்பளத்தின் அடிப்படையில் இந்த ரிஸ்க் அலவன்ஸ் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள மாடுகள் எல்லாம், விவசாயிகள் வைத்துக் கொண்டிருக்கிற மாடுகள் எல்லாம், நீண்டநாட்களாக இனப்பெருக்கத்திற்கு வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றன. 50 சதவீதத்திற்கு மேல் இப்படிப்பட்ட நிலையில் மாடுகள் உள்ளன. இதற்கெல்லாம் காரணம் மாடுகளுக்குத் தரப்படுகிற தீவனத்தில் தாதுப்பொருள்கள் குறைவாக இருப்பது தான் என்று நாம் உணர்ந்தாக வேண்டும். ஆகவே அரசு மூலமாக ஒவ்வொரு மருத்துவமனைக்கும், மருந்துகள் மற்றும் மானிய விலையில் தாதுப்பொருள்களை விவசாயிகளுக்கு வழங்கு வதற்காக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே மருந்துகளின் விலையேற்றம் அதிகமாக இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு மருத்துவமனைக்கும் மானிட்டரி லிமிட் வைத்திருக்கிறார்கள். மருத்துவமனைக்கு 25 ஆயிரம் ரூபாய் என்றும், மருந்தகத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் என்றும், கிளினிக்கல் சென்டருக்கு 40 ஆயிரம் ரூபாய் என்றும் லிமிட் இருக்கிறது. இவைகள் உயர்த்தப்பட வேண்டும். ஏனென்றால் இவைகள் எல்லாம் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு வைக்கப் பட்டவை. ஆண்டு ஒன்றுக்கு மருந்தகங்களுக்கு 40 ஆயிரம் ரூபாய் என்றும், மருத்துவமனைக்கு 50 ஆயிரம் என்றும் கிளினிக்கல் சென்டருக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்றும் உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



மாட்டுத் தீவனம், கோழித் தீவனம் எல்லாம் சரியான தரத்திலே இல்லை. அதை கிராமப்புற விவசாயிகள் வாங்கி உபயோகப்படுத்துவதால் பல்வேறு இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாகக்கூடிய நிலை இருக்கிறது. கோழிப் பண்ணையிலும் இந்த தீவனத்தை உபயோகப்படுத்துவதால் பண்ணையே அழிந்து போகக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே மாட்டுத் தீவனத்தை யும், கோழித் தீவனத்தையும் தரத்தோடு உருவாக்க தரக் கட்டுப்பாடு மையம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தைப் பற்றி மிகச் சிறப்பாக மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தை இந்தத் துறை வேகமாகச் செய்து கொண்டிருக்கிறது, அப்படிச் செய்கிறது, இப்படிச் செய்கிறது என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் இன்றைக்கு தடுப்பூசியாளர்கள் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. தடுப்பூசியாளர்கள் பணியிடங்கள், ஏறத்தாழ 300 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இந்த நிலையில் எப்படி வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தை சிறப்பாகச் செய்ய முடியும்? காலியாக உள்ள தடுப்பூசியாளர்களின் பணியிடங்களை முழுமையாக நிரப்பினால்தான் இந்தத் திட்டத்தைச் சிறப்பாக செய்ய முடியுமென்பதை எடுத்துக்காட்டி, அதற்கான வேலைகளை விரைவாகச் செய்ய வேண்டுமென்று இந்தத் துறைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆணையிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டம் 'டிசீஸ் ஃப்ரீ சோன்' ஆக அமைக்கப்பட்டிருக்கிறது. இது மிகச் சிறப்பான திட்ட மாகும். இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நீட்டித்து, கால்நடைகளின் தரத்தை உயர்த்த வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதலமைச்சரவர்கள், இந்தத் துறையிலே ஒரு மாபெரும் மறுமலர்ச்சி பெற்றாக வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடும், எதிர்காலத்தில் மருத்துவம் செய்யும் துறையாக மட்டும் இல்லாமல், நாட்டு மக்களுக்கு உதவும் வகையில் ஒரு வளர்ச்சித் துறையாகவும், இதன்மூலம் நகர்ப்புற மக்களுக்கு உதவுகிற நிலையில், ஆரோக்கியமான, நல்ல சுகாதாரத்துடன் கூடிய இறைச்சியை வழங்க வேண்டுமென்ற நல்ல அடிப்படையில், பம்பாயிலே உள்ள நவீன இறைச்சிக் கூடம்போல தமிழகத்திலே உருவாக்க வேண்டுமென்றும், அது ஆசியா கண்டத்திலேயே ஒரு மிகப் பெரியதான, நவீன முறையோடு அமைந்ததாக இருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, 2-3-1979 அன்று நவீன

இறைச்சிக் கூடத்தை ஆரம்பிப்பதற்கு மட்டுமல்லாமல், புதிதாக ஒரு இறைச்சிக் கழகத் தையும் ஆரம்பித்தார்கள். 1979-லே தமிழக இறைச்சிக் கழகத்தை உருவாக்கி, புதிய நிறுவனத்தை உருவாக்கி, இதில் வளர்ச்சியை, வளத்தைப் பெற வேண்டுமென்ற நல்ல நோக் த்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்றைக்கு என்ன ஆகியிருக்கிறது? 1987-ல் —8 ஆண்டுகள் கழித்து இந்தத துறையைக் கொண்டு போய் கோழி வளர்ப்புத் துறையோடு இணைக்கும் ஒரு துர்ப்பாக்கியமான நிலைக்கு வந்திருக்கிறோம். இதற்கு யார் காரணம்? இது ஆராயப்பட வேண்டிய ஒன்று. தமிழகத்தில் ஒரு மிகப் பெரிய முன்னேற்றத்தை உருவாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, சமுதாய நலன் கருதி தமிழக முதல்வரவர்கள் ஆணையிடுகிறார்கள். ஆனால் அதை நிறைவேற்றக்கூடிய அதிகாரிகள் இதிலே பொறுப்பாக இருந்து, மிகத் தீவிரமாக சிந்தித்து, இதில் எந்தெந்த முறையில் கொண்டு வர வேண்டும், எப்படி செயலாற்ற வேண்டுமென்று சிந்திக்காமல் இன்றைக்கு அதை மூடுகிற நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு அதற்குக் கட்டிடங்கள் எல்லாம் கட்டி முடித்த பின்னாலே, சுற்றுப்புறச் சூழல் துறை சொல்கிறதென்று அதை வேறு இடத்திற்கு மாற்றும் ஒரு துர்பாக்கியமான சூழ்நிலையை உருவாக்கி, அதைக் கொண்டுபோய் கோழி வளர்ப்புத் துறையோடு இணைக்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் துறைக்கு பொறுப்பேற்றுள்ள அதிகாரிகள் இத்தனை ஆண்டுகள் என்ன செய்தார்கள், இந்தத் துறையில் பணியாற்றி, இத்தனை ஆண்டுகள் என்னென்ன திட்டங்க போட்டு அரசுக்குத் தந்தார்கள்? இதனாலே என்ன பலன் பெற்றிருக்கிறோம் என்பதை எல்லாம் ஆராய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான்கூட இந்த மன்றத்திலே ஒரு கருத்தைப் பேசியிருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் வளர்ச்சி பெற வேண்டும், அங்கேயுள்ள கிராமப்புற மக்களெல்லாம் விஞ்ஞான பூர்வமான அறிவு பெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, கால்நடை ஆய்வாளர்கள் பணியாற்றிய இடத்தில் கால்நடை உதவி மருத்துவர்களை நியமித்திருக்கிறோம். அதேபோல விரிவாக்க அலுவலர்கள் பணியாற்றிய இடங்களில் கால்நடை உதவி மருத்துவர்களை நியமித்திருக்கிறோம். தமிழகத்தின் முதல்வரவர்கள் அப்படி நியமித்தார்கள். அப்படி கால்நடை உதவி மருத்துவர்களை நியமித்ததற்குப் பின்னாலே இன்றைக்கு அந்த ஊராட்சி ஒன்றியத்திலே அவர்கள் புதிதாக செய்திருக்கக்கூடிய திட்டங்கள் என்ன? புதிதாக அவர்கள் செய்த பணி என்ன? என்பதை அறிய ஒரு குழு போட்டு, ஆராய வேண்டும். அதனாலே நாட்டிலே என்ன முன்னேற்றம் கண்டிருக்கிறோம், சம்பளம் அதிகம் கொடுத்திருக்கிறோம். பணியிடங்களை உயர்த்தியிருக்கிறோம். கால்நடை மருத்துவர்கள் அந்தத் துறை இயக்குநர்களாகப் பணியாற்றி இருக்கிறார்கள். திரு. ரங்கராஜன் போன்றவர்களெல்லாம் பணியாற்றியிருக்கிறார்கள். 2, 3 ஆண்டுக்காலம் அவர்கள் பணியாற்றி



இருக்கிறார்கள். அந்த 2, 3 ஆண்டுக்காலத்தில் அவர்களுக்கான சிறப்புத் திட்டங்களைத் தயாரித்துத் தந்தார்களா? ஆய்வாளர்கள் இடத்தில் உதவி மருத்துவர்களை நியமித்தோம். அப்படி நியமித்ததற்குப் பின்னாலே ஏற்பட்ட எஸ்டாபிளிஷ்மென்ட் செலவு அதிகம். எனவே இவர்களை வைத்து வேலை வாங்கும் நிலையை இயக்குநர் பெருமக்கள் செய்திருக்க வேண்டும் அல்லது அரசாங்கத்தின் மூலமாக நாம் அதைச் செய்ய வேண்டும். எனவே இதுவரை என்ன காரியம் செய்திருக்கிறோம் என்பதை ஆராய வேண்டும். 2, 3 ஆண்டுகளாக அந்தத் துறை என்ன பணி செய்தது, என்ன சிறப்பான திட்டங்களைத் தந்திருக்கிறது என்பதை இதற்கென்று ஒரு குழு போட்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிய வேண்டும். இனிமேலாவது புதிதாக திட்டங்களை உருவாக்குகிற நிலைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் உதவி மருத்துவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் அப்படிப் பயன்படுத்தினால்தான் நல்லது. இருக்கிற இடத்தில் ஒருவரைப் போட்டுவிட்டு சும்மா போவது நியாயமல்ல என்பதைச் சொல்ல இந்த நேரத்தில் நான் விழைகிறேன்.

(பிற்பகல் 12-40)

அதைப்போலவே இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழகத்தில் இந்தத் துறையை மிகப் பெரிய நிலையில் உருவாக்க வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். அதனாலே நான் இன்றைக்கு புதியதாக முயல் வளர்ப்புக்கும். கோழி வளர்ப்புக்கும், குதிரை வளர்ப்புக்கும் சிறப்பான திட்டங்கள் இந்த துறையின் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்திலே ஏற்கெனவே இயங்கி வந்த பண்ணைகள், ஏற்கெனவே பண்ணையிலே இருந்த மாடுகளின் எண்ணிக்கை, ஏற்கெனவே இயங்கி வந்த பண்ணைகளிலே உள்ள ஆடுகளின் எண்ணிக்கை, ஏற்கெனவே இந்தத் துறையின் மூலமாக நடத்தப்பட்ட அத்தனை பண்ணைகளும் எப்படி செயல்படுகின்றன, என்ன காரணத்தினால் அவைகளிலே இன்றைக்கு இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது, ஒவ்வொரு பண்ணையாக மூடுகின்ற நிலை எப்படி ஏற்பட்டது என்றும் பார்க்கவேண்டும்; 10, 20 ஆண்டு களுக்கு முன்னாலே ஏற்பட்ட ஓசூர் கால்நடைப் பண்ணை இன்றைக்கு எப்படி இருக்கிறது என்பதை எல்லாம் தீவிரமான ஆராய்ச்சிக்கு உட்படுத்த வேண்டும். ஒரு மறுமலர்ச்சி காணுவதற்காக இந்த ஆட்சியும், இந்த அரசாங்கமும், தமிழக முதல்வர் அவர்களும் மிகவும் தீவிரமாகச் சிந்தித்து திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கின்றபோது, இது ஒழுங்காக போய் சேர்கிற நேரத்திலே, அதிகாரிகளை வைத்து வேலை வாங்குகின்ற நேரத்திலே, இங்கே உள்ள பெரிய அதிகாரிகளும் ஒழுங்காகச் செயல்படவேண்டும் என்பதற்கான வழிமுறைகளைப் பற்றி ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு மிகப் பெரிய யானையை உருவாக்கவேண்டும் என்று தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். இந்தத் திட்டங்கள் மூலமாக தமிழகத்திலேயுள்ள வளங்கள் யானை போல வளர வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் எங்கே கொண்டு போய் முடித்திருக்கின்றார்கள் என்றால் பூனையாக ஆக்கியிருக்கிறார்கள். அதனுடைய முதல் எடுத்துக்காட்டாகத்தான் புரட்சித் தலைவர் அவர்கள் இறைச்சிக் கழகத்தை 1979-லே உருவாக்கியிருக்கிறார். இன்றைக்கு அதைக் கொண்டு போய் கோழி வளர்ப்புத் துறையோடு சேர்க்கின்ற துர்ப்பாக்கியமான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு இரண்டாவதாக கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றை உருவாக்கவேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் 3 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆணையிட்டிருக்கின்றார்கள். 2, 3 மாதங்களுக்கு முன்னாலே ஆணையிடப்பட்டிருக்கின்றது. இந்தத் துறை எவ்வளவு வேகமாக செயல் ஆற்றிக் கொண்டிருக்கிறது. இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்னாலே ஆணையிடப்பட்டும், இன்றைக்கு நாமக்கல்லில் கல்லூரி வளர்ந்து இருக்கிறதா என்றால், பத்திரிகைகளிலே கேலி செய்து எழுதுகின்ற சூழ்நிலைதான் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒன்று அந்த விவசாயப் பல்கலைக் கழகமாவது அரசோடு தொடர்பு கொண்டு அந்த வேலைகளிலே ஈடுபடவேண்டும் அல்லது அதற்கு என்று நியமிக்கப்பட்டிருக்கின்ற பல்கலைக் கழகமாவது அல்லது தனி அலுவலர்களாவது அரசோடு தொடர்ந்து தொடர்பு வைத்து கொண்டு, என்னென்ன அரசு செய்யவேண்டும் என்பதைப் பற்றி பேசி கேட்டுப் பெறவேண்டும், இதெல்லாம் ஒன்றுமே இல்லை. இதை எல்லாம் செய்யாமல் எங்களுக்கு நிலம் கிடைக்கவில்லை, நிலத்திற்கு ஆர்ஜிதம் செய்யாமையவில்லை என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டு அதற்கான வேலைகளைச் செய்யாமல் இருக்கின்ற நிலை ஏற்பட்டு, மக்கள் பிரதிநிதிகள் மனு கொடுத்த பின்னாலேதான், கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் தமிழக முதல்வர் அவர்கள். புரட்சித் தலைவர் அவர்கள் சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் வந்தபோதுதான், அங்கே இன்னும் நிலம்கூட ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்பதை உணர்ந்து, அங்கே ஒரு டெபுட்டி கலெக்டர் அவர்களை, நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கென்று நியமித்து தனி ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். இந்த நிலைமைகள் ஏற்படுகின்றபோது ஒரு ஆட்சி தீட்டுகின்ற திட்டத்திற்கு, மிக வேகமாக நம்முடைய துறையை வளர்ப்பதற்குப் போடுகின்ற திட்டங்களுக்கு அதிகாரிகள் தொடர்ந்து தீவிரமாக செயல்படவேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.





திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைப் பராமரிப்பு என்பது கிராமப்புற வளர்ச்சிக்கு இன்றியமையாதது, நம் மக்களுக்கு சத்துள்ள உணவு அளிக்க கால்நடை அபிவிருத்தி தேவையானது என்பதெல்லாம் இந்த கோரிக்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் நான் அவைதப்பற்றி சற்று பரிசீலனை செய்கின்ற நேரத்தில் எனக்கு ஏற்பட்ட கருத்துக்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நல்ல கறவை மாடுகளை வாங்குபவர்களுக்கு உரிய மானியம் என்று இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் அது அவர்களுக்கு கிடைக்கவில்லை என்ற புகார்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக இங்கே குறிப்பிட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தில், 384வது தீர்மானத்தில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் குடவாசல் ஏரியாவிலே கும்பகோணம் யூனியன் உட்பட்ட ஏரியாவில் 30 நபர்கள் மாடு வாங்கப் போன நேரத்தில் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ரூ. 10 ஆயிரம் மானியம் வங்கியிலே கட்டப்படவில்லை என்ற காரணத்தினாலே அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும், இன்றைக்கு மாடு வாங்குபவர்கள் கணக்கிலே அங்கே பணம் இருந்து கொண்டிருக்கின்றது என்றும், அதை வாங்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மக்களுக்குச் சேரவேண்டிய மானியம் காலாகாலத்திலே வங்கி கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காததனாலேயே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னொரு முக்கியமான பிரச்சினை. மாட்டு தீவனம் அங்கெல்லாம் சரியாக கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கின்றது. நல்ல தீவனம் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற வறட்சியின் காரணமாக மாடுகள் கூட தீவனத்திற்கு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. எங்கள் மாவட்டத்தில் மாடுகளுக்கு மிகவும் முக்கியமான வைக்கோல் கூட கிடைக்காத நிலை இருக்கிறது. அது கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே நல்ல மாட்டுத் தீவனம் தயாரிப்பதற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இத்திட்டங்களை எவ்வளவு துரிதமாக நடைமுறைப்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான ஒரு பிரச்சினை என்னவென்றால் மாடுகளை வாங்குவதற்கு மக்களுக்கு பணம் கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கிற நேரத்தில் அவர்கள் மாடுகளைத் தேடி ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்திற்கு போய் மாடுகளை வாங்குகிற நேரத்தில் சீதோஷ்ண மாறுதல் காரணமாக, களைமேட்டிக் கன்டிசன் சேஞ்சஸ் காரணமாக அந்த மாடுகள் எவ்வளவு பாலை அவர்களுக்குத் தர வேண்டுமோ அந்த

அளவுக்கு பாலை தராத நிலைமை இருக்கிறது. இதன்காரணமாக மாடுகளை வாங்குகிறவர்கள் பாதிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க விஞ்ஞான ரீதியாக அரசு என்ன செய்ய முடியுமோ அதை செய்து அந்த ஏழையெளிய நடுத்தர மக்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள் நாமக்கல்லில் ஏற்படுத்தப்பட்டுள்ள அல்லது ஏற்படுத்துவதாக இருக்கிற கல்லூரியைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அந்தக் கல்லூரியைப் பற்றி இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றும் இல்லை. அதை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், விஸ்தரிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆடு, கோழி போன்றவைகளை வளர்க்கின்ற முறைகளைப் பொறுத்தவரையில் சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களை எந்த அளவுக்கு விரைவிலே நடை முறைப்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவிலே நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் ஒருசில மாவட்டங்களுக்கு மட்டும் இத்திட்டங்களை நிறைவேற்றியுள்ள நிலைமையை மாற்றி எல்லா மாவட்டங்களுக்கும் இத்திட்டங்களை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கோழியைப் பொறுத்தவரையில் அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவற்றை வளர்க்க, பெருக்க திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதற்காக உள்ள திட்டங்கள் நல்லமுறையில் அமுல் படுத்தப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் திட்டங்களை நல்லமுறையில் நிறைவேற்ற வேண்டுமென்றால் அலுவலர் சேவை தேவைப் படுகிறது. அதற்குத் தேவையான குவாலிபைட் ஆட்கள் போதுமான அளவில் இல்லை. ஆகவே, ஆடு, கோழி போன்றவைகளை வளர்ப்பதற்காக ஏற்படுத்தப்படுகிற கூட்டுறவுச் சங்கங்களில் அவசியம் ஒரு லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டரை நியமித்து அதன் மூலம் மக்களுக்கு அந்த அலுவலரின் சேவை கிடைக்க ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, லிக்யுட் நைட்ரஜன் பிளான்ட் பற்றிய திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்று மாநிலத்தில் இரண்டே இரண்டு இடங்களில் தான் இந்த பிளான்ட்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. 1985 ஆம் ஆண்டு நெல்லை மாவட்டத்திலுள்ள அபிசேகப்பட்டியில் இவை அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் 1983 ஆம் ஆண்டில் அபிசேகப்பட்டியில் ஒன்றும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திங்கள் சந்தை என்று சொல்லக்கூடிய மண்டே மார்க்கெட்டில் ஒன்றும் ஆக இரண்டு பிளான்ட்களை அமைக்க வேண்டுமென்று திட்டம்



தீட்டப்பட்டது. இடம் தேர்ந்தெடுக்கப்பட்டும் கூட என்ன காரணத்தாலோ திங்கள் சந்தையில் அது அமைக்கப்படவில்லை. அபிசேகப்பட்டியிலேயே இரண்டு பிளான்டுகளையும், ஒருசில அதிகாரிகளின் நிர்ப்பந்தத்தின் காரணமாகவோ அல்லது அவர்களின் தேவையை பூர்த்தி செய்ததினாலேயோ அங்கேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 12–50)

அடுத்து, இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கணக்கின்படி அங்கே இருக்கின்ற பசு மாடுகளின் எண்ணிக்கை 75,852. அதுபோல அங்கே எருமை மாடுகள் 8,076 இருக்கின்றன. இதற்கு மேலும் அங்கே வளர்க்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ள மாவட்டம் அது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கொடுத்திருக்கக்கூடிய கணக்கின்படி நாள் தோறும் அங்குள்ள மக்களுக்கு 15 ஆயிரம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. ஆனால் இன்றைக்கு வறட்சி நிலைமை ஏற்பட்டதன் காரணமாக அவர்களுக்குக் கிடைப்பது 7,200 லிட்டர் மட்டும்தான். ஆகவே, நாம் இன்றைக்கு என்ன பார்க்கிறோம் என்றால் அவர்கள் கொள்முதல் செய்யக்கூடிய பாலைவிட ஒரு பெரும் பகுதி கேரள மாநிலத்திற்குச் செல்கிறது. கேரள மாநிலத்திலே நல்ல மார்க்கெட் இருக்கிறது என்று தெரிய வருகிறது. ஆகவே, குமரி மாவட்டத்திலே மேலும் அதிகமாக மாடுகளை வளர்ப்பதற்கான வாய்ப்பு இருந்து கொண்டிருப்பதனாலே இந்த frozen semen plant, that is, liquid nitrogen plant அங்கே ஏற்படுத்தப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்திக்கொள்ள விரும்புகிறேன். இந்த நேரத்திலே அங்கு மட்டுமல்ல, அநேகமாக அனைத்து மாவட்டங்களிலேயும் இப்படிப்பட்ட frozen semen கிடைக்கக்கூடிய முறையிலே ஒவ்வொரு பிளான்ட் ஏற்படுத்துவது இன்றைக்கு வளர்ந்து வரக்கூடிய தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புவது ஏற்கெனவே லிக்விட் செமன் கொடுக்கக்கூடிய நேரத்திலே ஒரு ரூபாய்தான் அதற்கு சார்ஜ் பண்ணப்பட்டிருந்தது. ஆனால் இன்றைக்கு frozen semen கொடுக்கக்கூடிய நேரத்திலே ஐந்து ரூபாய் ஒவ்வொரு மாட்டுக்கும் வசூலிக்கப்படுகிறது. இது இன்றைக்கு அதிகமான கட்டணம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உண்மையிலேயே அதை எடுத்து விடவோ அல்லது அதனுடைய ரேட்டைக் குறைப்பதற்கோ அரசு முன்வர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குப் பல மாவட்டங்களைப் பொறுத்த அளவிலே இப்படி நோய்வாய்ப்படும் கால்நடைகளைப் பொறுத்த வரையில் காலாகாலத்தில் வைத்திய உதவிகள் கிடைப்பதற்கு மொபைல் டிஸ்பென்சரிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். குறைந்த பட்சம் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மொபைல் டிஸ்பென்சரியாவது ஏற்படுத்துவது இன்றைக்குத் தேவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கீ வில்லேஜ் சென்டர் என்ற முறையிலே இன்றைக்குப் பல வெட்டர்னரி மருந்தகங்களிலோ அல்லது டிஸ்பென்சரிகளிலோ இது சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கீ வில்லேஜ் சென்டர்களையும், இந்த மருந்தகங்களையும் செபபர்கேட் பண்ணுகிற நிலையில், இரண்டாகப் பிரித்து, தன்னந்தனியாக வைக்கப்படுமேயானால் அதிகமான மக்களுக்கு வாய்ப்பு கிடைக்கக்கூடிய வசதி ஏற்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு எடுத்துக்காட்டு என்ற முறையிலே இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்குக் குமரி மாவட்டத்திலே திங்கள் சந்தை, குழித்துறை, கொட்டாரம், நாகர்கோவில், திருவட்டாறு போன்ற இடங்களிலே இப்படி இரண்டும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. இதை விரிவு படுத்துவதற்கான சாத்தியக்கூறு இருக்கிறது. அதைச் செய்ய வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையிலேதான் நான்கூட ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். திருவட்டாறிலே இருக்கக்கூடிய அந்த மருந்தகத்திலிருந்து, பேச்சிப்பாறையிலேயோ அல்லது பொன் மலையிலேயோ இந்த மாதிரி பிரித்து வைப்பதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதை அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், தடுப்பு ஊசி மருந்துகள் இன்றைக்குச் சரியாகக் கொடுக்கப்படவில்லை. இன்று கால்நடைகளைப் பொறுத்த அளவிலே ஏற்படக்கூடிய நோய்க்குப் பிறகு வைத்தியம் செய்வதைவிட, பிரிவென்டிவ் ஆக்ஷன் எடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகளை எடுப்பது இன்றைக்குத் தேவை. அந்த முறையிலே பிரிவென்டிவ் நடவடிக்கைகளைச் செய்வதற்கான தடுப்பு ஊசி மருந்துகள் பொதுவாக சரியான முறையில் வழங்கப் படவில்லை. அந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதேபோன்று இன்னொரு விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புவது, அநேகமாக சப் சென்டர்களானாலும் சரி அல்லது மருந்தகங்களானாலும் சரி, சரியான பில்டிங்க்ஸ் இல்லாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. சப் சென்டர்களைப் பொறுத்த வரையில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மருந்துகள் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு எந்த மருந்தகத்திலேயும் அது சரியான முறையில் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





தேவையான கருவிகள்கூட இன்றைக்கு பல சப் சென்டர் களிலே இல்லாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. பணியாளர்கள்கூட சரியான முறையில் இல்லாத சப் சென்டர்கள் இன்றைக்கு தமிழகத்திலே அதிகமாகியிருக்கின்றன.

இன்னொரு விஷயத்தை நான் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். இன்றைக்கு மருந்துகளை வாங்குவதைப் பொறுத்த வரையில் ஏற்கனவே கவர்ன்மெண்ட்டினுடைய பொறுப்பிலே உள்ள மெடிகல் ஸ்டோர் டிபார்ட்மெண்டிலிருந்து வாங்கப்பட்டு வந்தது. ஆனால் அதை மாற்றி இப்பொழுது டெண்டர் வழியாக மருந்துகள் வாங்குவதற்கான நிலை ஏற்பட்டதற்குப் பிறகு அவர்கள் சேம்பிள் காட்டக்கூடிய முறையில் கம்பெனிக் காரர்கள் நல்ல குவாலிட்டி மருந்துகளைக் காட்டிவிட்டு, சப்ளை செய்யக்கூடிய நிலையில் மோசமாக உள்ள மருந்துகளை இன்றைக்கு வழங்குகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அந்த நிலைமைகளை மாற்றுவதற்கு ஏற்கனவே இருந்த அந்த முறையை, அதாவது மெடிகல் ஸ்டோர் டிபார்ட்மெண்டிலிருந்து மருந்துகளை வாங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு இந்தத் திட்டங்களெல்லாம் அமல் நடத்தப்பட வேண்டுமேயானால் நமக்கு மிக முக்கியமான தேவை ஊழியர்களுடைய ஒத்துழைப்பு. இன்றைக்கு ஆங்கிலத்திலே சொல்வார்கள், "A contented worker is an asset to the industry" என்று.

அந்த முறையில் இன்றைக்கு ஊழியர்களை சரியான முறையில் நடத்தவில்லை என்ற குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இருபது ஆண்டுகள் ஆன பிறகும், அவர்களுக்கு ப்ரமோஷன் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அசிஸ்டன்ட் சர்ஜன்களாக வந்தவர்கள் இருபது ஆண்டுகளாக அப்படியே இருக்கிறார்கள். வெட்டரினரி அசிஸ்டன்ட் சர்ஜன் என்ற போஸ்டை வெட்டரினரி சர்ஜன் என்று மாற்றியமைத்து, அவர்களுக்கு தகுந்த ப்ரமோஷன் கிடைக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். அதைப் போன்று, அலோபதி மருத்துவத்தில், சித்த மருத்துவத்தில் டாக்டர்களுக்கு, பல் வைத்தியர்களுக்கு, சர்ஜன்களுக்கு என்ன ஊதியம் கொடுக்கப்படுகின்றதோ அதே ஊதியத்தை இவர் களுக்கும் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல இரவு நேரங்களில் கால்நடை மருந்தகங்களுக்கு அல்லது மருத்துவமனைகளுக்குச் சென்றால்,

அங்கே ஊழியர்கள் இருப்பதில்லை. ஏனென்று கேட்டால் அங்கே சிப்பந்திகள் தங்கும் வசதி இல்லை. குறைந்தபட்சம் சிப்பந்திகள் தங்கி இருக்க மருத்துவமனையோடு சேர்த்து அவர் களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று அவர்களுக்கு டெலிபோன் வசதி, வாகன வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். இரவு நேரங்களில் அவர்களைச் சந்திப்பதற்குப் போனால் அவர்களுக்கு வாகன வசதி இல்லாத காரணத்தால் சிரமமாக இருக்கிறது. குறிப்பாக மலைப் பகுதியிலிருந்து வருகின்றவர்களுக்கு எந்த நேரத்தில் உதவி தேவையோ அந்த நேரத்தில் அவர்களுக்கு தகுந்த உதவி கிடைக்கவில்லை. அதனால் அவர்களுடைய மாடுகள் இறந்து விடக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அவர்களோடு தொடர்பு கொள்ள அவர்களுக்கு இப்படிப்பட்ட வசதிகள் தேவை; அந்த வசதிகளை நிச்சயமாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வறட்சிநிலை ஏற்பட்டிருப்பதன் காரணமாக பல மாநிலங்களுக்கு மாடுகள் கொண்டு செல்லப்படுகின்றன. நல்ல மாடுகளையும் கூட கொண்டு சென்று விடுகிறார்கள். அதை தடுக்கக்கூடிய முறையில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பாலில் கலப்படம் செய்வதைப் பொறுத்தமட்டில் கலப்படம் செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள ஒரு ஏற்பாடு இருக்கிறது. ஆனால் அதை யார் செய்கிறார்கள் என்றால் ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள்தான் செய்கிறார்கள். இந்தப் பணியை அவர்கள் செய்வதைவிட கால்நடை ஆய்வாளர்கள் செய்வதே பொருத்தமானதாக இருக்கும். அவர்கள் தான் விரைவாக இந்தப் பணியைச் செய்ய முடியும்; அவர்கள் செய்வதுதான் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சில்லரைச் செலவினப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் 5—2—1987-ல் போடப்பட்ட ஜி.ஓ. 107 அமுல்படுத்தப்பட வில்லை. உடனடியாக அந்த ஆணையை அமுல்படுத்த வேண்டும். இன்றைக்கு 400—க்கு மேற்பட்டவர்கள் தினக் கூலிகளாக இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டும்,

அதைப் போன்று எல்லாப் பணியாளர்களுக்கும் விபத்துப் படி வழங்க வேண்டும். இப்போது அசிஸ்டன்ட சர்ஜனுக்கு மட்டும்தான் விபத்துப்படி கொடுக்கப்படுகிறது. மற்றப் பணியாளர்களும் அந்த மாதிரியான வேலைகளைச்





செய்கிறார்கள். ஒரு மாட்டைப் பிடித்து, கட்டி, வைத்தியம் செய்யும் போது மற்றவர்களுக்கும் இதே மாதிரி 'ரிஸ்க்' இருக்கிறது. அதனால் அசிஸ்டன்ட் சர்ஜன்களுக்கு வழங்கப் படுவது போல மற்ற ஊழியர்களுக்கும் விபத்துப் படி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பால் வள உற்பத்தியைப் பொறுத்தவரையில் ஒரு சில நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய தினம் பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கனவே அமைச்சரிடம் கேட்ட இந்த விஷயம் பத்திரிகையில் வந்திருக்கிறது. இன்றைய தினம் நல்ல முறையில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெறுவதற்கு உலக வங்கியினுடைய சிபாரிசு என்னவென்றால் அந்தச் சங்கங் களுக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்பது. அந்த முறையில் முறையான தேர்தலைநடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அதைப் போன்று இன்றைக்கு 'நான் அஃபிஷியல்ஸ்' தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால் பல சங்கங்கள் நட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. நட்டத்தில் ஓடுவதைத் தவிர்க்க உரிய நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். அதைப் போன்று இன்றைக்கு பால் உற்பத்தியாளர் சங்கம் என்றும், பால் விநியோகிப்பாளர் சங்கம் என்றும் இரண்டு வகைச் சங்கங்களை அமைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக பல சங்கங்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. தனியாக ஆட்களை நியமனம் செய்து, அவர்கள் வழியாக பாலை விற்பனை செய்வதால் உற்பத்தியாளர் சங்கங்கள் பாதிக்கப் படுகின்றன.

(பிற்பகல் 1-00)

நான் இந்த நேரத்தில் என்ன சுட்டிக் காட்ட விரும்பு கிறேன் என்றால், திருநெல்வேலி மாவட்டத்தில் இதே பிரச்சினை ஏற்பட்ட நேரத்தில் 1986 நவம்பர் மாதம் 19 மற்றும் 20 தேதிகளில் கூட்டம் கூட்டப்பட்டு அங்கே இருக்கக்கூடிய சங்கத்தினுடைய விதிகளுக்கும் அவர்களுடைய கட்டுப் பாட்டுக்கும் உட்பட்டுத்தான் இந்த வினியோகத்தைச் செய்ய வேண்டும் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; அது போன்று இங்கேயும் ஏற்படுத்த வேண்டும் என்பதைத்தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இந்த ஊழியர்களுக்கு ப்ரமோஷன் கொடுக்கிற நேரத்தில் நியாயமான சீனியாரிட்டி கடைப்பிடிக்கப்பட வில்லை என்ற புகார் வந்திருக்கிறது. குறிப்பாக கன்னியா குமரியிலும், திருநெல்வேலியிலும் இப்படிப்பட்ட புகார்கள் வந்து இருக்கின்றன. இது குறித்து பரிசீலித்து நேர்மையான முறையில் அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.01 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(மாலை 4–00)

பிற்பகல் 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வெ. சுந்தரர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

7. வரவு செலவுத் திட்டம், 1987–88—வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று பால் உற்பத்தி சம்பந்தமான சில கருத்துக்களை காலையிலே பேசிக் கொண்டிருந்தேன். அது சம்பந்தமாக என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் உற்பத்தி செய்யக்கூடிய சங்கங்களையும், விநியோகம் செய்யும் சங்கங்களையும் இன்றைக்கு இரண்டு முறையிலே அமைத்துக் கொண்டு, என்னென்ன முறையிலே உற்பத்தியைப் பெருக்கலாம் என்பதற்கும், மக்களுக்கு எப்படி பால் விநியோகம் செய்யலாம் என்பதற்கும் நடவடிக்கைகளை எந்த முறையில் எடுக்க வேண்டுமோ, அந்த முறையில் எடுக்க வேண்டும். ஒரே சங்கத்திலே இரண்டு பிரிவுகளை வைத்துக் கொண்டு, இந்த வேலைகளைச் செய்து முடிக்கலாம். ஆனால் இன்றைக்கு என்ன பார்க்கிறோம் என்றால் பல சொசைட்டிகளிலே ஏஜென்டுகள் என்ற முறையிலே தனியார்களை நியமித்து பால் விற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் மற்ற சங்கங்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலை ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே இது சம்பந்தமாக நெல்லை மாவட்டத்திலே உள்ள சங்கத்திலே ஒரு தகராறு ஏற்பட்டது. அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட சங்கத்தினுடைய பொறுப்பாளிகளும், சங்கத்தைச் சேர்ந்தவர்களும் மில்க் கமிஷனர் எல்லோரும் சேர்ந்து சென்ற நவம்பரில் பேசி முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது. எனவே பாலை விற்கும் நேரத்திலே விநியோக சங்கத்தின் மூலமாக விநியோகம் செய்ய வேண்டும். அந்த முறையிலே எல்லா இடத்திலேயும் இந்தக் கொள்கையை அமுல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பத்திரம் சம்பந்தமாக மார்க்கெட் வேல்யூ என்ற அடிப்படையில் மக்கள் விற்கும் போது அவர்களுடைய நிலங்களுக்கு நியாயமான விலை கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த முறையில் உள்ள கஷ்டத்தைத் தவிர்க்க வேண்டும். பத்திரப் பதிவுக் கட்டணம் அதிகமான அளவுக்கு



இந்த மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்ட காரணத்தால் அண்டை மாநிலங்களுக்குப் போய் பத்திரப் பதிவு செய்யும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஸ்டாம்ப் பேப்பர் போதுமான அளவுக்கு கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. அது போதுமான அளவுக்கு கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கட்டிடங்கள் இல்லாத ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் இருக்கும் நிலை இருக்கிறது. குறிப்பாக கொல்லிமலையில் ஓலைக் கட்டிடத்தில் ரெஜிஸ்டிரார் அலுவலகம் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக போதுமான அளவுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டும்.

அடுத்து கள்ளச் சாராயத்தை பொறுத்தவரையில் இங்கே ஏறத்தாழ 20 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வெளி மாநிலங்களிலிருந்து கள்ளச் சாராயம் இங்கே வந்து கொண்டிருக்கிறது என்றும் இங்கும் காய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் குறிப்பு இருக்கிறது. அதைத் தடை செய்ய என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்த எடுக்க வேண்டும். அது சம்பந்தமாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதைக் கடுமையாக எல்லா இடங்களிலும் தடுக்க விசேஷ அடிப்படையில் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த கண்காணிப்புக் குழுக்களை அமைத்து, அந்தக் குழுக்கள் வழியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மக்கள் குடிப்பது என்பது நல்ல பழக்கமல்ல என்ற உணர்வு மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டால் தான் கள்ளச்சாராயம் காய்ச்சும் நிலைமையானாலும், கள்ளச் சாராயம் அருந்தி பலவித நோயாளிகளாக மாறும் நிலைமையானாலும் தவிர்க்கப்படும். எனவே எந்தெந்த முறையில் பிரச்சாரம் செய்ய முடியுமோ அந்தந்த முறையில் பிரச்சாரத்தை நடத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுவிலக்குக் கொள்கையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் 30 ஆயிரம் பேர்கள் இருப்பதாக குறிப்பேட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எங்களுடைய மாவட்டத்திலே மட்டும் 16 ஆயிரம் பேர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே உண்மையிலே பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக என்னுடைய தொகுதியில் ஒரு நல்ல பால் பண்ணை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஒரு யோசனை கன்னியாகுமரி மில்க் பெடரேஷன் மூலமாக வைக்கப்பட்டிருக்கிறது. அதை அமல் படுத்தக்கூடிய நேரத்தில் பேச்சிப்பாறை போன்ற நல்ல

சீதோஷ்ண நிலை உள்ள பகுதியிலே அந்தப் பால் பண்ணையை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரப் பதிவு பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும் அவருக்கு முன் பேசிய உறுப்பினர்களும் பேசினார்கள். கெய்ட் லைன்ஸ் என்பது வழி காட்டும் அறிக்கை என்ற அளவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கிற மதிப்பீடே தவிர, அது இறுதியான மதிப்பீடு அல்ல. அதை பைபிளைப் போன்று கடைபிடிக்க வேண்டியதில்லை. அது குறைவாக இருக்கிறது என்று சப்-ரிஜிஸ்ட்டிரார் கருதினால் அவர் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்து ஸ்டாம்ப் குறைவாக இருக்கிறது என்று கேட்டு பெறலாம். அல்லது பதிவு செய்பவர்கள் மார்க்கெட் ரேட்டுக்கு அதிகமாக இருக்கிறது என்று உணர்வார்களேயானால், அவர்களும் சம்பந்தப்பட்ட கோட்டாட்சியரிடம் மனு செய்து இந்திய முத்திரைச் சட்டம் 47—ஏ பிரிவு 1-ன் கீழ் கேட்கலாம். இரண்டு பேர்களும் கேட்டுக் கொள்ளலாம். பணம் கட்டியதை திரும்ப வாங்கிக் கொள்ளலாம். அதிலும் திருப்தி இல்லையென்றால் கோர்ட்டுக்குக் கூட போகலாம். அதை முடிந்த முடிவு என்று கருத வேண்டாம். ஆகவே இந்த கெய்ட் லைன்ஸ் மூலமாக பாதிக்கப்பட்டது என்று சொல்வது உண்மையானது அல்ல. 31—3—87 வரையில் இந்த பதிவு மூலம் கிடைத்த தொகை 1986—87-ல் அரசுக்கு வருமானம் ரூ. 155 கோடி ஆகும். 1985-86-இல் ரூ. 123.76 கோடி தான்.

ஆகவே அதைப்பற்றி பிற்பாடு பேசுகிற உறுப்பினர்கள் வலியுறுத்த வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதிலேயும் திருப்தி இல்லை என்றால் பின்னால் பேசலாம். இந்திய வருமான வரிச் சட்டம் 230-ன் படி சொத்துக்களின் மதிப்பு 50 ஆயிரத்திற்கு மேல் இருந்தால் வருமான வரி துறையிடம் இருந்து சான்றிதழ் பெற வேண்டும் என்று இருந்ததை, அந்த மதிப்பீடு பல ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டதால், விலைவாசி ஏறியுள்ள நிலையில் 1 லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்பீடு அதிகம் போனால் வருமான வரிச்சட்டத்தின்படி விதி 230—ன் கீழ் வருமான வரித்துறையிடமிருந்து கிளியரன்ஸ் வாங்க வேண்டும் என்று புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அரசு மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது. மைய அரசு அனுமதிக்க வேண்டும். தற்போது பத்திரப் பதிவுத் துறையினுடைய தலைவர், ரூ. 1 லட்சம் என்பதை இரண்டு லட்சம் ரூபாய் என்று கூட வைக்கலாம் என்று தமிழக அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு.)





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கிளாரிபிகேஷன் கேட்க வேண்டாம். அசெம்பிளியிலேயே பிளேஸ் பண்ணியிருக்கிறார்கள். 'guide line value is not a substitute for market value' ஜி.ஓ. கூட பத்து நாளைக்கு முன்பாக அரசாங்கம் வைத்திருக்கிறது. ஆகவே தான் அமைச்சரும் விளக்கிச் சொன்னார்கள். உங்களை பேச விட்டால், இது குறித்து பிறகு எல்லோருக்கும் பேச விடவேண்டும். அதனால் திரு. வை. பாலச்சந்திரன் பேசட்டும்.

*திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களால் அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற சில மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் அதிகமான நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. என் தொகுதியைப் பொறுத்த வரைக்கும் 2, 3 கோரிக்கைகளை இந்த அவை முன்எடுத்து வைக்க விரும்புகிறேன்.

1956 ஆம் ஆண்டு என்னுடைய கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணைந்த காலக் கட்டத்திற்கு முன்னாலேயே ஒரு கால்நடை மருத்துவமனை பத்மநாபபுரம் தொகுதியில் இருக்கிற தக்கலை என்ற இடத்தில் அமைந்திருந்தது. அது கன்னியாகுமரி மாவட்டத்தில் முதன் முறையாக அமைந்த ஒரு மருத்துவமனை. ஆனால் அந்த கால்நடை மருத்துவமனைக்கு என்று சொந்தமான இடமோ, கட்டிடமோ இல்லாத காரணத்தால் அது அப்போதைக்கு அப்போது பல்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு கடைசியாக இப்போது தக்கலை நகரத்தையே விட்டு வேறு இடத்திற்குபோய்விடும் சூழ்நிலை வருமோ என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. அதிகாரிகளை சந்தித்துக் கேட்கிறபோது தக்கலை நகரத்தில் அந்த மருத்துவமனைக்கு சொந்தமான ஒரு கட்டிடத்தைக் கட்டுவதற்கு போதுமான அல்லது தகுந்த இடம் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள்.

(மாலை 4— 0)

ஆனால் தக்கலை நகருக்கு உட்பட்ட சாரோடு போன்ற பகுதியில், பத்மநாபபுரம் பகுதியில் அல்லது புலியக்குறிச்சி பகுதியில் தகுதியான இடம் தாராளமாகக் கிடைக்கும் நிலை இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட தகுதியான இடம் கிடைக்காதென்று நம்முடைய அரசு கருதுமானால் இன்றைக்கு பத்மநாபபுரம் மேட்டுக்கடையில் இருக்கும் பத்மநாபபுரம் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் பல ஏக்கர் நிலம் எந்தவிதப் பயன்பாடும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலத்தைப் பயன்படுத்தி பத்மநாபபுரம் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள்ளேயே இந்தக் கால்நடை மருத்துவமனையைக் கட்டுவதற்கு அரசு ஏற்பாடுசெய்ய வேண்டும். இந்த பத்மநாபபுரம்

அரசு மருத்துவமனையை எந்த அளவுக்குத்தான் நாம் விரிவுபடுத்தினாலும், அதற்கு எவ்வளவுதான் இடம் தேவைப்பட்டாலும், தேவைப்பட்ட இடம்போக எஞ்சிய இடம் ஏராளமாக இருப்பதால், இதைப் பரிசிலனை செய்து, புராதனமான—இந்த கால்நடை மருத்துவமனை வேறு எங்கும் சென்றுவிடாமல் மாண்புமிகு அமைச்சரவர்கள் பாதுகாத்துஅருள வேண்டுமென்று வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

ஓரிரு மாதங்களுக்கு முன்பு இந்த மாமன்றத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு, என்னுடைய மாவட்டத்தில் தாலூக்காவிலிருந்து தாலூக்காவிற்கு வைக்கோல் கொண்டு போவதற்கு உள்ள கட்டுப்பாட்டைப் பற்றி, கொண்டு வந்த போது அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். ஒரு தாலூக்காவிலிருந்து இன்னொரு தாலூக்காவிற்கு வைக்கோல் கொண்டு செல்லத் தடையில்லை என்று சொல்லப்பட்டது. ஆனால் இந்த நிலைமை அங்கேயில்லை. கல்குளம் தாலூக்காவிலிருந்து விளவங்கோடு தாலூக்காவிற்கு அல்லது ஒரு வட்டத்திலிருந்து இன்னொரு வட்டத்திற்கு அந்த மாவட்டத்திற்குள் வைக்கோல் கொண்டு செல்ல அனுமதியில்லை. அங்கே ஏழை எளிய மக்கள் தங்களுடைய கால்நடைகளை எல்லாம் நீர் கிடைக்கும் இடங்களுக்குக் கொண்டு செல்லுகிறார்கள். ஆகவே தங்களுடைய கால்நடைகளை ஒரு வட்டத்திலிருந்து இன்னொரு வட்டத்திற்கு ஓட்டிச் சென்று, மலைச்சாரல் பகுதிகளில் தங்கவைத்து, அவைகளைப் பராமரித்து வருகிறார்கள். ஆகவே ஒரு வட்டத்திலிருந்து இன்னொரு வட்டத்திற்கு வைக்கோல் கொண்டு செல்வது இன்றியமையாததாக இருக்கிறது. ஆகவே வட்டம் விட்டு வட்டம் வைக்கோல் கொண்டு செல்ல அனுமதிக்கும் ஆணையை உடனடியாகச் செயல்படுத்த குறிப்பாணை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குமரி மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்றுகேட்பது பேராசை என்று நீங்கள் சொல்லக்கூடும். விவசாயக் கல்லூரி வேண்டுமென்று கேட்டாலும் இல்லை என்று சொல்லி, அரசாங்கம் அதை ஏற்காமல் இருக்கலாம். பொறியியல் கல்லூரியையும் உடனடியாக ஏற்காமல் இருக்கலாம். கால்நடைகள் அதிகமாக வாழும் மாவட்டம் எங்களுடைய மாவட்டம் என்பதால், கால்நடைகளைப் பராமரிக்க, வளர்க்க தகுதியான மாவட்டமாக இருப்பதால், புல்வெளிகள் அதிகமாக இருப்பதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைத்திட நம்முடைய அரசு முன்வர வேண்டும். அதற்கு இடம் எங்கே இருக்கிறது என்று கேட்கலாம். வேளிமலைச் சாரலில் பல நூறு ஏக்கர் நிலம் விவசாய நிலமாக இருக்கிறது. அரசு புறம்போக்காக இருக்கிறது. பி.மெமோ கொடுத்து அதை சிலர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தைப் பயன்படுத்தி, கால்நடை மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்றைக்கு மது விலக்கைப் பொறுத்தவரையில் ஓரே ஒரு கருத்தைச் சொல்கிறேன். மதுவிலக்குக் குற்றங்கள் எல்லாம் All the prohibition offences are treated to be non-bailable. ஆனால் 4(1)(ஜே) பொறுத்தவரையில் அந்த மாபெரும் குற்றமாகக் கருதி நான்-பெயிலபிள் அபென்சாகக் கருதுவது உசிதமாக இல்லை என்பதை அனுபவ பூர்வமாகச் சொல்ல விரும்புகிறேன். இளைஞர்களும், பெரியவர்களும் குடித்துவிட்டு வந்த காரணத்தால், நீதிமன்றத்திலே குற்றவாளிகளாக வரும் நிலைமையைப் பார்க்கிறோம். வேறு பல சமூகக் குற்றங்கள் செய்தவர்களோடு இவர்கள் நிற்கும் நிலைமையைப் பார்க்கிறோம். பல ஆண்டுகளாக ஏற்பட்ட பழக்கத்தின் காரணமாகவும், நாமே ஒரு வகையில் காரணமாக இருந்து, அவர்களுக்கு ஏற்பட்ட குடிப பழக்கம் காரணமாக அவர்கள் அந்தக் குற்றத்தை செய்து நீதி மன்றங்களுக்கு 'நான்-பெயிலபிள் அபென்ஸ்' என்ற நிலையிலே வருகிறார்கள். நான்-பெயிலபிள் அபென்சிலும் ஜாமீனில் வரலாம், பெயிலபிள் அபென்சிலும் ஜாமீனில் வரலாம். ஆனால் நான்-பெயிலபிள் அபென்சைப் பொறுத்தவரை சில சடங்குகள் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு ஒரு சில நாட்கள் ஆகிறது. அந்த பார்மாலிடீஸ், சடங்குகளைச் செய்யும்வரை ஒரு சில நாட்கள் சிறைச்சாலையில் அவர்கள் இருக்கும் கட்டாயம் ஏற்படுகிறது. ஆகவே 4(1)(ஜே)-ன் கீழ் உள்ள அந்தக் குற்றத்தை பெயிலபிள் அபென்சாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடைத் துறையில் சில்லரைச் செலவினப் பணியாளர்கள், கன்டின்ஜன்சி ஸ்டாஃப்-ஆக இருந்தவர்கள் 5 ஆண்டுக் காலத்திற்கு மேலே பணியில் இருந்தால் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற அரசாணை இருந்தாலும், அதிகாரிகள் மட்டத்திலே ஒருசில தகவல்கள் தர காலதாமதம் ஏற்படுவதால், அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அந்த நிலைமை மாற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சாலணி இல்லாதவர்களுக்கு காலணி கொடுக்கிறோம். ஏழை எளிய மக்களுக்கு உண்ண உணவு கொடுக்கிறோம். சமூகநலத் திட்டங்கள் பலவற்றை செயல்படுத்துகிறோம். ஆனால் கால்நடைப் பராமரிப்பு உதவியாளர்களுக்கு மட்டும் முழுக்கால் சட்டை அணிய அனுமதி கொடுக்க மாட்டோம் என்று சொல்வது, 20-ம் நூற்றாண்டின் இறுதியில் இருக்கிற, 21-வது நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கிற நமக்கு ஏற்புடையதாக இருக்காது என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரைக்கால் சட்டை அணிந்து வருவதால் அங்கே என்ன பிரச்னை ஏற்படுகிற தென்றால், இன்றைக்கு கிராமப்பகுதிகளில் கால்நடை மருத்துவமனைகளுக்கு அதிகமாக வருகிறவர்கள் பெண்கள் தான். பகல் நேரத்தில் ஆண்கள் வேலைகளுக்கு சென்று விடுவதால் இந்த கால்நடைகளை பெண்கள் தான் மருத்துவத்திற்காக எடுத்து வருகிறார்கள். இந்தப் பெண்கள் கால்நடைகளை அழைத்து

வருகிறபோது அவர்கள் முன்னாலே இந்தப் பணியாளர்கள் அரைக்கால் சட்டை அணிந்து நிற்பதும், உட்காருவதும், குனிவதும் அந்தப் பணியாளர்களுக்கும் கூச்சமாக இருக்கிறது, அந்தப் பெண்களுக்கும் கூச்சமாக இருக்கிறது. ஆகவே ஏழை எளியவர்களுக்கெல்லாம் இலவசமாக உடை கொடுக்கிற இந்த அரசாங்கம், இந்த கால்நடை பராமரிப்பு உதவியாளர்களுக்கும் முழுக்கால் சட்டை அணியலாமென்று ஒரு அனுமதியை கொடுக்க வேண்டுமென்று அப்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கால்நடை பராமரிப்புத் துறையில் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு விபத்துப்படி வழங்கப்படுகிறது. அதைப் போல கால்நடை பராமரிப்பு உதவியாளர்களுக்கும் வழங்க வேண்டும். காரணம் சீறுகின்ற கால்நடைகள், ஓடுகின்ற கால் நடைகள் இவைகளையெல்லாம் கட்டுப்படுத்தி மருத்துவர்கள் முன்னால் நிறுத்துவது இந்த கால்நடை பராமரிப்பு உதவி யாளர்கள் தான். அதிகமான விபத்துகள் ஏற்படுவதற்கு சாத்தியக் கூறுகள் இருப்பதும், அதிகமான விபத்துகள் ஏற்படுவதும் இவர் களுக்குத்தான். ஆகவே இவர்களுக்கும் அந்த விபத்துப்படியைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று அமர்கிறேன்.

*டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமை பெற்ற பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, ஏழை எளியவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும், அதுவும் திருவரங்கம் இராஜகோபுரம் போல வானளாவ உயர வேண்டுமென்பதற்காகப் பாடுபடும் புரட்சித் தலைவர் அவர்களின் அரசால் கொண்டு வரப்பட்டிருக்கும் கால்நடைப் பராமரிப்பு, பால் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைகள் மீது ஒருசில கருத்துக்களை எடுத்துவைக்க விரும்பு கிறேன். கிராமங்கள், கிராமங்களாக இல்லாமல் நகரங்களாகத் திகழ வேண்டுமென்பதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் கருத்து. அந்தக் கருத்தை அவர்கள் சொல்வது மட்டு மல்லாமல் அதற்கான பணிகளைச் செய்து கொண்டும் வருகிறார் என்பதை இந்த நேரத்தில் சொல்லியாக வேண்டும். கிராமப் புறங்கள் வளர வேண்டுமென்றால் கால்நடைச் செல்வங்கள் வளர வேண்டும். அதற்காக 32¼ கோடி ரூபாய் செலவு செய்து அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிற இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

நிலத்திலிருந்து அதிக வருவாய் பெறவும், மக்களுக்கு, குறிப்பாக நகர்ப்புறத்தில் இருக்கிற மக்களுக்குச் சத்தான உணவைத் தரவும் கால்நடைப் பராமரிப்புத் துறை நெஞ்சிலே பால் வார்க்கிறது என்பதை நினைத்துப் பார்க்கிறபோது உள்ள படியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். 1977-78-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் பால் உற்பத்தி 16.8 லட்சம் மெட்ரிக் டன்களாக இருந்தது. 1985—86-ல் இது 31.18 லட்சம் மெட்ரிக் டன்களாக உயர்ந்திருக்கின்றது. இப்படி இரட்டை மடங்கு உயர்ந்திருக்



கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது உள்ளபடியே மகிழ்ச்சி யாகத்தான் இருக்கிறது. அது உண்மையிலேயே வெண்மைப் புரட்சிதான். 1977—78-ல் per capital consumption was only 98 gms. ஆனால் 1985—86-ல் per capital consumption ros to 65 gms.

பால் பாலகர்களுக்குத் தான் சிறந்த உணவு என்பதல்ல. பல் இழந்தவர்கள் வரையில் பலருக்கும் சிறந்த உணவாக இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் போல பலம் கொண்டு விளங்க, எளிதில் ஜீரணமாகும், பேலன்ஸ்ட் டயட்டாக விளங்குகிற பாலை அனைவரும் குடித்து ஆரோக்கியமாக வாழ வாழ்த்துகிறேன்.

பாலில் சிறந்த பால் அஃப்—கோர்ஸ் தாய்ப் பாலுக்கு அடுத்த படியாக இருப்பது வெள்ளாட்டுப் பால்தான் என்பதை உணர்ந்து தானோ என்னவோ நமது பாரதத்தின் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் தினமும் பருகினாரோ என்று எண்ணுகிறேன். வெள்ளாட்டுப் பால் அதிகமாக கொடுக்கும் 'சேனன்' என்ற இனம் தனியார் துறையில் தான் அதிகமாக இருக்கிறது. இதனை அரசுத்துறையில் இனப்பெருக்கம் செய்து நான்கு மாதங்களில் 40 கிலோவாக பெருகுகிற அந்த இன ஆடுகளின் பாலையும், இறைச்சியையும் மக்கள் பெற அரசு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4—20)

தமிழ்நாட்டில் 5,626 பால் உற்பத்திச் சங்கங்கள் தொடங்கப் பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில்தான் கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை விவசாயிகள் எல்லாம் பாலை உற்பத்திச் செய்வதற்கு இத்தகைய சங்கங்களை நிறுவி இருக்கிறார்கள். நமது மாநிலத்தில்தான் இத்தகைய சங்கங்கள் இருக்கின்றன என்பதை நினைத்துப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். வருகிற காலத்தில் 400-க்கும் மேற்பட்ட சங்கங்களை நிறுவ இருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. அப்படி நிறுவுகிற சங்கங்களில் என்னுடைய தொகுதியில் சில சங்கங்களை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இச்சங்கங்கள் பால் உற்பத்தி செய்து, கட்டுப்படியாகின்ற விலையில் கொடுக்கின்றது. குறைந்த விலைக்கு வாங்கி, அதாவது கட்டுப்படியாகக்கூடிய விலைக்கு வாங்கி, குறைந்த விலைக்கு நகரத்திலே இருப்பவர்களுக்கு எல்லாம் பாலை வினியோகிக்கின்ற பணிகளை நான் பாராட்டு கிறேன்.

அதே சமயத்தில் "ஹை யீல்டிங் வெரைட்டி" என்று அழைக்கப் படுகிற ஜெர்சி, பிரிசியன், முர்ரா போன்ற [illegible] களைக் கொடுத்து, பசுந்தீவனம் கொடுத்து, [illegible] வெண்மைப் புரட்சியைச் செய்து வருகின்ற அரசைப் பாராட்டு கிறேன். அந்நேரத்தில் [illegible] நம்பியிருக்கிற விவசாயி களுக்கு, கால்நடை வளர்ப்போர்களுக்கு கட்டுப்படியாக்கக்கூடிய விலையாக இப்போது கொடுப்பதை விட குறைந்தது 20% அதிகமாகக் கொடுத்து அவர்களுடைய நெஞ்சிலே பால் வார்க்க வேண்டும்.

[டாக்டர் அ. பொன்னுசாமி] [1987 ஏப்ரல் 3

அதே சமயத்தில் ஈரோடு கூட்டுறவு பால் ஜன்றியமானது பெருத்த நஷ்டத்தில் நடந்து வருகிறது. இதை அரசு நன்கு ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியராக இருந்தாலும் சரி, பெற்றோர்களாக இருந்தாலும் சரி, முட்டை வாங்கினால் கவலைப் படவேண்டாம். தினமும் ஒரு முட்டையாவது வாங்கிக்கொடுங்கள். முட்டைதான் இன்று நாட்டிலே 'அன்கன்டாமினேட்டட் புட் மெட்டீரியல்' என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கலப்பினமற்ற உணவுப் பொருள்தான் அந்த முட்டை. வெளி நாடுகளில் இருக்கிற ஒருவர் 250-க்கும் அதிகமான முட்டை களுக்கு மேலாக உட்கொள்ளுகிறார்கள். ஆனால் நமது நாட்டில் 1977-78-ல் இந்த விகிதம் 16-ஆகத்தான் இருந்தது. அது 1985-86-லே 38 ஆக மாறியுள்ளது. இது போதாது. 1977-78-லே 682 மில்லியன் முட்டைகளை நாம் உண்டாக்கினோம். ஆனால் 1985-86-ல் 2067 மில்லியனாக உயர அரசு எடுத்த நடவடிக்கை களுக்கு எனது நன்றி.

எங்களுடைய பெருந்துறை தொகுதியை எடுத்துக் கொண்டாலும் சரி, அல்லது நாமக்கல் பகுதியை எடுத்துக் கொண்டாலும் சரி, அவைகள் எல்லாம் வறண்ட பகுதிகளாக இருக்கின்றன. வறண்ட நிலம் படைத்த விவசாயிகளாகத் தான் அவர்கள் இருக்கிறார்கள். நிலமற்ற விவசாயத் தொழி லாளர்கள்தான் இப்போது கோழிப்பண்ணைகளை வைத்து, அதை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்கின்ற முட்டைகளுக்கு கட்டுப்படியான விலை கொடுக்காத தால், குறைந்தது 50% க்கு மேலாக உள்ள பண்ணைகளை இப்போது அவர்கள் மூடிவிட்டார்கள். இதனால் அவர்களுக்கு மட்டும் நஷ்டமில்லை. நம் மக்கள் கூட கலப்படம் இல்லாத உணவை இழக்கின்றவர்களாக ஆகின்றனர். இப்படிப்பட்ட நேரத்திலே எஸ்.கே.எம். அவர்களைப் பாராட்ட நான் கடமைப் பட்டு இருக்கிறேன். எனவே கோழிப் பண்ணைகளை ஊக்குவித்து, கிராமப்புற மக்களுடைய பொருளாதாரம் உயர, முட்டைகளை அதிகமாக உற்பத்தி செய்து பயன்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சத்துணவுத் திட்டத்திலே குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளிலே அனைத்துக் குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் முட்டை வழங்க அரசு முன்வரவேண்டும். இதனால் முட்டை உற்பத்தி அதிகமாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிராமப்புறங்களில் ஒருவருடைய செல்வாக்கு, அவர்கள் கட்டுத்தறிகளில் வைத்திருக்கிற கால்நடைகளுடைய எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். மாடு என்றால் செல்வம் என்று பொருள் என்று நமக்கு நன்றாகத் தெரியும். அந்த அளவிற்கு கிராமங்களில் இருக்கிற விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்பவர் களுக்கும் செல்வம் தரும் தருவாக இருக்கிற கால்நடைகள்



1987 ஏப்ரல் 3] [டாக்டர் அ. பொன்னுசாமி]

பராமரிப்புத் துறைக்கு,—உழைப்பைக் கொடுத்து, உணவைக் கொடுத்து, உரம் கொடுத்து வருகின்ற கால்நடை பராமரிப்புத் துறைக்கு நல்ல கவனம் செலுத்துவது பாராட்டுதற்குரியது.

தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தைப் பற்றி இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும்: நம்மில் பலர் தேவைக்கு அதிகமாக கார்போ ஹைட்ரேட்டை உண்டு, கொழுத்துக் கொண்டு இருக்கிறோம். ஊக்கம் தருகிற புரோட்டினை மறந்து விடுகிறோம். குறிப்பாக ஆல்ககாலிக்ஸ் புரோட்டினை மிகவும் குறைந்த விலையில் தரக்கூடியது அனிமல் புரோட்டினாகும். அதற்காக ஜப்பான் காடை வளர்ப்பு கோழி இனத்திலே பிராய்லர் என்று சொல்லக்கூடிய இனத்தை நாம் வளர்க்கவேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

சைதாப்பேட்டையில் பன்றி வளர்ப்பிலே, நன்றியுள்ள நாய் வளர்ப்பிலே, ஆடு—செம்மறியாடாக இருந்தாலும் சரி, வெள்ளாடாக இருந்தாலும் சரி—வளர்ப்பிலே நான் முன்னமே சொன்னது மாதிரி 'சேனன்' என்ற இனத்தைப் பெருக்குவதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாடு வளர்ப்பிலே, குறிப்பாக கலப்பின இளம் கன்றுகள் வளர்ப்பிலே, அதுவும் குறிப்பாக வறட்சிப் பகுதியிலே உள்ள ஏழை விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்பவர்களுக்கும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, இந்தியாவிலேயே முதலாவதாக வரச் செயல்படும் இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

இறைச்சியைப் பொறுத்தவரையிலே, பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு முன்னால், ஆன்டி—மார்டம் செய்யவேண்டும், அதைப்போல போஸ்ட்—மார்டம் செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு நல்ல ஸ்லாட்டர் ஹவுசுகளை நிறுவ வேண்டும். குறிப்பாக சென்னை போன்ற நகரங்களில் தான் இருக்கின்றன. மற்ற இடங்களிலும் தரமான ஸ்லாட்டர் ஹவுசுகளை நிறுவவேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அப்போதுதான் நோயற்ற இறைச்சியையும், தரமான இறைச்சியையும் தர முடியும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிராய்லர் போன்ற கோழி இறைச்சியை கோல்ட் ஸ்டோரேஜ் களில் வைத்து பெருநகரங்களில் இப்போது கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதைப்போல பேரூராட்சிகளிலும் சிறு நகரங் களிலும் கூட, கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடைகள் அண்டை மாநிலங்களுக்கு கடத்தப் படுவதை கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். நமது தமிழ்நாட்டிலே உள்ள இறைச்சி நிறுவனமானது ஒரு தொழிற் சாலையை ஏற்படுத்தி, இறைச்சியைப் பக்குவப்படுத்தி, அதை அயல்நாடுகளுக்கு அனுப்பி, அன்னியச் செலாவணியை ஈட்ட

வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயத்தில் நமக்குத் தோலும் குறைந்த விலைக்கு அதிகமான அளவில் கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எல்லா கால்நடைகளுக்கும் கட்டாய இன்சூரன்ஸ் கொண்டு வரவேண்டும். ஏன் என்றால் ஏழை விவசாயிகளின் செல்வமான அந்த மாடுகள் இறந்து விடுகின்ற நிலையில் அவர்கள் பெரும் இழப்புக்கு உள்ளாகிறார்கள். அதனை தடுப்பதற்காக எல்லா கால்நடைகளுக்கும் கட்டாயமாக இன்சூரன்ஸ் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த கால்நடைகள் அதிகமாக பெரியார் மாவட்டத்தில், அதுவும் குறிப்பாக பெருந்துறை தொகுதியில் இச்செல்வம் அழியாமல் இருக்கவும், கிராமத்தில் இருக்கின்ற செல்வம் பெருகவும் அவைகளுக்கு பசுந்தீவனம் கிடைக்கவும், தண்ணீர் கிடைக்கவும் மேல் பவானித் திட்டத்தையும், பாண்டியாறு—புன்னம் புழாத் திட்டத்தையும், நொய்யலில் மண்ணவரத் திட்டத்தையும், கீழ் பவானி ஆற்றிலிருந்து குளங்களுக்கு தண்ணீர் விடுகின்ற திட்டத்தையும் நிறைவேற்றித் தந்து மக்கள் கால்நடைகளுக்குத் தண்ணீர் கொண்டுவர கால்நடையாக நடப்பதை தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நடப்பு ஆண்டில் ஏற்படுத்தப்பட இருக்கும் பத்து உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒன்றை பவானி வட்டத்தினையும் பெருந்துறை வட்டத்தினையும் இணைத்துப் பெருந்துறையிலே அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்துறைக்கு உட்பட்ட நல்லாம்பட்டி பேரூராட்சியில் அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. அவைகளுக்கு எல்லாம் சிகிச்சை அளிக்க பெருந்துறை அல்லது காஞ்சிகோவிலுக்கு செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. அதாவது 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலாக அவர்கள் செல்லவேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தால் நல்லாம்பட்டி பேரூராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனையை அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2,226 கிளை நிலையங்கள் இருக்கின்றன. இப்போது புதிதாக கிளை நிலையங்கள் தொடங்கப்படுவது இல்லை. ஆகவே புதிதாக கிளை நிலையங்கள் தொடங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேசமயத்தில் சென்னத்தூரில் சூரியம்பாளையத்தில் ஒரு கால்நடை கிளை நிலையத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது பெருந்துறைப் பகுதியில் 'Intensive Cattle Development Programme' என்ற ஒன்றை அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக பெருந்துறையில் பெரிய கால்நடை மருத்துவமனை இருக்கிறது. பெரிய அளவில் இடம் இருக்கிறது.





மாவட்டத்தின் மத்தியில் இந்த பெருந்துறை அமைந்து இருக்கிறது. தலைநகருக்கு அருகில் இருக்கிறது. அங்கே அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. ஆகவே இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு பெருந்துறையில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியை அமைத்துத்தர அவசியம் ஆவன செய்ய வேண்டும் என்று மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறை சிறந்து விளங்க கால்நடை மருத்துவர்கள் பணியும் கால்நடை ஆய்வாளர்களின் பணியும் மிகவும் மகத்தானது. கால்நடை உதவி மருத்துவர்களுக்கு பதவி உயர்வு என்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. 23 ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஆகவே 10 ஆண்டுகள் கழிந்த பிறகு கால்நடை உதவி மருத்துவர்களை எல்லாம் கால்நடை மருத்துவர்கள் என்று அழைக்கப்படவேண்டும். ஒவ்வொரு வட்டத்திற்கும் படிப்படியாக உதவி இயக்குநர் அலுவலகம் நியமிக்கவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்-

பெரியார் மாவட்டத்திற்கு என்று ஒரு Regional Director Post இல்லை. இதை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

பல் டாக்டர்கள், பி.ஐ.எம். போன்றவர்களுக்கு, மற்ற டாக்டர்களுக்கு எல்லாம் இணையாக சம்பளம் வழங்கவேண்டும். மாடுகள் உதைத்தால் பல் போகின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால் கால்நடை மருத்துவர்களுக்கு 1,340 ரூபாய் என்ற அளவுக்கு ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். அண்டை மாநிலத்தில் கூட இணையான சம்பளம் வழங்கப்படுகிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் டாக்டர்கள் குவார்ட்டர்ஸ்ஸில் இருப்பது இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதற்கு முக்கியமான காரணம் குவார்ட்டர்ஸ் எல்லா இடங்களிலும் இல்லை. டாக்டர்களுக்கு குவார்ட்டர்ஸ் இல்லாத காரணத்தால் அவர்கள் அங்கே இருப்பது இல்லை. ஆகவே ஒவ்வொரு கிளை நிலையத்திலும், ஒவ்வொரு கால்நடைகளுக்கான நிலையத்திலும் ஒரு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே டாக்டர்கள் இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கால்நடை ஆய்வாளர்களுக்கு இந்த அரசு பல நன்மைகளைச் செய்து இருப்பதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். கால்நடை மருத்துவர்களுக்கு வழங்குவதைப் போலவே, கால்நடை ஆய்வாளர்களுக்கும் ஆபத்து ஈட்டுப்படி வழங்கப்படவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். அதேசமயத்தில் அவர்கள் எல்லாம் 25 ஆண்டுகள் பணி முடிந்தாலும் அவர்களுக்கு

எந்தவிதமான ஊதிய உயர்வும் கொடுப்பது இல்லை. ஆகவே அவர்களுக்கு சிறப்பு நிலை ஊதியம் வழங்கவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். கால்நடைகளை கவனிக்க கால்நடையாக அவர்கள் இப்போது எல்லாம் போய்க் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வாகனம் வாங்குவதற்கு கடன் உதவி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை மருத்துவர்களாக இருந்தாலும் சரி, கால்நடை ஆய்வாளர்களாக இருந்தாலும் சரி, இது 'மாட்டுக்கார வேலன் புரட்சித் தலைவருடைய அரசு, உங்களுடைய கோரிக்கை நிறைவேறும், நீங்கள் கால்நடையாக நடக்கவேண்டியது இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லி உங்கள் கோரிக்கை நிறைவேறும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழ் நாட்டில் வெண்மைப் புரட்சியையும், புரதப் புரட்சியையும் ஏற்படுத்தித் தந்த தமிழக அரசுக்கும், புரட்சித் தலைவர் அரசுக்கும் நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 4–30)

குறிப்பாக பெரியார் மாவட்டம் பவானிசாகரில் சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகம் இல்லை. அதனைத் துவங்கவேண்டுமென்று நமது மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள சார்பில் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடியில் உள்ள பால் வழங்கு சங்கத்திற்கு ஆர்.டி.ஓ.வை தலைவராகப் போட்டிருக்கிறீர்கள். அதனை மாற்றி, கூட்டுறவுத் துறையின் அதிகாரியை தலைவராக நியமிக்கவேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் ஞானசுந்தரம் அவர்களின் சார்பாகக் கேட்டு, நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மாநில ஆயத்தீர்வை, முத்திரைத்தாள் நிர்வாகம், பத்திரப்பதிவு, பால் வழங்கல், கால்நடை வளர்ச்சி ஆகிய 5 மானியங்களின் மீது ஜனதா கட்சியின் சார்பாக பேசும்போது, ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத துறைகளின் மீது பேச வேண்டிய நிலையும், அதனால் பல சிரமங்கள் உண்டாகின்றன என்ற நிலையும் இருக்கிறதென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் மக்களுக்கு குறிப்பாக குழந்தைகளுக்கு சத்து ஊட்டக்கூடிய, பால் வழங்கக் கூடிய துறையைப் பற்றி பேசவேண்டியிருக்கிறது. அதைப்போலவே மதிமயக்கக்கூடிய மக்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய மதுவைப் பற்றியும்பேசவேண்டியிருக்கிறது. இனி வரும் காலத்திலாவது ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத மானியங்களை மாற்றி அமைத்து இங்கே கொண்டுவர வேண்டாம் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



இந்தியாவில் தயாரிக்கும் வெளிநாட்டு மது வகைகளை விற்பனை செய்வதில் அனுமதிக்கப் பெற்றவர்கள் 953 பேர் இருக்கிறார்கள். 1-1-87—லே கள், சாராயக் கடைகள் மூடப்பட்ட பிறகு இருக்கக்கூடிய, புதிதாக திறந்த கடைகள் 1,012. ஏற்கனவே பல்லாண்டுகளாக 1981—லே மதுவிலக்கை தளர்த்திய போது இருந்த கடைகள் 953. இப்போது புதிதாக முளைத்தது 1012 கடைகள். இது நியாயம் தானா? மதுக் கடைகளை மூட வேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆனால் இன்றைக்கு ஒன்றுக்கு இரண்டு பங்காக திறந்துகொண்டிருக்கிறீர்கள். இதையெல்லாம் இந்த அரசு மூடுவதற்கு வழிவகைகளைச் செய்யவேண்டும். கள், சாராயக் கடைகளை மூடியதனால் வருமானம் ரூ. 125 கோடிதான் குறைந்திருக்கிறது என்று கணக்கிலிருந்து தெரிகிறது. ஆனால் மாண்புமிகு நிதியமைச்சர் ரூ. 250 கோடி குறைவதாகக் கூறியிருப்பது தவறான தகவலாக இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் சென்ற தடவை நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கின்றபோது மாதம் ஒன்றுக்கு ரூ. 20 கோடி வீதம், மூன்று மாதங்களுக்கு 60 கோடி என்றும், 12 மாதங்களுக்கு ரூ. 240 கோடி என்ற அளவில் இந்தச் சாராயக் கடைகளிலிருந்து வருமானம் குறையும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, உங்கள் கொள்கை விளக்கக் குறிப்பின் 4—வது பக்கத்திலே வருகின்ற வருவாயைப் பற்றி போட்டதில் 1985–86 ஆம் ஆண்டுக்கு சாராயக் கடைகளிலிருந்து ரூ.91 கோடி வருமானமும், கள்ளுக் கடைகளிலிருந்து ரூ. 31 கோடி வருமானமும் வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை வைத்துத்தான் நான் பேச வேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக, உங்கள் கணக்குப்படி கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்ட 30,000 பேர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அவர்களுக்கு ரூ. 2,000 கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். 1,000 ரூபாய் கடனாகவும், இன்னொரு 1,000 ரூபாய் மானியமாகவும் கொடுக்கிறீர்கள். இப்போதுள்ள விலைவாசி ஏற்ற காலத்தில் ஒரு பாதிக்கப்பட்ட குடிமகனுக்கு ஒரு ஏழைத் தொழிலாளிக்கு ரூ. 2,000 சரிப்பட்டு வருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, நீங்கள் தரக் கூடிய தொகையை ரூ. 5,000 ஆக உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த ரூ. 2,000-ஐ அறிவித்து 3, 4 மாதங்கள் ஆகின்றன. ஆனால் இன்னும் கொடுக்கப்படவில்லை என்ற செய்தி வந்துகொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் அவர்கள் காய்ச்சுகின்ற பனை வெல்லம், பனங்கற்கண்டு இவைகளைக் கலப்படத் தடைச் சட்டத்தின் மூலமாக நகராட்சியில் உள்ள 'சேனிட்டரி இன்ஸ்பெக்டர்கள்' கடைகளில் விற்கமுடியாமல் தடை செய்து வருகிறார்கள். தயவு செய்து குடிசைத் தொழிலான இந்த பனை வெல்லத் திற்கு கலப்படத் தடைச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று தென் மாவட்டங்களைச் சேர்ந்த மரம் ஏறும் தொழிலாளர்கள் மிக மிக வேண்டி கேட்டுக்கொண்டு இருக் கிறார்கள். தயவு செய்து இதை நீங்கள் சரிபார்த்து பனை வெல்லம், பனங் கற்கண்டிற்கு கலப்பட தடைச் சட்டத்தி லிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அதைப்போலவே, பனை பொருள்கள் பனை ஓலை யிலே வேலை செய்யக்கூடிய பெண்கள், இருக்கிறார்கள். நெல்லை மாவட்டம் மணப்பாடு போன்ற இடங்களிலே அவர்களுக்கு ரூ. 3, 4 என்று கூலி கிடைக்கின்றது. அந்த சொஸைட்டிகளுக்கு 50 சதவீதம் மானியம் கொடுத்து ஏழைப் பெண்களுக்கு, பனைத் தொழில் செய்கின்ற பெண்களுக்கு வாழ்வு அளிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே கரும்பு கசண்டு. இந்த மொலாசஸ் பற்றிச் சொல்லும்போது சர்க்கரை ஆலையிலே மிகக் குறைந்த விலையிலே மொலாசஸ் கொள்முதல் செய்து அரசு கூடுதல் விலைக்கு விற்கிறது. இந்த மொலாசஸ் சர்க்கரை ஆலை களிலே நியாயமான விலைக்கு விற்பதற்கு ஏற்பாடு செய்து அதன் மூலம் வருவாயை விவசாயிகளுக்கு பங்கீடு செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகள். அதாவது குண்டர் ஆக்ட்டில் 2000 வழக்குகள். 1980-86 வரை கண்டு பிடிக்கப்பட்ட வழக்குகள் 5 இலட்சம். அதிலே போடப்பட்ட வழக்குகள் இரண்டே முக்கால் இலட்சம். ஆனால் தண்டனை அடைந்தவர்கள் 15,000 பேர்கள். 5 இலட்சம் வழக்குகள் கண்டு பிடிக்கப்பட்டு, போடப்பட்ட வழக்குகள் இரண்டே முக்கால் இலட்சம், தண்டனை அடைந்தவர்கள் 15,000 பேர்கள், அதிலே விடுதலை பெற்றவர்கள் 30,000 பேர்கள். இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். ரொம்ப அதிசயமாக இருக்கிறது. அரசு திரும்பப்பெற்ற வழக்குகள் 75,000. விசாரணையில் உள்ள வழக்குகள் 1½ இலட்சம். நடவடிக்கை கைவிடப்பட்டது 1,83,000. இதையெல்லாம் பார்க்கும்போது சாதாரணமாக குடிக்கின்ற ஏழைகளை நீதி மன்றங்களுக்கு அலையவிட்டு இந்த அரசு மதுவிலக்குத் துறையின் மூலமாக பல ஆண்டுகளாக கொடுமைபடுத்தியிருக்கிறது. 5 இலட்சம் வழக்குகளில் 15,000 பேர்கள் தான் தண்டனை பெற்றார்கள் என்று சொன்னால், 1½ இலட்சம் வழக்குகளை நீங்கள் புலன் விசாரணை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னால், 1,83,000 வழக்குகளை நீங்கள் தள்ளுபடி செய்து இருக்கிறீர்கள் என்று சொன்னால்,





இது என்ன நியாயம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆதலால் அரசால் போடப்பட்ட வழக்குகள் முறையாக இல்லை. இதுமாதிரி ஒரு நிலைமையை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விருதுநகர் நகராட்சி பயணியர் விடுதியிலே 500 பாட்டில் சாராயத்தை இந்தத் துறை கைப்பற்றி அங்குள்ள காவலரை கைது செய்து உள்ளது. நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, நகராட்சி பயணியர் விடுதியிலே, கார் ஷெட்டிலே சாராய பாட்டில் இருந்தது. கார் ஷெட் வாடகைக்கு விடப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன். அப்பாவி காவலரை கைது செய்து விட்டால் என்ன நடக்கும்? விருதுநகர் நகராட்சி நிர்வாகத்தை நீங்கள் ஏன் விசாரணை செய்யவில்லை? கார் ஷெட்டில் அந்த சாராய பாட்டில் எப்படி வந்தது என்பதையெல்லாம் நீங்கள் விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

திருச்செந்தூர் தாலுக்காவிலே புன்னக்காயலிலே 25,000 ரூபாய்க்கு ஒரிஜினல் சாராயம் ஏலம் போனது. ஊர் கட்டுப் பாடு வைத்து கள்ளச் சாராயம் 26,000 ரூபாய்க்கு ஏலம் போய் இருக்கிறது. இதை நீங்கள் சரிபார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டம் நாட்றாம் பள்ளியில் செல்வம் என்பவர் அங்குள்ள டவுன் பஞ்சாயத்து முன்னாலே கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாக சொல்லியிருக்கிறார். அதையும் நீங்கள் சரிபார்க்க வேண்டும். கள்ளச் சாராயம் பெருகாமல் இருப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

(மாலை 4-40)

அதேபோல், முத்திரைத் தாள்கள் நிர்வாகம், பத்திரப் பதிவு நிர்வாகம் என்று எல்லாம் வருகின்றது. முத்திரைத் தாள்கள் வருமானம் 150 கோடியை எட்டுகின்றது போல் இருக்கின்றது. ஏனென்றால், 1986 டிசம்பர் முடியதான் கணக்கு கொடுக்கப் பட்டு இருக்கிறது. அந்த முத்திரைத் தாள்கள் வருமானம், பத்திரப் பதிவு வருமானம் எல்லாம் பல மடங்கு கூடுதலாக போடப்படுகின்றன.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'தொடர்ச்சியாக இதைப் பற்றியே பேசிக் கொண்டு இருக்கிறீர்களே' என்று சொல்லி; கொடுக்கப்பட்டிருப்பது, 'சார்பதிவாளருக்கு கைட் லைன்ஸ் தான்' என்று சொல்கிறார். ஒப்புக்கொள்கிறோம். ஆனால் இதைச் சொல்லும்போது நன்றாக, நியாயம் போல் தெரியும். ஆனால், சார்பதிவாளர் என்ன செய்கிறார்? 10,000 ரூபாய்க்கு வாங்கக்கூடிய நிலத்திற்கு 12,000 ரூபாய்க்கு

பத்திரம் போடச் சொல்கிறார் இவர்களும் நாங்கள் அப்படி வாங்கவில்லையே, பத்திரம் 1 200 ரூபாய்க்குத் தானே போட வேண்டும் என்று சொல்லி, 1,200 ரூபாய்க்கு பத்திரம் பதிவு செய்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன் னால், உடனடியாக பத்திரத்தைப் பதித்து விட்டு திருப்பித் தருவது இல்லை அதை ஆர்.டி.ஓ.-க்கு அனுப்பி அங்கிருந்து ஒரு தபால் வருகிறது. அந்த சார்பதிவாளர் போட்ட 12 ஆயிரம் ரூபாயை அவர்களும் கேட்கிறார்கள். அதன் பிறகு, ஆர்.டி.ஓ. வுக்கு விளக்கம் எழுதி, அந்த இடத்தைப் படம் எடுத்து அனுப்பி, இன்ன விலைதான் இருக்கிறது என்றெல்லாம் நிரூபித்து அவருக்கு ஒரு தபால் எழுத வேண்டியிருக்கிறது. அந்தத் தபாலுக்கு பதில் வருவதற்கு ஒரு வருடம் ஆகிறது. அந்தப் பதில் வரும்போது எங்கு வருகிறது என்றால், வட்டாட்சியர் அலுவலகத்திற்கு, தாலுகா அலுவலகத்திற்கு வருகிறது. பிறகு வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து டி.டி. லெவலிலுள்ளவர்கள், மற்றவர்கள் எல்லாம் போய் மறு விசாரணை செய்கிறார்கள், இது சரிதானா என்று பார்க்க இப்படி வருடக்கணக்கில் சாதாரணமானவன் நிலம் வாங்கிய பிறகு பத்திரம் இல்லாமல் பாங்கிலே போய்,கட்டிடம் கட்டுவதற்கு லோன் வாங்க, நினைப்பான். ஆனால், பத்திரத்தை ஆர்.டி.ஓ. ஆபிஸிலே கொடுத்து விட்டு இவன் எங்கே அலைவான் பாவம். இதை எல்லாம் நீங்கள் கைட்லைன்ஸ் என்று மட்டும் சொல்லக் கூடாது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமானால், விருதுநகரிலே இருக்கின்ற விலைவாசியைப் பார்ப்பீர்களேயா னால், நீங்கள் அசந்து போய்விடுவீர்கள். உங்களால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக இருக்கும். அங்கிருக்கக்கூடிய விலை ஆக 1-வது, 18-வது வார்டிலே சென்ட் 3,000 ரூபாய் இருக்கிறது. ஆனால், அங்கே 1986 டிசம்பர் வரை 10,000 என்று விலை மதிப்பு இருந்தது. அதுவே அதிகம். பத்திரப் பதிவு தாமதப்பட்டது. ஆனால் இப்போது எவ்வளவு போடுகிறார்கள் தெரியுமா? 35,000. இருக்கிற விலை சென்ட் ரூ. 3,000 என்று சொன்னால், ரூபாய் 360 க்கு பத்திரம் வாங்கவேண்டும். ஆனால் இப்போது இருக்கிற விலைவாசிப்படி....

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சப்-ரிஜிஸ்திரார் ஆபீசுக்குப் போகிறவர்கள் எல்லாம் இங்கேயுள்ள மக்கள் தொகையில் குறைந்த சதவிகிதம் தான். நானும் இதுவரையில் போனதே இல்லை. வாங்கவும் போனதில்லை. விற்கவும் போனதில்லை. உறுப்பினர்கள் பல பேர் போய் இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். யார் சொத்து வாங்குகிறவர்கள், விற்கிறவர்கள் என்றால் குறைவான பேர்தான். ப்ராப்பர்ட்டியை ஃபண்டமென்ட்டல் ரைட்டை விட்டே எடுத்து விட்டோம். யார் அதைப்பற்றி கவலைப்படுகிறார்களோ, அதிக மாக இருக்கிறது என்று நினைக்கிறார்களோ, பக்கத்திலே இருக்கிற சப்-கலெக்டர் கிட்டே போய் மனு கொடுக்கலாம் என்று இருக் கிறது. தெளிவாக அந்த ரூலிலேயே போட்டு இருக்கிறது



இப்போது வைத்த ரூலே, Guide-lines are not the substitutc for the market value. என்று இருக்கிறது. அதனாலே அதைப்பற்றிப் பேச வேண்டியதே இல்லை. யாராவது மனு கொடுத்தால் விசாரித்துத் தானே ஆகவேண்டும்? நீங்கள் ப்ரூவ் பண்ணினீர்களானால், அந்த சப் ரிஜிஸ்திரார் தப்பாகப் போட்டுவிட்டார், அதிகமாக விலை போட்டுவிட்டார், என்றால் அந்தப் பணத்தை நீங்கள் திருப்பி வாங்கிக் கொள்ளலாம்; சம்பந்தப்பட்ட ஸ்டாம்ப் பணத்தை வாங்கிக்கொள்ளலாம். (குறுக்கீடு)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல் வதும் ஒன்றுதான். நான் சொல்வதும் ஒன்றுதான். மாவட்டக் கோட்டாட்சியாளரிடம் மனுச் செய்தால் மனுவுக்கு பதில் வருவ தற்கு ஒரு வருடம் ஆகிறது என்று நான் சொல்கிறேன். அதை என்னாலே உங்களுக்கு இங்கே நிரூபிக்கமுடியும். அங்கிருந்து அவர்கள் கேட்கிறார்கள். மறுபடியும் வட்டாட்சியரிடம் வந்து அதற்குப் பிறகு அங்கிருந்து ஒரு விசாரணை செய்து, பிறகு அவர்கள் என்ன சொல்வார்கள் என்று சொன்னால், அவர்கள் ஒரு 12,000 ரூபாய் கேட்டால், 5 ஆயிரம் ரூபாய் கொடுங்க ளேன் என்று பஞ்சாயத்துதான் சொல்கிறார்கள். இதற்குள் அந்த 5,000 ரூபாயை கட்டி விட்டு வாங்கிக் கொண்டு போய் விடுகிற நிலை அங்கே இருக்கிறது.

இந்த பத்திரப் பதிவுத் துறையில் இன்னொன்று சொல வேன். அவர்கள் சொன்னார்கள், 'எங்கேயும் பிரச்சினை இல்லை' என்று திருப்பூரிலே ஸ்டே வாங்கப்பட்டிருக் கிறது. அதேபோல் காமராஜர் மாவட்டத்திலே பத்திரப் பதிவு ஒரு மாதமாக நடைபெறாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் இதற்குப் பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கேயும் ஸ்டே வாங்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதை எல்லாம் தாங்கள் சரிபார்த்து எங்களுக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முத்திரைத் தாள்கள் கிடைக்கவில்லை. 1 ரூபாய், 2 ரூபாய், 5 ரூபாய் தாள்கள் எல்லாம் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது, முத்திரைத் தாள்கள் என்று சொல்லும்போது பத்திரப் பதிவாளரிடம் வாங்கிக் கொள்ளலாம் என்று சொல் கிறார்கள். 2,000 ரூபாய் பத்திரப் பதிவு என்றால் வாங்கிக் கொள்ளலாம் ஆனால் சிலபேர் ஒப்பந்தம் போடுவதற்கு பத்திரம் வாங்குவது என்றாலும் கிடைப்பதில்லை. எனவே முத்திரைத் தாள்கள் அதிகமாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ரூபாய் 100-க்கு 12 ரூபாய், முத்திரைத் தாள்கள் மீது விதிப்பது மிக, மிக அதிகமாக உள்ளது. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பக்கத்திலுள்ள கேரளாவிலே,

5½ சதவிகிதம்தான் விதிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அதைச் சரிபார்த்து குறைக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அங்கே கேரளாவிலே உள்ள ஒரு பனைமரத்தையும், கன்னியாகுமரியிலுள்ள நிலத்தையும் சேர்த்து கேரளாவிலே கொண்டு போய் பத்திரமாக பதிவு செய்து விட்டு வந்து விடுகிறார்கள். இந்த லாபத்தைக் கருதி, விகிதத்தைக் கருதி, இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் சரிபார்த்து இங்கேயும் முத்திரைத் தாள்களின் கட்டண சதவீதத்தை விலையை கொஞ்சம் குறைக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் போட்டிருக்கிற கைட்லைன்ஸ்படி, அரசினுடைய கைட்லைன்ஸ்படி, எங்களுடைய நிலத்தை அரசே விலைக்கு எடுத்துக்கொண்டு, அரசு கடனுக்குப்போக எங்களுக்கு மீதத்தைக் கொடுங்கள் என்று என்னுடைய தொகுதியில் உள்ள பல விவசாயிகள் மீசலூர் போன்ற ஊர்களில் சொல்கிறார்கள். இதையெல்லாம் அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த கைட்லைன்ஸ்படி, அரசினுடைய தீர்மானத்தின்படி நிலங்களை விலைக்கு எடுத்துக்கொண்டு கடன் பாக்கி போக மீதி கொடுங்கள் என்று தெரிவித்து இருக்கிறார்கள். இதையெல்லாம் அரசு சரிபார்த்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பால் உற்பத்தியாளர்கள். பால் உற்பத்தியாளர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்ல விரும்புகிறேன். பால் உபயோகிப்பவர்களுக்கு அடிக்கடி விலையைக் கூட்டிக்கொண்டு வருகிறீர்கள். அதேநேரத்திலே பால் உற்பத்திச் செய்கின்றவர்களுக்கு மிகக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. ரூ. 4.10 காசுக்கு விற்கப்படுகின்ற பாலை விற்பவர்களுக்கு 3 ரூபாய் சில்லரைதான் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. 35 சதவீதம் லாபம் வைத்து விற்பது ஏனென்று தெரியவில்லை. சாதாரணமாக வியாபாரிகளுக்கு 5 சதவீத லாபத்துக்கு மேல் கிடைப்பதில்லை. இந்தத் துறையிலே மட்டும்தான் 35 சதவீதம் லாபத்தை வைத்து விற்பதற்கு அரசு ஏற்பாடு செய்து இருக்கிறது. இதையெல்லாம் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்பு. இதைப்பற்றிச் சொல்லும்போது ஒரு மனிதனுக்கு 95 கிராம் பால் சப்ளை செய்யப்பட்டிருந்ததை 165 கிராம் வரை சப்ளை செய்வதற்கு தமிழ்நாடு முன்னேறி இருக்கிறது. என்று சொல்ல முடியவில்லை. அதைப்போல் முட்டை. ஒரு மனிதனுக்கு ஒரு ஆண்டுக்கு 38 முட்டைகள்தான் கிடைக்கிறது. ஒரு மனிதன் 10 நாளைக்கு ஒரு முட்டைதான் சாப்பிட முடியும். அந்த அளவில்தான் தமிழ்நாடு இருக்கிறது.



கோழிக் குஞ்சு பொரிக்கக்கூடிய இடங்கள் தமிழ்நாட்டிலேயே மதுரை மாவட்டத்தில் கப்பலூரில் ஒன்றும், கோயம்புத்தூர் மாவட்டத்திலே அரசலூரில் ஒன்றும் இருக்கிறது. அதிகமாக இருந்த இந்தகுஞ்சு பொரிக்கும் நிலையங்கள் என்ன ஆயிற்று என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தி மக்களுக்கு நல்ல முறையிலே, பால், முட்டை கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோரையும்விட அதிக நேரம் நீங்கள் எடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். வேகமாகப் பேசி முடியுங்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் கால்நடைப் பராமரிப்பு சீராக நடைபெற ஒரு தாலுக்காவிற்கு ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல செங்கற்பட்டு, கோவை, பெரியார், அண்ணா, மதுரை ஆகிய மாவட்டங்களிலேதான் இப்போது தாலுக்காவுக்கு ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் இருக்கிறது. பிற மாவட்டங்களிலே வருவாய்க் கோட்டத்திற்கு ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் தான் இருக்கிறது. இதை மாற்றி தாலுக்காவுக்கு ஒரு உதவி இயக்குநர் அலுவலகத்தை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள பல மாவட்டங்களிலே கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் சிதம்பரம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய பகுதிகளிலே இதுபோன்ற தீவிர அபிவிருத்திப் பிரிவுகள் இல்லை. இதனால் இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறவில்லை. இந்தத் திட்டத்திற்கு தீவிர அபிவிருத்திப் பிரிவுகளை தோற்றுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கால்நடை மருத்துவர்களுக்கு, சித்த வைத்தியர்களுக்கு இணையாக ஊதியம் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி யடிக்கப்பெற்றது.)

திரு. பு. கோ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு, மாநில ஆயத் தீர்வை, பத்திரப் பதிவு, பால் வழங்கு திட்டங்கள், கால்நடை பராமரிப்பு ஆகிய மானிய கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். மதுவிலக்குச் சட்டம் தகுந்த முறையில் திருத்தப்பட்டு.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு 18 நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நான் சொல்லக் கூடாது. சொன்னால் எல்லோரும் அதைப்போலவே கேட்பார்கள். நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். போதும், உட்காருங்கள்.

திரு. பு. கோ. நாராயணன்: இந்த வருடம் கள் சாராயக் கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. கிராமத்திலுள்ள ஏழைத் தாய்மார்களெல்லாம் இதை வரவேற்று புரட்சித் தலைவர் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

(மாலை 4-50)

டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மக்கள் நலன் கருதி பல்வேறு மக்கள் நலத்திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறார்கள். சத்துணவுத் திட்டம், ஏழைத் தாய்மார்களுக்கும், ஏழைக் குழந்தைகளுக்கும் காலணி வழங்கும் திட்டம், ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கும் திட்டம் போன்றவற்றை நிறைவேற்றிவரும் நேரத்தில் உண்மையிலேயே அதிகமான நிதி தேவைப்படுகிறது. இருந்தாலும் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களின் துன்பத்தைப் போக்க வேண்டும் என்ற கருத்தோடு கள் சாராயக் கடைகளை மூடி ஆண்டுக்கு ரூ. 250 கோடி அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. என்றாலும் அதையெல்லாம் தாங்கிக் கொண்டு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைப் இன்றைக்கு நிறைவேற்றி வருகிறார்கள். எனவே மக்கள் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு கொண்டுவந்திருக்கிற மதுவிலக்குத் திட்டத்தை, இந்த அரசுக்கு நல்லபெயர் வாங்கித் தர வேண்டிய வகையில் செம்மையாகச் செயல்படுத்தும் வாய்ப்பு சம்பந்தப் பட்ட அரசு அதிகாரிகளுக்குத்தான் இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப் போலவே ஆயத் தீர்வையைப் பொறுத்தவரை சாராயக் கடைகளை ஏலமெடுத்தவர்களில் சிலர் ஆயத் தீர்வையைச் செலுத்தாமல் நிலுவையில் இருந்து, ஆயத் தீர்வைக் கட்டாமல் ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு பலர் கோர்ட்டிலே தடை உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். ஆகவே ஆயத் தீர்வையை அவர்களிடமிருந்து வசூலிக்கும் வகையில் இதற்கு என்று ஒரு குழுவை அமைத்து, யார் யாருக்கு நியாயமான முறையில் ஆயத் தீர்வை விதிக்க வேண்டும், எதையெதைத் தள்ள வேண்டும் என்று முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த சுமார் 30,000 பேர்களைப் பொறுத்தவரையில் கள் இறக்கும் தொழிலை நிறுத்திவிட்டதன் காரணமாக அவர்களுக்கு ஏற்படுகிற இழப்பை ஈடுகட்ட ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 நிவாரணம் கொடுத்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப் பொருளாதாரத்திற்கு அடிப்படையாக இருப்பது பால்வளத் துறையும், கால்நடைப் பராமரிப்புத் துறையும் ஆகும். கிராமங்களை அதிகமாகக் கொண்ட, இலட்சக்கணக்கான குடும்பங்கள் விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்ட



தமிழகத்தில், இந்தத் துறையின் பங்கு மிகப் போற்றத்தக்கதாகும். நம்முடைய பொருளாதாரம் கிராமப் பொருளாதாரத்தையும், கிராம வளர்ச்சியையும் ஒட்டியே இருக்கிறது. கிராம வளர்ச்சி என்பது கால்நடைச் செல்வம் எப்படி வளர்கிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது. இதய தெய்வம் புரட்சித் தலைவரின் அரசு, கால்நடை மற்றும் பால்வளத் துறை வாயிலாக, கிராமப் புறங்களில் பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டு வரும் முயற்சியில் வெற்றி அடைந்து இருக்கிறது.

இன்றையதினம் பரவலாக, தமிழகத்தில் இருக்கிற எல்லா கிராமங்களிலும் உள்ள விவசாயிகள் ஃப்ரோசன் செமன் என்கிற உறைவிந்து முறையில் கால்நடைகளைப் பெருக்கும் முறையை ஏற்றுக்கொள்கிற வகையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பால் கொடுக்கின்ற கறவை மாடுகள், இன விருத்திக்குத் தகுதியான ஆயிரக் கணக்கான மாடுகள் வெளி மாநிலங்களுக்கு, அதிலும் குறிப்பாக கேரளாவுக்கு எடுத்துச் செல்லப்படுவதைக் கடுமையான நடவடிக்கைகள் மூலம் தடுத்தாக வேண்டும். இறைச்சிக்குப் பயன்படும் மாடுகளை, விவசாயத்திற்கு உபயோகம் இல்லாத மாடுகளை, பால் கொடுக்கத் தகுதி இல்லாத மாடுகளைக் கடத்தினால் அதைப்பற்றி கவலையில்லை. ஆனால் கறவை மாடுகளை, விவசாயத்திற்குப் பயன்படுத்துகிற மாடுகளை வெளிமாநிலங்களுக்குக் கடத்துவதைத் தடுக்காவிட்டால் திட்டங்களின் வளர்ச்சி தடைப்படும் என்பதை நினைவில் கொண்டு கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டு, தகுதியான கால்நடைகள் கடத்தப்படுவதை தடை செய்ய வேண்டும். இதைப் போலவே கால்நடைத் தீவனமும் கடத்தப்படுகிறது. அதையும் தடுத்தாக வேண்டும்.

கால்நடை பராமரிப்புத் துறையில் அந்தத் துறையில் அனுபவம் வாய்ந்த கால்நடை மருத்துவப் பட்டதாரியை இயக்குநராக நியமித்திருப்பதை அனைவரும் பாராட்டுகிறார்கள்.

அடுத்து தமிழகத்தின் கோழி வளர்ச்சிக் கழகமும், இறைச்சிக் கழகமும் இதுவரை தனித் தனியே இயங்கி வந்தன. அவை இரண்டையும் ஒன்றாக இணைத்து ஒரே இயக்குநர் மற்றும் தலைவரின்கீழ் கொண்டு வந்தது பாராட்டத்தக்க ஒன்றாகும். தற்சமயம் தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் சிறப்பான பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் சேவையை முழுமையாகப் பயன்படுத்த சில அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் உழவு மாடுகள், கறவை மாடுகள், ஆடுகள் ஆகியவை தரப் படுகின்றன. அவைகளின் உடல் நலம் பாதுகாக்கும் பொறுப்பு அங்கே வேலை செய்கிற கால்நடை மருத்துவர்களின் கடமை

யாகும். கிராமப் பகுதியில் சென்று அங்கே இருக்கிற கால்நடைகளுக்கு அவசரச் சிகிச்சை அளித்து உடல் நலத்தைப் பாதுகாக்க கால்நடை மருத்துவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கினால் வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கால்நடைகள் ஆராய்ச்சிப் பிரிவு இப்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒன்று திருச்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இந்த மாற்றம் ஆராய்ச்சிப் பணிக்கு இடையூறாக இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கால்நடைகள் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது அவசர சிகிச்சைக்கு கால்நடை மருந்தகங்களுக்கு எடுத்துச் செல்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மனிதர்களுக்கு ஆம்புலென்ஸ் இருப்பதைப் போல கால்நடைகளுக்கு இல்லை. ஆகவே தொலைபேசி இருந்தால் நோய் அறிகுறிகளை, கேட்டறிந்து உடனே செயல்பட வாய்ப்பு உண்டு. பெரியார் மாவட்டத்திலே கால்நடை மண்டல இயக்குநர் அலுவலகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், கவுந்தப்பாடியில் செயல்பட்டு வரும் டிஸ்பென்சரியை ஆஸ்பத்திரியாக மாற்றுவதற்கு வேண்டிய அடிப்படைத் தகுதிகள் இருந்தும் இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே அப்பகுதி மக்களின் நலன் கருதி கவுந்தப்பாடியில் உள்ள டிஸ்பென்சரியை ஆஸ்பத்திரியாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பவானி தொகுதியில் ஆப்பக்கூடலில் இந்த ஆண்டு கால்நடை மருந்தகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நடப்பாண்டில் பத்து உதவி இயக்குநர் அலுவலகங்கள் ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. அவற்றில் ஒரு உதவி இயக்குநர் அலுவலகத்தை பவானியில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பால்வளத் துறையைப் பொறுத்த வரையில் எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி வருகிறார்கள். இன்றைக்கு கிராமங்களிலே 5,626 பால் உற்பத்தியாளர் சங்கங்களும், மாவட்ட அளவிலே 16 பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும், மாநில அளவில் ஒரு இணையமும் என்று மூன்று அடுக்குமுறையில் சீராக, செம்மையாக செயல்பட்டு வருகின்றன. பால்வளத் துறையின் தந்தை என்று கூறப்படும் டாக்டர் குரியன் அவர்களே, பாராட்டுகிற அளவிற்கு "தமிழ்நாடு குஜராத் மாநிலத்தையும் மிஞ்சும் அளவிற்கு நல்ல முன்னேற்றத்தை எட்டியுள்ளது கிராமங்களில் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களின் மூலம் ஏழையெளிய மக்கள் அரசு உதவியைப் பெற்று கறவை மாடுகளை வாங்கி பால் உற்பத்தி செய்து தங்கள் வருமானத்தை பெருக்க முடியும் என்ற அற்புதமான வாய்ப்பு பால் வளத்துறை மூலம் கிடைத்திருக்கிறது."



பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்த வரையில், முன்பெல்லாம் பத்திரம் பதிவு செய்யவேண்டும் என்று சொன்னால் 20 கிலோ மீட்டர், 30 கிலோ மீட்டர் சென்று பதிவு செய்ய வேண்டும் என்ற நிலைமை இருந்தது. புரட்சித் தலைவர் ஆட்சியில் ஒவ்வொரு பத்து கிலோமீட்டர் தூரத்திற்கும் ஒரு சார்-பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்தி மக்கள் பத்திரங்களை சுலபமாகப் பதிவு செய்யும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பவானியில் அம்மாபேட்டையில் ஒரு சார்-பதிவாளர் அலுவலகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கைட்லைன்ஸ் வேல்யூ பற்றி விளக்கம் அளித்தார்கள். மிகவும் நன்றி. இந்த கைட்லைன்ஸ் வேல்யூ பற்றி அமைச்சர் அவர்கள் அளித்த அந்த விளக்கத்தை சுற்றறிக்கையின் மூலம் ஒவ்வொரு சார்-பதிவாளர் அலுவலகத்திற்கும் அனுப்பி, அங்கே நோட்டீஸ் போர்டில் ஒட்டி அதை மக்களுக்குத் தெரியப்படுத்தினால் மிகவும் குழப்பத்தில் உள்ள மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பெரியார் மாவட்டம் குறும்ந்தூரில் ஒரு கால்நடை மருந்தகம் துவக்கப்பட வேண்டும் என்றும், சாவடி பாளையத்தில் அதன் கிளை நிலையம் ஒன்றைத் துவங்க வேண்டும் என்றும் நம்பியூரில் சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்திற்கான கட்டிடம் கட்ட இடம் தயாராக இருக்கிறது என்பதால் அதை அந்த கட்டிடத்தை கட்டித்தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீதும், கொள்கை விளக்கக்குறிப்பின் மீதும் இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய சில கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

மதுவிலக்குப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், பொதுவாக குடித்தவர்கள் தான் தடுமாறுவார்கள் என்று பார்த்திருக்கிறேன், ஆனால் குடிக்கிறவர்கள் பிரச்சினை பற்றி முடிவு எடுக்க இந்த மாநில அரசு ஏன் தடுமாறுகிறது என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. மதுவிலேதான் தடுமாறுவார்கள் என்றால், மதுவிலக்கிலே இந்த மாநில அரசு தடுமாறுவதைப் பார்க்கும்போது விபரீதமான வேடிக்கையாகத் தெரிகிறது. இந்த மாநில அரசு மதுவிலக்கு நிலையைப்பற்றி கூறுகிறபோது 1981 ஆம் ஆண்டு மே மாதம், கள், சாராயக் கடைகள் ஏன் திறக்கப்படுகின்றன என்பதற்காக இரண்டு காரணங்களை முன் வைத்தது. ஒன்று கள்ளச் சாராயப் பேர்வழிகளின் பிடியில் சிக்கி மக்கள் தங்கள் உடல் நலத்தைக் கெடுத்துக்கொள்வதைத் தடுக்கவும், இரண்டாவதாக சமூகவிரோதச் சக்திகளுக்குப் போய்ச் சேரும் பணத்தை அரசு பெற்று பயன்படுத்தவும் என்று இந்த இரண்டு காரணங்களை 1981-லே கூறி, கள், சாராயக் கடைகள் திறக்கப்படும் என்று இந்த மாநில அரசுதான் அறிவித்தது.

[மாலை 5.00]

ஆனால் அதே மாநில அரசு 5 ஆண்டுகளுக்குப் பின்னர் என்ன அறிவிக்கிறது என்றால்——இரண்டு காரணங்கள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன — நன்றாக கவனிக்க வேண்டும். 1-1-87 முதல் மதுவிலக்கு அல்ல, ஓரளவு மதுவிலக்குக் கொண்டுவருவதற்கு அரசு சொல்கிற இரண்டு காரணங்களில் ஒன்று, இந்திய அரசியல் சட்டத்தில் போற்றி வைத்துப் பேணப்படுகிற அரசியல் கொள்கை நெறிமுறைகளைக் கவனத்தில் கொள்வது என்பது. இரண்டாவது ஏழைகளின் துன்பத்தைத் துடைக்கும் பொருட்டு இவை மூடப் படுகின்றன. 1981-இல் ஏழைகளுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் பொருட்டுத் திறந்தீர்களா? இன்றைக்கு 87-இல் ஏழைகளின் துன்பத்தைத் துடைக்கும் பொருட்டு அவைகளை மூடுவதாகச் சொல்கிறீர்களே, எது உண்மை? 1981 இல் சொல்கிறீர்கள். கள்ளச் சாராயப் பேர்வழிகளின் பிடியில் பொதுமக்கள் சிக்கித் துடிப்பதை உடல்நலத்தைக் கெடுப்பதை போக்குவதற்காக திறந்திருப்பதாகச் சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கு மூடுவதற்கு சொல்கிறீர்கள் ஏழை மக்கள் துயர்ப்படுவதைத் தடுப்பதற்காக மூடுவதாக சொல்கிறீர்கள். ஏன் இவ்வளவு தடுமாற்றம்? ஏன் இவ்வளவு தடுமாறுகிறீர்கள் என்று புரிய வில்லை, வெறும் உடல்நலம் அல்ல. இந்த அகில இந்திய அண்ணா தி.மு.க. கொள்கைத் தோல்விக்கு மிகச் சிறந்த அத்தாட்சியாக இன்றைக்கு என்ன நிகழ்ந்திருக்கிறது?.

சென்னையிலும் கோவையிலும் நூற்றுக்கணக்கில் விஷ சாராயத்தில் மடிந்த அவர்களின் பிணங்கள்தான் உங்களின் தோல்விக்கு அடையாளங்களாக இருக்கின்றன. இந்த நிலைக்கு யார் காரணம்? ஏதோ ஒரு மாநில அரசு ஆளுகிற தரப்பிலே இருக்கிறவர்கள் தங்கள் கொள்கைகளை வலுப்படுத்திக் கொள்வதற்காக மட்டுமே விவாதிப்பது எதிர்த்தரப்பிலே இருக் கிறவர்கள் எதிர்க்கட்சி நிலையிலே இருக்கிறபோது ஆளுங் கட்சியைத் திட்டி அரிப்பைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற நிலையிலிருந்து அல்ல. தமிழகத்தின் பொது நலன், தமிழ்நாட்டு மக்களின் பொதுவான நலன், இந்த நலனைப் பேணிப் பாது காக்க உங்கள் ஆளுங்கட்சியின் கொள்கை நிலை கிஞ்சிற்றும் பொருத்தமற்றதாக இருக்கிறது என்பது நடைமுறை அனுபவத் திலிருந்து நிதர்சனமாக வெளிப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் இந்தக் குறிப்பான நிலையை நான் எடுத்து வைத்தேன். அதற்கு என்ன பதில் அளிக்கப்போகிறீர்கள் என்று தெரியவில்லை.

இன்றைக்கு என்ன நிகழ்ந்திருக்கிறது?. 1-1-87 முதல் கள்ளச் சாராயம் விற்பனை செய்தல், குடித்தல், தயாரித்தல் ஆகிய அனைத்தும் தடைசெய்யப்பட்டிருப்பதாகச்சொல்லப்பட்டு இருக்கிறது. உண்மையாகவே தடை செய்யப்பட்டிருக்கிறதா? பொதுவாக எதிர்க்கட்சியை ஏமாற்றலாம், அது உங்கள் [illegible]ரடிக்கை என்று விட்டுவிடலாம். பொதுமக்களை ஏமாற்றலாம்



அது உங்கள் வழக்கமான கொள்கை என்று விட்டுவிடலாம். ஆனால் உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கிறீர்களே ஏன்? தமிழ்நாட்டிலே கள்ளச்சாராயம் தயாராகவில்லையா? தமிழ் நாட்டிலே கள்ளச் சாராயம் விற்பனையாகவில்லையா? தமிழ்நாட்டிலே கள்ளச் சாராயம் தயாராகிறது. தமிழ்நாட்டிலே கள்ளச் சாராயம் விற்பனையாகிறது. நீங்கள் பெருமைப்பட்டுக் கொள்வதற்கு தார்மீக அருகதை கிஞ்சிற்றும் இல்லை என்பதைத் விஷ சாராய சாவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. அதிலிருந்து நாம் சிந்திக்க வேண்டாமா? ஆளுங்கட்சிக்கு ஏற்படுகிற சவாலாக அல்ல. தமிழ்நாட்டுக்கு ஒட்டுமொத்தமான சவால் என்ற நிலையில் பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எதிர்க் கட்சித் தரப்பினரும் சரி, ஆளுங்கட்சித் தரப்பினரும் சரி சிந்திக்கவேண்டுமென்பதை நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கள்ளச் சாராயம் ஒழிந்துவிடவில்லை. ஏதோ மரியாதைக்குரிய நாவலர் அவர்கள் சொல்வது போல் ஆறாக அல்ல, ஏரியாக அல்ல, குளமாக அல்ல, கள்ளச் சாராயம் தெளிவாகக் குருடனும் ஒப்புக்கொள்கிறவகையில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் இந்த சட்டமன்றத்திற்காக மறுத்துக்கொண்டிருந்தாலும் நடைமுறை வாழ்க்கையில் மறுத்து விடமுடியாது. தவறைக் கண்டுபிடியுங்கள்; தவறைக் கண்டு பிடிக்காமல் தீர்வு காணமுடியாது. நோயை நாடுங்கள். நோய் எது என்று கண்டுபிடியுங்கள். நோயைக் கண்டுபிடித்தபிறகு தான் தீர்வு காணமுடியும். எனவே ஏன் அஞ்சி ஓடுகிறீர்கள்? ஏன் பிரச்சினைகளை சந்திக்க மறுக்கிறீர்கள்? ஏன் பிரச்சினை[illegible] களுக்குத் தெளிவாக அரசுக்குத் தீர்வு சொல்கிற எதிர்க்கட்சியினர் [illegible] குரல்களைக் கேட்க மறுக்கிறீர்கள்? தீர்வு காண [illegible] செலுத்தவில்லை என்பதை வரலாற்றில் பதிய வைக்கும் நிலை வருகிறது என்பதால் கொஞ்சம் பொறுப்போடும், அக்கறையோடும் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடும் நீங்கள் சிந்திக்கவேண்டுமென்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே தாங்கள் கவனித்தால் பரவாயில்லை என்று எதிர்பார்க் கிறேன். ஏனென்றால் இன்றைக்குக் காலையிலே கூட தலைவர் அவர்கள் அவையிலே விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது பொதுவாக உறுப்பினர்கள் இருக்கைகளில் இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், என்பதற்காக நான் இதைக் குறிப்பிடு கிறேன். தமிழ்நாட்டில் எழுத்தில்தான் தடை இருக்கிறது. யதார்த்த வாழ்க்கையில் மதுவிற்கு தடையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிக முக்கியமான விஷயமாக நான் குறிப்பிட விரும்புவது—நான் யாரையும் குறிப்பிட்டுக் குற்றம் சாட்ட விரும்பவில்லை—ஆளுகின்ற கட்சியின் கொள்கை நிலையை ஒழிப்பது யார்? இடையூறு செய்வது யார்? தோற்கடிப்பது யார் என்பதைத்தான் நான் தெளிவாக எடுத்துச்சொல்ல விரும்பு கிறேன். அரசின் ஓரளவு மது விலக்குக் கொள்கையை [illegible]

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

தோற்கடிப்பது மாட்டு வண்டியில் இரட்டை மாடுகள் போல, * * * நின்று இந்த அரசாங்கத்தின் மது விலக்குக் கொள்கையை தோற்கடிக்கிறது என்பதுதான் நான் வைக்கின்ற குற்றச் சாட்டாகும்,

திரு. கூடலூர் இ. வி. வேலு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொல்கின்றார்கள். எதிர்கட்சியினுடைய குரலை கேட்க மறுப்பது ஏன் என்று குறிப்பிடுகின்றார்கள். இப்போது அவர்களை நீங்கள் அனுமதித்துத்தான் எதிர்க்கட்சி என்ற அடிப்படையிலே பேசிக் கொண்டிருகின்றார்கள். அப்படி பேசுகின்றபோது எங்களுடைய குரலை கேட்கவே மறுக்கிறீர்களே என்று நாசுக்காக விடுகின்றார், அதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

திரு. அ. மலர் மன்னன் : குறுக்கிட்டுப் பேசுவதால் நேரம்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் உட்கார்ந்து யீல்ட் ஆனதால்தான் அனுமதிக்கிறேன்(குறுக்கீடுகள்). அவர் எழுந்தவுடனே உறுப்பினர் யீல்ட் ஆகிறார். ஹீ ஈஸ் யீல்டிங்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே நாமெல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம் என்ற எண்ணத்திலே ''Sweeping allegations without any substantial proof'' அவர்கள் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக் களை அடுக்கிக்கொண்டே போகின்றார்கள். நான் ஒன்று மட்டும் கேட்கிறேன். கடைசியாகப் பேசும்போது இங்கே*** கள்ளச் சாராயத்தை வளர்க்கிறார்கள் என்று எந்த ஆதாரத்தோடு அவர்கள் சொல்கின்றார்கள்? அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது. ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுக்களை அவர் எந்த அடிப்படை யிலே எழுப்புகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுப்பராயன் அவர்கள் தயவுசெய்து ஸ்பெசிக்காகச் சொல்லுங்கள். எல்லோருமே எழுந்து பேசுவது என்றால் எப்படி? (குறுக்கீடு) உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள் என்றால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும். அவ்வளவு தான். போலீசார் தினசரி பிடித்துக்கொண்டுதான் இருக்கின் றார்கள். அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். உங்களுடைய தொகுதியில் என்ன நடக்கிறது என்று சொன்னால் நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு அது வாய்ப்பாக இருக்கும். ஒட்டுமொத்தமாக சொன்னால் பிரயோசனம் இல்லாமல் போய் விடும். உங்களுக்கும் பயன் இல்லை. அரசாங்கத்திற்கும் பயன் இல்லை.

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. அ. மலர்மன்னன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 5 லட்சம்பேர்கள் இந்தத் துறையிலே (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: யாரிடம் கேட்பது? இதை வந்து இங்கே வந்து சொல்கின்றீர்கள். ஸ்பெசிபிக்காக சொல்லுங்கள். நீங்கள் பேசுகின்றபோது சொல்லுங்கள், இப்படி இடையிலே எழுந்தால் எப்படி? அது சரியில்லை. திரு. சுப்பராயன் அவர்கள் பேசுகின்றார்கள், அவர் சொல்ல வேண்டும், 234 பேர்களும் எழுந்தால் என் கதி என்ன ஆகும்?

திரு.கே.சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி மெம்பர்கள் நான் ஏதோ ஆதாரம் அற்ற நிலையில் குற்றம் சாட்டியதாகக் குறிப்பிடுகிறார்கள். இங்கே இந்த கொள்கை குறிப்பிலே ஒரு சில வழக்குகள் போட்டு பிடிக்கப்பட்டு இருப்பதும், அரசு அதை பற்றி குறிப்பிட்டு முடிக்கின்ற நிலையிலே இதிலே குறிப்பிட்டிருக்கின்றது. அரசு என்ன சொல்கிறது என்றால் ''கள்ளச்சாராயம் காய்ச்சுதல், பிற மாநிலங்களிலிருந்து மதுவகைகளைக் கடத்துதல் ஆகிய குற்றங் களை திறம்படக் கட்டுப்படுத்த முடிந்தது'' என்று சொல் கிறது. தமிழ்நாட்டில் இந்த நிலைமை இருக்கிறது என்கிறது. இந்த நிலையை இஞ்சிற்றும் நம்மால் ஒப்புக்கொள்ள இயலாது என்பதால்தான் நடைமுறையில் எதிர்தரப்பிலே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் சரி, தமிழ்நாட்டின் தினசரி பத்திரிகைகளும் சரி. நான் முன்னாலேயே குறிப்பிட்ட விஷ சாராய சாவுகளும் சரி, தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சுவதும், விற்பதும் அவற்றால் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் தங்கு தடையின்றி நடை பெற்றுக்கொண்டிருக் கின்றது என்பது ஆதாரங்களே இல்லாமல் புரிந்துகொள்ளக் கூடிய விஷயம். இதற்கு ஆதாரம் தேடுவது பிரச்சினைக்கு தீர்வு சொல்வதிலிருந்து தப்பி ஓடுகின்ற நுட்பமான வழி முறையே தவிர, பிரச்சினையைச் சந்திக்கிற செயலற்ற நிலைமை தான் என்பதை இந்த வாதம் தெளிவாக்குகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 5.10]

டாக்டர் கே. [illegible]: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சுய தத்துவங்களையும், வேதாந்தங்களையும், [illegible] சித்தாந்தங்களையும் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். நாங்களும் அவற்றை ரசித்து கேட்டுக்கொண்டே இருக்கிறோம். அவர் [illegible] நடப்பதை எடுத்து சொல்லுவதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை, ஆனால் அவர் *** கொண்டு [illegible] படிக்கிறார்கள் என்று சொன்னார். அவர் சொன்ன வார்த்தையை

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

வாய்ப்பு பெற வேண்டும். மற்ற விஷயங்களைப் பற்றி அவர் சொல்வது பற்றி, விமர்சிப்பது பற்றி கவலையில்லை. ஒரு துறை மற்றும் இரண்டு பேரும் சேர்ந்து கொண்டு இப்படிப்பட்ட குற்றங்களை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது தவறு. அவர்களுடைய சுய சித்தாந்தம் இருக்கட்டும். மேடையிலே, சட்டமன்றத்திலே என்று சொன்னால் தெளிவாக எடுத்துச் சொல்லட்டும். அரசு தீர்வு காணும்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுகிற கட்சி நண்பர்களின் கவனம் இவ்வளவு பழுது கண்டிருப்பதற்கு நான் வேதனைப்படுகிறேன். நான் பேசியதை ப்ரொசீடிங்கில் பார்க்கலாம். அவசரப்பட்டு பிரச்சினைகளை வெளியிடுவது அவ்வளவு பொருத்தமுடையதல்ல. நான் பேசியதில் எந்த இடத்திலும் *** கொள்ளையடிக்கிறார்கள் என்கிற வார்த்தைகளை பயன்படுத்தவேயில்லை. ஒருவேளை நீங்கள் உங்கள் சொந்த அனுபவத்தால் அப்படி சொல்கிறீர்களா அல்லது அவர்கள் கொள்ளையடிப்பதைப் பார்த்து புரிந்து கொண்டு அப்படி சொல்கிறீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. நான் சொன்னது *** மாநிலம் முழுவதிலும்........ (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. சுப்பராயன் உட்காருங்கள். மாநிலம் முழுவதும் என்று சொல்லுகிறீர்கள். மாநிலம் முழுவதும் ** என்று வருகிறது. அப்படியானால்? காவல் துறையிலும் நல்லவர்களும் இருப்பார்கள். (குறுக்கீடு) ஒட்டுமொத்தமாக சொல்வதால் தான் பிரச்சினையே வந்திருக்கிறது. எல்லோரையும் ஒட்டுமொத்தமாக சொல்லக்கூடாது. அதனால் தான் அந்த வார்த்தைகளை நீக்கிவிடலாம். ஸ்பெசிபிக்காக இருந்தால் சொல்லுங்கள். நீங்கள் பேசுவதை தடுக்கவில்லை. ஆனால் போலீசார் எல்லோரையும் ஒட்டுமொத்தமாக சொல்லக் கூடாது. ** என்று சொன்ன வார்த்தை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறையினரைப்பற்றி, ஒட்டுமொத்தமாக தமிழக அரசிலே இருக்கிற காவல் துறையினரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். நம்முடைய காவல் துறைக்கு ஒரு தனி சிறப்பு உண்டு. உலகத்திலேயே நம்முடைய காவல் துறைக்கு தனிப் பெருமை உண்டு. குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன்னிலையிலே நிறுத்துவதிலும் உலகத்திலே நம்முடைய காவல்துறைக்கு இரண்டாவது இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதியிலே குற்றம் செய்கிறார்கள், எந்தப் பகுதியிலே உடந்தையாக இருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டுமே தவிர ஒட்டுமொத்தமாக சொல்வது தவறு. (குறுக்கீடு)

---

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. சுப்பராயன் உட்காருங்கள். ஒட்டுமொத்தமாக ஒரு துறையில் இருக்கிற எல்லோரையும் குற்றம் சொல்வது எப்படி சரியாகும். நடப்பதை சொல்வதில் தப்பு இல்லை. இன்னும் ஒன்றை சொல்கிறேன். 'தேக் சந்த் கமிட்டியின்' ஒரு ரிப்போர்ட் இருக்கிறது. அவர்கள் 22 மாநிலங்களிலும் தப்பு நடந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதற்காகவே 22 மாநிலங்களிலும் உள்ள போலீசாரும் அதற்கு உடந்தை என்று சொல்ல முடியாது. அதற்காகத்தான் சொல்கிறேன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே குறிப்பிட்டார்கள் காவல் துறையினரின் பெருமையைப் பற்றி. நான் ஒன்றும் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. ஆனால் காவல் துறையினரின் சிறுமைகளையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. இதே தமிழ்நாட்டில் பல்வேறு கற்பழிப்பு முயற்சி குற்றச்சாட்டு உட்பட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நிரூபிக்கப் பட்டிருப்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதுவும் இதே காவல் துறையினரைப் பற்றிதான். (குறுக்கீடு) காவல் துறை பற்றிய மானியத்திலே தான் இதைப் பேசவேண்டுமென்று சொல்கிற ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு பேசும்போது மட்டும் ஏன் ஒன்றும் சொல்லவில்லை? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. சுப்பராயன் உட்காருங்கள். ஸ்பெசிபிக் இன்ஸ்டன்சஸ் இருந்தால் சொல்லுங்கள். நீங்கள் சொன்ன இன்சிடென்ட் இன்னொரு மாநிலத்தில் இருந்தாலும் கூட அந்த மாநில போலீசாரும் இந்த செயலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது எப்படி சரியாகும்? ஒரு என்டையர் போர்ஸை பற்றியே தப்பு சொல்கிறீர்கள் என்று சொன்னால் அது சரியாக இருக்காது. முறையாக இருக்காது.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எல்லோரையும் சொல்லவில்லை பொதுவாக பெரும்பாலும் என்று தான் சொன்னேன் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிகழ்ச்சியைப்பற்றி சொன்னால் பரவாயில்லை. இந்த ஸ்டேஷன் என்று சொன்னால் பரவாயில்லை. ஆனால் ஒட்டுமொத்தமாக சொல்கிறீர்கள். அதனால்தான் நான் நீக்கினேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கற்பழிப்பு வழக்குகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் மேற்கு வங்கத்திலே அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றதாகவும் பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே ஒட்டுமொத்தமாக எல்லா போலீசாரையும் அப்படி சொல்வது சரியில்லை. எந்தப் பகுதியில் நடந்திருக்கிறது என்பதை அவர்கள் தெளிவாக எடுத்துச்சொல்ல வேண்டும்.

திரு கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்கத்தில் நடைபெறுவது முழுவதையும் நீங்கள் நிறைவேற்றிக் கொள்ளத் தயாராக இருக்கிறீர்களா? மேற்கு வங்க முதலமைச்சர் மத்திய அரசுக்கு எதிராக தன்னுடைய மாநிலத்திற்குத் தேவையான நிதியை வேண்டுமென்று மிகுந்த நெஞ்சுரத்தோடு சொல்கிறார்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: அவர்கள் நெஞ்சை நிமிர்த்தி நிதியை வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். மத்திய அரசு எங்களுக்கு வேண்டியதை அவர்களாகக் கொடுத்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே நாங்கள் நெஞ்சை நிமிர்த்த வேண்டிய தேவையில்லை. (மேசையை தட்டி ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் இப்படிச் சொன்னால் இங்கே பதில் சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். தமிழ்நாட்டிற்கு மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து அரிசி வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்த ஒரேயொரு முதலமைச்சர் இவர் தான். வேறு 22 மாநிலங்களிலே உள்ள எந்த முதலமைச்சரும் மத்திய சர்க்காரை எதிர்த்து உண்ணாவிரதம் இருக்கவில்லை. ஆகவே, அரசியலை விட்டு விட்டுப் பேசுங்கள்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெஞ்சை நிமிர்த்தத் தயாராக இல்லை, ** எனக்கு ஆட்சேபணையே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

திரு கே. சுப்பராயன்: ஆகவே, இங்கே குறிப்பிட்டிருக்கின்ற பல்வேறு விஷயங்களில் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற காவல் துறையின் பெரும்பகுதியினர்களால் இன்றைக்குக் கள்ளச் சாராயம் ஏன் தடுக்கப்படவில்லை என்பதற்குக் காவல் துறையின் நடவடிக்கைகள்தான் காரணமாக அமைந்திருக்கின்றன, காவல் துறை சரியாக்கப்படவில்லை. ஏனென்றால், காவல் துறை சரியாக்கப்பட வேண்டுமானால் ஆளுகின்ற கட்சி முதலிலே சரியாக்கப்பட வேண்டும். ஆளுகிற கட்சி சரியாக்கப்படாமல் காவல் துறை ஒரு போதும் சரியாக முடியாது. அடிப்படையிலே எடுக்கின்ற கொள்கை முடிவுகளின் பலவீனங்களுக்குக் காரணம் இந்தக் கொள்கை நிலையில்தான். ஆகவே, அவற்றை மாற்ற வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்; அடுத்து, பால் வளத்தைப் பொறுத்தவரையிலும்....

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுங்கட்சி சரியாக ஆக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஆளுங்கட்சியைச் சரியாக்குவதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சரவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் கட்சியினுடைய பொதுச் செயலாளர் என்றாலே இந்தக் கட்சி செம்மையாகச் செயல்படுகிறது என்றுதான் பொருள். அதனால்தான் மூன்று முறையும் தமிழகத்தினுடைய முதலமைச்சராக புரட்சித் தலைவரவர்களை இந்த நாட்டு மக்கள் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். அவர்களுடைய கட்சியை அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டும்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ரொம்பவும் மகிழ்ச்சி. இங்கே நம்முடைய அன்பிற்குரிய அமைச்சரவர்கள் நல்ல விஷயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நாங்கள் எங்கள் கட்சியைத் திருத்திக் கொள்வதற்கு என்றைக்குமே அஞ்சியது கிடையாது. ஒரு கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்ற முறையிலே எங்கள் தவறுகளை பகிரங்கப்படுத்தவும், எங்கள் பலவீனங்களைத் திருத்திக் கொள்வதற்கும் என்றைக்குமே நாங்கள் பின் வாங்கியது கிடையாது. எந்தத் தனிப்பட்ட நபர்களின் ஆணைக்காகவும் கட்டுப்படுகின்ற இயக்கம் அல்ல எங்கள் இயக்கம் என்பதால் ஒருபோதும் தவறுகளை மூடி மறைப்பதில்லை. இன்னொரு விஷயத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) நீங்கள் தொடர்ந்து இந்தக் குரலை எழுப்புகின்ற காரணத்தால் நம்முடைய அருமைச் சகோதரர் சமரசம் அவர்கள் சொல்வதைப் போல மற்ற விஷயங்களைப் பொதுக் கூட்டத்தில் மக்களுக்கு முன்னால் வைத்துக் கொள்ளலாம். இங்கே பால் வளத்தைப் பொறுத்த வரையில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை நான் குறிப்பிட விரும்புகிறேன். பால் வளத்தைப் பொறுத்தவரையில் என்ன நடந்திருக்கிறது என்றால் அம்பத்தூரிலேயும் சரி, அதே போல் மாதவரம் பால் பண்ணையிலேயும் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிவிக்க விரும்புகிறேன். மாதவரத்தைப் பொறுத்தவரையில்....

டாக்டர் கே.பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியிலே மக்கள் சக்தி படைத்த தனி மனிதர்கள் கிடையாது. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டும் அல்ல இந்தியத் துணைக் கண்டத்திலேயே மக்கள் சக்தி படைத்த மாபெரும் தலைவர் புரட்சித் தலைவர். அவருக்கு என்று தனி மரியாதை. தனி மனிதனுக்கு தனி உரிமை உண்டு.

திரு. கே. சுப்பராயன்: அத்தகைய சக்தி மிக்க தனி மனிதர்கள் உடல்சிலிர்ப்பின் பொழுது பல குதிரைகள் கீழே விழுவதை நாம் கடந்த காலத்திலே பார்த்தோம். நிகழ்காலத்திலேயும் பார்க்கலாம். அத்தகைய நிலைகளுக்கு நாங்கள் தயாராக இல்லை. மாதவரம் பால் பண்ணையைப் பொறுத்த வரையில் நான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) துணைத் தலைவரவர்களே, அவர்களுடைய தலையீட்டுக்குச் சரியானபடி பதில் சொல்ல வேண்டுமென்றால் என்னையும் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தலையீட்டை நீங்களே இன்வைட் பண்ணுகிறீர்கள். ஆளுங்கட்சியே மோசம் என்று சொல்கிறீர்கள். இங்கே இருப்பவர்கள் எதிர்கட்சியிலே இருப்பவர்களைப் பார்த்து மோசமானவர்கள் என்ற கடுமையான வார்த்தைகளை உபயோகித்தால் அதை ஒத்துக்கொள்வீர்கள் என்றால் இங்கேயும், அங்கேயும் பேசச் சொல்லலாம். (குறுக்கீடு) சபையை நடத்துவதற்கு உதவ வேண்டும். ஸ்பெசிபிக்காக சொல்ல வேண்டும். ஆனால் ஒட்டுமொத்தமாக சொல்லக் கூடாது. ஆளுங் கட்சி என்று சொல்கிறீர்கள். ஒட்டுமொத்தமாக இங்கே உறுப்பினர்கள் எழுந்து, தொழிற்சங்கத் தலைவர்கள் யாராவும் தவறு செய்கிறார்கள் என்று சொன்னால் நீங்கள் ஒத்துக்கொள்ளத் தயார் என்றால் நான் இதையும் அனுமதிக்கத் தயார். நீங்கள் ஸ்பெசிபிக்காகச் சொன்னால் பதில் சொல் வார்கள்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையைப் பொறுத்த வரையிலும் ஒரு பிரச்சினையை இங்கே நான் குறிப்பிட விரும்பு கிறேன். 1980–வது ஆண்டிலே 1,500 தொழிலாளர்கள் ஒரே ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்டார்கள்; வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். 1980–லே வேலை நீக்கம் செய்யப்பட்ட அவர்கள் வேலை பெறுகின்ற உரிமை என்பதை முற்றிலும் தடுத்து, கோர்ட்டுக்கு ரெபர் செய்கிற வாய்ப்பைக் கூட இந்த மாநில அரசாங்கம் தடுத்தது. அதற்குப் பிறகு தொழிற்சங்கத் தரப்பிலே ஹைக்கோர்ட்டுக்குச் சென்றதற்குப் பின்னாலே தான் அவர்களுக்கு ரெபரன்ஸ் கிடைத்தது. ரெபரன்ஸ் கிடைப்பதற்கே நீண்ட காலம் போராட வேண்டியிருந்தது. நீண்டகாலம் போராடியதற்குப் பின்னால், ரெபரன்ஸ் கிடைத்து 22 மாதங்கள் ஆகின்றன. இன்றைக்கு வரைக்கும் 1,500 பால் பண்ணைத் தொழிலாளர்களின் பிரச்சினை என்ன ஆயிற்று? பால் பண்ணைத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை இன்றைக்கு வரையிலே இந்த மாநில அரசு ஏன் ஏற்றுக் கொள்ள வில்லை.



(மாலை 5–20)

இதே மாநில அரசு சொல்கிறது; நீங்கள் தான் சொல் கிறீர்கள். நகரப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வழங்கப் படுகிற பாலுக்கு லிட்டருக்கு ரூ. 3.80 என்று இருந்ததை ரூ. 4.10 என்று ஆக்கினோம் என்று சொன்னீர்கள். விலையை ஏற்றியதற்கு ஒரு காரணத்தையும் சொல்லியிருக்கிறீர்கள். கொள்முதல் விலை உயர்ந்துவிட்டது; ஆகவே அரசு பால் விலையைக் கூட்டுகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அதே நேரத்தில் பால்வளத் துறையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் நிலைமையை எண்ணிப்பார்த்தீர்களா? பால் விலையை ஏற்றும்போது அந்தத் தொழிலாளர்களுடைய சம்பளத்தையும் உயர்த்த வேண்டாமா? அந்தத் தொழிலாளர்கள் சம்பளத்தைக் கூட்டிக் கேட்கும்போது அதற்கு ஏதாவது செய்தீர்களா? அவர்களுடைய 'ஒர்க்கிங் கண்டிஷனை இம்ப்ரூவ்' பண்ணுவதற்கு இந்த மாநில அரசு கிஞ்சிற்றும் கவலைப்பட்டிருக் கிறதா? அந்தத் தொழிலாளர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப் படுகிறது? அடிப்படைச் சம்பளம் 15 ரூபாய், 18 ரூபாய் தான். இது நியாயமான சம்பளம், அவர்களுடைய வாழ்க்கைக்குப் போதுமான சம்பளம் என்று நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? அவர்களுக்கு விலைவாசி ஏறவில்லையா? கொள்முதல் விலை உயர்ந்துவிட்டது என்று சொல்லி பால் விலையை ஏற்றிய நீங்கள் விலைவாசி ஏற்றத்தால் கஷ்டப்படும் தொழிலாளர்களுடைய சம்பளத்தைக் கூட்டிக்கொடுக்க முன்வரவில்லையே! இது என்ன நியாயம்? எந்த வகையிலும் இது நியாயமே அல்ல. இனி இப்படி நீங்கள் ஒருவழிப்பாதையாக ஆக்கிக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்கள் பிரச்சினையைப் பற்றி கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்னால் கூட அமைச்சருடன் பேசத் தயார் என்று தொழிற்சங்கத் தலைவர்கள் கடிதம் எழுதி யிருக்கிறார்கள். கோர்ட் தீர்ப்பு வருகின்றபோது ஒருவேளை அந்தத் தொழிலாளர்களுக்கு 'பேக் வேஜஸ்ஸோடு' மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்களைப் பணியிலமர்த்த வேண்டு மென்று தீர்ப்பு வந்துவிட்டால், மாதவரம் பால் பண்ணையை விற்றுத்தான் அவர்களுக்கு 'பேக் வேஜஸ்' கொடுக்க வேண்டும். தொழிற்சங்கத் தலைவர்கள் பேசத் தயார் என்று சொல்லியிருக் கிறார்கள். அப்படி இருக்கும்போது தீர்ப்பு வருவதற்கு முன்னாலே அவர்களை அழைத்துப் பேசி, ஒரு 'ஃபேர் டீல்' என்ற முறையிலே ஏன் முடிவு செய்யக்கூடாது? அரசாங்கம் ஏன் இதில் [illegible] காட்ட வேண்டும்? தொழிற்சங்கத் தலைவர்கள் எந்த நேரத்திலும் பேசத் தயார் என்று கடிதம் கொடுத்திருக் கிறார்கள். ஆனால் இன்று வரையில் அவர்களை அழைத்துப் பேசவில்லை; அதற்குரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

பால் தொழிலைப் பொறுத்தவரையில் மூன்று விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவதாக பால் உற்பத்தியாளர் நியாயம், இரண்டாவதாக பால் உபயோகிப்பாளர் நியாயம், மூன்றாவதாக பால்வளத் துறை ஊழியர்கள் நியாயம் ஆகிய மூன்று விஷயங்கள் இருக்கின்றன. நீங்கள் மூன்றாவது விஷயத்தைப் பார்ப்பதே இல்லை. உற்பத்தியாளர்களையும், உபயோகிப்பவர்களையும் பற்றி பேசுகிறீர்களே தவிர, இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற ஊழியர்களைப் பற்றி கவலைப் படுவதே இல்லை. அவர்களுடைய பிரச்சினைகளையும் நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டாமா?

இன்றையதினம் அம்பத்தூரிலும் சரி, மாதவரத்திலும் சரி, அந்தத் தொழிலாளர்கள் உரிமைக்காக உரிமையோடு போராட்டம் நடத்துகிறார்கள். தொழிலாளர் நன்மைக்காக எத்தனையோ சட்டங்களைப் போட்டிருக்கிறீர்கள். ஆனால் எந்தச் சட்டமும் நடைமுறையில் இல்லை. ஒரு தொழிலாளி 480 நாட்கள் பணியாற்றினால் அந்தத் தொழிலாளி நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டத்தை இந்த மாநில அரசு தான் நிறைவேற்றியது. இந்த மாநில அரசு கொண்டு வந்த சட்டத்தை இந்த மாநில அரசே நிறைவேற்றவில்லை என்றால் இந்த நாட்டிலுள்ள பிரஜைகள் எப்படி நிறைவேற்றுவார்கள்? நீங்கள் நிறைவேற்றிய சட்டத்தை நீங்களே அமல்படுத்தி, அந்த சட்டத்தை, இந்த மாநில அரசை கௌரவிக்க வேண்டாமா? 480 நாட்கள் வேலை செய்தால் பெர்மனன்ட் செய்ய வேண்டும் என்று சட்டத்தை இயற்றிவிட்டு, அதை அமல்படுத்தவில்லை என்றால் சட்டம் எதற்கு? சட்டம் என்பது வெள்ளைத் தாளில் அழகாக அச்சுக் கோர்த்து, அச்சடித்து பகிரங்கமாக போர்டிலே மாட்டிக்கொள்ளப்படுவதா? போட்டச் சட்டத்தை நிறைவேற்றவில்லை என்றால் சட்டத்தை ஏன் போட வேண்டும்? ஊருக்குக் காட்டிக்கொள்ளவா சட்டம் போட்டோம் என்று? இப்படிப்பட்டச் சட்டங்களை, நிறைவேற்றாத சட்டங்களை தயவுசெய்து போடாதீர்கள். தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற சட்டத்தை, தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற சட்டத்தைப் போடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் நிறைவேற்றிய ஷரத்தின்படி 480 நாட்கள் பணியாற்றிய அனைத்துத் தொழிலாளர்களையும் உடனடியாக பர்மனன்ட் செய்யுங்கள். அந்தத் தொழிலாளர்களின் சம்பளம், ஒர்க்கிங் கண்டிஷன் போன்ற பல்வேறு பிரச்சினைகள் பற்றி அவர்களுடைய தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுடைய நியாயமான உணர்வுகளை மதித்து, நிறைவேற்றிய சட்டத்தை ஒழுங்காக அமல்படுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



கால்நடை பராமரிப்பு சம்பந்தமாக நிறைய எழுதியிருக்கிறீர்கள். அதிலே ஒன்றும் குறையில்லை. நிறைய புள்ளி விவரங்களை அள்ளி, அள்ளி வீசியிருக்கிறீர்கள். ஆனால் இருக்கின்ற நிலைமை என்ன? ஆளுங்கட்சி உறுப்பினர் டாக்டர் கே. பி. இராமலிங்கம் அவர்கள் கூட பல கோரிக்கைகளை இங்கே சொன்னார்கள், அவர்கள் சொல்லும்போது 'மைல்டு' ஆகச் சொன்னார்கள். அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. பலமுறை அரசுக்கு எடுத்துச் சொல்லியும் அரசு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. எந்த கால்நடை மருத்துவமனையிலும், கால்நடை மருந்தகத்திலும் மருந்து கிடையாது. இப்படி இருந்தால் எங்கே கால்நடை வளரும்? கால்நடை மருத்துவமனைகளில் போதுமான மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை; ஊழியர்களுடைய பிரச்சனைகள் கவனிக்கப்படவில்லை. எப்படி கால்நடை சீரும் சிறப்புமாக வளம் பெறும்? மருந்து இல்லாமல், மருத்துவர் இல்லாமல், ஊழியர்களுடைய பிரச்சனைகள் கவனிக்கப்படாமல் எப்படி கால்நடை சிறப்பு வளர்ப்புத் திட்டம் உருப்படும்? உத்திராட்சக் கொட்டையை உருட்டி ஜெபம் செய்தால் பிரச்சனை தீர்ந்து விடுமா? நடைமுறைப்படுத்த வேண்டிய நெறிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டாமா? அவற்றை அரசு நிறைவேற்ற வேண்டாமா? அவற்றை நிறைவேற்றி இருக்கிறீர்களா? நிறைவேற்றவில்லை. நிறைவேற்றினால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து மருந்து வழங்கும் கொள்கையிலும் இருக்கின்ற நடைமுறையை மாற்ற வேண்டும். உதவி மருத்துவர்களுக்கு வழங்கப்படுவதுபோல் கால்நடை ஆய்வாளர்களுக்கும் ஆபத்து ஈட்டுப்படி, நோய் தாக்குவதிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள வழங்கவேண்டுமென்று கேட்டு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரப்பதிவு, பால்வளம் ஆயத்தீர்வை ஆகிய தமிழக அரசால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளை வரவேற்றுப் பேச விரும்புகிறேன்.

உலக வரலாற்றில் எத்தனையோ புரட்சிகள் தோன்றியுள்ளன. அவற்றில் காலங்கடந்த பின்னரும் நினைவில் நிற்பவை சில. அவற்றில் ரஷ்ய நாட்டில் 1917 ஆம் ஆண்டில் தோன்றிய ரஷ்யப் புரட்சி அல்லது அக்டோபர் புரட்சியைச் சொல்லலாம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதனையடுத்து 18 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழில் புரட்சியைக் குறிப்பிடலாம். அதேபோல் 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியப் பேரரசால் கொண்டுவரப்பட்ட பசுமைப் புரட்சியைக் குறிப்பிடலாம். ஆனால் இந்தப் புரட்சிகளை எல்லாம் விட தமிழ்நாட்டில் புரட்சித் தலைவர்

ஆட்சிக்காலத்தில் தோன்றி நடைபெற்றுக் கொண்டிருப்பது வெண்மைப் புரட்சி. ஆனால் ஒரு சில புரட்சிகள் நாட்டில் தோன்றும்போது சமூகத்தில் சில பிரிவினருக்கு சில சங்கடங்கள் தோன்றலாம். ஆனால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த வெண்மைப் புரட்சி எல்லா சமூக பிரிவினைச் சேர்ந்தவர்களுக்கும் சிறப்பினைத் தந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் தேனும், பாலும் ஓடியதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் புரட்சித்தலைவர் ஆட்சிக் காலத்தில்தான் வெண்மைப் புரட்சியால் தேனாறும், பாலாறும் ஓடுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பால்வளத்துறை சீரிய பொருளாதாரப் புத்துணர்வைப் பெற்றுள்ளது. கிராமப் புறங்களில் இருக்கின்ற சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற ஏழை விவசாயிகள் ஆகியோரின் வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும், நிரந்தர வருமானத்தை ஏற்படுத்துவதற்கும் உரிய வாய்ப்பினை இந்த பால்வளத்துறை தருகிறது.

உபரியாக உள்ள பாலை பல நகரங்களுக்கு அனுப்புவதால் நகரங்களில் பற்றாக்குறை குறைந்து அதில் அமைதி ஏற்பட்டுள்ளது என்று பல பொருளாதார நிபுணர்கள் பாராட்டி யிருக்கிறார்கள். எனது தொகுதியில் உள்ள பல குக்கிராமங்களில் இது பெரும் தொழிலாக வளர்ந்துவிட்டது. இங்கே நாம் பாலை பாலித்தீன் பைகளில் வழங்குவது போல் பல நகரங்களிலும் வழங்கிக்கொண்டிருக்கிறோம். தமிழகத்தில் பசுமைப் புரட்சி ஏற்பட்டிருப்பது போல் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் வெண்மைப் புரட்சி ஏற்பட்டு இருக்கிறது. காந்தியடிகள் இந்தியா, கிராமங்களில் வாழ்கின்றது என்று சொன்னார்கள். அதுபோல் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் கண்ட கனவு புரட்சித்தலைவர் ஆட்சிக்காலத்தில்தான் நிறை வேற்றப்படுகிறது. வெண்மைப் புரட்சியை உண்டாக்கி கிராமங்களில் உள்ள ஏழை, எளிய, சிறிய விவசாயிகள் பலன் அடைகிற வகையில் வெண்மைப் புரட்சி செய்தவர் புரட்சித் தலைவர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அதேபோல் பால்வளத்துறை இன்றையதினம் தன்னிறைவு கண்டு கொண்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் பால் வளத்துறை சீரிய முறையில் செயலாற்றி வருகிறது. விழுப்புரம், சின்னசேலம், சேத்தியாதோப்பு போன்ற இடங்களில் உள்ள பால் குளிரூட்டும் நிலையங்களிலிருந்து நாள் ஒன்றுக்கு, மாவட்டத்தில் வினியோகம் செய்தது போக, 4,000 லிட்டர் பால் அனுப்பப் படுகிறது. இப்படிச் செய்வதில் ஒரு சிறிய மாற்றத்தைச் செய்தால் பாலின் அடக்கச் செலவு சிறிது குறைய வாய்ப்பு ஏற்படும். தற்போது முகவர்கள் மூலமாக பாலை பால் குளிரூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் செல்வதற்குப் பதில் பால் வளச் சங்கமே அந்தப் பணியை ஏற்று நடத்தினால் செலவு குறையும்.



தற்போது சென்னை நகரில் இயங்கும் தானியங்கி நிலையங்கள் போல் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் இதுபோன்ற நிலையங்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் உபரியாக உள்ள பாலை பல மாநிலங்களுக்கு அனுப்பவும், பால்கோவா, வெண்ணெய் போன்ற பொருட்களைத் தயாரித்து அண்டை மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வெளிநாட்டிலிருந்து அதிக பால் கொடுக்கும் கறவை மாடுகளைத் தமிழகத்தில் புரட்சித்தலைவர் ஆட்சியில் இறக்குமதி செய்ததுபோல் பல இடங்களுக்கு அவற்றை வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

கால்நடை பராமரிப்புத் துறையில் தமிழ்நாட்டில் அண்மைக் காலங்களில் வியக்கத்தக்க வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டங்கள் சிறப்புற, கொடுக்கப்பட்டு வருகிற தொழில் நுட்ப ஆலோசனைகளை அனைவருக்கும் விரைந்து கொடுக்க ஆவன செய்யவேண்டும்.

(மாலை 5-30)

கோழிவளர்ப்பு, பசுந்தீவனம் பயிர் வளர்ப்பு, ஆடுகள் வளர்ப்பு போன்ற திட்டங்கள் வரும் நிதி ஆண்டில் இன்னும் பல கிராமங் களுக்கு விஸ்தரிப்பு செய்ய இருப்பதை வரவேற்கிறேன். இவை சிறந்த வெற்றியைத் தந்திட அதிகாரிகள் மக்களுக்கு உதவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வரும் நிதி ஆண்டில் இத்துறையின் மூலம் தீவிர கால்நடைகள் வளர்ப்பு, இதர இனங்கள், ஆடு அபிவிருத்தி, கால்நடை மருத்துவக் கல்வி, நோய் தடுப்பு போன்ற செயல் வகைகளுக்கு முன்பைவிட அதிக நிதி ஒதுக்கி உள்ளது. புரட்சித் தலைவரின் ஆட்சியில் மக்கள் மட்டும் மதிக்கப்படாமல். அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான துறைகளும் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதைக் காட்டுகிறது.

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறையின் இரு கண்களாக விளங்கி வருவது, தமிழ்நாடு இறைச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகம் ஆகும்.

தமிழ்நாடு இறைச்சிக் கழகம் 1979-ல் தொடங்கப்பட்டதால், நல்ல வளர்ச்சியை இன்னும் அடையவில்லை. அதன் வளர்ச்சித் திட்டத்திற்கு அரசு சில நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும். அதன்படி நல்ல இறைச்சியைப் பெற்று பதப்படுத்தி சென்னை நகரில் உள்ளது போல் டின்னில் அடைத்து, நாடு முழுவதும் விற்பனையைத் துவக்கலாம், கடலூர், கில்லை போன்ற இடங்களில் கிடைக்கின்ற இறால் போன்ற மீன்களை மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் விற்பனை செய்ய முன்வர வேண்டும்.

அரசின் குறிப்பிலே கூறியுள்ளபடி இறைச்சிக் கழகமும், கோழி வளர்ப்புக் கழகமும் இணைந்து செயல்பட உள்ளது வரவேற்கத்தக்க ஒன்று. இதில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தையும் உள்ளடக்கிச் செயல்பட்டால் நன்றாக இருக்கும் என்பது என் கருத்து.

மாநில அரசின் முக்கிய வருமான இனத்தில் வந்து சேருவது முத்திரைத்தாள் விற்பனை வருமானமாகும். இது ஓர் வரி அல்லாத இனம் மூலம் அரசுக்கு கிடைக்கும் வருமானம். ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன் அறிமுகமான இந்தத் துறை இன்னும் நல்ல முறையில் செயலாற்றி மாநில வருமானத்தைக் கூட்டலாம். இந்தத் துறையில் விற்பனையாளர்கள், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அதிக வருமானம் பெறுவதை அரசு தவிர்த்தால் பொதுமக்கள் பலன் பெறுவர். 1986-87-ம் நிதி ஆண்டில் சுமார் 130 கோடி ரூபாய் இத்துறை மூலம் அரசுக்கு, வருமானமாக வந்துள்ளது. இவ்வாண்டு இன்னும் கூடுதலாகக் கிடைக்கும் வகையில் அதிகாரிகள் அரசிற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பணப்புழக்கம் பெருகி வரும் இக்காலத்தில் இத்துறை மூலம் அரசு வருவாயைப் பெருக்குவது வரவேற்கக் கூடிய ஒன்று.

எனது சிதம்பரம் தொகுதியில் உள்ள பல கிராமங்களில் ஐ.சி.டி.பி திட்டமுறை பின்பற்றப்படுகிறது. எனது தொகுதியில் உள்ள கிராமாபுரம், சாக்காங்குடி ஆகிய ஊர்களுக்கு கால்நடை மருந்தகம் கட்ட வேண்டும்.

மதுவிலக்குக் கொள்கையை அமலாக்கியதின் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 240 கோடி இழப்பு ஏற்படுகிறது. இதை ஈடுகட்ட மத்திய அரசு மானியம் அளிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது விஷ சாராயம் காய்ச்சி விற்கப்பட்டு அதன் பலனாக நூற்றுக் கணக்கான பேர்கள் இறந்து விட்டதாகக் கூறினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு கள்ளச்சாராயத்தைத் தடுக்க கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தபோது, எதிர்கட்சிக்காரர்கள் அதை குண்டர்கள் சட்டம், நாடுகடத்தும் சட்டம் என்றெல்லாம் கூறினார்கள். வலது கம்யூனிஸ்டு உறுப்பினர் சுப்பராயன் தமிழக அரசிற்கு மதுவிலக்கிலே என்ன நிலையான கொள்கை இருக்கிறது என்று கேட்கிறார்கள். கேரளாவிலே, மேற்கு வங்கத்திலே ஒரே கொள்கையா பின்பற்றப்படுகிறது என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆயத்தீர்வை இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று புரட்சித் தலைவர் அரசு ஏழை எளிய மக்களுக்காக ஆட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலே கடுமையான மதுவிலக்கு சட்டங்களைக் கொண்டு வருகிறபோது ஏன் எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சிக்கின்றன?



சிதம்பரத்திற்கு கால்நடை மருத்துவமனை ஒன்று கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது.

கால்நடை மருத்துவர்கள் 20 ஆண்டுகள் பதவி உயர்வு இல்லாமல் இருந்தால் அசிஸ்டென்ட் டைரக்டராகப் பதவி உயர்வு அளிக்க வேண்டும்.

'ரிஸ்க் அலவன்ஸ்' கால்நடை ஆய்வாளர்களுக்கும் தரப்பட வேண்டும்.

சித்த வைத்திய மருத்துவர்களுக்கு வழங்கும் சம்பளம்போல் கால்நடை மருத்துவர்களுக்கும் வழங்கவேண்டும். இரண்டாவது சம்பளக் கமிஷனில் கால்நடை மருத்துவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கப்பட்டதாகவும், தற்போது அவர்களைவிடக் குறைவாக சம்பளம் இருப்பதாகவும் தெரிகிறது. சித்த வைத்தியர்களுக்கு இருப்பதைப் போன்ற சம்பளம் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

செங்கை மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதியில் உள்ள கொடுவல்லி என்ற கிராமத்தில் தமிழக அரசு துவக்கி இருக்கிற நவீன இறைச்சிக் கூடத்தின் பணி பாதியிலே நிற்கிறது. அந்தப் பணியை விரைவில் முடித்துக் கொடுத்தால் பல தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கும்.

என்னுடைய தொகுதியிலே புத்தூரிலே ஒரு சார்பதிவாளர் அலுவலகமும், பாளையங்கோட்டையில் ஒரு சார்பதிவாளர் அலுவலகமும் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

* திரு. பெ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு முத்திரைத்தாள், பால்வளம், கால்நடைகள் போன்ற மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை வைக்க விரும்புகிறேன்.

மதுவிலக்கு 1-1-87 முதல் ஓரளவிற்கு அமல் படுத்தப்பட்டிருக்கிறது, இது ஒட்டுமொத்தமாக வரவேற்க வேண்டிய ஒன்று. அதை சரியாக அமல்படுத்துகிறார்களா, சரியாக அமல் படுத்தவில்லையா என்றெல்லாம் சொல்வோமேயானால் அது எரிந்த கட்சி எரியாத கட்சி என்று லாவணிபாட வேண்டி வரும். அந்த சூழ்நிலைதான் ஏற்படும். ஒட்டு மொத்தமாக திட்டத்தின் நோக்கம் நாட்டிலே இருக்கக் கூடிய மக்கள் குடிப் பழக்கத்தை அறவே ஒழித்துவிட வேண்டும் என்பதுதான். அப்படித்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இருந்தாலும் இதனை அமல்

படுத்தும்போது ஒரு சில கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும். அதற்காக ஒரு வேளை மதுவிலக்கையே ரத்து செய்ய வேண்டி வரும் என்று சொல்வது, எதிர்க்கட்சி என்ற முறையில் பேசிக் கொண்டிருப்பது சரியாக இருக்காது.

1947 ஆம் ஆண்டிலிருந்து 20 ஆண்டுகள் வரை மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்தி, நீண்ட நெடுங்காலம் ஒரு தலை முறையே மது என்றால் எப்படி இருக்கும் என்று தெரியாது இருந்த நிலையில் இடையில் ஏற்பட்ட சில சந்தர்ப்பங்கள் காரணமாக கலைஞர் ஆட்சிக் காலத்திலும், பிறகு இந்த ஆட்சி காலத்திலும் மதுவிலக்கை தளர்த்த வேண்டி வந்தது.

சென்ற 1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே கூட 1 கோடியே 24 லட்சம் லிட்டர் சாராயம் வழங்கப்பட்டிருக்கிறது. திடீர் என்று 1 ஆம் தேதியிலிருந்து கள், சாராயம் இல்லை என்று சொல்வதால், லட்சக் கணக்கில் குடித்தவர்கள் எல்லாம் சாமியார்கள் ஆகிவிடுவார்கள் என்று அர்த்தம் இல்லை. அவர்களுக்கு இருக்கக்கூடிய பலவீனங்களைப் பயன் படுத்திக் கொண்டு நாட்டிலே இருக்கக்கூடிய சமூக விரோதிகள் கள்ளச் சாராயம் காய்ச்சி கொண்டுதான் இருக்கிறார்கள், அதில் காவல் துறையின் கண்காணிப்பு ஒருசில இடங்களில் சரியில்லை என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, காவல் துறையும் சேர்ந்துக் கொண்டே செய்கிறது என்று சொல்வது சரியாக இருக்காது. ஏனென்று சொன்னால் காவல்துறை என்று சொல்கிற போது, லா & ஆர்டர் பிரிவில்தான் அதிகமாக இருக்கிறார்கள். இப்போது மதுவிலக்கை அமல் செய்வதற்கு மதுவிலக்கு போலீசார் என்று தனியாக போலீசார்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த போலீசுக்கு இருக்கக்கூடிய பலம் மிக மிகக்குறை வானது அந்த பலத்தை வைத்துக்கொண்டு நிச்சயமாக தமிழ கத்தில் மதுவிலக்கை அமல்படுத்த முடியாது என்று தெளிவாகச் சொல்ல விரும்புறேன்.

நம்முடைய அரசுக்கு மதுவிலக்கை முழுமையாக அமுல்படுத்த வேண்டும், திறமையாக அமல்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால் மதுவிலக்கு போலீசுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். லா & ஆர்டர் போலீஸ் எங்கெங்கே இருக்கிறதோ அங்கேயெல்லாம் மதுவிலக்கு போலீசுடைய கிளையையும் உருவாக்க வேண்டும். ஏனென்று சொன்னால் என்னுடைய தொகுதியில் இரண்டு தாலூக்காக்களுக்கு ஒரு பிரிவு மதுவிலக்கு போலீஸ்தான் இருக்கிறது. அவர்களால் 15 நாளைக்கு ஒரு முறைகூட ஒரு கிராமத்திற்கு செல்லமுடியாது. ஏன் மாதத்திற்கு ஒரு முறைகூட செல்ல முடியாது. பெட்டிஷன் வந்தால் கவனிப்பார்கள் என்ற நிலைதான் இருக்கும்.

ஆகையினால் இப்போது மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமா வேண்டாமா என்று கேட்டால், காங்கிரஸ் கட்சியின் சார்பில் நிச்சயமாக தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என்று தான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதிலுள்ள



குறைபாடுகளைக் களைந்து தீர்க்கமாக அமல்படுத்த இன்னும் சொல்லப்போனால் ஓரளவிற்கு கட்டுப்பாடு என்று இல்லாமல் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும். ஏனென்று சொன்னால் சென்ற ஆண்டு 953 பிராந்திக் கடைகள்தான் இருந்தன. இந்த ஆண்டு 1012 பிராந்திக் கடைகளுக்கு லைசன்ஸ் கொடுத்து அதை 2 ஆயிரமாக ஆக்கியிருக்கிறோம். இது வந்து ஒரு வகையிலே நாம் சொல்லக்கூடிய கொள்கையை நாமே ஒரு புறத்தில் மறுப்பது போலத்தான் ஆகிறது. ஆகவே அடுத்த ஆண்டாவது இந்த பிராந்திக் கடைகளையும் மூடி முழுவதுமாக மதுவிலக்கை கொண்டு வருவீர்களேயானால் காங்கிரஸ் பேரியக்கம் உங்களுக்கு துணையாக இருக்கும்.

அதேபோன்று மதுவிலக்குக் கொள்கையை அமல் படுத்திய காரணத்தால் வேலை வாய்ப்பை இழந்திருக்கிற மரமேறும் தொழிலாளர்களுக்கு நிவாரணம் என்ற வகையில் 30 ஆயிரம் பேர்களுக்கு என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த 30 ஆயிரம் என்ற கணக்கு உங்களுக்கு எப்படி கிடைத்தது. 30,000 பேர் களுக்குத்தான் நிவாரணம் என்று நீங்கள் வைத்திருக்கிறீர்களா? அல்லது தமிழ்நாடு பூராவும் மரம் ஏறும் தொழிலாளர்களை கணக்கெடுத்து, மாவட்ட வாரியாக கணக்கெடுத்து அந்த அடிப்படையிலே சொல்லுகிறீர்களா என்று கேட்க ஆசைப்படு கிறேன்.

(மாலை 5-40)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே தமிழ்நாடு பூராவும் இருக்கிற அத்தனை தொழிலாளர் களையும், கடந்த காலத்தில் கள் இறக்கிய அனைத்துத் தொழி லாளர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, அத்தனைப் பேருக்கும் இந்த மானியத் தொகை, கடன் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கரும்புச் சாற்றிலிருந்து கிடைக்கும் மொலாசஸ் மூலமாக டிஸ்டில்லரி, எரிசாராயத் தொழிற்சாலைகள் ஆரம்பித்து இருக்கிறீர்கள். தமிழகத்தில் எட்டு எரிசாராயத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. என்ன காரணத்தாலோ இந்த எட்டு தொழற்சாலைகளும் தனியார் துறையில்தான் இருந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் இருக்கிற 24 சர்க்கரை ஆலைகளில் 13 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், பொதுத் துறையிலும் இருக்கிறபோது, அதிலேயிருந்து கிடைக்கிற மொலாசசைப் பயன்படுத்தி கூட்டுறவுத் துறையில் ஒரு எரிசாராயத் தொழிற்சாலை ஆரம்பித்தால் நன்றாக இருக்கு மென்று கருதுகிறேன். காரணம் எரிசாராயத் தொழிற்சாலை களை நடத்துபவர்கள் ஏராளமான பணத்தை இலாபமாகச் சம்பாதிக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்தால் ஒரு ஆண்டில் ஒரு கோடியை லாபமாக சம்பாதிக்கிறார்கள். இப்படி இலாபம் பெறுகிற தொழில்கள் பூராவையும் இந்த அரசு ஏதோ காரணத்தினால் தனியார்களுக்கு விட்டுவிட்டார்கள் என்ற எண்ணம் ஏற்படுகிறதாலே, அந்த மாதிரி இந்த அரசு

இல்லை, கூட்டுறவுத் துறையை ஊக்குவிக்கத்தான் போகிறோம்,
தனியார்களுக்காக நாங்கள் இல்லையென்று சொல்கிற அளவிற்கு
கூட்டுறவுத் துறையில் இருக்கிற ஏதாவது ஒரு சர்க்கரை ஆலையில்
இந்தத் தொழிற்சாலையை அமைக்க வேண்டும். உதாரணத்திற்கு
சொல்வதென்றால் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில்
டிஸ்டில்லரி அமைப்பதற்கு அனுமதி கேட்டு தமிழக அரசுக்கு
விண்ணப்பம் அனுப்பி இருக்கிறார்கள். என்ன காரணத்தாலோ
அந்த விண்ணப்பத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டு அது நிறுத்தி
வைக்கப்பட்டிருக்கிறது. இதை மறு பரிசீலனை செய்து, சேலம்
கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு எரிசாராயத் தொழிற்சாலை,
டிஸ்டில்லரி அமைக்கக்கூடிய அனுமதியை வழங்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முத்திரைத் தாள் பத்திரப் பதிவுச்சட்டத்தில்,
கைட்லைன்ஸ் வேல்யூ என்பது சட்டப்பூர்வமானதல்ல, அதுபற்றி
அங்கத்தினர்கள் பெரியதாக பேசவேண்டியதில்லை என்று
அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அமைச்சர் அவர்கள்
தெரிவித்தார் என்று நாங்கள் ஊருக்குப்போனால், நீங்கள்
என்ன பேசினீர்கள், அமைச்சர் என்ன சொன்னார் என்று தான்
கேட்பார்கள். ஆகவே எல்லா ஊர்களிலும் இந்தப் பிரச்சனை
பூதாகரமாக கிளம்பி இருக்கிறது. இதனை அனைத்து உறுப்பினர்
களும் சொன்னார்கள். இப்போது போடப்பட்டிருக்கிற கைட்
லைன்ஸ் வேல்யூ மிக அதிகமாக இருக்கிறது என்று தெரிவித்த
நம்முடைய ஆளும்கட்சி உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள்,
இது எதேச்சதிகாரமாக, ஆர்பிட்டரரியாகப் போடப்பட்டிருக்
கிறது என்று சொன்னார்கள். அந்தத் தோற்றத்தைத் தவிர்க்
கும் வகையில் இந்த கைட்லைன்ஸ் வேல்யூவை முழுமையாக
அப்படியே வைத்திருக்கப் போவதில்லை, மீண்டும் அதை மறு
பரிசீலனை செய்யப்போகிறோம் என்று சம்பந்தப்பட்ட
அதிகாரிகளுக்குத் தெரிவித்து, கைட் லைன்ஸ் வேல்யூ ஏற்கனவே
இருந்ததிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு தான் உயர்த்த
வேண்டுமே தவிர, இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்று
உயர்த்தக்கூடாது என்று அறிவுரை வழங்க வேண்டும். தேவை
யானால் ஒவ்வொரு ஆண்டிலும் 5 சதவீதம் 10 சதவீதம் என்று
வருடாவருடம் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திக் கொண்டு போ
னால் நிச்சயமாக கஷ்டமாகத் தோன்றாது. இந்த அடிப்படையில்
தகுந்த அறிவுரைகளை வழங்கி கைட் லைன்ஸ் வேல்யூவை பற்றி
தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால்
கைட் லைன்ஸ் வேல்யூ பற்றி சட்டப் பூர்வமாக இல்லையென்
றாலும் கூட ஊரில் இருக்கிற சப்-ரெஜிஸ்ட்ரார் கைட் லைன்ஸ்
பிரகாரம் ஸ்டாம்ப் கொடுத்தால்தான் பதிவு செய்வோம் என்று
சொல்லுகிற நிலை இருக்கிறது. மார்க்கெட் மதிப்பு என்று
ஒரு மதிப்பைச் சொல்லி அந்த மதிப்பை போடவேண்டுமென்று
வற்புறுத்துகிறார்கள். ஏனென்றால் ஒவ்வொரு சப்-ரெஜிஸ்ட்ரார்
அலுவலகத்திற்கும் நீங்கள் ஒரு டார்கெட் வைத்திருக்கிறீர்கள்.
ஒரு ஆண்டிலே இவ்வளவு ரூபாய்க்கான பத்திரத்தைப் பதிவு
செய்தாக வேண்டுமென்று வற்புறுத்துகிற காரணத்தால்,



எங்கெங்கு ஏமாளிகள், விவரம் தெரியாதவர்கள் கிடைக்கிறார்களோ அவர்களிடம் ஒன்றுக்கு இரண்டாக, மூன்றாக பத்திரத்தை மார்க்கெட் மதிப்பு என்று போட்டு பதிவு செய்து விடுகிறார்கள். அதனால் விவசாயிகள், சாதாரண நடுத்தர மக்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு உதாரணத்திற்குச் சொல்வதென்றால் எங்கள் ஊரில் ஐந்தாயிரம் ரூபாய்க்கு ஒரு நிலத்தை வாங்கியவருக்கு பத்திரம் பதிவதற்கு 10 ஆயிரம் ரூபாய்க்கு ஸ்டாம்ப் வாங்கி பதிய வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அந்தமாதிரி நிலைமை அங்கே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே கைட் லைன்ஸ் வேல்யூவை மீண்டும் பரிசீலனை செய்யும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஐ.டி.சி. என்பது பழைய காலத்தில் 50 ஆயிரம் ரூபாய் என்று இருந்தது. இப்போது ஒரு லட்சம் ரூபாய்க்கு கேட்டிருப்பதாக சொல்லியிருக்கிறீர்கள். சிலர் 2 லட்சமாக உயர்த்தினால் பரவாயில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடிய கருத்து. இதுகுறித்து விரைவில் உத்தரவை அனுப்பினால் மக்களுக்கு வசதியாக இருக்கும். ஏனென்றால் ஐ. டி. சி. வாங்குவதற்கு 200 ரூபாய், அல்லது 300 ரூபாய் என்று செலவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

என்னுடைய கபிலர்மலைத் தொகுதியில் கபிலர்மலை ஊராட்சி ஒன்றியப் பகுதி பூராவுக்கும் சார்பதிவாளர் அலுவலகமே கிடையாது. ஒன்றியம் பூராவுக்கும் இப்படி அலுவலகம் இல்லாமல் இருப்பது சரியாக இருக்காது. ஆகவே கபிலர் மலையிலோ அல்லது ஜேடர்பாளையத்திலோ ஒரு சார்பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பால் வழங்கு திட்டங்கள் என்ற அடிப்படையிலே ஒருசில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பால் வழங்கு திட்டம் என்பது தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே குஜராத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது ஸ்தானத்தை, மிகச் சிறப்பான இடத்தை வகிக்கக்கூடிய வகையிலே இருக்கிறது. தமிழகத்தில் இந்தத்திட்டம் மிகச் சிறப்பான முறையிலே செயல்படுகிறது என்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. இருந்தாலும்கூட இந்தத் துறை இன்னும் சிறப்பாக செயல்பட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏன் என்று சொன்னால், தமிழகத்திலே முதன் முதலாக ஆனந்த் மாதிரியான பால் பண்ணைகளை சேலம் மாவட்டத்திலே தான் ஆரம்பித்தார்கள். அப்படி ஆரம்பிக்கப்பட்ட பால் பண்ணைக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவராக இருந்து பணியாற்றிய அனுபவத்தின் காரணமாகச் சொல்கிறேன். முஸ்லீம்கள் எப்படி மெக்காவைப் பார்த்தார்களோ, கிருஸ்தவர்கள் எப்படி ரோம்நகர் சர்ச்சுகளைப் பார்த்தார்களோ, அதைப்

போல பால் உற்பத்தியாளர்களாகிய நாங்கள் எல்லாம் ஆனந்திலே இருக்கிற பால் பண்ணையை நேரிலே சென்று, அங்கே இருக்கக் கூடிய தேசிய பால் வள வாரியத்தினுடைய தலைவர் டாக்டர் கொரியன் அவர்களைச் சந்தித்து, அவர்களிடமிருந்து பல யோசனைகளை எல்லாம் பெற்று வந்திருக்கிறோம். அவர்கள் மிகச் சிறப்பான வேலைகளை எல்லாம் தேசிய பால் வள வாரியத்திலே செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், சமீபத்திலே தமிழகத்திலே இருக்கக்கூடிய பால்வளத் துறை எவ்வளவு மேம்பாடாக செயல்பட்டாலும் கூட, பால் வளத் துறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லாத காரணத்தால், சரியான பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தால், அவைகள் சரியாக செயல்படவில்லை என்று சொல்லி மூன்றாவது பால் உற்பத்தித் திட்டத்திலே தமிழகத்திற்கு கொடுக்கவேண்டிய 54 கோடி ரூபாயைக் கூட தற்போது நிறுத்தி வைத்திருப்பதாக கேள்விப் படுகிறோம்.

அதுமட்டுமல்ல, நேற்று முன்தினம் உலகவங்கிக் குழுவானது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அவர்கள், அமைப்பு ரீதியில் மாறுதல் தேவை என்றும், பால் வள நிறுவனம் சுய சார்புடன், சுதந்திரமாக செயல்பட, கிராம அளவில், மாவட்ட அளவில், சம்மேளன அளவில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்ற யோசனையை தெரிவித்திருக்கிறார்கள். அத்தகைய யோசனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த யோசனைகளை ஏற்றுக்கொள்கிற வகையில் இந்த அவையிலே ஒரு அறிவிப்பைக் கொடுப்பார்களானால், நிச்சயமாக பால் உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கிற லட்சக்கணக்கான பால் உற்பத்தியாளர்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைவார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல் இன்றைக்கு பால்வளத்துறையில் இரண்டு சிக்கல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் சிக்கல்கள் இருக்கின்றன. பால் வளத்துறையானது—பால் உற்பத்தியாளர்களுக்கு—பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு–நல்லது செய்வதற்காக இருக்கிறார்களா? அல்லது கூட்டுறவுத்துறையிலே பால் வளத்தை நடத்தவேண்டும் என்று சொல்கிறார்களா என்று தெரியவில்லை. இரண்டு பேர்களுக்கும் மோதல். பல்வேறு ஒன்றியங்களிலே, ஒன்றியத்தினுடைய அதிகாரிகளுக்கும், பால் வளத் துறையிலே இருக்கக்கூடிய டி. ஆர். (டயரி) என்பவருக்கும் மோதல் நடந்து கொண்டிருக்கிறது. இந்த மோதலைத் தவிர்க்கக் கூடிய வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய ஒன்றியத்தினுடைய கட்டுப்பாட்டில்தான் அந்த மாவட்டத்தில் இருக்கும் துணைப் பதிவாளர் (பால்வளம்) அவர்கள் செயல்பட வேண்டும் என்று சொல்லி ஒன்றியத்தினுடைய யோசனையை அனுசரித்துதான் நடக்கவேண்டும் என்று உத்தரவிடவேண்டும்.

அதைப்போல பால்வளத்துறையைப் பொறுத்தவரைக்கும், கிராமத்திலே இருக்கக்கூடிய லட்சக்கணக்கான விவசாயிகள் கொடுக்கக்கூடிய பாலினுடைய விலையை, கடந்த இரண்டு



ஆண்டுக்காலமாக உயர்த்தாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல்வேறு மாநிலங்களில் ஒரு கிலோவுக்கு 55 ரூபாயிலிருந்து 60 ரூபாய் வரையில் கொடுக்கிறார்கள்? ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், 1 கிலோ பேட் கொழுப்புச் சத்துள்ள பாலுக்கு 46 ரூபாய்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இந்த வறட்சிக் காலத்திலே இது கட்டுப்படியாகாது. மாடுகளுக்கு சரியான தீவனங்கள் இன்றி விவசாயிகள் அவதிப் பட்டுக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து, குறைந்தபட்சம் மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல, 55 அல்லது 60 என்று இல்லா விட்டாலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு கிலோ பேட் கன்டென்ட் உள்ள பாலுக்கு 50 ரூபாய் என்று அறிவிப்பார்களானால் தமிழகத்தில் இருக்கக்கூடிய லட்சக்கணக்கான விவசாயிகள் மகிழக்கூடிய வாய்ப்பாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களோடு கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியங்கள்-அதாவது பால் வழங்கு சங்கங்கள் உள்ளன. அதற்காக தனியாக ஒன்றியங்கள் தேவையில்லை. கூட்டுறவு உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தோடு இந்த ஒன்றியத்தையும் ஒன்றாகச் சேர்த்து, இணைத்துவிடலாம்.

அதுபோன்று சேலம் மாவட்டத்திலே அதிகமாக கோழி உற்பத்தி செய்யப்படுகிற காரணத்தால், இரண்டொரு வார்த்தைகள் அதைப் பற்றிச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் இந்தியாவிலேயே தமிழகத்தில் சேலம், பெரியார், மற்றும் கோவை மாவட்டங்களில்தான் ஏராளமான கோழிப் பண்ணைகள் இருக்கின்றன. அங்கே இருக்கிற விவசாயிகள், வானம் பொய்த்து விட்ட காரணத்தால், இந்தக்காலங்களில், மாற்றுத் தொழிலாக இதை கருதிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமயத்தில் தமிழகத்தில் இருக்கக்கூடிய கோழி உற்பத்தியாளர்கள் எல்லாம் ஆந்திராவிலே உள்ள, அங்கிருந்து வரக்கூடிய முட்டைகளின் விலையோடு போட்டி போட முடியாத நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எனவே இதைத் தவிர்க்கக்கூடிய வகையில், தமிழகத்திலே இருக்கக்கூடிய கோழிப் பண்ணையாளர்களுக்கு சலுகை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே சென்ற ஆண்டு கோழித் தீவனத்திற்கான சேல்ஸ் டாக்சை 3 சதவீதம் குறைத்து உதவி செய்திருக்கிறார்கள். இதிலே இன்னும் 2 சதவீதம் விற்பனை வரி இருந்து கொண்டிருக்கிறது. இந்த 2 சதவீத வரியை நீங்கள் ரத்து செய்து, கோழிப் பண்ணையாளர்களுக்கு ஒரு நல்ல ஆதரவான செய்தியை அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

(மாலை 5.50)

திரு. கு. வடிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய நகராட்சிகள், ஊராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றின் சொத்து வரியினுடைய உயர்வை ரத்து செய்து உத்திரவு பிறப்பித்த நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் 4½ கோடி மக்களுடைய தலைநாயகர் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியின் மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியை அவருடைய பொற்பாதங்களுக்கு காணிக்கை ஆக்கி, மாநில ஆயத் தீர்வை, முத்திரைத் தாள்கள், பால் வழங்கும் திட்டம், கால்நடைகள் வளர்ப்பு ஆகிய மானிய கோரிக்கைகள் மீது என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

1977 ஆம் ஆண்டு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி பொறுப்பை ஏற்ற உடன் தமிழகத்தில் தீவிரமாக மது விலக்கை அமல் செய்யவேண்டும் என்பதற்காக கடுமையான சட்டத்தை கொண்டு வந்து தீவிரமாக அமல் செய்தார்கள். அப்படி அமல் செய்த நேரத்தில் ஆயிரக்கணக் கான வழக்குகள் போடப்பட்டன. கள்ளச் சாராயம் காய்ச்சிய வர்களையும், குடித்தவர்களையும் ஆயிரக்கணக்கில் கைது செய்து வழக்குகள் தொடரப்பட்டன. அவ்வளவு தீவிரமாக அமல் செய்த நேரத்தில் தமிழகத்தில் இருக்கின்ற பெரும்பான்மையான தாய் மார்கள் புரட்சித் தலைவர் அவர்களிடம் சென்று கண்ணீர் விட்டு எங்களது கணவன்மார்கள் எல்லாம் சிறையில் வாடு கிறார்கள், எங்களுடைய குடும்பம் பட்டினியால் வாடுகிறது, ஆகவே நீங்கள் அவர்களை எல்லாம் விடுதலை செய்யவேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, பொதுமக்களுடைய கோரிக்கையை ஏற்றுத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மது விலக்கை தளர்த் தினார்கள், அது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்ப ராயன் அவர்களுக்கு தெரியுமோ என்னமோ தெரியவில்லை. (குறுக்கீடு)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சபைக்கு தவறான தகவலைச் சொல்கிறார். தமிழ்நாட்டு பெண்கள் எல்லாம் சேர்ந்து கள், சாராயக் கடைகளை திறக்கச் சொன்னார்கள் என்று அவர் சொல் கிறார்

திரு. கு. வடிவேல்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அப்படி சொல்லவில்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் அப்படி சொல்ல வில்லை என்று சொல்கிறார். ஆகவே அதை விட்டுவிடுங்கள்.



டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டிலே ஒரு பகுதியிலே அப்படி நடந்தது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் அப்படி சொல்லவில்லை என்று சொன்னால் விட்டுவிட வேண்டும். தயவு செய்து இரண்டுபேரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. கு. வடிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மதுவிலக்கை தீவிரமாக அமல் செய்யும் போது அதனால் நம்முடைய தமிழக அரசுக்கு ஏறத்தாழ 150 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. மதுவிலக்கை தீவிரமாக அமல் செய்யவேண்டும் என்று நம்முடைய எதிர்கட்சி வரிசையில் அமர்ந்து இருக்கிற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தீவிரமாக கேட்டுக்கொண்டார்கள். இந்த நேரத்தில் நான் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்ளுவது எல்லாம் இந்திய துணைக் கண்டத்திலே காந்தியினுடைய கொள்கையை மது விலக்கை தமிழகத்தில் தீவிரமாக அமல் செய்தவர் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. அதே நேரத்தில் நான் உங்களை கேட்டுக் கொள்ளுவது எல்லாம் தயவு செய்து மத்திய அரசிடம் சொல்லி அதனால் ஏற்படும் இழப்பான ஏறத்தாழ 150 கோடி இழப்பை ஈடு செய்வதற்கு நீங்கள் ஏதாவது உதவியாக இருப்பீர்களானால் நிச்சயமாக தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்கு ஒரு நல்ல காரியம் செய்ததாக எடுத்துக்கொள்ளலாம்.

அந்த அடிப்படையில் பார்க்கும்போது தமிழகத்தில் தீவிர மாக மது விலக்கை அமல் செய்யும் போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் ஒன்றை சொன்னார்கள். காவல் துறையும் ஒன்று சேர்ந்து செய்கிறது என்று சொன்னார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்திச் சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழ்நாடு காவல் துறையை தயவுசெய்து புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். அவர்களுடைய சிறப்பு என்ன என்று தெரியாமல் பேசுகிறார்கள். இன்றையதினம் கூட பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆந்திர மாநிலத்தி லிருந்து தமிழ்நாட்டுக்கு கள்ளச் சாராயம் கடத்திய காரையும், அதை ஓட்டியவரையும் கைது செய்து வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது என்று இன்றையதினம் பத்திரிகையில் பிரசுரமாகி யிருக்கிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மட்டும் அல்ல, இந்த மது விலக்கையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நல்லமுறையில், சரிய முறையில், நிர்வாகம் செய்து வருகிறார்கள்.

இந்த மதுவிலக்கு துறையை பொறுத்தவரையில் ஏற்கனவே சென்ற முறைகள், சாராய கடைகள் ஏலம் விடப்பட்டு இன்னும் எத்தனையோ பேர் அரசுக்கு செலுத்தவேண்டிய தொகையை செலுத்தாமல் பாக்கி இருக்கிறது. அப்படி அரசுக்கு தரவேண்டிய பாக்கியை யார் யார் வைத்து இருக்கிறார்கள் என்ற கணக்கை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்து அரசுக்கு வரவேண்டிய பணத்தை வசூல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதையடுத்து பத்திரப் பதிவு சம்பந்தமாக பேசவேண்டிய ஒரு சூழ்நிலையில் இருக்கிறேன். தற்போது நம்முடைய அரசாங்கம் 'கைடுலைன்' ஒன்று போட்டு, ஒவ்வொரு சொத்தினுடைய மதிப்பு, ஒவ்வொரு சர்வே எண்ணினுடைய, நிலங்களின் விஸ்தீரணத்தை வைத்து, அந்த சொத்தினுடைய மதிப்பை உயர்த்தியிருக்கிறார்கள். அந்தச் சொத்தினுடைய மதிப்பை உயர்த்தியது தவறு என்று சொல்லவில்லை. உயர்த்துவது என்றால் ஒரேயடியாக உயர்த்திவிட்டால் அதை விற்பவர்கள் விற்கவோ, வாங்குபவர்கள் வாங்கவோ முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய தொகுதியில் வேட்டமங்கலம் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமம் உண்மையிலேயே வறட்சியான கிராமம். அந்தக் கிராமத்தில் 'கைடுலைன்' போட்டு உயர்த்துவதற்கு முன்பாக ஒரு ஏக்கரினுடைய மதிப்பு ரூ. 10,000-ஆக இருந்தது. 'கைடுலைன்' போட்ட பிறகு, அதனுடைய மதிப்பு ரூ. 75,000-ஆக மதிப்பிடப்பட்டு உயர்ந்திருக்கிறது. அந்த நிலத்தை ஒருவர் விற்க வேண்டுமென்று சொன்னால், அதை வாங்குவதற்கு ஆள் கிடையாது. அப்படியே வாங்கினாலும் நிலத்தினுடைய விலையைவிட பத்திரமும், பதிவுக் கட்டணமும் மிக அதிகமாக இருக்கிறது. தயவுசெய்து அமைச்சரவர்கள் இதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் இந்த நிலத்தை வாங்கக்கூடியவர்கள் பத்திரம் வாங்கி எடுத்துச்சென்றால், நிலத்தினுடைய மதிப்பு ரூ. 5,000 என்றால், அதற்கு அங்கேயுள்ள சார் பதிவாளர் அதனுடைய மதிப்பு ரூ. 75,000 அதற்குரிய முத்திரைத் தாள்கள் பத்திரப் பதிவுக் கட்டணமும் கட்டினால் தான் பதிவு செய்ய முடியும் என்று கூறுகிறார். ஒரு சாதாரண ஏழை விற்கச் சென்றால் அதனுடைய மதிப்பு ரூ. 50,000-க்குச் சென்றுவிட்டால், அதற்கு 'இன்கம் டாக்ஸ் கிளியரன்ஸ் சர்டிபிகேட்' வாங்க வேண்டும். அந்த நிலத்தை விற்கக்கூடியவன் ஆடிட்டரிடம் சென்று, அதற்குரிய தொகையைக் கட்டி மனு கொடுத்து வாங்கவேண்டுமென்று சொன்னால். அதற்கு ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் ஆகும். அதற்காக குறைந்தது ரூ. 500-ஆவது செலவு செய்யவேண்டும். ஆகவே 'கைடுலைன்' என்பதைப் பொறுத்தவரையில் அதை மறுபரிசீலனை செய்து அதைக் குறைக்கவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



என்னுடைய தொகுதியில் வேலாயுதன்பாளையம் என்ற கிராமத்தில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் இருக்கிறது. அதற்குச் சொந்தக் கட்டிடம் கிடையாது, அந்தச் சார் பதிவாளர் அலுவலகம் புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கென்று நிரந்தரமான ஒரு கட்டிடத்தை, அரசு நிலத்திலோ அல்லது அரசே கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்பைப் பொறுத்தவரையில் கரூருக்கு அருகில் கோடாங்கிப்பட்டி என்ற ஊரில் கால்நடை மருத்துவமனை ஒன்றை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டில் ஆத்தூரில் புரட்சித் தலைவர் அவர்களும், அமைச்சரவர்களும் கால்நடை மருத்துவமனை ஒன்றை கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே அதற்காக புரட்சித் தலைவர் அவர்களையும், நம்முடைய அமைச்சரவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு கோடாங்கிப்பட்டியிலே கால்நடை மருத்துமனை ஒன்றை கட்டிக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாடுகளைப் பொறுத்தவரையில் கேரள மாநிலத்திற்கு அதிகமான மாடுகளை அடிப்பதற்காக எடுத்துச்செல்கிறார்கள். உண்மையிலேயே உழவுக்கு மாடுகள் இப்போது கிடைப்பதில்லை. தயவுசெய்து மாடுகளை கேரள மாநிலத்திற்கு அனுப்புவதைத் தடுத்து, இங்கே நம்முடைய மாநிலத்தில் எந்தெந்த அளவிற்கு மாடுகளை பயன்படுத்த முடியுமோ அந்த அளவில் உழவிற்காக பயன்படுத்தட்டும். உழவுக்குப் பயன்படாத மாடுகளை வேண்டுமானால் எடுத்துச்செல்லட்டும், பயன்படும் மாடுகளை எடுத்துச் செல்வதை தடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பால் உற்பத்தித் திட்டத்திலே மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. ஆகவே திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தனிக் கவனம் செலுத்தி, பால் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். கிராமங்களில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்க வேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டால் அந்த கிராமங்களுக்கு வாகனங்கள் வராது என்று சொல்கிறார்கள். அந்த குறைபாடுகளைப் போக்கி, நிவர்த்தி செய்து, அந்த கிராமங்களிலேயே சென்று, பால் எடுக்கக் கூடிய அளவிற்கு, அந்த வாகனங்கள் செல்கின்ற அளவிற்கு நிலைமையினை உருவாக்கவேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பளித்த அவைத்தலைவருக்கு நன்றி கூறி, முடிக்கிறேன், வணக்கம்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கின்ற சில கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக எனக்கு முன்பு பேசிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு செய்தி என்று கூறினார். தமிழகத்திலே முதன் முதலாக இந்த அரசுதான் மது விலக்கினைக் கொண்டு வந்ததுபோல் கூறினார். இந்த அரசுக்கு குறிப்பாக அமைச்சருக்கு அதிலே பூரண நம்பிக்கை உண்டு என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அந்த வகையிலே, பகுதி மதுவிலக்கை அமல்படுத்தியிருக்கிறது. ஆனால் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பிலே, 1937 ஆம் ஆண்டிலே தேசப்பிதா காந்தியின் அழைப்பிற்கிணங்க, சென்னை மாகாணத்தில் ஒரு பகுதியிலே மதுவிலக்குக் கொண்டுவரப்பட்டது என்பதாக வரலாற்றிலேயே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதை அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்று நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[இரவு 6-00]

அடுத்தபடியாக, இங்கே கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகின்றது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது என்று நம்புகிறேன். இந்த கொள்கைக் குறிப்பிலே 1987 ஆம் ஆண்டில், அதாவது 28-2-1987 வரை 19 பேர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருப்பதாக இந்த கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் உண்மையிலேயே வேதனையோடு குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புவதெல்லாம், ஊருக்கு ஊர் என்பது மட்டுமல்ல, வீதிக்கு வீதி கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகின்றது. இந்த இரண்டு மாத காலத்தில் 19 பேர்கள்தான் இந்த கள்ளச் சாராயச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்று சொல்வது மிகவும் வேதனைக்குரிய ஒன்று. ஆகவே, காவல் துறையினரை முடுக்கிவிட்டு, இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் யாராக இருந்தாலும் எப்படிப்பட்ட பெரிய மனிதர்களாயிருந்தாலும் கண்டிப்பாக அவர்களை இந்தச் சட்டத்தின் பிடியில் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தின் முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு, ஏழை எளியவர்கள் குடிக்கக் கூடாது, அவர்களுடைய வாழ்க்கை, உடல்நலம் பாதிக்கக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் கள், சாராயக் கடைகளை மூடியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அதே நேரத்தில் பிராந்தி கடைகளினுடைய நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்; சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமானால், ஈரோட்டிலே இந்த மதுவிலக்கிற்கு முன்பாக 40 கடைகள் இருந்தன. அந்த 40 கடைகளில் தினம் ரூ. 1,000, ரூ. 1,500 கூட வியாபாரம் இல்லாத நிலை அப்போது இருந்தது. ஆனால், இன்று நூற்றுக்கு மேற்பட்ட கடைகள் இருந்து, ரூ. 1,000, ரூ. 1,500 கூட வியாபாரம் இல்லாத நிலை





மாறி, இன்று ரூ. 3,000, ரூ. 4,000 அளவிற்கு வியாபாரம் ஆகிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, ஏழைகள் குடிக்காமல் இருக்கிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்? ஆகவே, அருள்கூர்ந்து, இந்த மதுவிலக்கை முழுமையாக அமலுக்கு கொண்டு வரவேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். There should be a total prohibition.

அடுத்தபடியாக, இங்கே பால் பண்ணை வளர்ச்சித் துறையைப் பற்றி கபிலர்மலை சட்டமன்ற உறுப்பினர் அருமை நண்பர் செங்கோட்டையன் அவர்கள் கூறியதுபோல், பால்வள பண்ணை நல்லமுறையில் தமிழகத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. அது கண்டிப்பாக பாராட்டத்தக்க ஒன்று என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால், பல குறைபாடுகள் அங்கே இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், நேஷனல் டைரிடெவலப்மெண்ட் போர்டு ஃப்ளட் ஃபேஸ் 1, ஃப்ளட் ஃபேஸ் 2 ஆகிய நிலைகளில் இந்த பால்வளத் துறைக்கு நிறைய பணம் தந்திருக்கிறது. ஆனால், மூன்றாவது ஃபேஸ் கால கட்டத்தில், நிதி உதவி தரப்பட வேண்டுமென்றால் கண்டிப்பாக இங்கே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தி இருப்பதாக ஒரு செய்தி. ஆகவே, நான் அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த பால்வளப் பண்ணைக்கு கண்டிப்பாக தேர்தல் நடத்த வேண்டும். இன்னும் சொல்லப்போனால், தேர்தல் நடத்துவதற்கு அஞ்சத் தேவையில்லை. அப்படித் தேர்தல் நடத்தினால், கண்டிப்பாக நீங்களும், நாங்களும்தான் இந்த நிர்வாகப் பொறுப்பை வகிக்கின்ற சூழ்நிலை நாடு முழுவதும் இருக்கிறது. ஆகவே, கண்டிப்பாக இந்தத் தேர்தலை கொஞ்சங் கூட அச்சம் இல்லாமல் நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, அருமை நண்பர் பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்னுசாமி அவர்கள் பேசும்போது, ஈரோடு மாவட்டத்து பால்பண்ணை நஷ்டத்தில் நடப்பதாகச் சொன்னார்கள், 2 கோடி ரூபாய் நஷ்டத்திற்கு இந்த பால் பண்ணை உள்ளாகியிருக்கிறது. இந்த நஷ்டம் எப்படி வந்தது என்பதைப்பற்றி இந்த அரசு ஒரு குழுவை அமைத்து ஆராய வேண்டும். வருகின்ற காலத்தில் இப்படிப்பட்ட நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்கு அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கண்டிப்பாகத் தேவை என்பதை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்,

அடுத்தபடியாக, கால்நடை பாராமரிப்புத் துறையைப் பற்றி சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். முதலில் என்னுடைய தொகுதியாகிய பெரியார் மாவட்டத்தில், சத்திய மங்கலம் மலைப்பகுதியில் குத்தியாலத்தூர், குன்றி, கூத்தம் பாளையம் பஞ்சாயத்துக்களில் உடனடியாக கால்நடை

மருத்துவக் கிளை நிலையங்களை அமைத்தாக வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏறத்தாழ 25,000-க்கு மேற்பட்ட கால்நடைகள் அந்தப் பகுதியில் இருக்கின்றன. அது ஒரு மலைப்பிரதேசமாக இருப்பதினால், அங்கே சாலை வசதி இல்லை. சாலை வசதி வேண்டும். அங்கே இருக்கின்ற மக்கள் ஏழைகள். அவர்கள், தங்கள் கால்நடைகளைக் கீழே கொண்டு வர வேண்டுமென்றால். சாலை வசதி இல்லாத காரணத்தால், அந்த மிருகங்களை அவர்கள் கீழே கொண்டு வருவதற்குள் இறந்து விடக்கூடிய அபாய நிலைமை இருக்கக்கூடிய காரணத்தினால், நான் கூறிய அந்த மூன்று பஞ்சாயத்துக்களிலும் கிளை நிலையங்களை அமைத்தாக வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

கிளை மருத்துவ நிலையம் ஒன்றைக் கட்டுவதற்காக, கெம்பநாயகன் பாளையத்தில் ஒரு ஏக்கரா நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் அதற்கான வேலைகளைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக இந்தக் கால்நடை ஆய்வாளர்களைப் பற்றி சில கருத்துக்களை கூறித்தான் ஆகவேண்டும். எனக்கு முன்னாலே பேசிய அத்தனை உறுப்பினர்களும் இதைப்பற்றிச்சொன்னார்கள். இருந்தாலும் நானும் அதை வலியுறுத்த விரும்புகிறேன். இந்தக் கால்நடை ஆய்வாளர்கள் தமிழகம் முழுவதும் 3,400 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள்மீது இந்த அரசுக்கு ஒரு காழ்ப்புணர்ச்சி இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுடைய நிலையைப் பார்த்தால் மிகப் பரிதாபமான நிலையாக இருக்கிறது. 33 ஆண்டுகளுக்கு முன்பாக ஆய்வாளர் பதவி என்று ஏற்படுத்தப்பட்டது. ஆனால் 33 ஆண்டுகளுக்கு முன்பாக ஆய்வாளராக பதவி ஏற்றவர் 33 ஆண்டுகள் கடந்தும் இன்னும் ஆய்வாளராகத்தான் இருக்கிறார். இது எவ்வளவு பெரிய கொடுமை என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். போலீசிலே ஒரு சாதாரண காவலராகச் சேர்ந்தவர் இன்ஸ்பெக்டராக உயர்வதற்கு வழியுண்டு, மார்க்கம் உண்டு. அதே போல வருவாய்த்துறை ஊழியர் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியாக உயர்வதற்கு வாய்ப்பு உண்டு. மார்க்கம் உண்டு. ஆனால், இவர்கள் ஆய்வாளராக கடைசிவரை இருக்கவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஆகையினால், அவர்களுக்குக் கண்டிப்பாக பதவி உயர்வுகள் கொடுத்தாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரிஸ்க் அலவன்ஸ். இதைப்பற்றி ஏறத்தாழ அத்தனை உறுப்பினர்களும் பேசியதிலிருந்து இது எவ்வளவு முக்கியமான ஒன்று, எப்படி இது கட்டாயமாக அவர்களுக்குத் தந்தாக வேண்டும் என்பதில் அவர்கள் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள் என்பதை அது புரியவைக்கும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே கால்நடை உதவி மருத்துவர்களுக்கு இந்த



அரசினர் ஆபத்து ஈட்டுப்படி—ரிஸ்க் அலவன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். ஒரு பகுதிக்குத்தான் என்றாலும் கூட நான் அதை மனதார வரவேற்கிறேன். ஆனால், அவர்களை விட மிருகங்களிடம் மிக நெருக்கமாக, இன்னும் சொல்லப்போனால் வெறிகொண்ட நாயின் வாயைக் கட்டுவதற்குக் கூட இந்த ஆய்வாளர்களும், அவர்களுக்குக் கீழே இருக்கின்ற பணியாளர்களும், தங்கள் உயிரையே பணயம் வைத்து சிகிச்சை செய்கின்ற அந்த நிலையில் இருக்கின்றவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்காமல் இருப்பது எந்தவிதத்தில் நியாயம் என்பதை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டுவதற்கு முன்பாக அந்தக் கட்டிடத்தை எப்படி கட்டுவது, அந்தக் கட்டிடத்தின் வரைபடம் எப்படி இருக்க வேண்டும் என்று பேப்பரில் வரைகின்ற பொறியாளருக்கு அந்த ரிஸ்க் அலவன்ஸ் உண்டு. அந்தக் கட்டிடத்தை கட்டுகின்ற பணியிலே ஈடுபட்டிருக்கின்ற, உயிரை பணயம் வைத்து, கல்லையும், மண்ணையும் தலையிலே தூக்கிக்கொண்டு அந்த சாரத்தின் மீது ஏறி நின்று அந்த வேலைகளைச் செய்கின்ற சித்தாளுக்கு அந்த ரிஸ்க் அலவன்ஸ் இல்லையென்றால், அது எவ்வளவு கொடுமையோ, அது போன்று இதுவும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், இரண்டு வருடங்களுக்கு முன்பாக மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கே.ஏ.கே. அவர்கள் ஈரோட்டிலே நடந்த ஆய்வாளர்கள் மாநாட்டில் பேசினார்கள். அப்போது மரியாதைக்குரிய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அந்த மாநாட்டில் மருத்துவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கிறோம். ஆகவே உங்களுக்கும் கிடைக்கும் என்பதற்கு ஒரு நல்ல உதாரணத்தைச் சொன்னார்கள். முதல் பந்தி போட்டாகிவிட்டது. ஆகவே, கண்டிப்பாக இரண்டாவது பந்தியும் போடப்படும் என்று சொன்னார்கள். இரண்டு ஆண்டுகள் ஆகியும் அந்த இரண்டாவது பந்தி ஏன் போடப்படவில்லை என்பதை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் சொல்லுகின்றேன். 300 கால்நடை மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளன. காரணம், போதிய ஆய்வாளர்கள் இல்லை என்பதால். 1967-க்கு மேல் இந்த ஆய்வாளருக்கு பயிற்சி கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறதே அதை மீண்டும் மாற்றி புதியதாக ஆய்வாளர்களுக்கு பயிற்சிகள் தரவேண்டும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஒரு கால்நடை மருத்துவர் 5 ஆண்டுகள் படித்துவிட்டு வெளியே வருகிறார் என்றால், அவருக்கு ரூ. 3 இலட்சம் செலவாகிறது என்பது கணக்கு. இந்தத் தொகையில் ஒரு சிறு பணத்தை ஒதுக்கினால்கூட நூற்றுக்கணக்கான ஆய்வாளர்களை உருவாக்க அது ஏதுவாகும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். சென்ற ஆண்டு 1,13,000 ரூபாய் இந்த ஆய்வாளர்களுடைய பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால், அதில் ஒரு ரூபாய் கூட செலவு பண்ணாமல் இருக்கிறது

என்பதை நினைக்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது என்பதை கூறிக்கொண்டு இவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சௌகரியங்கள், வசதிகள் மற்ற மாநிலங்களில் மிக அதிகமாக இருக்கின்றன என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். உதாரண மாக ஹரியானாவை எடுத்துக்கொள்வோமானால், செயற்கை முறையில் கருவூட்டி, அந்தக் கருவிலே பிறந்த கன்று 6 மாதம் உயிரோடு இருக்குமானால் அந்த செயற்கை முறையிலே ஊசி போட்டு பராமரித்த ஆய்வாளருக்கு அங்கே ஊக்க போனஸ் உண்டு.

(இரவு 6–10)

அந்த முறையை இங்கும் கொண்டுவரவேண்டும். அதேபோல் தான் குஜராத்திலேயும் ஆய்வாளர் கிளை நிலையத்திலிருந்து வெளியே சென்று அந்த மிருகங்களுக்கு சிகிச்சை அளித்தால் அங்கே அவர்களுக்கு ஊக்கத் தொகை உண்டு. அதேபோல்தான், மராட்டிய மாநிலத்திலே அந்த ஆய்வாளர்களுக்கு, மருத்துவர் களைப் போல் பதிவு செய்து கொள்கிற உரிமை இருக்கிறது. அந்த உரிமையை படைத்தவர்களாக இருந்தால்தான் ஓய்வு பெற்ற போதும்கூட, அந்தப் பணியைச் செய்து அவர்களுடைய வாழ்வினை செம்மையாக நடத்திக்கொள்ளமுடியும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, அதைப்போன்று வசதிகளைப் பெற அத்தகைய வாய்ப்பு களை இங்கே ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

இதுகுறித்து ஆராய்வதற்காக 1980-ல் ஒரு குழு மராட்டியத் திற்குச் சென்றது. அதுவும் மக்களுடைய வரிப்பணத்தில். ஆனால் அந்தக் குழு சென்று வந்தபிறகு என்ன அறிக்கை கொடுத்தது? அதன் மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதற்கு இதுவரை எந்தச் செய்தியும் இல்லை. ஆகவே, அந்தக் குழுவின் அறிக்கை என்ன, அதன் மீது எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியாக வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்ற ஒவ்வொரு கிராமத்திலும் அந்தக் கிளை நிலையங்கள் வேண்டும். ஆய்வாளர்கள் வேண்டும் என்ற அந்த நல்லெண்ணத் திலேதான் பண்டித நேரு, ஆசிய ஜோதி அவர்கள் அவருடைய காலத்திலே அந்தத் திட்டத்தைத் தீட்டி, ஏராளமான ஆய்வாளர் களும், கிளை நிலையங்களும்—ஆயிரம் மாடுகள் இருந்தாலே, அந்தக் கிளை நிலையம் அமைக்கவேண்டும் என்று அவர் காலத்திலே திட்டங்கள் தீட்டப்பட்டன. அப்படித் தீட்டப்பட்ட திட்டங்களால், விவசாயமும், கால்நடையும் வளர்ச்சி அடைந்தால்தான் இந்த நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என்ற முறையில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்



திட்டங்களைப் போட்டார்கள். அந்தத் திட்டங்களை தொடர்ந்து, வேகமாக, இன்னும் தீவிரமாக இந்த அரசு அமல் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. க. பால்சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுடைய மானியங்களாகிய மாநில ஆயத் தீர்வைத் துறை, முத்திரைத்தாள், பத்திரப் பதிவு, பால்வழங்கு திட்டங்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றின் மீது கோரியிருக்கின்ற தொகையை அளிக்கவேண்டும் என்று ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் கூறுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைச் சொல்லி, இங்கே சில கருத்துக்களைக் கூற முன் வருகிறேன்.

இங்கே பேசிய அருமை நண்பர்கள் கள்ளச்சாராயத்தை தமிழக அரசு எந்த அளவுக்குக் கடுமையாக ஒழித்து வருகிறது என்பதைப் புரிந்துகொள்ளாமல், அரசே அனுமதிப்பது போலவும், அதற்குக் காவல்துறை துணையாக இருப்பது போலவும் இங்கே பேசினார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது,—ஒரு மனிதன் கொலை செய்துவிட்டால் அவன் தலைமறைவு ஆகிவிடுகிறான். அந்தக் கொலையாளியைக் கண்டு பிடிக்க, அந்த பாதிக்கப்பட்ட குடும்பமோ அல்லது வேறு எவருமோ முன் வருவதில்லை. காவல்துறைக்கு ஒரு மனுதான், புகார்தான் கொடுக்கிறார்கள். அதேபோல் ஒரு வீட்டிலே கொள்ளை ஏற்பட்டுவிட்டால் அந்தக் கொள்ளையை கண்டுபிடிக்க எந்தவிதமான துப்புக் கொடுப்பதோ, அவர்கள் காவல்துறைக்கு உதவியாக இருப்பதோ யாரும் இல்லை. ஆனால் இதையெல்லாம் காவல்துறையினர் காலதாமதம் ஆனாலும் கண்டுபிடித்துவிடுகிறார் கள் என்பதை நாம் அறிவோம். அதேபோல்தான் கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள் கூட, தெரிந்து பகிரங்கமாக—இங்கே மாண்புமிகு உறுப்பினர் இளங்கோ அவர்கள் சொன்னதுபோல்—தெருவுக்குத் தெரு கள்ளச்சாராயம் என்று சொன்னார்களே—அப்படி தெரிந்து யாரும் செய்வதில்லை. தெரியாமலே செய் கிறார்கள். அப்படிச் செய்கிறார்கள் என்பதைப் பற்றி புகார் கொடுப்பதற்குக் கூட முன்வருவதில்லை. இங்கே வந்துதான் புகார் சொல்கிறார்கள். அப்படி புகார் எதுவும் இல்லாமலே, தங்களுக்குத் தெரிந்த வரையிலே துப்புக் கிடைத்த வரையிலே காவல்துறையினர் சென்று பல்லாயிரக்கணக்கிலே அந்தக் கள்ளச் சாராயத்தில் ஈடுபட்டிருப்பவர்களைக் கண்டுபிடிக்கிறார்கள், வழக்குத் தொடுக்கிறார்கள். சில பேரை கடுமையான தண்டனைக் குள்ளாக்குகிறார்கள். அந்த அளவுக்குக் காவல்துறை திறமையாகச் செயல்படுகிறது. அதேபோல் காவல்துறையிலே இருக்கின்றவர் களுடைய உதவியாலே கள்ளச்சாராயம் பிடிபடுகிறது என்பதை நாம் இங்கே அறிவோம். இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல்

இங்கே சொல்கிறவர்கள்—மாண்புமிகு ஜனதாக் கட்சித் தலைவர் கூட மாலையிலே பேசினார்கள்—அவர் சொல்லும்போது, 'சாதாரண மக்கள் குடித்துவிடுகிறார்கள்; அவர்களுக்குச் சட்டங்களைக் கடுமையாகச் செய்கிறீர்களே' என்று சொல்கிறார்கள். ஆனால், குடிப்பது தவறு என்று சட்டத்தைப் போட்டுவிட்டு, அதை பிடிப்பதா என்று அவர்கள் சொல்வது எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட...... ..(குறுக்கீடு)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது சொன்னார்கள்; நான், 'பிடிப்பது தவறு' என்று சொன்னதாகச் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. 5 வருடங்களாக போட்ட வழக்குகள் 5 இலட்சம். தண்டனை பெற்றது 15 ஆயிரம். நீங்களாக தள்ளுபடி செய்தது ஒரு இலட்சத்து 75 ஆயிரம். விசாரணையில் இருக்கிற கேஸ்கள் ஒரு இலட்சத்து 56 ஆயிரம். இப்படி அலைய வைக்கலாமா? இப்படி அலைய வைக்கிறீர்களே, அது நியாயம்தானா என்பதைத்தான் கேட்டேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நீதிமன்றங்களிலே வழக்குகளைச் சந்தித்தவன் என்ற முறையில் அவர்களுக்குச் சொல்கிறேன். போடப்பட்டிருக்கும் அத்தனை வழக்குகளுக்கும் சரியான முறையிலே ஆதாரங்கள் கிடைப்பதில்லை. ஆகவே, ஆதாரங்கள் எந்தெந்த வழக்குகளுக்கு கிடைக்கிறதோ, அந்த வழக்குகளில்தான் தண்டனை வாங்கிக் கொடுக்க முடிகிறது. அபராதம் அளிக்க முடிகிறது. பல வழக்குகளில் தப்பித்து விடுகிறார்கள். பல சாட்சிகளை டேம்பர் செய்து விடுவது என்று சொல்வார்களே, சாட்சிகளை மாற்றிவிட்டு, பல வழக்குகளில் இப்படியெல்லாம் போகவேண்டிய சூழ்நிலை இருப்பதினாலே, அந்த முழு பொறுப்பும் அரசைச் சார்ந்தது என்று நீங்கள் சொல்வது சரியல்ல. ஆகவே இருக்கின்ற வழக்குகளில் என்னென்ன வழக்குகளுக்கு ஆதாரங்கள், தடயங்கள் இருக்கிறதோ, அவைகளுக்கு தண்டனை விதிக்கப்படுகின்றன. தடயங்கள் சரியான முறையிலே இல்லையென்றாலும், காவல் துறையிலே—நாமெல்லாம், வழக்கறிஞர்களாக இருப்பவர்கள்—உள்ளவர்களை கேள்வி கேட்டிருக்கிறோம். பிடித்தீர்களே, நீங்கள் பிடிக்கும்போது ஆள் இருந்தாரா என்று கேட்கிறோம். அதைப் பார்த்தாரா என்று கேட்கிறோம். ஆகவே, எந்தவித ஆதாரமும் இல்லாமல், மற்றவர்களின் உதவி இல்லாமல் காவல் துறையினர் வழக்கு தொடுக்கிறார்கள். அதற்கு ஒரு சில பேர் முன் வருகிறார்கள். அவர்களை வைத்து வழக்காடுகிறார்கள். தண்டனை பெற்று கொடுக்கிறார்கள். ஆகவே அதிலே அதிகமாக தவறு கண்டு பிடிப்பது தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன். அதோடு மாண்புமிகு உறுப்பினர் இளங்கோவன் அவர்கள் சொல்லும் போது, கள், சாராயத்தை ஒழித்துவிட்டீர்கள். ஆனால் பிராந்திக்



கடைகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இங்கே நம்முடைய நாவலர் அவர்கள் சொல்லும்போது, ஏறக்குறைய 250 கோடி ரூபாய், கள், சாராயக் கடைகள் மூலமாக வந்த வருமானம் நமக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக மத்திய அரசை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசிடம் கேட்டு அவர்கள் ஏதாவது வாங்கித் தருவார்களேயானால் நிச்சயமாக தமிழக முதல்வர் அவர்கள் இந்த பிராந்திக் கடைகளை தவிர்ப்பதை ஒரு குறையாக நினைக்க மாட்டார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சீர்காழியிலே ஒரு கால்நடை மருந்தகம் இருக்கிறது. அந்த மருந்தகத்தைச் சுற்றியுள்ள பகுதியிலே 25 வருடமாக ஒரு ஏக்கருக்கு மேல் இடம் இருக்கிறது. அது ஒரு தாலுக்காவின் தலைநகரமாகும். அந்த மருந்தகத்தை கால்நடை மருத்துவ மனையாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். காரணம் பக்கத்திலேயே, 4, 5 கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற கால்நடைகளைக் கொண்டுவந்து வைத்தியம் செய்வதற்கு அவர்களுக்கு வசதியாக இருக்கும்.

அடுத்து, மயிலாடுதுறையில், நம்முடைய தமிழக முதல்வருடைய அருளாசியால் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்திருக்கிறார்கள். அதனுடைய வேலைகள் இப்போது நடைபெற்று வருகின்றன. ஏறக்குறைய 25 லட்சம் ரூபாய் செலவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதை விரைவு படுத்தவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன், பால் அதிகமாக உற்பத்தியாகின்ற அந்தப் பகுதியில் பாலை பாதுகாத்து வைத்திருந்து கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே அதை விரைவுபடுத்தி அதன் மூலம் பாலை சேமித்து பலருக்கு வழங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரே ஒரு விஷயம். தஞ்சை மாவட்டத்திலே தஞ்சாவூரிலே ஐ.சி.டி.பி. என்று சொல்லக்கூடிய ஒருங்கிணைந்த கால்நடை அபிவிருத்தித் திட்டம் இருக்கிறது. அதற்கு அடுத்தாற் போல் தஞ்சை மாவட்டத்திலே பாபநாசம் பகுதி வரையிலே அந்த திட்டத்தினுடைய விஸ்தரிப்பு இருக்கிறது. அதற்குப் பிறகு அந்தத் திட்டமானது சிதம்பரத்தில் இருக்கிறது. இதற்கு நடுவிலே ஏறக்குறைய 75 கிலோ மீட்டர் இடைவெளி இருக்கிறது. அதைப்போல கிழக்குத் தஞ்சையிலே, மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்களுடைய தொகுதியிலே இருந்து ஏறக்குறைய 100 கிலோ மீட்டர் தஞ்சாவூருக்கு வர வேண்டும். ஆகவே, இதையெல்லாம் சேர்த்து கிழக்குத் தஞ்சைக்கு மையமாக இருக்கிற இடத்திலே அந்த ஒருங்கிணைந்த கால்நடை அபிவிருத்தித் திட்டத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய தொகுதியிலே மேற்குப் பகுதியிலே

எலத்தூர் என்ற இடத்திலே கால்நடை மருந்தகம் ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவோடு, இந்த வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(இரவு 6-20)

திரு. அ. ஆறுமுகம்: பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைப் பெருந்தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் ஏதுமில்லை. காலையில் மாண்புமிகு அமைச்சரே சொல்லியிருக்கிறார். பெருந்தலைவர் என்று வராது. துணைத் தலைவர் என்று சொல்லுங்கள்.

திரு. அ. ஆறுமுகம்: "Hon. Deputy Speaker of the House." எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது.

''காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது''

''தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்''

பேசுவேனோ பேச மாட்டேனோ என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. நீங்கள் அழைத்ததை ஒரு பெரிய வாய்ப்பாக நான் கருதுகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 5 மானியக் கோரிக்கைகளை வைத்து, எங்களிடம் பணம் கேட்டிருக்கிறார்கள். நாங்கள் அப்படிக் கொடுப்பதற்கு முன்னால் அவர்களிடத்தில் சில வாக்குறுதிகளைப் பெற விரும்புகிறேன்,

பத்திரப் பதிவுத் துறையில் தமிழகத்தில் சுமார் 561 சார் பதிவாளர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் ஏறக்குறைய 250 சார்பதிவாளர் அலுவலகங்கள் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இந்தக் கட்டிடங்களையும் அரசுக் கட்டிடங்களாக ஆக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அவற்றிற்கு வாடகையாகத் தருவதற்கு மட்டும் ஆண்டொன்றுக்கு நாம் ஏறத்தாழ ரூ. 5 கோடி செலவு செய்து கொண்டு வருகிறோம்.

தமிழ்நாட்டில் 1,097 ரெவின்யூ பிர்க்காக்கள் உள்ளன. ஒரு பிர்க்காவுக்கு ஒரு சார்பதிவாளர் அலுவலகம் திறக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய அருமையான அரசாங்கத்தினுடைய கொள்கை "I mean Sir, the benigning Government of



அகில இந்தியாவிலேயே நம்முடைய ours''. நான் நினைக்கிறேன், ஏற்பட்டிருக்கிற மாநிலத்தில் உள்ள பத்திரப் பதிவுத் துறையில் வேறு ஒரு பெரிய அளவிலான வளர்ச்சி, ஒரு முன்னேற்றம், வேறு எங்கேயும் இருக்காது என்று இந்த எந்தத் துறையிலும் நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். ஏறத்தாழ 25 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்னால் மாவட்டத்திலேயே ஓரே ஒரு பதிவாளர்தான் இருப்பார். மாநிலத்தில்கூட ஓரே ஒரு தலைவர்தான் இருப்பார். மற்ற இடங்களில் சார்பதிவாளர்கள்தான் இருப்பார்கள். ஆனால் இப்போது நாம் பார்க்கிறபோது ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கும் ஒரு பதிவாளர் இருக்கிறார். நம்முடைய தமிழ்நாட்டு சர்க் காருடைய கொள்கை என்னவென்றால் ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனையும் ஒரு பதிவு மாவட்டமாக ஆக்க வேண்டுமென்பது தான். அந்தக் கொள்கையின் அடிப்படையில் ஏற்கனவே 46 பதிவு மாவட்டங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. மீதி இருப்பது 10 மாவட்டங்கள்தான். அந்த 10 மாவட்டங்களையும் தயவு கூர்ந்து அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே திறந்து வைக்கவேண்டுமென்று நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறையில் எனக்குத் தெரிந்த வரையில் 25, 30 ஆண்டுகளுக்கு முன்னாள் வருஷ வருமானமே ஒரு கோடி ரூபாயாகத்தான் இருந்தது. ஆனால் இன்றைக்கு ஏறக்குறைய ரூ. 200 கோடியை இந்த இலாகா நம்முடைய அரசாங்கத்திற்கு சம்பாதித்துக் கொடுக்கிறது. அப்படிப்பட்ட இலாக்காவில் பணி புரிபவர்களுக்கு நாம் பிரத்தியேகமாகச் சில நல்ல வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டும். எந்த மாவட்ட அதிகாரியானாலும் நாம் அவர்களுக்கு ஜீப் வசதி செய்து கொடுத்திருக்கிறோம். ஆனால் "பேரு பெத்த பேரு. தாக நீளு லேது'' என்கிற வகையில் நாம் டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ரார் என்று பெருமை அடித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களோ பஸ் ஸ்டாண்டுக்கு வந்து பஸ்ஸுக்கு காத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலைதான் இருக்கிறது. எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், "தயவு செய்து இந்தத் துறையிலும் ஒரு புரட்சியைக் கொண்டுவாருங்கள். அவர்களுக்கும் ஒரு ஜீப் கொடுக்க நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆங்கிலேயர்கள் காலத்தில் கட்டிய கட்டிடங்களில்தான் இன்னும் சார்பதிவாளர் அலுவலகங்கள் இருந்து கொண்டிருக்கின்றன.

அந்தக் கட்டிடங்கள் எல்லாம் இடிந்து தலைமேல் விழுகிற அளவிற்கு மிகவும் மோசமாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் சீர்திருத்தம் செய்ய வேண்டும், நல்ல முறையிலே அவற்றைக் கொண்டுவர வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் அலுவலகங்களில் வேலைப்பளு அதிகமாகி விட்டது. அன்றைக்கு இருந்ததைப் போலவே ஒரு கிளார்க், இன்னுமொரு கிளார்க், ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் என்ற நிலையிலே வைத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே தயவுசெய்து ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் குறைந்தது ஒரு எழுத்தர், ஒரு காவல்காரர்—காவல்காரர் என்றால் நான் போலீஸ்காரரைச் சொல்லவில்லை—ஒரு வாட்ச்மேன் போடும்படியாக நான் கேட்டுக் கொளகிறேன். அந்த அதிகாரிகளுக்கு அவர்கள் இருக்கின்ற இடத்திலேயே தங்குவதற்கு குவார்ட்டர்ஸ் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு நீங்கள் குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கலாம். காரணம் இந்த அளவிற்கு எந்தத் துறையும் சர்க்காருக்கு பணத்தை சம்பாதித்துக் கொடுக்கவில்லை. ஆகவே அதைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே செய்யாறு தாலுக்காவில் அணக்காவூரில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் கிடையாது. அணக்காவூர் யூனியனிலேயே கிடையாது. ஆகவே தூசிக்குப் பக்கத்திலே உள்ள செய்யாறுக்கும், தெற்கே வந்தவாசிக்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், காஞ்சிபுரத்திற்கும் வந்தவாசிக்கும் மத்தியிலே உள்ள குழுமந்தவேலி என்ற இடத்திலே ஒரு சார்ப்பதிவாளர் அலுவலகத்தைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று ஆலத்துரில் ஒரு அலுவலகத்தை திறக்க வேண்டும். அணக்காவூர் யூனியன், அந்த யூனியனுக்கு தலைநகரமாக இருந்தாலும் அங்கே சார்பதிவாளர் அலுவலகம் இல்லை. ஆகவே அங்கே ஒன்று திறக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது அருமை நண்பர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அரிக்குமார் தொகுதியான பெரணமல்லூரில் ஒரு அலுவலகத்தைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது அருமை அண்ணன் தொகுதியான பெரியகுழப்பலூரில் ஒரு சார் பதிவாளர் அலுவலகத்தைத் திறக்கவேண்டும்என்றுகேட்டுக் கொள்கிறேன். பக்கத்திலே உள்ள போளூர் தொகுதியில் வேலூருக்குப் பக்கத்திலே உள்ள கணியம்பாடியில் ஒரு அலுவலகத்தைத் திறக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து செங்கம் தொகுதி—that is my home constituency. So, I am very much interested in that also. ஆகவே அமைச்சர் அவர்கள் தயவு செய்து அக்கறையோடு கவனிக்க வேண்டும். அந்தத் தொகுதியிலே இரண்டு யூனியன்கள்—புதுப்பாளையம் பஞ்சாயத்து யூனியன் பிளஸ் செங்கம் பஞ்சாயத்து யூனியன். புதுப்பாளையம் யூனியனில் ஓர் இடத்திலே கூட சார் பதிவாளர் அலுவலகம் கிடையாது. அது தலைநகரமாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும், அங்கே உயர்நிலைப் பள்ளிகள் இருந்தாலும் கூட அந்த ஊரிலே சார் பதிவாளர் அலுவலகம் இல்லை. ஆகவே அங்கே ஒரு சார் பதிவாளர் அலுவலகத்தைத் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பக்கத்திலே செங்கம் யூனியனில் உள்ள ஊரில் வேறு எங்கும் இந்த அலுவலகம் இல்லை. ஆகவே அந்தப் பகுதியிலே மேல்பள்ளிபட்டி என்ற ஊரில் அதைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



செங்கத்திற்கும் திருவண்ணாமலைக்கும் மத்தியிலே உள்ள பாய்ச்சலில் ஒரு சார் பதிவாளர் அலுவலகத்தைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எப்படியாவது நேரம் கொடுக்கிறேன். மீறிக் கொண்டு பேசுவீர்களா என்று கேட்டார்கள். நேரத்தை மீறி போக மாட்டேன் என்று சொன்னேன். ஆகவே முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மிக்க நன்றி.

(இரவு 6-30.)

*திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த திணுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த ஆயத் தீர்வை தொடங்கி பால்வளம் வரைக்கும் உள்ளிட்ட மானியக் கோரிக்கைகளிலே பேச விழைகின்றபொழுது இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே இன்னும் குறிப்பாகச் சொல்வோமானால், 1985 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5 ஆம் நாள், இதே மன்றத்திலே, இதே பொருளிலே பேசியபொழுது எடுத்துச் சொன்ன கருத்துக்களிலே, எவற்றை இந்த அரசு செய்திருக்கிறது, எவற்றைச் செய்யவில்லையென்று பார்க்கின்றபொழுது, Attachment Before Judgement—ஐ சிவில் கோர்ட் ஜட்ஜ்மெண்டிலே பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று நீங்கள் பத்திரப் பதிவிலே பதிவு செய்து கொண்டு நிறைவேற்றிய சொன்ன ஆலோசனையை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றிய சட்டம் ஜனாதிபதி ஒப்புதல் கிடைத்திருக்கிற இந்தச் சூழ்நிலையிலே, அரசுக்கு நன்றியைத் தெரிவித்து, உடனடியாக இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

கால்நடைத் தீவனங்கள் கிடைப்பது தமிழகத்திலே அரிதாக இருக்கிற காரணத்தாலே, கால்நடைத் தீவனங்களை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதை நீங்கள் தடை செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை, அமைச்சர் அவர்கள் உடனடியாக ஏற்றுக்கொண்டு தடை உத்தரவு பிறப்பித்ததன் காரணமாக, இன்றைக்கு வறட்சியால் நலிவுற்றிருக்கிற தமிழகத்திலே கால்நடைகள் ஓரளவுக்காவது காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். என்றாலும்கூட, தடை உத்தரவானது 6 மாதங்களுக்கு ஒருமுறை நீட்டிப்பதன் காரணமாக இந்த நீட்டிப்பு இடையிலே இருக்கிற காலங்களிலே சில சமுதாய விரோதிகள் அந்தக் குறிப்பிட்ட காலத்திலே சேமித்து வைத்து இரண்டு மூன்று

நாள் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மாதக் கணக்கிலே சேமித்து வைத்ததை மொத்தமாக, இரண்டு மூன்று நாட்களில் கேரளாவுக்கு அனுப்புகின்ற துர்பாக்கியமான நிலைமை நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்குத் தென்னை நார் வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்வதை நிரந்தரமாகத் தடை செய்ய தமிழக அரசு ஒரு ஆணையைப் பெற்றிருக்கிறது. அதுபோல், வைக்கோலைக் குறிப்பாக, கால்நடை உணவு வகைகளை மொத்தமாக, நிரந்தரமாக, வெளி மாநிலத்திற்கு அனுப்புவதைத் தடை செய்ய தடை ஆணை உத்தரவை தமிழக அரசு பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

செய்யத் தவறிய அல்லது பரிசீலனையில் இருக்கிற சிலவற்றைச் சொல்லி காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே, இந்த மாமன்றத்திலே நடைபெறுகின்ற இந்த விவாதத்தை முடித்து வைக்க நான் ஆசைப்படுகிறேன். ஏற்கனவே, இந்த மன்றத்திலே, அட்டாச்மெண்ட் பிஃபோர் ஜட்ஜ்மெண்ட், மற்றும் அட்டாச்மென்ட்ஸ் எல்லாம் இன்றைக்குச் சட்டமாகி இருப்பதைப் போல், ஈக்குவிட்டபில் மார்ட்கேஜ்களையும், ரிஜிஸ்டிரேஷன் டிபார்ட்மென்டில் ரிஜிஸ்டிரேஷன் செய்ய வேண்டுமென்ற கருத்தை நான் சொல்லியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். மிக விரைவிலே, நீங்கள் அதையும் சட்ட வடிவமாகக் கொண்டு வந்தால், வங்கிகளிலே மூலப் பத்திரங்களை வைத்துக் கடன் வாங்கிக் கொண்டு பத்திரம் தொலைந்து விட்டது என்று பொய் சொல்லி' அப்பாவி மக்களிடத்திலே சொத்தை ஏமாற்றுகின்ற எத்தர்களை இன்றைக்குச் சட்டத்தின் பிடியிலே கொண்டு வருவதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தாலே, ஈக்குவிட்டபிள் மார்ட்கேஜ்களையும் நீங்கள் மிகக் குறைந்த கட்டணத்திலே பத்திரப் பதிவு துறையின் மூலமாகப் பதிவு செய்ய வேண்டுமென்ற ஆலோசனையைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இராணிப்பேட்டையிலே இருக்கிற ஐ.டி.பி.எம். என்று சொல்லப்படுகின்ற இன்ஸ்டிடியூட்டிலே 15-க்கு மேற்பட்ட முதுநிலைப் பட்டதாரிகள் பணியிடங்கள் எல்லாம் காலியாக இருக்கின்றன. ஜூலைத் திங்கள் 5-ஆம் நாள், 1985-ஆம் ஆண்டே இதே கருத்தை நான் வலியுறுத்தியிருக்கிறேன். பல முறை, இந்த மன்றத்திலே இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அன்பு நண்பர் திரு. கதிர்வேலு அவர்கள் வற்புறுத்திச் சொல்லியுங்கூட, அந்தப் பதவிகள், இரண்டு ஆண்டுகளுக்கு மேலும் இன்றைய தினம் வரை காலியாக வைக்கப்பட்டிருப்பது வேதனைக்குரியது, வருந்தத்தக்கது, உடனடியாக அந்தப் பதவிகளை அரசு முன் வந்து நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, மானியக் கோரிக்கை எண் 5, முத்திரைத்தாள்கள் பத்திரங்கள் ஏற்கனவே கிடைக்கவில்லை. அதிலே பலவிதமான இடைஞ்சல்கள் இருக்கின்றன என்று சொல்லி, இந்த மாமன்றத்திலே எழுப்பப்பட்டு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு முத்திரைத் தாள்கள் கிடைப்பதிலே உள்ள கஷ்டங்களைப் பற்றி அமைச்சரிடத்திலே ஏற்கனவே தனிப்பட்ட முறையிலே கூட நான் பேசி இருக்கிறேன். அதற்கு உள்ள கமிஷனை மாற்றி அமைப்பார்களானால் அந்த முத்திரைத் தாள்கள் கிடைப்பதிலே இலகுவான வழி ஏற்படும் என்று அவரிடத்திலே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து அவற்றைப் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் நீதிமன்ற முத்திரைக் கட்டணங்களை இன்றைக்கு செக்ஷன் 41-ன்படி பணமாகச் செலுத்த வேண்டும். அதை நீங்கள் பணமாக வாங்கிக் கொண்டு, நீதிமன்ற முத்திரைக் கட்டணங்களுக்குப் பதிலாக, முன்சீப் கோர்ட் அல்லது சப் கோர்ட் அல்லது டிஸ்டிரிக்ட் கோர்ட்டிலே அவற்றைப் பணமாகப் பெற்றுக்கொள்வார்களானால் பத்திரம் கிடைக்கப் படாததன் காரணமாக உள்ள சூழ்நிலையை நாம் தடுக்கமுடியும். நேற்றைக்குக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி என்னிடத்திலே கருத்தைக் கேட்டார்கள். நாங்கள் கொடுத்திருக்கின்ற கருத்தை நீங்கள் செயல்படுத்திக் கொடுப்பீர்கள் என்று மிகுந்த நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதை நீங்கள் முழுமையாகச் செய்வீர்களானால் ஓரளவுக்குப் பத்திரம் தட்டுப்பாட்டினால் நடக்கக் கூடிய கொள்ளை இலாபங்களும் மக்களுக்கு ஏற்படக் கூடிய தொல்லைகளும் தீர்க்கப்பட முடியும் என்ற என்னுடைய ஆலோசனையை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பத்திரப் பதிவுத் துறையை நாம் எடுத்துக் கொண்டோமானால், இன்றைக்கு தென்காசியிலே ஒரு மாவட்டப் பத்திரப்பதிவு அலுவலகம் இருக்கிறது. ஆனால், இன்றைக்கு மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் அடி என்று சொல்வது போல், ஒரு பக்கம் வால்யூவேஷன் ரிஜிஸ்டரிலே இருக்கிற மதிப்பை நீங்கள் உயர்த்திக் கொண்டே இருக்கிறீர்கள். மற்றொரு பக்கம் இந்தியாவிலே எங்கும் இல்லாத அளவிலே, தமிழகத்திலே தான் பத்திரப் பதிவு கட்டணங்களும், முத்திரைக் கட்டணங்களும், ரிஜிஸ்திரேஷன் கட்டணங்களும் மிக அதிகமாக இருக்கின்றன. ஆகவே, பத்திரப் பதிவு செய்யக்கூடியவர்கள் அல்லலுறக்கூடிய ஒரு நிலைமையிலே இருக்கிறார்கள். இதிலே நடக்கிற ஊழலை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்குப் பத்திரப் பதிவுத் துறையிலே இருக்கிற அதிகாரிகள், குறிப்பாக சில சப்-ரிஜிஸ்ட்ராரர்கள் வால்யூவேஷன் ரிஜிஸ்டிரேஷனில் என்ன பணம் இருக்கிறது என்று சொல்லாமல், நபர்கள் வருகின்ற பொழுது சொத்தினுடைய மதிப்பை மிக அதிகமாக இருப்பதாகச் சொல்லி, செண்டுக்கு ரூ. 100 என்று இருந்தால்

செண்ட்டுக்கு ரூ.2,000, ரூ. 3,000 என்று சொல்லி, பயமுறுத்தி பத்திர விலையைக் குறைத்துத் தருகிறேன். மதிப்பைக் குறைத்து தருகிறேன் எனக்கு ரூ. 500 தா, என்று கிராமத்திலே இருக்கிற அப்பாவி மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை கூற விரும்புகிறேன். இந்த வேல்யூவேஷன் ரிஜிஸ்டர் இந்த நாட்டினுடைய ராணுவ ரகசியமா என்ன? தேவ ரகசியமா? தயவு செய்து அந்த பத்திரப்பதிவு அலுவலகத்திலே இருக்கின்ற அந்த வேல்யூவேஷன் ரிஜிஸ்தரிலே இருப்பதை யார் வேண்டுமானாலும் சென்று பார்க்கின்ற அளவுக்கு அவற்றை பொதுமக்கள் போய் பார்க்கின்ற அளவிற்கு ஒரு பப்ளிக் டாக்குமெண்ட் ஆக அறிவித்து, யார் வேண்டுமானாலும் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டால், இன்றைக்கு அந்த பத்திரப்பதிவு ரிஜிஸ்ட்டரிலே என்ன விலை என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று தெரியாமல் அப்பாவி கிராம மக்கள் இடைத்தரகர்களால் ஏமாற்றப்படுவதைத் தடுக்கலாம். அந்த இடைத் தரகர்கள் "சப் ரிஜிஸ்ட்ரார் இடத்திலே சொல்லி, விலையைக் குறைத்துத் தருகிறோம், மதிப்பை குறைத்துத் தருகிறோம்" என்றெல்லாம் சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அந்த வேல்யூவேஷன் ரிஜிஸ்ட்டரை நீங்கள் பப்ளிக் டாக்குமெண்டாக அறிவித்து யார் வேண்டுமானாலும் போய்ப் பார்க்கலாம், எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம் என்று திருத்தி சொல்லிவிட்டால், ஏமாறுகின்ற மக்கள் இனியாவது ஏமாற்றப்படாமல் இருக்கலாம் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக பாலூர் சத்திரம் என்ற என்னுடைய தொகுதியிலே அரசு நிலம் ஆர்ஜிதம் செய்து, இன்றைக்கு அந்த நில ஆர்ஜிதத்தின் மூலமாக சப் ரிஜிஸ்ட்ரார் ஆபிஸ் கட்டுவதற்காக அங்கு இடங்களைத் தெரிவு செய்தும்கூட, சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் பல ஆண்டுக்காலமாக கட்டப்படாமல் இருக்கின்றது. என்னுடைய தொகுதியான பாலூர் சத்திரத்தில் சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வேல்யுவேஷனில் ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் மக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள். அதுபோலவே சப் ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் 'இண்டர்பிரட்டேஷன் ஆஃப் தி டாக்குமெண்ட்' என்று சொல்லி இன்றையதினம் பொதுமக்கள் பல்வேறாக அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், என்னுடைய சொந்த உதாரணமாகவே சொல்லிக்கொள்ள முடியும். ஒரு 'டிரஸ்ட் டீட் ஒன்றை செட்டில்மெண்ட், என்று சொல்லியதால், நானே ஒவ்வொரு ஆபீசாக அலைந்துகொண்டிருக்கிற நிலை இருக்கிறது. சொந்த விஷயமாக இருப்பதால், இந்த மன்றத்திலே சொல்வது தவறு என்ற காரணத்தினாலே தயங்குகிறேன். இருந்தாலும்கூட வழக்கறிஞர்களும் நீதிமன்றத்திற்கே சென்று, தேவையில்லாமல் சாதாரண மக்களும் மிகச்சாதாரணமான விஷயத்திற்கும், அலையவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பத்திரத்திலேயும் அது



இன்னவிதமான வேறு டாக்குமெண்ட் என்று சொல்லி அவர்கள் அங்கே அச்சுறுத்தப்படுகிறார்கள். பொதுமக்களை அவர்கள் கஷ்டப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் கோர்ட்டுக்குச் செல்கிறது. சீஃப் கன்ட்ரோலிங் அத்தாரிட்டி கோர்ட்டுக்குச் செல்கின்றது. அப்படி தேவையில்லாமல் நடந்து கொண்டிருக்கின்றன. இதனால் பல ஆயிரக்கணக்கான ரூபாய் அரசாங்கம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. எதற்கெடுத்தாலும் ஆடிட்டிலே அப்ஜர்ஷன் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவேதான் ஹையஸ்ட் வேல்யூவேஷன் தான் போடுவோம் என்று சொல்கின்றார்கள். 'அப்பேரண்ட் டெனார் ஆஃப் தி டாக்குமெண்ட்' அது எதுவாக இருந்தாலும் இப்படித்தான் அது வேறு ஒரு டாக்குமெண்ட் என்று குழப்பிவிடுகிறார்கள். அப்படித்தான் போடுவோம் என்றும் சொல்லிவிடுகின்றார்கள். ஒவ்வொரு டாக்குமெண்ட் பற்றியும் தெளிவாக விளக்குங்கள். இதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பத்திரப் பதிவு பற்றி சொல்கின்றபோது ஒன்றைக் கடைசியாக சொல்லிக்கொள்கிறேன். தென்காசியிலே இருக்கின்ற மாவட்டப் பதிவாளர் அவர்கள் மீது கடுமையான புகார்கள் சொல்லப்படுகின்றன. அங்கே இருக்கின்ற அதிகாரிக்கும் கீழே இருக்கின்ற சப் ரிஜிஸ்ட்ரார்களுக்கும் இடையிலே சண்டை. செங்கோட்டையிலே இருக்கின்ற அத்தனை அதிகாரிகளும் ஒட்டுமொத்தமாக மாற்றப்பட்டு இருக்கின்றார்கள். என்னவென்று கேட்டால், பங்கு போடுவதிலே சண்டை என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அங்கே உள்ளவர்களிடம் கேட்டால், அந்த அதிகாரி மூன்றாம் தாரம் திருமணம் செய்து கொண்டிருப்பதால் அவர் மீது அரசாங்கத்திலே அன்றைக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. என்கின்றார்கள். உண்மையிலேயே அவர்கள் தவறு செய்திருந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? தவறு செய்யாமல் இருந்தால், 'டெமாக்கிள்ஸ் ஸ்வோர்ட்' என்று சொல்வார்களே அதுபோல, ஏன் அவர் மேல் அது தொங்கிக்கொண்டிருக்கவேண்டும். தவறு செய்யவில்லை என்றால் அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லுங்கள். மேலே இருக்கின்ற அதிகாரியும், கீழே இருக்கின்ற அதிகாரிகளும், தெருவிலே போகின்ற நாய்கள் போடுகின்ற சண்டைபோல், சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்தின் மதிப்பையும் மரியாதையையும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மிகவும் வேதனையோடும், மனவருத்தத்தோடும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தப்படியாக பால்வளத் துறையைப் பற்றி பேசுகின்றபோது இன்றைக்கு திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கின்ற பால்வளத்துறை யூனியனுக்கு மத்திய அரசு ரூ. 7½ கோடி கடனாகத் தருவதாக அறிவித்திருக்கின்றார்கள். இந்த அவைக்கு ஒரு தகவலைச் சொல்லவேண்டியதாக இருக்கின்றது. பல

மாதங்களாக அந்தப் பணம் மத்திய அரசிலிருந்து வரவில்லை. பால்வளத் துறை தலைவர் அவர்கள் என்னிடத்திலே பேசுகின்றபோது சொன்னார்கள், உடனடியாக வணக்கத்திற்கும் மதிப்பிற்கும் உரிய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் திரு. தில்லான் அவர்களுக்கு நான் கடிதம் எழுதினேன். அவர்கள் உடனடியாக பதில் எழுதினார்கள். உங்கள் அரசிடமிருந்து இப்படிப்பட்ட புரோபோசலே வரவில்லை என்று சொல்லியிருந்தார்கள். அதை நான் அந்தத் தலைவரிடம் சொல்லி, அதன் பிறகு அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் ஏன் அனுப்பவில்லை என்று கேட்டுக் கொண்டபின்னர், முதலமைச்சர் அவர்கள் விரைவான முயற்சிகள் எடுத்ததன் காரணமாக உடனடியாக அந்த புரோபோசல் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அந்த புரோபோசல் கிடைத்த 15 நாட்களிலே மத்தியஅரசு ரூபாய் ஏழரைகோடிக்கு சாங்ஷன் செய்திருக்கிறது. இதை நான் மகிழ்ச்சியோடு இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இருந்தாலும் கூட 70 சதவிகிதம் மத்திய அரசு கடனாகத் தந்தும், 30 சதவிகிதம் இந்த மாநில அரசு சப்சிடியாகத் தரவேண்டும் என்று ஒரு கண்டிஷன் போடப்பட்டிருக்கின்றது. அதன்படி நமது மாநில அரசு அந்த 30 சதவிகிதத்தை தராததனால் அந்த காரணத்தினாலேயே மத்திய அரசு அதனுடைய பணத்தை ரெடியாக வைத்துக் கொண்டு இன்றைக்குத் தரத் தயாராக இருந்தாலும், அந்த ரூபாய் ஏழரை கோடி பணத்தை திருநெல்வேலி மாவட்டத்தில் பால்வளத்துறை வளர்ச்சிக்காக பெறமுடியாத நிலை இருக்கின்றது என்ற செய்தியை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். உடனடியாக

(இரவு 6,40)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையின் வாக்கெடுப்பு முடிந்தவுடன் இந்த 30 சதவிகித சப்சிடியை திருநெல்வேலி பால் வள பண்ணைக்குத் தருவது பற்றி அறிவித்தால் மத்திய அரசும் அவர்களுடைய பங்கான 70 சதவிகிதத்தைத் தராமல் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன் செங்கோட்டையிலே ஒரு பால் வள பண்ணை இயங்கிக் கொண்டிருக்கிறது. அதுபோல திருநெல்வேலியிலும் ஒரு பால் வள பண்ணை இயங்கிக் கொண்டிருக்கிறது. திருநெல்வேலி பால் வள பண்ணையும், செங்கோட்டை பால் வள பண்ணையும் எலியும் பூனையும் போல சண்டை போட்டுக்கொண்டு இருக்கின்றன. செங்கோட்டையில் இருக்கிற சொசைட்டி எதற்கு தயாராக இருக்கிறது என்றால் 'ஃப்ளெட் சீசன்' திருநெல்வேலிக்கு பாலைக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. ஆனால் திருநெல்வேலி சொசைட்டி, நீங்கள் 'லீன் சீசன்'ல் கொடுக்காமல் 'ஃப்ளெட் சீசன்-ல் மட்டும் கொடுத்தால் நாங்கள் எடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். இதனால் செங்கோட்டையில் மாடுகளை வைத்திருப்பவர்கள் பால் உபரியாக இருக்கும்போது பாலை



எடுக்காமல் இருப்பதினால் மாடுகளின் பால்மடிக் கட்டிக்கொள்ளக் கூடிய அபாயம் இருக்கிறது. பால் ஒழுங்காக கறக்காததால் வண்டிகளில் செலுத்த வேண்டிய பணத்தை ஒழுங்காக கட்டவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே அந்த அடிப்படையில் திருநெல்வேலி சொசைட்டி செங்கோட்டை சொசைட்டியிலிருந்து பாலை ஒழுங்காக பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற உத்தரவை அரசு இட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடன் வாங்கி மாடு வைத்திருப்பவர்கள் எல்லாம் இதன் காரணமாக மிகவும் வேதனைப்படுகிறார்கள். ஆகவே, இதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து மத்தியஅரசு கொடுக்கக்கூடிய ஏழரைகோடி ரூபாயை வைத்து 3 'சில்லிங் பிளாண்ட்', குளிர் ஊட்டும் நிலையங்கள் அமைக்க இருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஒன்றை அவசியம் செங்கோட்டையிலே அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கு மாடுகள் அனுப்பப்படுவது பற்றி இங்கே பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் குறுப்பிட்டார்கள். சென்ற முறை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடைபெறும்போது இதைத் தடுப்பதற்கு சட்டம் கொண்டு வரப்படும் என்று அரசு சார்பில் இங்கே சொல்லப்பட்டது. அப்படி சொல்லப்பட்டு ஆண்டு ஒன்று ஆகிறது இன்னும் சட்டம் வரவில்லை. வெளி மாநிலங்களுக்கு அடிமாடுகளாக அனுப்பப்படுவதை நாம் தடுக்க முடியாது. என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு வெஜிட்டேரியன். ஆனால் 'நான் வெஜிட்டேரியன்ஸ்'க்கு இறைச்சி கொடுக்க வேண்டியது அரசின் கடமை. இந்த மாடுகளை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி இறச்சி தயாரிப்பதை தடுத்து தமிழ்நாட்டிலேயே ஏன் இறைச்சி கார்ப்பரேசன் மூலயாக அதனை மேற்கொண்டு முழுமையான லாபத்தையும் நாமே அடையும் வகையில் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன், அதேபோல 'சர்ட்டிபிகெட் ஆஃப் அன்பிட்னெஸ்' என்கிற அடிப்படையில் மாடுகளின் செயல் திறன். வயது போன்றவற்றை கணக்கிட்டு பார்த்து நல்ல மாடுகள் வெளி மாநிலங்களுக்கு இறச்சிக்காக செல்லாமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் மாவட்டம் திருநெல்வேலி மாவட்டம் என்றும் சிதம்பரனார் மாவட்டம் என்றும் இரண்டாக பிரிக்கப்பட்டிருக்கிறது சிவகிரி, சங்கரன்கோயில், கோவில்பட்டி போன்ற எல்லா இடங்களுக்கும் சேர்த்து ஒரே ஒரு கால்நடை உதவி இயக்குநர் அலுவலகம் கோவில்பட்டியில் இருக்கிறது. இப்போது எங்கள் மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டுள்ள நிலையில் தென்காசியில் ஒரு கால்நடை உதவி இயக்குநர் அலுவலகத்தை அவசியம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்

அடுத்தபடியாக, இன்றைக்கு 'ஆப்பரேஷன் ஃப்ளட்' என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம், பால் வளத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் மாட்டுத் தீவனங்களுக்கு கடுமையான பற்றாக்குறை இருக்கிறது. இன்றைய தினம் ஒரு சில சமுதாய விரோதிகள் கழிவுகளை எல்லாம் மாட்டுத் தீவனம் என்கிற பெயரால் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மாடு வைத்திருப்பவர்களை எல்லாம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மற்ற சில துறைகளில் எல்லாம் 'குவாலிட்டி கன்ட்ரோல் ஆபீசர்' என்று இருப்பதை போல மாட்டுத் தீவனம் சரியாக இருக்கிறதா என்று பரிசோதனை செய்ய 'குவாலிட்டி கன்ட்ரோல் ஆபீசர்' பதவி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தரமில்லாத தீவனம் மாடுகளுக்கு கொடுக்கப்படுவதால் உணவின் தரம் குறைவதன் காரணமாக மாடுகளுக்கு பலவிதமான நோய்கள் குறிப்பாக வயிற்றில் நோய் வருகிறது. இதனால் சில சமயங்களில் மாடுகள் இறக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, நஞ்சுத் தன்மையை பரப்பி வருகின்ற மாட்டுத் தீவனங்களை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஐ.சி.டி.பி. என்கிற திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் 50 கிளை நிலையங்கள் இயங்கி வந்தன. அந்த இன விருத்தி நிலையங்களிலே 25 சென்டர்கள் இன்றைக்குத் திருநெல்வேலியிலே போய் சிதம்பரனார் மாவட்டத்திற்குச் சென்றுவிட்ட காரணத்தாலே அந்தத் திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கக்கூடிய 25 சென்டர்களோடு, தென்காசி பகுதியிலே இருக்கக்கூடிய 25சென்டர்களை ஐ.சி.டி.பி. திட்டத்திலே உயர்த்தி அவற்றையும் வைத்துக்கொண்டு, தென்காசி பகுதியிலே இன விருத்தித் துறையின் சார்பாக ஒரு இணை இயக்குநர் அலுவலகத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறையிலே உள்ள ஐ.சி.டி.பி., உதவி இயக்குநர், (தீவனப்பயிர்) என்கின்ற ஒரு அதிகாரி இருக்கிறார். கால்நடைகளினுடைய வளர்ச்சிக்கு அந்தத் தீவனம் எவ்வளவு முக்கியம் என்பதை இங்கே இருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களும் அறிவார்கள். ஆனால் கால்நடை தீவனத்தினுடைய முன்னேற்றத்தை நாம் கருத்திலே கொண்டு அங்கே இருக்கக்கூடிய அந்தத் தீவனப் பணி செய்கின்ற அந்த விசேஷ அதிகாரியை இப்பொழுது பதவி நீக்கம் செய்யலாம் என்று அரசிலே ஒரு குறிப்பு இருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது. அந்த உதவி இயக்குநர், (கால்நடைத் தீவனப் பயிர்) என்கிற அதிகாரியை மாற்றாமல் அரசு அந்தப் பதவியை நீடிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, கால்நடை மருத்துவத்தையும், மனித மருத்துவத்தையும் ஒப்பு நோக்குகின்ற பொழுது ஒன்றானதுதான். உடல் வியாதி என்கின்ற பொழுது இரண்டு மருத்துவர்களும் ஒரே பணியைத் தான் செய்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் கால்நடை மருத்துவர்கள் வாயில்லா ஜீவன்களுக்கு வைத்தியம் செய்ய மிகுந்த அல்லல்களுக்கிடையே பணி செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய சம்பள விகிதத்தை ஒப்பு நோக்குகின்றபொழுது கால்நடை மருத்துவர்களைவிட மனித மருத்துவர்களுக்கு அதிகமாக 200 ரூபாய்க்கு மேல் வழங்கப்படுகிறது என்ற ஒரு கோரிக்கை என்னிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. பணி என்கின்றபொழுது, வைத்தியம் என்கின்ற காரணத்தினாலே இரண்டு வைத்தியர்களுக்கும் ஒரே விதமான சம்பள வீதத்தை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு நிலையத்தில் இருக்கின்ற மருத்துவர்களுக்குச் சிறப்பு ஊதியம் வழங்குவதாக மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் இந்த அவையிலே அறிவித்து ஆண்டுகள் இரண்டு ஆகியும் அவை இன்னும் வழங்கப்படவில்லை. அவற்றை வழங்க நீங்கள் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்,

கால்நடை மருத்துவர்களுக்குச் சிகிச்சைக்காக வெளியே செல்வதற்காக மோட்டார் சைக்கிளைத் துறையின் மூலமாகவோ அல்லது அவர்களுக்குக் கடன் வழங்குவதற்கோ நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை மற்றும் மருந்து தயாரிக்கும் நிலையங்களிலே இருக்கின்ற அந்தக் கால்நடை மருத்துவர்களுக்கு நான்—பிராக்டிசிங் அலவன்ஸ்—அவர்கள் பிராக்டிஸ் செய்யக்கூடாது என்று தீவிரமான சட்டம் இருக்கின்ற காரணத்தினாலே நீங்கள் கொடுக்க வேண்டுமென்று உங்களிடத்திலே அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கடைசியாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எவ்வளவு நேரம் கொடுத்தாலும் கடைசியாக, கடைசியாக என்பதுதானே பிரச்சினை சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: பேரவைத் தலைவர் அவர்களே இன்றைக்கு உறைவிந்தைப்பற்றி இரண்டு கருத்துக்களைச்சொல்லி விட்டு விடை பெறலாம் என்று நான் நினைக்கிறேன். உறை விந்தை உபயோகிக்கும் திட்டத்தில் அதனுடைய உபயோகம் அதனுடைய பலன் என்ன என்று பார்க்கின்றபொழுது 100மாடுகளுக்கு உறைவிந்தின் மூலமாக ஆர்ட்டிஃபிஷியல் இன்செமினேஷன் என்று சொல்லப்படுகின்ற அந்த செயற்கை முறைக்கருத்தரிப்பு செய்வீர்களேயானால் 20 மாடுகளுக்குத்தான் அந்த பலன் கிடைத்திருக்கிறது

என்று நீங்கள் கொடுத்திருக்கின்ற அந்தஅடிப்படைத் தகவலிலேயே இருக்கிறது. இந்த ஆண்டு தரக்கூடிய இந்த பாலிசி நோட்டிலேகூட 2,91,874 மாடுகளுக்கு உறை விந்து செலுத்தப்பட்டபொழுதுகூட 66,230 மாடுகள் தான் பலன் பெற்றிருக்கின்றன என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது செலுத்தப்பட்ட மாடுகளிலே 20 சதவீதம் மாடுகள்தான் பலன் பெற்றிருக்கின்றன என்று சொன்னால் இந்த நாட்டினுடைய மாட்டு வளர்ச்சி, இந்த நாட்டினுடைய பால் வளர்ச்சி, இந்த நாட்டினுடைய கால்நடை வளர்ச்சியைப் பாதிக்கக்கூடிய இந்த தவறு எங்கே நடக்கிறது என்பதை அரசு உடனடியாக ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத் தீர்வைத் துறை, முத்திரைத் தாள்கள் நிர்வாகம், பத்திரப் பதிவு, பால் வழங்குத் திட்டங்கள், கால்நடை வளர்ப்பு பற்றிய மானியங்களின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் ஆளுங்கட்சியின் சார்பிலும், எதிர்க்கட்சிகளின் சார்பிலும் தங்களுடைய மேலான கருத்துக்களை உரைத்தார்கள். பெரும்பாலும் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் கோரிக்கை களை ஆதரித்துப் பேசினார்கள். பல்வேறு மானியக் கோரிக்கை களில் சிறப்பாக கொள்கை விளக்கக் குறிப்பேடுகளிலே உள்ளதைப் பற்றி போற்றிப் பேசினார்கள். ஆனால் ஓரிருவர் ஆத்திரம் கொண்டு பேசியிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுக்கும் எனது பதிலைக் கொடுக்க வேண்டியது என்னுடைய கடமையாகும்.

(இரவு 6-50)

மாநில ஆயத்தீர்வைத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு ஆளும் கட்சி மதுவிலக்கை பூரணமாக அமல்படுத்த வேண்டுமா. வேண்டாமா என்பதைப் பற்றியும் அதை பகுதியாகத் தளர்த்தலாமா என்பதைப் பற்றியும் முடிவு செய்ய வேண்டியது அதனுடைய முழு உரிமையாகும். இந்தியப் பேரரசில் 24 மாநிலங்கள், அண்மையில் தோன்றிய இரண்டு மாநிலங்கள் உட்பட.பல்வேறு மாநிலங்களில் இந்த மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தாமல் இருக்கிறார்கள். குஜராத் மாநிலத்திலும் தமிழ் நாட்டிலும்தான் மதுவிலக்குக் கொள்கை அமல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் 1-1-1987-க்குப் பிற்பாடு பிராந்திக் கடைகள், அதாவது அயல்நாட்டு மதுபானங்கள் தவிர மற்ற எந்தவிதமான கள், சாராயம் போன்ற மதுக்கடைகள் அனுமதிக்கப்படமாட்டாது என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. குஜராத் மாநிலத்திலும் பெர்மிட் வைத்துக்கொண்டு அயல்நாட்டு மது வகைகளைச் சாப்பிடும் முறை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் தமிழக அரசு சார்பில் இதை ஒரு தேசியக் கொள்கையாக இந்தியப் பேரரசு அறிவிக்கிற வரையில் அல்லது சம்பந்தப்பட்ட அரசியல் சாசனத்தை திருத்துகிறவரையில் இதற்கு ஒரு தீர்வு காண்பது அரிது என்று சொல்கிறோம்;



இந்த புனிதமான கொள்கையை அமல்படுத்த முடியுமா, முடியாதா என்பதைப்பற்றி மாநில அரசின் தலையில் கட்டாமல் உண்மையிலேயே இது நல்ல கொள்கை என்று மனமார நம்பினால் அரசியல் சாசனத்தைத் திருத்தினால் ஒழிய ஒவ்வொரு மாநிலத் திலும் ஆளுங்கட்சியாக வருகிறவர்கள் ஒருதடவை கொண்டு வருவதும், பிற்பாடு தளர்த்துவதும் ஆக நடந்துகொண்டிருக் கிறது. அனைத்து இந்திய அண்ணா தி.மு.க.வைப் பொறுத்த வரையில் மதுவைக் கொண்டுவந்த பிறகு அது வேண்டாம் என்ற கொள்கை முடிவினை 1-1-1987 முதல் கடைபிடித்து, மதுவிலக்கை அமல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் மது அருந்தியவரிடத்திலே தடுமாற்றம் இருக்கும்; ஆனால் மது விலக்குக் கொள்கையை அமல்படுத்துகின்ற அரசுக்கு ஏன் தடு மாற்றம் என்று கேட்டார்கள். மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி முடிவு செய்ய ஒரு மாநில அரசுக்கு முழு உரிமை இருக்கிறது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அமல்படுத்த வேண்டுமா, வேண்டாமா என்பது அதனுடைய கொள்கை அல்லது பாலிசி ஆகும். அந்தவகையில் தனி ஒரு மனிதனுக்கு அல்லது யாருக்கோ பயந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தக் கொள்கையை அமல் படுத்தவோ அல்லது தளர்த்தவோ இல்லை. அதனுடைய ஒப்பற்றத் தலைவராக இருக்கிற மாண்புமிகு முதலமைச்சரும், அந்தக் கட்சியின் பொதுச் செயலாளருமாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மனதார எது மக்களுக்கு நன்மை என்று கருதினாரோ அதைச் செய்தார்கள். அந்தமுறையில் அவர்கள் மதுவிலக்கை கடுமையாக அமல்படுத்த வேண்டுமென்று கடுமையான சட்டங்களைக் கொண்டுவந்தார்கள். அதை எல்லாம் மீறி, இந்த நாட்டிலுள்ள ஆண்களானாலும், பெண்களானாலும் எல்லோரும் சிறைச்சாலைக்குச் சென்று பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தார்கள் என்பதால் இதற்காகப் போடப்பட்ட போலீஸ் கமிஷனரும், இதற்கு என்று அமைக்கப்பட்ட குழுவின் தலைவராக இருந்த, சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும் மற்றவர்களும் எல்லோரும் மதுவிலக்குக் கொள்கையினால் கள்ளச்சாராயம் அதிகமாகி விட்டது; ஆகையால் இது தேவையில்லை என்று சொன்னார்கள். அவர்களுடைய கருத்தை ஆராய்ந்து பார்த்த பின்னால் மதுவிலக்கைத் தளர்த்தினார்கள், மதுவைக் கொண்டுவந்தார்கள்

பிற்பாடு, ஒரு கோடி லிட்டருக்குமேல் ஒரு மாதம் மது சாப்பிடுகிற அளவுக்கு மக்கள் பழகிவிட்டார்கள்; தீங்கு அதிக மாகிவிட்டது. ஆகவே மது வேண்டாம் என்ற முடிவினை மேற் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1-1-1987-க்குப் பிறகு கள்ளுக்கடை, சாராயக் கடைகளை மூடிவிடுவது என்று முடிவு செய்தார்கள். அந்த முடிவினை அமல்படுத்துகிறோம். அமல்படுத்துகிறபோது கள்ளச்சாராயம் விற்கப்படுகிறது. தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று சொன்னார்கள்.

அதிலே அரசுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. எல்லோருக்கும் அதிலே அக்கறை உண்டு. ஆனால் அமல்படுத்துவதில் எவ்வளவு தீவிரமாக அமல்படுத்துகிறோம் என்பதற்கு அறிக்கையிலே புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறோம். மதுவிலக்கை அமல் படுத்துகிற பிரிவு என்று ஒரு பிரிவை தனியாக டி. ஐ. ஜி. தலைமையில் அமைத்து, அதற்காக தனியாக ஒரு போலீஸ் பிரிவு இயங்கிக்கொண்டிருக்கிறது.

கள்ளச்சாராயம் அருந்தி ஆயிரக்கணக்கானவர்கள் இறந்து விட்டார்கள், நூற்றுக்கணக்கானவர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால், 1–1–1987 க்குப் பிற்பாடு கோயம்புத்தூரில் ஒருவர் மெந்தலேட்டட் ஆல்ககாலை சூப்பர் மார்க்கெட்டில் வாங்கிக் குடித்து, அதன் காரணமாக இறந்து விட்டார். அதைப்போல திருவொற்றியூரில் ஒன்பது பேர் இறந்து விட்டார்கள் என்பது உண்மை. இது சம்பந்தமாக கவன ஈர்ப்பு கூட வந்திருக்கிறது. அப்போதே தகுந்த விளக்கம் கொடுத்திருக் கிறோம். நல்ல சாராயம் குடித்து இறந்துவிட்டார்கள் என்றால் சம்பந்தப்பட்ட யாராவது வருவாய்த் துறை அதிகாரியிடம் அல்லது அரசாங்க மருத்துவமனையில் போஸ்ட்மார்டம் செய்து சர்டிபிகேட் பெற்று தெரிவித்தால் ஏற்றுக்கொள்ளலாம். அது இல்லாமல் செய்தித்தாளிலே ஒரு செய்தியை வெளியிடுவதும், அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கானோர் இறந்துவிட்டார்கள் என்று சொல்வதும் நியாயம் அல்ல.

மதுவிலக்கு அமலில் இல்லாமல் இருந்தபோதுகூட அல்ல, இப்போதுகூட வேறுபல மாநிலங்களிலும் இது நடந்து கொண் டிருப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் அறிவார்கள். இந்தியாவில் இருக்கிற ஒரு மாநிலம், இரண்டு மாநிலம் என்பதில் மட்டுமல்ல. அது எந்த நாடாக இருந் தாலும், அமெரிக்காவாக இருந்தாலும், ஐரோப்பிய நாடாக இருந்தாலும் கள்ளச்சாராயம் காய்ச்சுவது என்பது, அதாவது ஆற்றோரங்களிலும், வனங்களிலும் காய்ச்சப்படுவது பற்றி, மதுவிலக்கு பற்றிய அறிக்கைகளில் அதாவது அந்த கமிஷன் போட்டிருக்கின்ற அறிக்கையைப் பார்த்தால் நன்றாகத் தெரியும். ஆனால் இதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து இதைப் பற்றி நாம் அதிகப்படுத்தி பேசிக்கொண்டு வருகிறோம்.

ஒரு ஆண்டிலே சாராயக் கடைகளையும், கள்ளுக் கடை களையும் மூடுவதால் மாத்திரம் 240 கோடி, 250 கோடி ரூபாய் என்ற அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ''இதற்காக நீங்கள் கவலைப்படவேண்டாம், அந்த பிராந்திக் கடைகளையும் எடுத்து விடுங்கள், காங்கிரஸ் பேரியக்கம் உங்களுக்குத் துணையாக இருக்கும்'' என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். 1987-88 ஆம் நிதியாண்டிற்குத் தேவையான பணத்தை அதாவது 100 கோடி ரூபாயை சராசரியாகக் கடனாகக் கொடுங்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டதற்கு இதுவரையில் பதில் இல்லை. மதுவிலக்கை அமல்



படுத்துகிறபோது நஷ்டஈடு தருகிறோம் என்று சொல்லி, 1977-78 ஆம் ஆண்டை அடிப்படையாக வைத்துத் தருகிறோம் என்று மத்திய அரசு சொல்கிறது. 1977-78-ல் பூரண மதுவிலக்கு அமலில் இருந்த காலம். எனவே அதனை அடிப்படையாக எடுத்துக்கொள்ள முடியாது. 1981-82-க்குப் பிறகு 31-12-1986 வரையில் இதுவரையில் தமிழ்நாட்டில் சாராயம் விற்பதனால் ஏற்பட்ட சராசரி வருமானம் எவ்வளவு என்று பார்த்தால் 200 கோடி இருக்கும். இப்படி 200 கோடி என்பதற்கு மேலே கூட போய் 240 கோடி, 250 கோடி என்று வருமானம் வந்தது. எனவே ஒரு 100 கோடியாவது தமிழக அரசுக்குக் கொடுக் கிறோம். என்று மத்திய அரசு முன்வந்தால்தான் இப்போது நாம் மதுவிலக்கினை பகுதியாக அமல்படுத்துவதை உற்சாகப் படுத்துவதாக இருக்கும். நாம் கஷ்டப்பட்டுத்தான் வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த பிராந்திக் கடைகளை மாத்திரம், ஏதோ இருக்கட்டும் என்று உல்லாசமான மன மகிழ்ச்சியுடன் நாம் அனுமதிக்கவில்லை. ஏற்கெனவே 31–12–1986 அன்றிருந்த சாராயக் கடைகளின் எண்ணிக்கை 6,076 ஆகும். கள்ளுக் கடைகளின் எண்ணிக்கை 5,450 ஆகும். பிராந்திக் கடைகளின் எண்ணிக்கை 953 ஆகும். சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கள்ளுக்கடைகளையும், சாராயக் கடைகளையும் மூடிவிட்ட தற்குப் பிறகு புதிதாக அனுமதிக்கப்பட்ட பிராந்திக் கடைகளின் எண்ணிக்கை 1,012 ஆகும். அந்த 1012-ஐ ஏற்கெனவே உள்ள 953 வுடன் கூட்டினால் 2,000-குள் தான் இருக்கிறது. ஆனால் கர்நாடக அரசிலும், ஆந்திரா அரசிலும் 3,000 அயல் நாட்டு மதுபானக் கடைகள் இருக்கின்றன.

ஒரு கோடி லிட்டர் சாராயத்தை தமிழ்நாட்டில் மது அமலில் இருந்தபோது அருந்தி வந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் சொன் னார்கள், ஒரு மாதத்திற்கு ஒரு கோடி லிட்டர் சாராயம் சாப்பிடுகிறவர்களுடைய கன்சம்ப்ஷன் என்று வைத்துக் கொண் டால் நாளொன்றுக்கு 3 லட்சம் லிட்டர் சாராயம் விற்பனை ஆனதாகப் பொருள். ஒரு லிட்டர் சாராயத்தை சுமார் 5 பேர் சாப்பிடுகிறார்கள் என்று கணக்கிட்டால் தினம் 20 இலட்சம் பேர் சாப்பிடுகிறார்கள் என்று ஆகும். அப்படி என்றால், ஒரு லிட்டர் சாராயத்தின் விலை 30 ரூபாய் என்று வைத்துக்கொண்டால், ஒரு லிட்டர் சாராயத்தை 5 பேர் சாப்பிடுகிறார்கள் என்று வைத்துக் கொண்டால் ஆள் ஒன்றுக்கு 6 ரூபாய் செலவு செய்ய வேண்டி இருக்கும். இந்தச் சாராயக் கடைகளை மூடுவதால் தினம் 20 இலட்சம் பேர் சாராயம் குடிப்பதைத் தவிர்க்கின்ற வகையில் நிலைமையை ஏற்படுத்த முடியும். அதனால் கிட்டத்தட்ட 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் பணம் சேமிக்கப்படுகிறது என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஏழைகள்தான் கள்ளையும் சாராயத்தையும் சாப்பிடுகிறார்கள். கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் எடுத்துவிடுகின்ற அளவுக்கு வெளிநாட்டு மதுபானக் கடைகளையும் எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு

உறுப்பினர்கள் மட்டும் கேட்கவில்லை; சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு கூட போட்டிருக்கிறார்கள். இப்படி தமிழ்நாடு அரசை எதிர்த்து வழக்கு போட்டிருக்கின்ற நிலைமையும் இருக்கிறது. அயல்நாட்டு மதுபானத்தைப் பொறுத்தவரையில் ஒரு லிட்டர் விலை 60 ரூபாய் முதல் 100 ரூபாய் வரையில் இருக்கிறது. வெளிநாட்டு மதுவினை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சம்தான். எனவே இதைச் சாப்பிடுகிறவர்களின் எண்ணிக்கை குறைவுதான். பணக் காரர்கள்தான் இதைச் சாப்பிடுவார்கள். ஆகவே ஆழமாக சிந்தித்து புரட்சித்தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தின்மூலம் ஏழைக் குடும்பங்கள் 20 இலட்சம் பேர்களின் வீட்டில் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் சேமிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கள்ளச் சாராயத்தைத் தடுக்கின்ற வகையில் மாதம் ஒன்றுக்கு 10,000

(இரவு 7-00)

வழக்குகள் போடப்படுகின்றன. பலபேர் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். எவ்வளவு வழக்கு போடப்பட்டிருக்கிறதோ அதைவிட அதிகமாக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சில பேர்கள், சில இடத்தில் அது மாதிரி இருக்கிறது. என்று தகவல் கொடுக் கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் வார் மெமோரியலுக்குப் பக்கத்தில் கள்ளச்சாராயம் விற்கப்படுவதாகச் சொன்னார்கள். 31-3-87 அன்று இரவு 8 மணிக்கு ஊரான் எங்கிற காசிநாதன் கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து 190 லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

திண்டிவனத்தில் கள்ளச் சாராயம் விற்கப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அதில் 108 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. திருச்சி பகுதி, தென்னாற்காடு மாவட்டப் பகுதி இரண்டிலும், அந்த மாவட்ட போலீஸ் அல்லாமல் பக்கத்து மாவட்ட போலீஸ்துறை அதிகாரியின் தலைமையில் ரெய்ட் செய்துகள்ளச் சாராயம் கலப்பவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கள்ளச் சாராயம் கலப்பதற்கு யாராவது வியாபாரிகள் மூட்டை மூட்டையாக வெல்லம் மற்ற பொருட்கள் போன்றவற்றை சப்ளை செய்தால் தகவல் அறிந்து அவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். டி.ஐ.ஜி. புரொஹிபிஷன் அவர்களின் தலைமையில் நேரிடையாக உள்துறைசெயலாளரே ஈடுபட்டு இவ்வளவு தூரம் நடந்திருப்பது போல் வேறு எந்த சர்க்காரிலாவது நடக்குமா என்பது சந்தேகமே.



1963 ஆம் வருடம் டேக்சந்த் என்ற ஒருவரிடம் மதுவிலக்கு சம்பந்தமாக அன்றைய முதலமைச்சர் சொன்னது:

1963 TEK CHAND

> There were a few addicts in each village and if a permit system can be devised for distribution of arrack to them at the cost price plus a small Excise Duty, illicit distillation could be got under control.

இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்று சொன்னால் கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழித்து விட வேண்டும் என்றால் எல்லோரும் சேர்ந்து பாடுபடவேண்டும். அது எல்லோருக்கும் தெரியும். தெரிந்துதான் பேசுகிறோம், ஒரு நாட்டில் கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காக கையையே வெட்டினார்கள். கையை வெட்டினாலும் திரும்பவும் போய் அதையே தான் செய்கிறார்கள். கணவனை கைது செய்தால் மனைவி அந்தத் தொழிலை செய்கிறார். கணவன் மனைவி இருவரையும் கைது செய்தால் அவர்கள் குழந்தை அந்தத் தொழிலைச் செய்கிறது. இப்படி இருக்கும் இந்த தொழிலை அடியோடு நிறுத்துவது என்பது சற்று சிரமமான விஷயம் தான். எல்லோரும் சேர்ந்து ஒருமுகமாக இதில் ஈடுபட வேண்டுமே தவிர, இது வெற்றி யடையவில்லை என்று கேவலமாகப் பேசக் கூடாது என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

15-2-87 அன்று 15 சாராய புட்டிகளை கைப்பற்றி மேரி மைக்கேல் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொன்னார்கள். அந்த இடத்தில் கட்டட வாட்ச்மேன் தங்கும் இடத்தில் கள்ளச் சாராயம் இருந்தது என்பதற்காக அவரும் கைது செய்யப் பட்டிருக்கிறார். அங்கிருந்து 456 சாராய புட்டிகள் கைப்பற்றப்பட்டன. கருப்பையா என்ற காவலரும் அவருடைய கூட்டாளி மாரியப்பன் என்பவரும் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள், இந்த வழக்கு சம்பந்தமாக ஒருவர் நீதிமன்றத்திற்குச் சென்று சரண் அடைந்திருக்கிறார்.

நாட்ராம்பள்ளியிலும் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங் களிலும் கள்ளச்சாராயம் காய்ச்சுவதாக ஒருவர் உண்ணாவிரதம் இருந்தார். ஆனால் அப்பகுதியில் 1-1-87 ஆம் தேதிக்குப் பிறகு ஜனவரித் திங்களில் 3 வழக்குகளும், பிப்ரவரித் திங்களில் 10 வழக்குகளும், மார்ச் திங்களில் 5 வழக்குகளும் போடப் யட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் 10 வழக்குகள் கள்ளச் சாராயம் விற்றதற்கும், 4 வழக்குகள் கள்ளச் சாராயம் வைத் திருந்ததற்கும், 4 வழக்குகள் கள்ளச் சாராயம் காய்ச்சியதற்கும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இப்படி பல்வேறு இடங்களில் பல்வேறு முறைகளில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திருவொற்றியூரில் நடந்த அந்த துக்ககரமான சம்பவம், கோயம்புத்தூரில் நடந்த சம்பவம் இரண்டிலும் சம்பந்தப்பட்ட எல்லா குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க எல்லோரும் முயற்சிசெய்ய வேண்டும்; மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கடுமையாகப் பேசினார்கள். அவர் பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர், எங்காவது எந்த போலீஸ் அதிகாரியிடமாவது அல்லது அமைச்சரிடமாவது சொல்லி இந்த இடத்தில் கள்ளச் சாராயம் இருக்கிறது என்று சொல்லி ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அவர் சொல்வதில் பொருள் இருக்கிறது என்று ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் நாங்கள் ஏற்கெனவே உத்தரவு இட்டிருக்கிறோம், செய்தித் தாள்களில் அறிவித்து இருக்கிறோம். யாராக இருந்தாலும் கள்ளச் சாராயத்தை காய்ச்சுகிற செய்தி கிடைத்தாலே கள்ளச் சாராயத்தைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் போலீஸ் பிரிவினுடைய டி.ஐ.ஜி.-க்கும் அவருடைய அலுவலகத்திற்கும் கடிதம் எழுதினாலே போதும், நடவடிக்கையெடுக்கப்படும். அதற்குத் தனியாக ரெஜிஸ்டர் வைத்திருக்கிறோம். கையெழுத்து போட்டு மனு வந்தாலும் மொட்டைக் கடுதாசியாக வந்தாலும் அவைகள் பதிவு செய்யப்படுகின்றன. தினம் நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இரவு பகலாக போலீஸ் காரர்கள் ரோந்து சுற்றி ரெய்டு செய்து நடவடிக்கையெடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு காலையில் கூட பார்த்திருப்பீர்கள். பல்லாயிரக்கணக்கான மதிப்புள்ள வேன்கள்; ஆட்டோ ரிக்‌ஷாக்கள், ஜீப்புகள் எல்லாம் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே கள்ளச் சாராயத்தை கூடுமானவரையில் இந்த அரசு எவ்வளவு கடுமையாக அடக்க முடியுமோ, அந்த அளவிற்கு அடக்கி வருகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரப் பதிவு, மூத்திரைத் தாள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களும், மற்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். முத்திரைத்தாள் பற்றாக்குறை பற்றி நான் முதலில் சொல்ல வேண்டும். ஏற்கனவே இதுபற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் அளிக்கப்பட்டு நான் விளக்கமாக பதில் அளித்திருக்கிறேன். இருந்தாலும் தெரிவிக்கிறேன், முத்திரைத் தாள் அல்லது பத்திரத் தாள் என்பது நாசிக் பிரஸ்ஸில் அடிக்கப்படுகிறது. நம்முடைய ஆண்டு தேவையை நாம் முன் கூட்டியே அவர்களுக்குத் தெரிவிக்கிறோம். அப்படியும் கிடைக்கவில்லையென்றால் தபால் எழுதுகிறோம். தனியாக இலாக்காவிலிருந்து அதிகாரிகளை அனுப்புகிறோம். இவ்வளவு செய்தும் குறித்த காலத்தில் அவை கிடைப்பதில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். முத்திரை கண்காணிப்பாளரால் 1986-ம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் செப்டம்பர் திங்கள் வரைக்கான தேவைக்கு 125 கோடி ரூபாய் அளவிற்கு தேவைப்பட்டியல்



அனுப்பப்பட்டது. அதற்கு நாசிக் அச்சகம் 23.92 கோடி ரூபாய்க்கு மட்டுமே முத்திரைத் தாள்களை அனுப்பியது, பிற்பாடு அக்டோபர் 1986 முதல் டிசம்பர் 1986 வரையில் 122.9 கோடி ரூபாய்க்கு இன்டென்ட் செய்யப்பட்டதில் 22.11 கோடி ரூபாய்க்கு மட்டுமே முத்திரைத் தாள்கள் அனுப்பப்பட்டன. அடுத்து ஜனவரி 1987 முதல் ஜூன் 1987 வரைக்குமான காலத்திற்கு இன்டென்ட் ரூ. 333.79 கோடிக்கு செய்யப்பட்டிருக்கிறது; தற்போது 44.87 கோடி ரூபாய் மதிப்புள்ள முத்திரைத் தாள்கள் கைவசம் உள்ளன. ஆகவே, முத்திரைத் தாள்கள் அல்லது இந்தப் பத்திரங்கள் இல்லையென்ற குறையில்லாமல் இந்தத் துறை கவனமாகப் பார்த்துக் கொள்ளும். அப்படி முத்திரைத்தாள் அல்லது லேபிள் இல்லையென்று சொன்னால் முத்திரைச் சட்டம் பிரிவு 41-ன் கீழ் பணம் பெற்றுக்கொண்டு சப் ரெஜிஸ்ட்ரார் பதிவு செய்யலாம். அதற்கு சரியான விளம்பரம் இல்லாமல் இருந்தால் விளம்பரப்படுத்துவதற்கு நாம் சார்பதிவாளர்கள் மூலம் நடவடிக்கையெடுப்போம்.

அடுத்து இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் சொன்னார்கள். அப்படி நான்—ஜூடிஷியல் ஸ்டாம்ப் இல்லையென்றால் சப்—ரெஜிஸ்ட்ரார் முன்பு ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டி செய்யலாம். கோர்ட்டுகளில் இருக்கிற ஸ்டாம்ப் அதாவது ஜூடிசியல் ஸ்டாம்ப் பற்றி சொல்கிறபோது அந்தப் பத்திரமும் இருப்பதில்லை, கேட்டால் குறைந்த மதிப்புள்ள பத்திரங்களை அதிகமாகக் கொடுக்கிறார்கள். அதற்குக் காரணம் குறைந்த டினாமினேஷன் உள்ள ஸ்டாம்பை விற்றால் அதற்கு கமிஷன் அதிகம் கிடைக்கும், அதே நேரத்தில் அதிக மதிப்புள்ள ஸ்டாம்புகளை விற்றால் கமிஷன் குறைவு என்ற முறையில் அவர்கள் 10 ஆயிரத்திற்கு ஸ்டாம்ப் கேட்டால் கொஞ்சம் மதிப்புள்ள பத்திரங்களை அதிகமாகக் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் கூடச் சொன்னார்கள். வெட்டுத் தீர்மானமெல்லாம் கொடுத்தார்கள். Court Fees and suits valuation Act Section 81 சென்னை உயர் நீதிமன்றத் தலைமைநீதிபதி அவர்களைக் கலந்து அனுமதி பெற்று அந்த விதியைத் திருத்தினால் இந்த பத்திரமில்லையென்ற குறையைப் போக்கலாம். முன்சிப் கோர்ட்டில் தலைமை எழுத்தர் அல்லது சிரஸ்ததார் அல்லது அங்கேயுள்ளவர்களிடம் பணத்தைக் கட்டிவிட்டு ஆயிரம் ரூபாய்க்கான சலானை வாங்கிக்கொண்டு வந்து பதிவு செய்கிற காரியத்தையும் செய்யலாம். இன்னொன்றையும் சொன்னார்கள். ரெஜிஸ்ட்ரேஷன் செய்வதில் Equitable Mortgage என்பதை ரெஜிஸ்டர் பண்ணவேண்டுமென்று சொன்னார்கள். அது மிகவும் நியாயமானது. அதுபற்றி அரசு ஆய்ந்து நடவடிக்கையெடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தை எல்லோரும் சொன்னார்கள். ஆளும் கட்சித் தரப்பிலும் சொன்னார்கள், எதிர்க்கட்சித் தரப்பிலும் சொன்னார்கள். கைட்லைன்ஸ் வேல்யூ, வழிக்காட்டும் கொள்கை என்பது நிலங்களுக்கு மதிப்பீடு செய்வது பன்மடங்கு அதிகமாகி இருக்கிறது. அது உண்மையைப் பிரதிபலிக்கவில்லை. நீங்கள் அதற்கு சரியான பரிகாரத்தைத் தேடலாமென்றாலும் கிராமத்து மக்களுக்குப் புரியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதுபற்றி மறுபரிசீலனை செய்யவேண்டும். நிலத்தின் விலையை விட பத்திரத்தின் விலை அதிகமாக இருக்கிறதென்றெல்லாம் சொன்னார்கள்.

(இரவு 7-10)

இந்த விஷயத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொல்லி, எப்படி பரிகாரம் கொடுக்க முடியுமோ, அப்படிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்பதை நான் பணிவன்புடன் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த முத்திரைத் தாள் விற்பதில் கமிஷன், குறைந்த மதிப்புள்ள பத்திரங்கள் விற்றால் அதிகம், அதிக மதிப்புள்ள பத்திரங்களை விற்றால் குறைவு என்பதை நாம் ஒரு சீர் ஆய்வு செய்து, ஒரு நடவடிக்கை எடுப்பதற்குள் முத்திரைத்தாள் விற்பவர்கள் சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். ரிட் பெட்டிஷன் போட்டிருக்கிறார்கள். அவர்களை அழைத்து, அல்லது அந்தச் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி, எப்படியிருந்தால் நியாயமாக இருக்கும் என்ற முறையில், பேச்சு வார்த்தை நடத்தச் சொல்லி அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் பல இடங்களில் சார் பதிவாளர் அலுவலகங்கள் வேண்டுமென்று கேட்டார்கள். சார் பதிவாளர் அலுவலகம் தமிழ்நாட்டில் இருப்பது மொத்தம் 567 ஆகும். அரசுக் கட்டிடங்களில், சொந்தக் கட்டிடங்களில் உள்ளவைகள் 286 ஆகும். வாடகைக் கட்டிடத்தில் உள்ளவை 281 ஆகும். இவைகளுக்கு அதிகமான வாடகை இருக்கிறது, ஆகவே ஏன் சொந்தக் கட்டிடம் கட்டக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள், இதைக் கருத்தில் கொண்டு, பதிவுத் துறைத் தலைவர் அவர்கள் 34 சார் பதிவாளர் அலுவலகங்களை ஏற்படுத்தலாம் என்று அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஒரு சார்-பதிவாளர் அலுவலகம், - சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ்—தோன்றுவதற்கு. திறப்பதற்கு சில இலக்கணங்கள் வேண்டியிருக்கின்றன. ஒரு ஆண்டுக்கு ஆயிரம் பத்திரங்கள் பதிவு செய்யப்படவேண்டும், அப்படி பதிவு செய்யப்பட்டால் அந்த இடத்தில் சார்-பதிவாளர் அலுவலகம் திறக்கப்படும். இதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கேயாவது ஆயிரம் பத்திரங்கள் பதிவு செய்யப்படும் வாய்ப்பு இருந்து, அங்கே சார்-பதிவாளர் அலுவலகம் துவக்கப்படவில்லை என்று சொல்வார்களானால் அரசு அதை ஆய்வு செய்து அங்கே



திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கும். அந்த முறையில் இதுவரையில் 34 சார்–பதிவாளர் அலுவலகங்கள் தேவை என்று, பதிவுத் துறைத் தலைவர் சர்க்காருக்கு பரிந்துரை செய்திருக்கிறார். இம்மறையதிலம் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் ஊர்களில் சார்–பதிவாளர் அலுவலகம் வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் இதனைப் பற்றியும் ஆய்ந்து, ஆயிரம் பத்திரங்கள் குறைந்தது அங்கே பதிவு செய்யப்படும் நிலைமை இருக்குமானால் அந்த இடத்தில் சார்–பதிவாளர் அலுவலகங்கள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பக்கத்தில் உள்ள கேரளாவில் பதிவு செய்யும் கட்டணம் குறைவாக இருப்பதால்— கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பல பேர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சொத்தை பெரும்பாலும் எழுதிக்கொண்டு, கற்பனையாகவோ, அல்லது ஒரு பனை மரமோ, அல்லது ஒரு சென்ட் நிலத்தையோ கேரளாவில் வைத்துக்கொண்டு, இரண்டையும் இணைத்து கேரளாவில் பதிவு செய்து கொண்டு, அந்தப் பத்திரத்தை தமிழ் நாட்டுக்கு அனுப்பாமல் இருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்குள் கேரளாவில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வரவேண்டும். அப்படி வரவில்லை என்றால், 'டைம் பார் லிமிட்டேசன்' காலாவதியாகி விடும். நடவடிக்கை எடுக்க முடியாது. அப்படி அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள் என்ற தகவல் வந்து, இப்போது இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47 ஏ (3)-ன்படி மதிப்பு குறைவாக கொடுத்து, கேரளாவில், தமிழ்நாடு சர்க்காரை ஏமாற்றுவதற்காக பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் 3,788 என்று கண்டுபிடிக்கப்பட்டு, அவைகள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. அதனால் தமிழ்நாட்டுக்கு 54.48 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாகவும், அவர்கள் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றும், நடவடிக்கை எடுத்த வகையில், அரசு 1,59,707 ரூபாயை இதுவரையில் வசூல் செய்திருக்கிறது. மீண்டும் வசூல் செய்யும்.

கால்நடை பராமரிப்பு பற்றி பேசும்போது மாண்புமிகு உறுப்பினர்கள், சர்க்கார் எடுத்த நடவடிக்கைகளின் மூலம் பால் உற்பத்தி அதிகமாகி இருப்பதைப் பற்றிப் பேசினார்கள். கோழி முட்டை அதிகமாகி இருப்பதைப் பற்றிப் பேசினார்கள். இறைச்சி எவ்வளவு கிடைக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். தமிழ்நாட்டில் கால்நடை மருந்தகங்கள் ஏற்பட வேண்டும் என்று சொன்னார்கள். உறைவிந்து கருவூட்டல் மூலம் தான் நல்ல கலப்பின, அதிக பால் தரும் மாட்டை உற்பத்தி செய்ய முடியும் என்றெல்லாம் வற்புறுத்தி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். தேசிய அளவை விட தமிழ் நாட்டில்,—'ஸ்டேட் அவெய்லபிலிட்டி', அதிகம்.—அகில இந்திய அளவில் ஒரு நாளைக்கு தனி நபருக்கு கிடைக்கும் பால் 142

கிராம், ஆனால் தமிழ்நாட்டில் தனி ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கும் பால் 165 கிராம்.

முட்டையைப் பற்றி சொல்லுபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் வருத்தப்பட்டார்கள். இருந்தாலும் நேஷனல் ஆவரேஜ், வருட ஆவரேஜ் 20 முட்டைகள். ஆனால் தமிழ்நாட்டில் 38 முட்டைகள் ஒரு ஆண்டுக்கு கிடைக்கிறது. அது குறைவு என்று நான் ஒத்துக் கொள்கிறேன். மேலும் அதிகமாக பால் வளத்தைப் பெருக்க வேண்டும், முட்டை வளத்தைப் பெருக்கவேண்டும், இறைச்சி வளத்தைப் பெருக்க வேண்டும்.

மாடுகள் கேரளாவுக்கு கடத்தப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசு உத்திரவிட்டு ஆய்வு செய்து இருக்கிறது. பால் தரும் மாடுகளை அங்கு அனுப்புவதை கடுமையாக நாம் மேற்பார்வை செய்து கொண்டு இருக்கிறோம். அந்த முறையில் நாம் தடை செயதால் என்ன என்று கேட் கிறார்கள். தடை செய்வதற்கு மத்திய அரசைக் கேட்கவேண்டும்.

தமிழ்நாட்டில் வைக்கோல் இல்லை. ஆகவே நாம் நம் மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு கொண்டு போகக்கூடாது என்று இப்போது தடை செய்து இருக்கிறோம். ஆனால் மாநிலத்திற்குள் எந்த மாவட்டத்திற்கும் போகலாம் என்ற நிலைமை இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலச்சந்திரன் அவர்கள் பேசும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் தடை இருப்பதாகச் சொன்னார்கள். அவர் பேசிய பிறகு மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது கன்னியாகுமரி மாவட்டத்தில் அப்படி ஒரு தாலுக்காவிலிருந்து மற்றொரு தாலுக்காவுக்கு வைக்கோலை கொண்டு போவதை தடை செய்யவில்லை என்று அவர் பதில் சொல்லியிருக்கிறார். ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தாலுக்காவிலிருந்து இன்னொரு தாலுக்காவிற்கு எடுத்துக் கொண்டு போகலாம். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லியது கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வைக்கோலை கேரளாவுக்கு கொண்டு போவதைத் தடை செய்து இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தடையை அடிக்கடி ஏன் நீட்டிக்க வேண்டும், நிரந்தரமாக ஏன் போடக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் கேட்டார்கள். இதைப்பற்றி நீட்டுவதற்கும், நிரந்தரமாக தடை செய்வதற்கும் மத்திய அரசுக்கு அண்மையில் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதினார்கள். அதைத் தொடர்ந்து நானும் கடிதம் எழுதியிருக்கிறேன்.



உலக வங்கியின் பிரதிநிதிகளும், ஐரோப்பாவின் பொருளாதாரக் குழுவினுடைய பிரதிநிதிகளும் கடந்த 2 நாட்களாக தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பால் வள திட்டங்களைப் பார்வையிட்டார்கள்; ஆய்வு செய்தார்கள். அவர்கள் ஆனந்துக்கு அடுத்தபடி, ஏன் இணையாக தமிழ்நாட்டில் இந்த பால் வளத் துறை நன்றாக முன்னேறிக் கொண்டு இருக்கிறது என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். 3-வது பால் வள பெருக்கத் திட்டத்திற்கு தமிழ்நாட்டிற்கு பணம் கிடைக்குமோ, கிடைக்காதோ என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். அந்தக் குழுவினர் என்னிடம் நேரில் பேசியதில் இருந்தும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்துப் பேசியதில் இருந்தும் நிச்சயமாக அவர்கள் 3-வது பால் வள பெருக்கத் திட்டத்திற்கு பல கோடி ரூபாயை தமிழகத்திற்கு வழங்குவார்கள். காரணம் தேர்தலே இல்லாமலேயே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசில் இவ்வளவு அழகாக சுமார் 17 புள்ளி சொச்சம் லட்சம் விவசாயிகளுக்கு 130 கோடி ரூபாயை பாலை பெறுவதன் மூலம், பால் உற்பத்தியை கொள் முதல் செய்வதன் மூலம் நாம் கிராம மக்களுக்கு வழங்குகிறோம் என்பதைப் பார்க்கும்போது, அவர்கள் பிரமித்துப் போய் விட்டார்கள். 17 புள்ளி சொச்சம் லட்சம் கிராம விவசாயிகளுக்கு வருடத்திற்கு 130 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள பாலை நாம் விற்று பணத்தைக் கொடுக்கிறோம். கள்ளக்குறிச்சி, சின்னசேலம் போன்ற இடங்களில் உள்ள இந்த பால் உற்பத்திச் சங்கங்கள் இன்கம் டாக்ஸ் செலுத்துகின்றன. அவர்கள் உறுப்பினர்களுக்கு கொடுத்த போனஸ் போக அவர்கள் இன்கம் டாக்ஸ் செலுத்து கிறார்கள். அவர்கள் அவ்வளவு அருமையாக அந்தச் சங்கங்களை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பாலில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பலவகைப் பொருட்கள், அது நெய் ஆக இருந்தாலும் சரி, ஐஸ் கிரிம் ஆக இருந்தாலும் சரி, யோகர்ட்டாக இருந்தாலும் சரி, ஆகாய விமானத்திலும், மலேசியா வரையிலும், குஜராத் மாநிலம் வரையிலும் நம்முடைய புகழை அது பரப்பிக் கொண்டிருக்கிறது. அந்த முறையில் இந்த பால் வளத் துறையை மேலும் பலப்படுத்துவதற்கு கிராம மட்டத்தில் தேர்தலும், பிறகு மாவட்ட அளவில் தேர்தலும், பிறகு மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மூலம் இணையத்தில் பிரதிநிதிகளை ஏற்படுத்துவதற்கு விரைவில் தேர்தல் முறைகளை முடுக்கி விடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். நான் ஏற்கனவே திட்டத்தைக் கொடுத்து இருக்கிறேன். அந்த உலக வங்கி பிரதிநிதிகளிடமும், ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமும் உறுதி அளித்து இருக்கிறோம். அப்போது முதலில் கிராமப்புற அளவில் தேர்தலும், பிறகு அவர்களிடமிருந்து மாவட்ட அளவில் தேர்தலும், மாவட்டத்தில் இருந்து இணையத்திற்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கும் ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பால் உற்பத்தி செய்பவர்களுக்கு விலையை உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதையும் ஆய்ந்து கொண்டு இருக்கிறோம். விரைவில் விலையைக் கூட்டிக் கொடுப்பதற்கு பால் வளத்துறை நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனைகள் பல்வேறு ஊர்களில் தோன்ற வேண்டும் என்பதுதான் தமிழக அரசினுடைய கொள்கையாகும். மொத்தமாக இதுவரை 782 கால்நடை மருந்தகங்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு கால்நடை மருந்தகம் என்ற வகையில் 129 பஞ்சாயத்து யூனியன் களில் கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன. 204 பஞ்சாயத்து யூனியன்களில் 2 கால்நடை மருந்தகங்கள் வீதம் இருக்கின்றன. 42 பஞ்சாயத்து யூனியன்களில் 3 கால்நடை மருந்தகங்கள் வீதம் இருக்கின்றன. இப்படி கால்நடை மருந்தகம் இல்லாத பஞ்சாயத்து யூனியனே தமிழ்நாட்டில் இல்லை. 20,000 கால் நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் வேண்டுமென்பதுதான் 'National Commission on Agriculture' என்ற குழுவினால் தரப் பட்ட ஆலோசனை ஆகும். ஆனால் நம்முடைய தமிழக அரசு 15,000, 12,000 கால்நடைகளுக்கு ஒரு மருத்துவமனை என்ற முறையை வைத்திருக்கிறது. மேலும் அதை விரிவுபடுத்த, 10,000 கால்நடைகளுக்கு ஒரு மருத்துவமனை என்ற அளவில் விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

(இரவு 7-20)

ஏற்கனவே உள்ள இரண்டு இடங்களைத் தவிர 1,294 உறைவிந்து நிலையங்கள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஆர். வேங்கடரமணன் அவர்கள் சொன்னது போல், நம் நாட்டு தட்பவெப்ப நிலைக்கேற்ப இந்த உறைவிந்து கருவூட்டல் 100 சதவீத அல்லது 50 சதவீத பலன் தரவில்லை. குறைந்துதான் தருகிறது. அது ஏன் குறைந்திருக்கிறது, அதை அதிகப்படுத்த என்ன செய்ய வேண்டுமென்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்.

சேலம், தர்மபுரி மாவட்டம் ஒன்றாக இருந்தது. இப்போது அதைத் தனியாகப் பிரித்து, அதற்கென்று தனியாக 'ஜாயிண்ட் டைரக்டர்' போடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக் கிறோம். இங்கிலாந்தில் கால்நடை மருத்துவ பட்டப்படிப்பு தோன்றுவதற்கு முன்பாக தமிழ்நாட்டில் புரசைவாக்கத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி தோன்றியதாகும். அதை நினைவில் கொண்டு, புரட்சித் தலைவர் அவர்கள் டில்லிக்குச் சன்று, தமிழ்நாட்டில் கால்நடை மருத்துவப் பல்கலைக் ழகத்தைத் துவக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். த்திய அரசும் பல்கலைக் கழகத்தைத் துவக்குவதற்கு தாங்கள் று துணையாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.



கொள்கைக் குறிப்பேட்டில் 1987–88-ல் சுமார் ரூ. 73 இலட்சத்திற்கு என்னென்ன திட்டங்கள் தமிழகத்தில் அமல் படுத்தப்படவிருக்கின்றன என்பதை எழுதியிருக்கிறோம். ஆகவே தமிழகத்தினுடைய கொள்கைகள் பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் உங்களுக்கு விளக்கப் புத்தகம் மூலமாக வெளி யிடப்பட்டிருக்கிறது. நல்ல கருத்துக்களை நீங்கள் சொல்லி யிருக்கிறீர்கள். நானும் உங்களுக்கு என்னுடைய பதிலைச் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் தாங்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணைகளை திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் மட்டும் கேள்விகள் கேட்கலாம்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையில் 1500 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்ட, மிக முக்கியமான நீண்டகாலமாக தீர்க்கப்படாத பிரச்சினைபற்றி நான் வினாவாகத் தொடுத் திருந்தேன். அமைச்சரிடமிருந்து பதில் பெறுவதற்காக, நான் குறிப்பிட விரும்புவது, நேரடியாக தொழிற்சங்கத் தரப்பிலிருந்து, கோர்ட்டிற்குச் செல்லாமலே பேசிமுடிக்க காலத்தையும், நேரத்தையும் ஒதுக்கிக் கொடுத்து, சுமுகமான தீர்வு காணமுடியும் என்று சொல்லி, அதன்படி தொழிற் சங்கத்தை அழைத்துப் பேசி, சுமுகமான முடிவு காண அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்த வழக்கு தொழில் கோர்ட்டிற்கு முன்பு இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த வேண்டுகோளின்படி சம்பந்தப்பட்ட துறை, தொழிலாளர் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தும்.

**திரு. சே. குப்புசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது பால் வளத்தைப் பொறுத்தவரையில், மதுரைக்கும், அண்ணாவிற்கும் இரண்டுமாகச் சேர்த்து, மதுரையில் இருக்கின்ற மாவட்ட பால் வள ஒன்றியத்தை அண்ணா மாவட்டத்திற்கு என்று தனியாகப் பிரித்துக் கொடுப்பார் என்று எதிர்பார்த்தேன். அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதோடு, 'லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களுக்கு' 'ரிஸ்க் அலவன்ஸ்' கொடுப்பது பற்றிச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அரசு என்ன கருதியிருக்கிறது, என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதையும், அத்தோடு முத்திரைத்தாள்கள் பொறுத்த வரையில் ஏற்கனவே ஒரு ஜி.ஒ. வந்திருக்கிறது. அந்த ஜி.ஓ.படி எண். 1192, நாள் 21-11-1986, சி.டி. & ஆர்.ஈ. 'கைடுலைன் வேல்யூபடி' It is not a substitute for the market value and it need not be necessarily followed, என்று அந்த 'கைட்லைன்ஸ்,

ஜி.ஓ.வில் இருக்கிறது. அதையும் மீறி, 'கைட்லைன்ஸ் வேல்யூவை' விட அதிகமாக முத்திரைத்தாள்கள் வாங்கவேண்டுமென்று பதிவாளர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். அதனால் சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி கைட்லைன்ஸ் வேல்யூவை பின்பற்றக்கூடாது என்று அரசு சுற்றறிக்கை ஏதாவது அனுப்ப உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சார்பதிவாளர்களிடம் ஏற்கனவே கொடுக்கப்பட்ட வழிகாட்டி கொள்கைகள் அவர்களுடைய யோசனைக்குத்தானே தவிர வற்புறுத்தக்கூடாது. அப்படி எங்காவது வற்புறுத்தி அல்லது அந்த வழிகாட்டி கொள்கையோடு இன்னமும் அதிகமாக கட்ட வேண்டுமென்று சொன்ன குறிப்புகள் இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கான ஆய்வு அரசிடம் இருக்கிறது என்று சொன்னதற்கு நன்றி. அதே நேரத்தில் கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள கால்நடை உதவி மருத்துவர்கள் பணி, ஆய்வாளர் பணி, தடுப்பு ஊசியாளர்கள் பணி இவற்றை எல்லாம் நிரப்புவதற்கு அரசு எடுத்த முயற்சியைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றும் குறிப்பிடவில்லை.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சியை 120 பேர்கள் ஒரத்தநாட்டில் பற்றுக்கொண்டு இருக்கிறார்கள். ஏற்கனவே உள்ள இன்ஸ்பெக்டர்களை நாம் இந்தப் பயிற்சிக்கு அனுப்புவதால் இடம் காலியாக இருக்கிறது. மருத்துவ பட்டபடிப்பு பெற்ற டாக்டர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதினால் சில இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆனால் இந்த ஆண்டு முடிந்தவுடன் 50 சதவீதம் காலியான இடங்கள் நிரப்பப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொடங்கப்படுவதாக இருந்த நவீன இறைச்சிக் கூடத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றும் குறிப்பிடவில்லை. நவீன இறைச்சிக் கூடம் இந்த ஆண்டு தொடங்கப்படுமா? அதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்கின்ற வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவா? இதன்மீது அரசு என்ன கொள்கை வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இதற்கென்று ஒரு குழு நியமிக்கப்பட்டு வேறு எந்த இடத்தில் இறைச்சிக் கழகம் ஆரம்பிக்கலாம் என்ற கருத்தை தரச்சொல்லியிருக்கிறோம். அதைத் தந்தவுடன் செய்யலாம். அந்த இறைச்சிக் கழகம் ஆரம்பிப்பதற்கு முன்பு இறைச்சி போதுமான அளவுக்கு கிடைப்பதற்கு ஆடுகளை வளர்ப்பதற்கும் அல்லது வாங்குவதற்கும் ஒரு திட்டமிட வேண்டும். அதை நாம் முதலிலே செய்யவேண்டும்.





திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வழக்கம்போல், விளக்கமாக மிக விரிவாக பதில் சொன்னார்கள். மிக்க நன்றி. ஆனால் கால்நடை மருத்துவர் களுக்கு சித்த வைத்தியர்களுக்கு இணையான ஊதியம் கொடுக்க வேண்டும் என்றும் 20 ஆண்டுகளுக்கு மேலாக பதவி உயர்வு இல்லாமல் கால்நடை மருத்துவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு கால்நடை உதவி இயக்குநர் பதவி உயர்வு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், கால்நடை ஆய்வாளர்களுக்கு ஆபத்து ஈட்டுப்படி வழங்கவேண்டும் என்றும், மந்தை உதவி யாளர்களுக்கு தகுதி அடிப்படையில் 5 வருடம் அனுபவம் வேண்டும் என்பதைத் தளர்த்தியும் அவர்களுக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இதை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் ; தலைவர் அவர்களே, ஆய்வாளர்கள், உதவி கால்நடை மருத்துவர்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசுக்குக் கொடுத்து இருக்கிறார்கள். 20 ஆண்டுக்காலம் தொடர்ந்து பணிபுரிந்தும் அவர்களுக்கு பதவி உயர்வு இல்லை அல்லது சம்பள உயர்வு இல்லை என்று சொல் கிறார்கள். அண்மையில்தான் 20 ஆண்டுகள் தொடர்ந்து ஒரே வேலையிலே இருந்து, பதவி உயர்வு இல்லையென்றால் அவர் களுக்கென தனிச் சலுகைகள் இந்தச் சர்க்காரால் அறிவிக்கப் பட்டது. அது ஏன் இவர்களுக்குப் பொருந்தாது என்பதைப் பற்றியும் ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம். இந்த ரிஸ்க் அலவன்ஸ் பற்றியும் ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம். ஆய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே, இங்கே குறிப்பிட்ட பல கருத்துக்களை அரசு ஏற்றுக்கொண்டு ஆய்வு செய்யும் என்று சொன்னார்கள். அதற்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் கூட இரண்டு முக்கிய மான விஷயங்கள். ஒன்று இந்த வேல்யூவேஷன் ரிஜிஸ்ட்டரை ஒரு சீக்ரெட் டாக்குமெண்டாக வைத்துக்கொண்டிருப்பதால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இன்னல்களை நான் விரிவாக எடுத்துச்சொன்னேன். ஆகவே வேல்யூவேஷன் ரிஜிஸ்ட்டரை பப்ளிக் டாக்குமெண்டாக எல்லோரும் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போலவே திருநெல்வேலி மாவட்டம் பிரிக்கப்பட்டும் கூட இன்னமும் கூட தென்காசியிலே ஒரு இணை இயக்குநர் இல்லாமல் அதன் காரணமாக சிதம்பரம் மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு அதிகாரி திருநெல்வேலி மாவட்டத்தினுடைய பகுதியை பார்த்துக் கொண்டு வருவதைப் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். ஆகவே தென்காசியிலே ஒரு கால்நடை துறையினுடைய இணை இயக்குநர் பதவியை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த கைட்லைன்ஸ் என்ற புத்தகம் ஒன்றும் பெரிய பரம ரகசிய மான புத்தகம் அல்ல. ஏற்கனவே சார் பதிவாளருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. யாராவது வந்து நாங்கள் இந்த இடத்தை வாங்கவேண்டும் அது எவ்வளவு மதிப்பீடு இருக்கிறது என்று கேட்டால், காட்ட வேண்டும் என்று சொல்லியிருக் கிறோம். காட்டவில்லை என்று புகார் செய்தால் நடவடிக்கை எடுப்போம். அது ஒன்றும் ரகசியமான புத்தகம் அல்ல, மேலும் நம்முடைய குப்புசாமி அவர்கள் அண்ணா மாவட்டத்தைப் பற்றி கேட்டார்கள். தற்போது திண்டுக்கல்லில் 20,000 லிட்டர் கொள்திறன் கொண்ட குளிரூட்டும் நிலையம் ஒன்றும் பழனியில் 10,000 லிட்டர் கொள்திறன் உள்ள குளிரூட்டும் நிலையம் ஒன்றும் உள்ளது. இவைகள் மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தில், 30 ஆயிரம் லிட்டர் மற்றும் 50 ஆயிரம் லிட்டர் என்ற குளிரூட்டு நிலையங்களாக விரிவாக்கப்படும்.

(இரவு 7-30.)

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல உறுப்பினர்கள் ஒரு விஷயத்தை மிகவும் அழுத்தமாகக் கூறினார்கள். இப்போதும் கூட, உங்கள் உரைக்குப் பிறகு நண்பர் உறுப்பினர் திரு. குப்புசாமி அவர் களும், ஜனதா கட்சியின் திரு. ஆறுமுகம் அவர்களும் கூட அதைக் குறிப்பிட்டார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் ஏனோ நேரடியாக அதற்கு வரமாட்டேன் என்கிறார்கள். அந்த ரிஸ்க் அலவன்ஸ் என்பது மூன்று ஆண்டுக் காலமாக வலியுறுத்தப் படுகின்ற ஒன்று. அதை இன்னும் பரிசீலிப்பதாகத் தான் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களே தவிர, அது கொடுக்கப் படும் என்ற நிலையை எப்போது அரசு எடுக்கும் என்பதை அறிவதோடு, நாமக்கல்லிலே இருக்கின்ற கால்நடை மருத்துவக் கல்லூரி ஒரு பள்ளிக் கட்டிடத்திலே தான் இயங்கிக் கொண்டு இருக்கிறது. இரண்டாவது ஆண்டுக்கு மாணவர்கள் வந்து விட்டார்கள். இன்னும் அங்கே இடமே வாங்கப்படவில்லை. கட்டிடங்கள் கட்டி முடித்து அங்கே ஆரம்பிப்பதற்குள் ஃபர்ஸ்ட் பாட்ச் அல்லது செகன்ட் பாட்ச் கூட, கிராஜுவேட்ஸ்—ஆக வரக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, பள்ளியிலே படித்தவர் எப்படி கால்நடை மருத்துவராக இருக்கமுடியும்? எனவே, அதையும் விரைவுபடுத்துவதற்கு அரசு என்ன செய்யும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : விரைவுபடுத்த நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நடைபெற்ற இதே மானியத்தில் பெருமதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய நம்முடைய தமிழக முதல்வர் அவர்களே, அன்டை மாநிலங்



களுக்கு கால்நடைகள் கொண்டு செல்வதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை அளித்தார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில், மரியாதைக் குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் நேரத்தில், மத்திய அரசாங்கத்திடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த அந்த உத்தரவாதத்திற்கே ஓராண்டுக் காலம், காலக் கெடு வாங்கிக் கொண்டு இருக்கிறோம் என்று சொன்னால், இன்னும் எத்தனை காலம் இது தொடர்ந்து நீட்டிக்கப்படும் என்பதையும், தஞ்சை மாவட்டத்திலே ஈச்சங்கோட்டை என்ற ஒரு பண்ணையில் ஏறக்குறைய 150 பேர்கள் இருபது ஆண்டு களுக்கு மேலாக தொடர்ந்து பணி புரிந்து வந்தாலும் அவர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்படாமல் இருக்கின்ற நிலையையும்—தஞ்சை மாவட்டத்திலே தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டம்—கால்நடையினுடைய உபபொருட்களைக் கொண்டு ஏதேனும் அங்கே தொழிற்சாலையை உருவாக்குகின்ற திட்டம் இருக்கிறதா என்றும், கடந்த மானியக் கூட்டத் தொடரிலே கூட நம்முடைய அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளித்தார்கள்; காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இருந்த ''லைவ்ஸ்டாக் டெவலப் மெண்ட் கமிட்டி'' என்று சொல்லக்கூடிய அந்தக் கமிட்டி நிறுவப்படும், என்ற உத்தரவாதத்தை அளித்தார்கள். அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என்பதைக் கேட்கப் பிரியப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் மாண்புமிகு தஞ்சை நகர சட்டப் பேரவை உறுப்பினரின் நன்மையைக் கருதி, தோல் பதனிடுகிற தொழில், மாட்டு எலும்பிலிருந்து உபபொருட்கள் தயாரிக்கும் தொழில் போன்றவைகள் எல்லாம் துவக்கப்படவேண்டும் என்ற ஆர்வத்தை காலையிலே தெரிவித்தார்கள்—இவைகளைத் துவக்கி னால் பெரிய ஆபத்து வந்து விடும், வாக்காளர் மத்தியில். ஏனென் றால், இவைகள் துவக்கப்பட்ட இடத்தில் மிகவும் கடுமையான 'பொல்யூஷன் டிரபிள்ஸ்' வந்திருக்கிறது. உங்களுக்கு நல்ல தொழிற்சாலை வேண்டுமென்றால், மாண்புமிகு தொழில் அமைச்சரிடம் சொல்லி நல்ல தொழிற்சாலையை தஞ்சையில் துவக்க நான் ஏற்பாடு செய்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது, தமிழக அரசினுடைய மதுவிலக்குக் கொள்கை முழுக்க, முழுக்க எங்களுக்குச் சொந்தமானது என்று சொல்லி, அந்த மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், பாதியாகவோ, முழுமையாகவோ—நிறைவேற்றுவது எங்களுக்கே உரித்தானது என்றும் சொல்லியிருக்கிறார். அதேநேரத்தில், 20 இலட்சம் லிட்டர் சாராயம் சாப்பிட்ட அந்த மக்கள் எல்லாம் இன்றையதினம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிளாரிபிகேஷன்தான் கேட்க வேண்டும். திரும்ப ஒரு டிபேட் வர முடியாது.

திரு. அ. மலர்மன்னன் : அவர்கள் எல்லாம் குடிக்காத காரணத்தால் ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் இன்றைக்கு அந்தக் குடும்பங்களுக்கு மிச்சம் என்கிறார்கள். ஆனால் தங்கள் மூலமாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிந்து கொள்ள விரும்புவது, இன்றையதினம் 3 ரூபாய்க்கு சாராயம் குடித்தவன், 20 ரூபாய்க்கு பிராந்தி குடிக்கின்ற நிலைமை வந்திருக்கிறதே, ஆகவே அது ஒழிக்கப்படுமா என்பதும், உங்களுடைய கொள்கை அந்த விதத்திலே என்ன என்பதையும் விளக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பதில் இல்லை)

திரு. அ. ஆறுமுகம் : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மிக அருமையான முறையிலே பதில் அளித்திருக்கிறார்கள். என்னுடைய பாராட்டுதல்கள். அவர்கள் பதிலைச் சொல்கிறபோது, பத்திரப் பதிவுத் துறையிலே, பத்திரப் பதிவுத் துறைத் தலைவர், மாநிலத்திலே 34 இடங்களிலே சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார் என்று சொன்னார்கள். இவைகள் எந்தெந்த மாவட்டங்களிலே, எந்தெந்த இடத்திலே திறக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன். (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, அண்ணா மாவட்டத்திற்கும் சேர்த்து, மதுரையிலே பால் உற்பத்தியாளர் ஒன்றியம் செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. பேசுகிறபோது மிக முக்கியமான கோரிக்கையாக வைத்தோம். இரண்டு மாவட்டத்திற்கும் சேர்த்து இருக்கிற ஒன்றியத்தில் 70 சதவீதம் பாலை உற்பத்திச் செய்கின்றவர்கள் அண்ணா மாவட்டத்திலே இருக்கிறார்கள். எனவே அந்த மாவட்டம் முழுவதும் இருக்கிற மக்களுக்கு அது ஒரு குறையாக இருக்கிறது. ஒன்றியம் வேறு மாவட்டத்திலே இருக்கிறதென்று கருதுகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அண்ணா மாவட்டத்திற்கு தனியாக ஒரு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தை உருவாக்குவதற்கு வாக்குறுதி அளிக்கவேண்டும். வாக்குறுதி அளிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் மாவட்டத்தில் விரைவில் பால் உற்பத்திக்கு தனியாக ஒரு ஒன்றியம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.



திரு. கே. ஆர். கணபதி.—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப் படுவதாக அறிகிறோம். விழுப்புரத்திலே உள்ள ஒன்றியத்தை அதோடு சேர்க்கின்றபோது சேத்தியாதோப்பிலுள்ள குளிரூட்டும் நிலையம் அதோடு சேர்க்கப்படுமா? சேலம் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள சின்னசேலம் மாட்டுப்பண்ணையை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா? சிதம்பரம், கடலூர் போன்ற நகரங்களில் பாலிதீன் பைகளில் பால் போடுவது போல் எல்லா நகரங்களுக்கும் அது விஸ்தரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட முதலில் அதிகாரபூர்வமாக அறிவிப்பு வரவேண்டும். சேலத்திலுள்ள கால்நடைப் பண்ணையை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. பால் பைகளைப் பற்றி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பிறகு, அதிகாரிகள் மூலமாகஅறிவிப்பு வந்த பிறகுதான் நாம் யோசிக்கமுடியும்.

திரு. க. இரா. சின்னராசு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளதுறையின் சார்பாக தர்மபுரி மாவட்டத்திலேயும், கிருஷ்ணகிரி நகரத்திலேயும் வழங்கப்படுகின்ற பால், பாலிதீன்பைகள் அல்லாத வேறு பைகளில் வழங்கப்படுகின்ற ஒரு நிலைமை இருப்பதுடன், வழங்கப்படும் அந்தப் பைகள் லூசாகவும் இருக்கின்றன. எனவே, மாநிலம் முழுவதும் பாலிதீன் பைகளிலேயே பாலை வழங்குகின்ற ஒரு திட்டத்தை கொண்டுவர அரசு முன்வருமா? அதுபற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி சுவாமிநாதன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்ட பால் வள ஒன்றியத் தலைவர் கண்டிப்பாக பாலிதின் பைகளில் பாலை வழங்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தஞ்சை மாவட்டத்தினுடைய நிர்வாக மானது மாவட்ட ஆட்சித் தலைவர் தவிர, காவல்துறை, மருத்துவத்துறை இவைகளெல்லாம் கீழத்தஞ்சை, மேலத் தஞ்சை என்று தனியாக இயங்கிக் கொண்டு வருகின்றன. ஆனால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் மாவட்டச் சங்கமானது ஒன்றாக இருக்கிறது. ஆகவே, அதையும் இரண்டாகப் பிரித்து கிழக்குத் தஞ்சைக்கு என்று தனியாக ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை. மாவட்ட அளவிலே உள்ள சங்கத்தை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வருவாய்த்துறை மாவட்டத்திற்கு ஒரு மாவட்டம் ஒன்றியம் என்றுதான் தற்போது இருக்கிறது. மாவட்டம் பிரிக்கப்பட்டால் அந்தப் பால் ஒன்றியமும் பிரிக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், மன்னார்குடி நகரத்தில் 17 ஆயிரம் அங்கத்தினர்கள் கொண்ட ஒரு பெரிய பால்பண்ணை இருக்கிறது. அந்தப் பால் முழுமையையும் அவர்களால் கொள் முதல் செய்ய முடியவில்லை. சென்ற ஆண்டு நான் இதுகுறித்து கேள்வி கேட்கிறபோது, முதலமைச்சர் அவர்களும் பக்கத்தில் இருந்தார். பட்டுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளதைப்போல, பாலை பதப்படுத்தக்கூடிய ஒரு தொழிற்சாலை வரவேண்டுமென்று கேட்டேன். முதலமைச்சர் அவர்கள் சொல்லி, நிதியமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டு கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். ஆகவே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, மன்னார்குடி நகரத்தில், பட்டுக்கோட்டை, மாயவரத்தில் இருப்பதைப்போல ஒரு தொழிற்சாலையை அமைத்தால், அங்குள்ள 17 ஆயிரம் விவசாயிகள், பால் முழுவதை யும் கொடுத்து, அதன் மூலம் வரும் பணத்தைப்பெற்று கடனைத் தீர்க்கக்கூடிய வாய்ப்பை அளிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை பால்வள இணையத்தினுடைய நிர்வாக அதிகாரிக்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தஞ்சை மாவட் டத்திலே இரண்டு பால்வள ஒன்றியம் அமைப்பது பற்றி கேட்ட நேரத்தில், அது ஒரு வருவாய் மாவட்டமாக இருக்கிற காரணத்தால் ஒன்றுதான் என்று கூறிவிட்டார்கள். தஞ்சை மாவட்டத்திலே, எந்த மாவட்டத்திலேயும் இல்லாதபடி, இரண்டு வளர்ச்சி மன்றக் கூட்டங்கள், கிழக்குத் தஞ்சை, மேற்கு தஞ்சை என்கிற நிலையிலே, இரண்டு வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடைபெறுகிற ஒரு பெரிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால், கிழக்கு, மேற்கு என்று இரு பால்வள யூனியன் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தென்னாற்காடு மாவட்டத்திலே கூட, தெற்கு, வடக்கு என்று அபிவிருத்தி மன்றங்கள் இருக்கின்றன. வருவாய்த்துறை மாவட்டம் என்றுதான் கணக்கு மேலும், தஞ்சையில் போதுமான அளவு பால் உற்பத்தி செய்யப்பட வில்லை என்பது வருத்தத்திற்குரியது.



(இரவு 7-40)

திரு க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பத்திரப் பதிவுத் துறையிலே உள்ள கைட் லைன்ஸ் பற்றி ஒரு வார்த்தை, ஒரு விளக்கத்தை நான் மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள், நம்முடைய சி.டி. அண்டு ஆர்.இ. டிபார்ட்மெண்டிலிருந்து வந்த சர்க்குலரை வாசித்தார்கள். அந்த கைடு லைன்ஸ்கூட "need not be followed" என்று சொன்னார்கள். அதற்கு மேலும், ஏற்கெனவே அந்த கைடு லைன்ஸ்-ஐ அனுசரிக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லப் பட்டிருந்தும் சென்ற மாதம் 2 ஆம் தேதியிலிருந்து ஒரு ஏக்கர் ரூ. 3,000 பெறுமானமுள்ளதற்கு ரூ. 12,000 என்று மதிப்பு போட்டு அந்த அளவுக்குப் பத்திரம் வாங்கவில்லை என்று சொல்லி திருப்பிக் கொடுக்க மறுத்திருக்கிறார்கள். சின்னாளப் பட்டியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் தற்போது புதியதாக உயர்த்தப்பட்ட அந்த மதிப்பிற்குத்தான் பத்திரம் வாங்க வேண்டும் என்றும், அவ்வாறு வாங்கவில்லை என்ற காரணத்திற்காகத் திருப்பிக் கொடுக்க முடியாது என்றும் கலெக்டருக்குப் போய் விசாரித்த பின்னர்தான் வர வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். இது எனக்கு எற்பட்ட அனுபவம். இது குறித்து ஏற்கெனவே போடப்பட்ட கைடு லைன்சில் இருக்கிற அந்தத் தொகைக்குப் பத்திரம் வாங்கிப் பதிந்தால் உடனடியாக அந்தப் பத்திரத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்பற்றி நாளை மறுநாள் விசாரித்து இந்த அவைக்குப் பேரவைத் தலைவர் மூலம் சொல்கிறேன்.

திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகளையும் அதில் இருக்கிற கஷ்டங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது எடுத்துச் சொன்னார் கள். என்னுடைய ஆலோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். பொதுவாக ஓராண்டுக்குள் ஒரு ஊராட்சி மன்றப் பகுதியில் எந்த விதமான மதுவிலக்கு சம்பந்தப்பட்ட வழக்கும் இல்லை என்று வந்தால் அந்த ஊராட்சிக்கு ஆண்டுக்கு ரூ. 10,000 மதுவிலக்கு ஊக்கத் தொகையாக அரசு கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அப்படிச் செய்தால் நிச்சயமாக மதுவை நாம் ஒழிக்க முடியும். காரணம் கிராமங்களில் ஒரு கட்டுக்கோப்பாக இருந்தால்தான் நாம் மதுவை ஒழிக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். ஆகவே அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை நல்ல யோசனை. தமிழக அரசே கூட மதுவை அருந்தாதவர்களைக் கொண்ட கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அந்த கிராமத்திற்கு எல்லாவிதமான வசதிகளையும் செய்து தருவதற்கு முன்னுரிமை தரலாமா என்று யோசனை செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையையும் ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பிர்க்காவுக்கும் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கை அமுல் படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அது கொள்கையல்ல.

**திரு. சோ. கலிதீர்த்தான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் சின்ன சேலம், கள்ளக்குறிச்சி போன்ற இடங்களில் உள்ள பால்வளச் சங்கங்கள் நல்ல வருமானத்தை ஈட்டி, வரிகட்டுகிற அளவுக்கு முன்னேறி இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இப்போது விவசாயிகளுக்கு மாடு பிடித்துக் கொடுக்கும் நிலை இருக்கிறது. பால்வளத் துறையைச் சார்ந்த இந்தச் சங்கங்கள் மூலமாக அரசாங்கம் அவர்களுக்கும் ஊக்கம் கொடுக்கிற வகையிலும், பணத்தை உரிய முறையில் திரும்பப் பெறுகிற வகையிலும், மாடு பிடித்துக் கொடுக்கும் திட்டத்தை ஏற்பாடு செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஒன்றியத் தலைவர் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். பி. மண்வாளன்.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியில்—அதாவது வெண்மைப் புரட்சியில் தமிழகத்திலேயே வடாற்காடு மாவட்டம்தான் முதலிடத்தை வகிக்கிறது. எனவே, ஏலகிரி மலையில் பால் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.



### கோரிக்கை எண் 2.

திருவாளர்கள் மா. மணிமாறன், கோ. வீரய்யன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. மு. இராசாங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,62,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப், பெற்றது.

### கோரிக்கை எண் 5.

திருவாளர்கள் சோ. மா. இராமச்சந்திரன், கோ. வீரய்யன், ஜே. முகம்மது கனி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,24,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 6.

திருவாளர்கள் மா. மணிமாறன், கோ. வீரய்யன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், கே. எம். தங்கமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி.

''மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 8,32,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 10.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சோ. மா. இராமச்சந்திரன், கே. கல்லன், கோ. வீரய்யன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,33,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 22.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சோ. மா. இராமச்சந்திரன், ஜெ. ராஜாபாபு, கோ. வீரய்யன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 32,15,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (4—4—1987) காலை 10.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை இரவு 7.47 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

63. நாட்டுச் சர்க்கரைக்கு வரிவிதிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 6—1—1987 ஆம் நாளிட்ட 15. ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

64. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 8—1—1987 ஆம் நாளிட்ட 22 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

65. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாவது திருத்த) சட்டத்தின் வழிமுறைகள் நடைமுறைக்கு வரும் தேதியினைக் குறிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29—12—1986 ஆம் நாளிட்ட 1321 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

66. படங்கள் மற்றும் படச் சட்டங்கள் ஆகியவற்றிற்கு அளித்து வந்த வரிவிலக்கினை திரும்பப் பெறுவது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29—12—1986 ஆம் நாளிட்ட 1326ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

67. 1985—86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

68. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

107. 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் கால வரைக்கான தமிழ்நாடு ஒழுக்கக் கண்காணிப்புக் குழுவின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

108. கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

109. கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்—நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

110. கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

111. கோரிக்கை எண். 10—பால் பண்ணை வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

112. கோரிக்கை எண். 22— கால்நடைப் பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

113. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

114. தமிழ்நாடு இறைச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டு பணிகள் விபரம் பற்றிய குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

115. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டு பணிகள் விபரம் பற்றிய குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

116. 'தமிழ்நாடு குடிநீர் வடிகால்— 1987' என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

117. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான வருவாய் வரவினங்கள் அறிக்கையில் வருவாய்த் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி நான்காவது அறிக்கை.

118. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான வருவாய் வரவினங்கள் அறிக்கையில் உள்துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை.



119. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொதுப் பணித்துறை குறித்த பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை.

120. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983—84ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) மின்னணுவியல், அறிவியல்-தொழில் நுட்பவியல் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை.

## இணைப்பு I.

(61 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மதுவிலக்கு— ஆயத்தீர்வைத் துறை.

கோரிக்கை எண் 2.

மாநில ஆயத்தீர்வை 1987-88.

கொள்கை விளக்கக் குறிப்பு.

மதுவிலக்கை முழுமையாக அறிமுகப்படுத்தியது இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதல் மாநிலம் ஆகும். தேசப்பிதாவின் அழைப்பிற்கிணங்க, 1937 அக்டோபரில், முன்னாள் சென்னை மாகாணத்தில் சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் மேலும் மூன்று மாவட்டங்களில் மதுவிலக்கு கொண்டு வரப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது, அப்போது ஆட்சி செய்து வந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அமைக்கப்பட்ட அரசு ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீங்கியபோது 1943 நவம்பரில், அந்த நான்கு மாவட்டங்களிலும் மதுவிலக்கு செயல்படுத்தப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், மக்கள் அரசு மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் 1946 அக்டோபரில் எட்டு மாவட்டங்களில் மீண்டும் மதுவிலக்குக் கொண்டு வரப்பட்டது. 1-10-1947 அன்று மதுவிலக்கு மேலும் பல மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. மகாத்மா காந்தியின் அடுத்த பிறந்த தினத்தன்று அப்போதிருந்த பிரிவினை ஆகாத சென்னை மாகாணம் முழுவதிலும் மதுவிலக்கு முழுமையாக செயற்படுத்தப்பட்டது.

2. மத்திய அரசு தேசிய கொள்கையாக நாடு முழுவதும் மதுவிலக்கைச் செயற்படுத்த முன்வரும்வரை இம்மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டங்கள் செயற்படுத்துவதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது என்று அரசு 1971 ஆகஸ்டில் முடிவு செய்தது. அதற்கிணங்க மதுவிலக்குச் சட்டத்தின் விதித் துறைகளைச் செயற்படுத்துவதை 30-8-1971லிருந்து நிறுத்தி வைத்து 28-8-1971 அன்று அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. பின்னர், இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்டம்

கொண்டு வரப்பட்டது. கள், சாராயம் ஆகியவற்றின் விற்பனைக் கான சில்லறைக் கடைகள் ஏலத்தில் விடப்பட்டன. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளைச் சில்லறையில் விற்பனை செய்யும் கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னர், மதுவிலக்கு மீண்டும் அறிமுகப் படுத்தப்பட்டது. முதலில் 30–8–1973 அன்று கள் விற்பனைக் கடைகள் மூடப்பட்டன. பின்னர், 1–9–1974-லிருந்து சாராய விற்பனைக் கடைகளும் மூடப்பட்டன. உரிமம் வைத்திருப்பவர்கள், உரிமம் பெற்ற கடைகளில் விற்பனை செய்யப்பட்ட ஏனைய மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகளைக் குடிக்க அனுமதிக்கப்பட்டனர்.

3. மதுவிலக்குக் கொள்கை 1981, மே திங்களில் திருத்தி அமைக்கப்பட்டது. இதன்படி சில நிபந்தனைகளுக்குட்பட்டு, கள் அல்லது சாராயம் அல்லது மது ஆகியவற்றைக் குடிக்க அனுமதிக்கப்பட்டது. கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், விற்பவர்கள் ஆகியோரது பிடியில் குடிப்பழக்கம் உள்ளவர்கள் சிக்கிக் கொண்டு தமது உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வதிலிருந்து அவர்களைத் தடுப்பது, சமூக விரோத சக்திகளுக்கு போய்ச் சேரும் பணத்தை அரசின் வருவாயைக் கூடுதலாக்கும் வகையில் பெறுவது ஆகிய முக்கிய காரணங்களை முன்னிட்டு அரசு மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்தியுள்ளது. இவ்வாறாக தனிப்பட்டோர் அனுமதி பெறுவதன் அடிப்படையில், சாராயம் அல்லது கள் அல்லது இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் ஆகியவற்றைக் குடிக்க அனுமதித்து மதுவிலக்குச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. இதற்கு மேலும், மாநிலத்திலிருந்து கள்ளச் சாராயத்தை முற்றிலும் ஒழிக்கவும் அவற்றை வடித்தெடுப்போரையும், விற்பனை செய்வோரையும் கண்டு பிடித்து வளைத்துப் பிடிக்கவும் தீவிர நடவடிக்கை எடுக்கப் பட்டது.

4. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் போற்றிவைத்துப் பேணப்படும் அரசுக் கொள்கையின் நெறிமுறைக் கோட்பாடுகளைக் கவனத்தில் கொண்டும், ஏழைகளின் துன்பங்களைத் துடைக்கும் பொருட்டும், 1–1–1987-லிருந்து கள், சாராயம் ஆகியவற்றைத் தயாரித்தல், விற்பனை செய்தல், குடித்தல் முதலியவற்றைத் தடை செய்ய அரசு தீர்மானித்துள்ளது. இந்த முடிவைச் செயல்படுத்தும் விதத்தில், தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் தகுந்த வகையில் 1986, ஜூனில் திருத்தப்பட்டது. கள்-சாராய விற்பனைக் கடைகள் அனைத்தும் 31-12-1986 அன்று மூடப்பட்டன.



5. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள்.

(i) தனிப்பட்டோர் உரிமங்கள் :

தனிப்பட்டோருக்கு உரிமங்கள் அளிக்கும் முறை, 25 வயதடைந்தோரும் அவ்வயதுக்கு மேற்பட்டோரும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் குடிப்பதை முறைப் படுத்துகிறது. பொது இடங்களிலோ, யாதோர் உணவு விடுதிகளிலோ குடிப்பது தடை செய்யப்படுகிறது.

(ii) இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் தயாரித்தல் :

இம்மாநிலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளைத் தயாரிப்பதற்காக ஐந்து தயாரிப்பு பிரிவுகளுக்கும், பீர் தயாரிக்கும் பிரிவு ஒன்றுக்கும், ''மாஸ் ஒயின்'' தயாரிக்கும் பிரிவுகள் இரண்டிற்கும் உரிமம் அளிக்கப்பட்டுள்ளது.

வருவாய் வசூலில் ஏற்படும் முறைகேடுகளைத் தடுக்கும் பொருட்டு, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள் அடங்கிய பாட்டில்கள் ஒவ்வொன்றின் மீதும் ஆயத் தீர்வைக் குறிப்புச் சீட்டுக்கள் ஒட்டும் முறை 1-11-1982-லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆயத் தீர்வை கண்காணிப்பு அதிகாரியின் கண்டிப்பான கண்காணிப்பிற்கு ஏற்ற வகையில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகளைத் தயாரிக்கும் உரிமதாரர்களின் எண்ணிக்கை வரையறுக்கப் பட்டுள்ளது.

(iii) இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனை.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC) முற்றிலும் மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகும்; இந்நிறுவனம் 1983-லிருந்து, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகளின் மொத்தவிற்பனை முழுமைக்கும் உரிமம் பெற்றுள்ளது. இந்த நடவடிக்கை, மொத்த விற்பனையாளர்கள், இடைத் தரகர்கள் ஆகியோரை நீக்கியுள்ளது. இதன் மூலம் வரும் நிகர வருமானம் ஆதாயமாக அரசு நிறுவனத்திற்குக் கிடைக்கிறது. மேலும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனையில் ஏற்படும் வருவாய் இழப்பையும், முறைகேடுகளையும் இது குறைத்துள்ளது.

(iv) இந்தியாவில் தயாரிக்கப்படும் மதுவகைகளின் சில்லறை விற்பனை :

இம்மாநிலத்தில், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளை விற்பனை செய்யும் பொருட்டு 953 சில்லறை விற்பனை உரிமைதாரர்கள் இருந்தனர். இந்த எண்ணிக்கை போதுமானதாக இல்லை எனக் கருதப்பட்டது; எனவே தற்போது (28-2-1987 வரை) 1,012 புதிய உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 6. சாராயம், கள்.

### (1) கடைகளும் வருவாயும் :

1986 ஆம் ஆண்டு 33 ஆம் சட்டம் 31-12-1986 அன்று செயலுக்கு வந்தது ; அதே நாளில் 5,076 சாராயக் கடைகளும், 5,450 கள் கடைகளும் மூடப்பட்டன. சாராய, கள் குத்தகை மூலம் பின்வரும் ஆண்டுகளில் கிடைத்த வருவாய் வருமாறு :—

| ஆண்டு. (1) | | கள். (2) | சாராயம். (3) |
|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்.) | |
| 1981–82 | .. | 21.49 | 49.84 |
| 1982–83 | .. | 27.26 | 66.31 |
| 1983–84 | .. | 23.51 | 89.09 |
| 1984–85 | .. | 24.33 | 85.67 |
| 1985–86 | .. | 31.62 | 91.60 |
| 1986–87 (31–12–1986 வரை). | .. | 16.74 | 81.38 |

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவியைப் போன்று சாராய மொத்த வியாபாரம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடம் (டாஸ்மாக்) ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் ஒத்துழைப்புடனும், ஆயத்தீர்வை அதிகாரிகளுடனும் 'டாஸ் மாக்கின்' வட்டார மேலாளர்களுடன் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியதன் மூலமும், மதுவிலக்கு ஆயத் தீர்வை ஆணையாளர் சாராயம் தொடர்ந்து விற்பனை யாகுமாறு பார்த்துக் கொள்ள முடிந்தது. இவ்வாறு தொடர்ந்த சாராய விற்பனை மூலம், கள்ளச்சாராய விற்பனை தடுக்கப் பட்டுள்ளது என்பதற்கு மறைமுக அத்தாட்சியாகும். மதுவிலக்கு செயலாக்கக் காவல் அதிகாரிகளும் மாத ஆய்வு கூட்டங்களில் தீவிரமாகப் பங்கு கொண்டனர்.

### (ii) முன்னாளில் கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு இழப்பீடு :

1-1-1987-லிருந்து ஓரளவு மதுவிலக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டதன் விளைவாக முன்னாளில் கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த சுமார் 30,000 பேர் வேலை இழப்பர் என்று மதிப்பிடப்பட்டது. மறுவாழ்வு நடவடிக்கையாக பதநீர்— வடிப்ப தற்கும் பனைவெல்லம் தயாரிப்பதற்கும் தேவையான கருவிகளை வாங்குவதற்காக கள் இறக்கும் தொழிலில் முன்னர் ஈடுபட்டிருந்த ஒவ்வொருவருக்கும் மானியமாக ரூ. 1,000-மும் கடனாக ரூ. 1,000-மும் வழங்க அரசு அனுமதித்தது. கடன் நான்கு ஆண்டுத் தவணைகளில் ரூ. 250 என்ற வீதத்தில் ஐந்தாண்டுகளில் திருப்பியளிக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது. திருப்பிச் செலுத்தப்படும் கடனின் முதல் தவணை, கடன் வழங்கப்பட்ட இரண்டாம் ஆண்டிலிருந்து தொடங்கும்.



### (iii) சாராயம் தயாரித்தல் :

இம் மாநிலத்தில் சாராயம் வடிக்கும் பிரிவுகள் 9 உள்ளன. இவை சென்னை, கடலூர், தஞ்சாவூர், குடியாத்தம், திருநெல் வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட பகுதியுடன் இணைக்கப்பட்டன. உற்பத்தி நடை முறையிலும் தயாரிக்கப்பட்ட சாராய விற்பனை குறித்தும் கடுமையான கட்டுப்பாடு செலுத்தப்பட்டது. எரி சாராயம் வழங்குதல், அனுமதிக்கப்பட்ட முழுமை பெறுவதற்கான குறைந் தளவு காலம் ஆயத்தீர்வை விற்பனைவரி செலுத்துதல், தயாரிக்கப் பட்ட சாராயத்தின் தரம் சாராயப் புட்டி ஒவ்வொன்றின் மீதும் ஆயத்தீர்வைச் சீட்டுகளை ஒட்டுதல் ஆகியவை மாவட்ட குற்றத் தடய அறிவியல் ஆய்வுக்காக ஆயத்தீர்வை-தயாரிப்பு அதிகாரி களாலும். உதவி ஆணையாளர்களாலும் (ஆயத்தீர்வை) மேற் பார்வை செய்யப்பட்டன. சாராயம் வடிக்கும் பிரிவுகள் 9-ம் 31-12-1986 அன்று மூடப்பட்டன.

## 7. கருப்பஞ்சாற்றுக் கசண்டு :

கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆல்கஹால் தயாரிப்பதற்கான அடிப்படை மூலப்பொருளாகும். இது சர்க்கரையின் துணைப் பொருளாகும். கருப்பஞ்சாறு கசண்டு மாநிலக் கட்டுப்பாட்டு அதிகாரியான மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையாளர் கருப்பஞ் சாற்றுக் கசண்டைச் சேமித்து வைத்தல், எடுத்துச் செல்லுதல், பயன்படுத்துதல் ஆகியவை குறித்து கட்டுப்பாடு செலுத்துகிறார். 8 வடிசாலைகள் உட்பட கருப்பஞ்சாற்று கசண்டை அடிப்படை யாகக் கொண்ட பல்வேறு தொழிற்சாலைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 4.72 இலட்சம் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு தேவைப் படுகிறது. கருப்பஞ்சாற்று கசண்டு இம்மாநிலத்திலுள்ள 24 சர்க்கரை ஆலைகளிலிருந்து வழங்கப்பட வேண்டியுள்ளது. பற்றாக்குறை ஏற்படும்போது கருப்பஞ்சாற்றுக் கசண்டு உபரியாக உள்ள மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. கருப்பஞ் சாற்றுக் கசண்டு கிடைப்பதைப் பொறுத்தும், தேவைப்படும் பிரிவுகளின் முன்னுரிமைப்படியும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சர்க்கரை உற்பத்தியும், கருப்பஞ்சாற்றுக் கசண்டு கிடைப்பதும் கரும்பு கிடைப்பதைப் பொறுத்துள்ளதால் இந்நடைமுறை முழுவதும் வறட்சி நிலைமை, கரும்பு பயிர் நிலைமை ஆகிய வற்றிற்கு உட்பட்டதாகும்.

## 8. எரிசாராயம் :

913.30 இலட்சம் லிட்டர் எரிசாராயம் தயாரிக்கும் நிறுவு திறன் கொண்ட 8 வடிசாலைகளுக்கு இம்மாநிலத்தில் உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. 1986-87 நடப்பாண்டில் இந்த வடிசாலை களிலிருந்து சுமார் 707 இலட்சம் லிட்டர் எரிசாராயம் கிடைக் கிறது. இதில் சுமார் 100 இலட்சம் லிட்டர் எரிசாராயத்தை மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யக் கருதப்படுகிறது. எஞ்சிய சுமார் 600 இலட்சம் லிட்டர் மாநிலத்திற்குள் உள்ள இரசாயன தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்படும். 1-1-1987-

விருந்து ஓரளவு மதுவிலக்கு கொண்டுவந்ததன் காரணமாக, அதிக ஆல்கஹால் கிடைக்கிறது. உபரி அளவு தற்போதுள்ள R.L. உரிமதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட அளவை உயர்த்துமாறு கேட்டுக் கொண்டதை நிறைவு செய்வதற்கு பயன்படுத்தப்படும். ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்ட புதிய தொழிற்சாலை களுக்கும் ஊக்கமளிககப்பட்டு வருகிறது.

9. டி.எல். வகை உரிமங்கள் :

வீரியம் குறைந்த சாராவி, வார்னிஷ், பிரெஞ்சு பாலிஷ், பூச்சிக் கொல்லி மருந்துகள் முதலியவற்றைத் தயாரிப்பதில் பயன் படுத்தப்படுகிறது. ஒதுக்கப்பட்ட வீரியம் குறைந்த சாராவி கள்ளத்தனமாக பயன்படுத்தப்படுகிறது என்ற புகார்கள் வந்தன. இதனைக் கள்ளத்தனமாக வணிகர்கள் பயன்படுத்துகின்றனர் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. இப்போக்கினைத் தடுப்ப தற்காக, வீரியம் குறைந்த சாராவி, வார்னிஷ் ஆகியவற்றின் மொத்த விற்பனை, சில்லறை விற்பனை 1-10-1978-லிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும் வகையில் தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் தக்கவாறு திருத்தப் பட்டது. ஒதுக்கப்பட்ட சாராவி கள்ளத்தனமாகப் பயன்படுத்தப் படுகிறது என்ற புகார் ஏதும் தற்போது இல்லை. வீரியம் குறைந்த சாராவியை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புப் பிரிவுகள் ஆயத்தீர்வைப் பணியாளர்கள் மூலம் கடுமையாக கண்காணிக்கப் படுகின்றன.

10. ஏனைய உரிமங்கள் :

மருந்துப் பொருட்கள்-ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்பதற்கு "எல்" தொடர் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. இதில் முறை கேடுகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இவற்றைத் தயாரிக்கும் இடங்களும் அவற்றை விற்பனை செய்யும் சில்லறைக் கடைகளும் அவ்வப்போது சோதனை செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் ஆல்கஹாலை உற்பத்தி செய்கின்றன. இவை தொகுதி தொகுதியாக உற்பத்தி செய்யப்படுவதை கட்டுப்படுத்துவது கடின மாகும். மருந்துப் பொருட்கள் என்ற பெயரில் போலியான ஆல்கஹால், மதுபான பொருட்கள் தயாரிக்கப்படுவதாக அடிக்கடி புகார்கள் வருகின்றன. பெரும்பாலான இடங்களில் உரிமங்களை இவ்வாறு தவறாகப் பயன்படுத்துபவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கும் வகையில், அவர்கள் மீது தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் 1940 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் ஆகியவற்றின் விதித் துறைகளின்கீழ் பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சாராவி தயாரிப்பு (கட்டுப்பாடு) விதிகள் அசவம், அரிஸ்டம், ஏனைய இதனுடன் தொடர்புடைய பொருட்களைத் தயாரித்தல், விற்பனை செய்வதைக் கண்காணிப்ப தற்காக இயற்றப்பட்டுள்ளன. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மன மயக்கம் அளிக்கும் பொருட்கள் (மத்தியச் சட்டம் 61/1985) சட்டம், தமிழ்நாடு 1985 ஆம்



ஆண்டு போதை மருந்துகள் விதிகளும் அபின் மூலத்திலிருந்து பெறப்படும் பொருட்கள் தயாரிக்கப்பட்ட மருந்து பொருட்கள் கசகசா செடித்தாள் முதலியவற்றை வைத்திருத்தல், எடுத்துச் செல்லுதல், பயன்படுத்துதல், விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகளை முறைப்படுத்துகின்றன. இந்த மாநிலத்திற்குள் போதை மருந்துகள் கடத்தப்படுவதைத் தடுக்கவும் தற்போதுள்ள உரிமங்களைத் தவறாகப் பயன்படுத்துவதைத் கண்காணிக்கவும் என போதைப் பொருள் குற்றத் தகவல் சேகரிப்பு பிரிவின் சிறப்புக் காவல் படையினர் செயல்படுகின்றனர்.

11. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) :

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 23-5-1983 ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டு 25-7-1983 ஆம் நாளன்று அதன் வணிகத்தை தொடங்கியது. இது மாநில அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு பொது நிறுவனமாகும். இதனிடம் இந்தியாவில் தயாரிக்கப் படும் வெளிநாட்டு மது வகைகள், சாராய மொத்த விற்பனை வணிகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னையில் தலைமை அலுவலகத்தைக் கொண்ட இந்த வாணிபக் கழகம் 16 வட்டார அலுவலகங்கள் மூலமாக மொத்த வணிகத்தை திறம்பட நடத்தி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தியாவில் தயாரிக்கப் பட்ட வெளிநாட்டு மதுபான மொத்த விற்பனை நிலையம் ஒன்று உள்ளது. 31-12-1986 ஆம் நாள் வரையில் இம்மாநிலத்தில் 66 மொத்த சாராய விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வந்தன. 1—1—1987 ஆம் நாளிலிருந்து மாநிலத்தில் ஓரளவு மதுவிலக்கு செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த மொத்த சாராய விற்பனை நிலையங்கள் மூடப்பட்டன. வட்டார அலுவலகங்களின் எண்ணிக்கை 16-லிருந்து 7 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

12. 16—11—1985 ஆம் நாளிலிருந்து 15—7—1986 ஆம் நாள் வரையில், சாராய சில்லறை விற்பனை வாணிகமும், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த வாணிபக்கழகம், 7,275 சில்லறை விற்பனை முகவர்களை நியமித்து, சாராய சில்லறை விற்பனையைத் திறம்பட நடத்தி வந்தது. 16—7—1986 முதல் 31—12—1986 ஆம் நாள் வரை, ஏலம் விடும் முறை மீண்டும் கொண்டுவரப்பட்டது. இக்கால அளவு, குறைவாக இருந்தாலும் புதிய முகவர்களைத் தேர்ந்தெடுக்க இவ்வாணிபக் கழகத்திற்கு அதிக காலம் தேவைப்பட்டிருக்கும் என்பதாலும், ஏலம் விடும் முறை கொண்டுவரப்பட்டது.

13. மதுவிலக்கைச் செயற்படுத்தல்.

தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் விதித் துறைகள் அதனுடன் தொடர்புடைய விதிகள், அதன்கீழ் வகுக்கப் பட்டுள்ள ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்தும் பொறுப்பு முழுவதும் 1—9—1980 ஆம் நாளிலிருந்து இம்மாநிலத்தி லுள்ள மதுவிலக்கைச் செயல்படுத்தும் பிரிவிடம் ஒப்படைக்கப்

பட்டது. காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவரும், உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவரும், சூப்பிரண்டண்டண்ட் ஒருவரும், சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்தில் இப்பிரிவில் பணிபுரிகின்றனர். இது தவிர தலைமை அலுவலகத்தில் ஒரு காவல் துறை கூடுதல் துணை சூப்பிரண்டண்டண்ட் மேற்பார்வையில், 5 காவல்துறை துணை சூப்ரெண்டண்டண்டுகளைக் கொண்டு மது விலக்கு குற்றத் தகவல் சேகரிப்புப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

14. மதுவிலக்கைத் தொடர்ந்து செயல்படுத்தியதன் பலனாக, 1985 டிசம்பரில் மாநிலத்தில் விற்கப்பட்ட சாராயத்தின் அளவு 1,06,31,676 லிட்டராக இருந்தது. 1986 டிசம்பர் திங்களில் 1,24,13,156 லிட்டராக உயர்ந்தது. மதுவிலக்குக் குற்றங்களுக்கு எதிராக தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பலனாக கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்கு குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 1975 ஆம் ஆண்டு 87,801 ஆக இருந்தது. 1986-ல் 90,079 ஆக உயர்ந்தது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மாதாந்திர சராசரி விற்பனை 1985-ல் 875.43 இலட்சம் ரூபாயிலிருந்து 1986-ல் 1,032·88 இலட்சம் ரூபாயாக உயர்ந்தது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை வண்டிகள் மூலம் கள்ளத்தனமாக கடத்துவதைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட முனைப்பான நடவடிக்கைகள் நல்லபயன் அளித்தன கள்ளக்கடத்தல் மதுவை எடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டு கைப்பற்றப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை 1985-ல் 105 ஆக இருந்தது. 1986-ல் 62 ஆகக் குறைந்தது. அண்டை மாநிலங்களிலிருந்து வீரியம் குறைக்கப்பட்ட எரி சாராயத்தைக் கள்ளக் கடத்தல் செய்த வண்டிகள் தடுத்து நிறுத்தப்பட்டு, இவ்வாண்டில் 87 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 54,946 லிட்டர் சாராயம் கைப்பற்றப்பட்டது. ஆல்கஹால் அதிக அளவில் அடங்கிய மது கஷாயம், அசவம், அரிஷ்டம் ஆகியவற்றை தயாரித்து விற்பனை செய்ய மருந்து ஒப்பனைப் பொருள் தயாரிக்கும் முறையை தவறாகப் பயன்படுத்திய 379 வழக்குகள் 1986-ல் பதிவு செய்யப்பட்டன. உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் குளோரல் ஹைட்ரேட், கள்ளத்தனமாக தயாரிக்கப்படும் ஆல்கஹால் மது வகைகளுடன் அதிக போதை தருவதற்காக அவற்றில் கலக்கப் படுகிறது. சட்டத்தைச் செயற்படுத்தும் பிரிவு மேற்கொண்ட கள்ளக் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளில் 25 வழக்குகள் கண்டறியப்பட்டு 189.95 கிலோகிராம் மதுப் பொருள்கள் கைப் பற்றப்பட்டன.

15. உரிம நிபந்தனைகள் மீறப்படுவதைக் கண்டறிவதற்காக 31–12–86 வரை சாராய கள்ளுக்கடைகளின் உரிமம் பெற்ற வளாகங்களையும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைக் கடைகளையும், குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை சோதனைச் செய்ததால், சாராயம் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகை ஆகியவற்றின் விற்பனை பெருகியது.



இதனால் அரசுக்கு வருவாய் அதிகரித்தது. 1986-ல் கண்டு பிடிக்கப்பட்ட வழக்குகள் தொடர்பான விவரங்கள் வருமாறு:—

| | 1985 | 1986 |
|---|---|---|
| சாராயக்கடைகள் .. .. | 635 | 1,643 |
| கள்ளுக்கடைகள் .. .. | 237 | 499 |
| இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை கடைகள் | 31 | 9 |

16. நிருவாக அமைப்பு :

மது விலக்கு ஆயத்தீர்வை ஆணையாளர் (இவருக்கு இணை ஆணையாளர்கள், நிதி கட்டுப்பாட்டு அலுவலர், துணைப் பணியாளர்கள் ஆகியோர் உதவுகின்றனர்). தமிழ்நாடு மது விலக்கு சட்டத்தின் கீழும், அதன்கீழ் இயற்றப்பட்ட பல்வேறு விதிகளின் கீழும் அறிவிக்கைகளின் கீழும் அவரிடம் நிலைப்பெற்றுள்ள பல்வேறு அதிகாரங்களைச் செலுத்துகிறார். 1–1–87-ல் இருந்து இம்மாநிலத்தில் திருத்தப்பட்ட மதுவிலக்குக் கொள்கை கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மதுவிலக்கு—ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்திலும், மாவட்டங்களிலும் பணியாளர் எண்ணிக்கை குறைப்பது பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. உரியவாறு பரிசீலித்த பின்னர், பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், தலைமையிடங்களிலும், மாவட்டங்கள் அளவிலும் எஞ்சிய பணியையும், ஏனைய ஆயத்தீர்வை தொடர்பான பணிகளையும் மேற்கொள்வதற்கு இன்றியமையாது தேவைப்படும் பணியாளர்களை மட்டுமே வைத்துக்கொள்ளவும் அரசு ஆணையிட்டது. இவ்வாறாக பணியாளர் எண்ணிக்கை குறைப்பு சுமார் 58 சதவீதம் என்று கணக்கிடப்பட்டது. மேற்கொண்டும் பணியாளர்களைக் குறைப்பதற்கான மற்றொரு ஆய்வு 1987 ஜூலையில் மேற்கொள்ளப்படும்.

17. கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைத் தடுப்புக் காவலில் வைத்தல் :

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் ஏனைய மதுவிலக்குக் குற்றவாளிகள் ஆகியோரின் நடவடிக்கைகளைத் தீவிரமாக அடக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1982-ம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், மருந்துப் பொருள் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சார குற்றவாளிகள், குடிசைப்பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் கொடிய நடவடிக்கைகளைத் தடுக்கும் சட்டத்தை அரசு இயற்றியது. இச்சட்டம் 5–12–1982 முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டது. இதனால் 1982-ல் 62 பேர்களும், 1983-ல் 45 பேர்களும், 1984-ல் 87 பேர்களும், 1985-ல் 100 பேர்களும், 1986-ல் 106 பேர்களும், 1987-ல் (28–2–87 வரை) 19 பேர்களும் இச்சட்டத்தின்கீழ் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களாகத் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டனர். இதனால் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், பிற மாநிலங்களிலிருந்து மதுவகைகளைக் கடத்துதல் ஆகிய குற்றங்களை திறம்படக் கட்டுப்படுத்த முடிந்தது. 28–2–1987 அன்றுள்ளவாறு பல்வேறு குற்றங்களுக்காக இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய விவரம் பின் வருமாறு :—

| | |
|---|---|
| கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் .. .. | 419 |
| மருந்துப்பொருள் குற்றவாளிகள் .. .. | 11 |
| குண்டர்கள் .. .. .. .. | 1,489 |
| விபச்சாரத் தொழில் குற்றம் புரிந்தவர்கள் .. | 11 |
| குடிசைப்பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் .. | 1 |
| | 1,931 |



1[illegible]. மதுவிலக்கு சம்பந்தமாக கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள், கைப்பற்றப்பட்ட ஊர்திகளின் எண்ணிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட கள்ளச் சாராயம் முதலியவைகளின் அளவு விவரம் கீழ் வருமாறு :—

| வரிசை எண்ணும் விவரமும். | 1982. | 1983. | 1984. | 1985. | 1986. | 1987 (28-2-1987 வரை.) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள். | 76,735 | 93,645 | 71,260 | 87,801 | 90,079 | 21,390 |
| 2. கைப்பற்றப்பட்ட கள்ளச்சாராயம் (லிட்டரில்.) | 6,10,507 | 3,90,700 | 5,44,058 | 5,55,814 | 4,48,884 | 2,42,027 |
| 3. அழிக்கப்பட்ட சாராய ஊறலின் அளவு. | 91,38,518 | 83,83,423 | 53,43,455 | 85,05,050 | 90,06,792 | 24,51,535 |
| 4. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகை கைப்பற்றிய புட்டிகளின் | | | | | | |
| எண்ணிக்கை— | | | | | | |
| முழுமையானது .. | 36,053 | 5,852 | 2,425 | 1,939 | 1,547 | 4,294 |
| அரை .. | 18,340 | 9,052 | 1,258 | 1,944 | 1,732 | 3,555 |
| கால் .. | 19,933 | 14,971 | 4,986 | 9,609 | 7,035 | 4,900 |

| வரிசை எண்ணும் விவரமும். | 1982. | 1983. | 1984. | 1985. | 1986. | 1987 (28-2-1987 வரை.) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 5. கைப்பற்றப்பட்ட ஊர்திகளின் எண்ணிக்கை— | | | | | | |
| கார் .. | 98 | 26 | 51 | 38 | 22 | 21 |
| ஜீப்பு .. | 4 | 1 | 1 | 2 | 2 | 1 |
| வேன் .. | 6 | 7 | 26 | 11 | 11 | 11* |
| ஆட்டோ-ரிக்ஷா .. | 11 | 21 | 14 | 30 | 12 | 11 |
| லாரி .. | 9 | 3 | 4 | 14 | 12 | 8 |
| மோட்டார் சைக்கிள். .. | 7 | 5 | 7 | 9 | .. | 3 |
| ஸ்கூட்டர் .. | 2 | 1 | 1 | 1 | 3 | .. |
| படகு .. | 1 | .. | .. | .. | .. | 1 |
| டிராக்டர் .. | .. | .. | .. | .. | .. | 1 |
| மொத்தம் .. | 138 | 64 | 104 | 105 | 62 | 57 |

* ஒரு பேருந்தும் சேர்ந்தது.



19. 31-12-1986 நிலவரப்படி மதுவிலக்கு அமல் பிரிவினால் கண்டு பிடிக்கப்பட்டதும் முடிவு செய்யப்பட்டதுமான வழக்குகளின் விவரங்கள்:—

| வரிசை எண்ணும் விவரமும். | 1-9-1980 முதல் 31-12-80 வரை. | 1981. | 1982. | 1983. | 1984. | 1985 | 1986. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. கண்டு பிடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 20,845 | 59,293 | 76,735 | 93,645 | 71,260 | 87,801 | 90,079 | 4,99,658 |
| 2. குற்றம் சுமத்தப் பட்ட வழக்குகள் | 18,376 | 44,295 | 42,366 | 27,358 | 53,745 | 63,372 | 28,948 | 2 78,460 |
| 3. தண்டனை யில் முடி வுற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 1,540 | 2,569 | 2,781 | 3,184 | 2,610 | 1,620 | 1,414 | 15,718 |
| 4. விடுதலை யில் முடிந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 3,752 | 6,976 | 7,376 | 5,283 | 5,083 | 2,021 | 255 | 30,746 |

| வரிசை எண்ணும் விவரமும். | 1-9-1980 முதல் 31-12-80 வரை. | 1981. | 1982. | 1983. | 1984. | 1985. | 1986. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 5. திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 11,832 | 30,286 | 21,962 | 10,302 | 786 | 29 | 6 | 75,203 |
| 6. விசாரணையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை. | 1,252 | 4,464 | 10,247 | 8,589 | 45,266 | 59,702 | 27,273 | 1,56,793 |
| 7. நடவடிக்கை கைவிடப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 2,469 | 14,998 | 34,369 | 66,283 | 17,311 | 23,307 | 24,517 | 1,83,254 |
| 8. புலனாய்விலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை. | .. | .. | .. | 4 | 204 | 1,122 | 36,614 | 37,944 |



20. 1984, 1985 மற்றும் 1986 (31-12-1986 வரை) மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்களால் எடுத்துக் கொள்ளப் பட்ட சாராய அளவு:

| மாதம். | 1984. | 1985. | 1986. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (அளவு—லிட்டரில்.) | | |
| ஜனவரி .. | 1,19,52,567 | 66,76,174 | 1,00,68,066 |
| பிப்ரவரி .. | 1,16,43,915 | 78,41,219 | 98,63,782 |
| மார்ச் .. | 1,22,60,433 | 95,49,936 | 96,27,438 |
| ஏப்ரல் .. | 1,13,70,804 | 81,34,011 | 98,96,210 |
| மே .. | 1,19,87,949 | 1,06,27,026 | 93,77,980 |
| ஜூன் .. | 1,32,90,744 | 1,03,47,357 | 92,43,780 |
| ஜூலை .. | 1,34,40,412 | 1,00,57,986 | 1,09,03,968 |
| ஆகஸ்டு .. | 1,35,37,410 | 93,63,582 | 1,06,61,178 |
| செப்டம்பர் .. | 1,30,27,287 | 95,48,253 | 1,03,38,444 |
| அக்டோபர் .. | 67,54,697 | 1,03,38,553 | 1,17,47,952 |
| நவம்பர் .. | 36,89,652 | 93,36,077 | 1,01,12,952 |
| டிசம்பர் .. | 33,82,716 | 1,00,31,676 | 1,24,13,156 |

21. 1984, 1985 மற்றும் 1986 ஆண்டுகளில் மாநிலத்தில் விற்கப் பட்ட இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளின் மதிப்பு:—

விற்பனை.

| மாதம். | 1984. | 1985. | 1986. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| சனவரி .. | 541.05 | 869.77 | 941.17 |
| பிப்ரவரி .. | 505.52 | 776.51 | 707.61 |

(ரூபாய் இலட்சத்தில்.)

| மாதம். | 1984. | 1985. | 1986. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| மார்ச் .. | 633.70 | 854.39 | 903.96 |
| ஏப்ரல் .. | 618.49 | 894.34 | 954.82 |
| மே .. | 624.40 | 988.70 | 959.85 |
| ஜூன் .. | 632.36 | 872.78 | 1,063.01 |
| ஜூலை .. | 703.55 | 881.41 | 998.74 |
| ஆகஸ்டு .. | 678.97 | 887.82 | 1,014.08 |
| செப்டம்பர் .. | 709.70 | 859.28 | 1,160.13 |
| அக்டோபர் .. | 939.47 | 902.61 | 1,317.05 |
| நவம்பர் .. | 1,008.41 | 983.54 | 1,0[illegible] |
| டிசம்பர் .. | 757.39 | 732.82 | 1,363.44 |

22. 1986 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட ஜிஞ்சர் பெரிஸ், மதுக் கஷாயம் இவைகளின் விவரம்:—

| தலைப்பு. | கண்டு பிடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை. | கைப்பற்றப் பட்ட கள்ளச் சரக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) (லிட்டர், கிலோகிராம்.) |
| 1. ஜிஞ்சர்பெரிஸ் | 638 | 638 | 1,383 லிட்டர். |
| 2. மதுக்ஷாயம் | 327 | 409 | 2,643 லிட்டர். |
| 3. கஞ்சா | 1,492 | 1,502 | 4,747.942 கி.கி. |
| 4. எரி சாராயம் | 87 | 104 | 54,946 லிட்டர். |
| 5. குளோரல் ஹைட்டிரேட். | 25 | 60 | 189.950 கி.கி. |
| 1987 (28-2-1987 அன்றைய நிலவரப்படி) | | | |
| 1. ஜிஞ்சர்பெரிஸ் | 74 | 74 | 3,283 லிட்டர். |
| 2. மதுக்கஷாயம் | 18 | 14 | 2,325 லிட்டர். |
| 3. கஞ்சா | 298 | 298 | 2,14[illegible] கி.கி. |
| 4. எரிசாராயம் | 6 | 18 | 3,706 கி.கி. |



23. 1986 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்குக் குற்றங்கள் பற்றிய விவரங்கள்:—

| விவரங்கள். | 1-4-1985 முதல் 31-3-1986 முடிய. | 1-4-1986 முதல் 31-12-1986 முடிய. | 1-1-1987 முதல் 28-2-1987 முடிய. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 ஏனைய மாநிலங்களிலிருந்து கடத்தப்பட்ட மதுவகைகள். | 1,172 | 631 | 229 |
| 2 மாவட்டத்திலிருந்து மாவட்டத்திற்கு கடத்தப்பட்ட மதுவகைகள். | 33 | 6 | 1 |
| 3 கள்ளச் சாராயம் காய்ச்சியது. | 13,483 | 11,077 | 3,373 |
| 4 சாராய ஊரல் வைத்திருந்தது. | 15,190 | 14,596 | 3,417 |
| 5 எரி சாராயம் அல்லது கள்ளச் சாராயம் வைத்திருத்தல். | 9,879 | 8,506 | 2,936 |
| 6 கள்ளச் சாராயம் அல்லது எரி சாராயம் விற்பனை செய்தல். | 15,0[illegible] | 12,585 | 3,654 |
| 7 உரிமம் வைத்திராமல் கள் புளிக்க வைத்தல். | 5,296 | [illegible] | 89[illegible] |
| 8 உரிமம் வைத்திராமல் பதநீரைப் புளிக்க வைத்தல். | .. | .. | .. |
| 9 உரிமம் வைத்திராமல் பதநீர் இறக்குதல். | 1 | .. | .. |
| 10 கள்ளத்தனமாக மதுவை எடுத்துச் செல்லுதல். | 15,780 | 9,778 | 4,186 |
| 11 உரிமம் இல்லாமல் மதுவை விற்பனை செய்தல். | 1,307 | [illegible] | 120 |
| 12 உரிமம் இல்லாமல் மதுவை வைத்திருத்தல். | 3,518 | 4,804 | [illegible] |
| 13 கஞ்சா போதை மருந்துச் செடிகளைப் பயிரிடுதல். | 20 | 150 | .. |

| விவரங்கள். (1) | 1-4-1986 முதல் 31-3-1986 முடிய. (2) | 1-4-1986 முதல் 31-12-1986 முடிய. (3) | 1-1-1987 முதல் 28-2-1987 முடிய. (4) |
|---|---|---|---|
| 14 மாவட்டத்திலிருந்து மாவட்டத்திற்கு போதை மருந்துப் பொருள்களைக் கடத்துதல். | .. | .. | .. |
| 15 போதை மருந்துப் பொருள்களைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுதல் | 39 | 35 | 16 |
| 16 உரிமம் இல்லாமல் போதை மருந்துப் பொருள்களை விற்பனை செய்தல். | 43 | 71 | 7 |
| 17 உரிமம் இல்லாமல் போதை மருந்துப் பொருள்களை வைத்திருத்தல். | 1,202 | 1,103 | 289 |
| 18 பல்வகை குடிபோதை மது வகைகள். | 292 | 555 | 205 |
| 19 வீரியம் குறைக்கப்பட்ட சாராவியை அருந்தத் தகுந்ததாக்குதல். | 209 | 158 | 95 |
| 20 அபினைக் கடத்துதல் .. .. | 3 | .. | .. |
| 21 அபினை வைத்திருத்தல் .. | | | |
| 22 அபினை விற்பனை செய்தல் .. | .. | .. | .. |
| 23 அபாயகரமான மருந்துப்பொருள்கள் சட்டத்தின்கீழ் குற்றங்கள். | .. | 17 | .. |
| 24 ஏனைய இனங்கள் (பல்வகை) .. | 382 | 1,072 | 182 |
| மொத்தம் .. | 83,006 | 72,619 | 21,390 |



24. பல்வேறு வகையான மது வகைகளின்மீது தற்போது நடைமுறையில் உள்ள ஆயத்தீர்வை விற்பனைக் கட்டண விதங்கள் பற்றிய விவரம் வருமாறு:—

ஆயத்தீர்வை விதங்களைக் காட்டும் விவர அட்டவணை.

| தொடர் எண்ணும் விவரங்களும். (1) | ஆயத்தீர்வை. (2) | விற்பனைக் கட்டணம். (3) |
|---|---|---|
| .. .. .. | ரூ.பை. | ரூ. பை. |
| 1. எரிசாராயம்— | | |
| (அ) சாதாரண விலை விதம் | 8.00 (வரையறுத்த அளவிலான லிட்டர் ஒன்றுக்கு) | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஆ) எரிசாராயத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் (சாராவி இல்லாமலிருந்தால்.) .. .. | 0.10 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.25 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| 2. வீரியம் குறைந்த சாராவி— | | |
| (அ) சாதாரண விலை விதம் .. | இல்லை. | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஆ) வீரியம் குறைந்த சாராவியைப் பயன் படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் (சாராவி குணம் இல்லாமலிருந்தால்). | இல்லை. | 0.25 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு |

| | | |
|---|---|---|
| 3. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல நாட்டு மதுவகைகள்— | | |
| (அ) மாநிலத்திற்குள்ளேயே தயாரித்து விற்பனை செய்தல் — | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள். | 25.00 (ப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ii) பீர் .. .. .. | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஆ) மொத்த விற்பனை உரிமதாரரின் இறக்குமதி மற்றும் விற்பனைக்கு— | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகள். | 25.00 (ப்ருப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ii) பீர் .. .. .. | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (இ) கேண்டீன் ஸ்டோர் துறையின் இறக்குமதிக்காக— | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகள். | 25.00 (ப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ii) ரம் .. .. .. | 2.75 (ப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (iii) பீர் .. .. .. | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |



| தொடர் எண்ணும் விவரங்களும். (1) | ஆயத்தீர்வை. (2) | விற்பனைக் கட்டணங்கள் (3) |
|---|---|---|
| (ஈ) சென்னை, ஒருங்கிணைந்த உணவு சோதனைக்கூடத்தால் (ஏ.எஸ்.சி.) இறக்குமதி செய்துகொள்வதற்காக— | ரூ.பை. | ரூ.பை |
| ரம் மட்டும் .. .. | 6.00 (ப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (உ) மொத்த விற்பனையாளர் செலுத்த வேண்டிய கூடுதல் விற்பனைக் கட்டணம்— | | |
| (i) ஆணையாளரால் வகைப்படுத்தப்பட்ட சாராவி, மதுவகை திராட்சை மதுவகை 42 சதவிதம் புரூப் "சாராவி" அடங்கிய எனைய மதுவகைகள். | .. | 5.50 (பல்க் லிட்டர் ஒன்றுச்கு) |
| (ii) ஏனைய எல்லா வகை ஒயின் .. | .. | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (iii) பீர், சிடர் மற்றும் ஏனைய புளிக்க வைக்கப்பட்ட மதுவகைகள். | .. | 2.10 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஊ) வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஆயத்தீர்வை விகிதம்— | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் (ஒயின் உட்பட). | 0.45 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ii) பீர் .. .. | 0.10 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.05 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |

25. ஆயத்தீர்வை வருவாய் என்ற தலைப்பின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் கிடைத்த வருவாய் வரவு பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட விவர அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன:—

| வருவாய்த் தலைப்பு. | 1984–85 | 1985–86 | 1986–87 (ஜனவரி 1987 வரை) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 1. நாட்டுச் சாராவி (சாராயம்) .. .. .. | 13,495 | 16,269 | 20,020 |
| 2. புளிக்கவைக்கப்பட்ட நாட்டு மது (கள்) | 2,435 | 3,162 | 1,757 |
| 3. மால்ட் மது (பீர்) .. .. .. | 250 | 371 | 420 |
| 4. அயல்நாட்டு மதுவும் சாராவியும் .. .. | 3,274 | 3,792 | 3,900 |
| 5. வணிக மற்றும் வீரியம் குறைந்த சாராவி மற்றும் மருந்து கலந்த திராட்சை ரசங்கள் .. .. | 106 | 59 | 85 |
| 6. அபின், சாராவி முதலியவை அடங்கிய மருந்து மற்றும் ஒப்பனைத் தயாரிப்புப் பொருட்கள். | 195 | 217 | 159 |
| 7. அபின் மருந்து செடியும் ஏனைய மருந்துகளும். | 1 | 14 | 1 |
| 8. அபராதத் தொகைகள் மற்றும் பறிமுதல்கள் .. | 35 | 280 | 192 |
| 9. ஏனைய வருவாய்கள் .. .. | 404 | 105 | 5 |
| 10. பணியும் பணிக்கட்டணங்களும .. .. | 17 | 1 | 2 |
| மொத்த வருவாய் வரவு .. .. .. | 20,212 | 24,270 | 26,541 |



| | | | |
|---|---|---|---|
| திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை (கழிக்கவும்) .. | 160 | 87 | 146 |
| மொத்த வியாபாரத்தில் துறைக்குக் கிடைத்த விற்பனை வரவு .. | 125 | — | — |
| | 19,927 | 24, 83 | 26,395 |

## இணைப்பு II

(..61ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

வணிகவரி மற்றும் அறநிலையத்துறை மானிய கோரிக்கை எண் 5-

### முத்திரைத்தாள் நிர்வாகம்

1. பொது:—சொத்துக்களை வாங்குதல் விற்பனை செய்தல் குறித்த பத்திரங்கள் மீது முத்திரை தீர்வை விதிப்பதற்கு 1899 ஆம் ஆண்டின் இந்திய முத்திரைத்தாள் சட்டம் (மத்தியச் சட்டம் 2/1899) வகை செய்கிறது. 1980 டிசம்பர் திங்கள், முதல் தேதி முதல் பதிவுத்துறைத் தலைவர் தலைமைக் கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரி என்ற முறையில் இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாயினை மேற்பார்வை செய்கிறார்.

2. முத்திரைத்தாள்களின் தேவையைக் கணித்தலும் முத்திரைத்தாள்களை வழங்குதலும்:—அஞ்சல் சாரா முத்திரைத் தாள்களான நீதித்துறையைச் சார்ந்த மற்றும் நீதித்துறையைச் சாரா முத்திரைத்தாள்களை தமிழ்நாடு முழுவதும் வழங்குவதற் குரிய தேவைக் குறிப்புகளை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர், நாசிக்கில் உள்ள இந்திய பாதுகாப்பு அச்சகத்தின் முத்திரைத் தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். சென்னை வட்டார துணைக் கருவூலம் மற்றும் கணக்குத்துறை இயக்குநர், அலுவல் வழி முத்திரைத்தாள் கண்காணிப்பாளராக உள்ளார். இவருக்கு உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் உதவி புரிகிறார். முத்திரைத்தாள்களுக்கான தேவைக்குறிப்பு களை மாவட்ட கருவூல அதிகாரிகளும், உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளரும் ஆண்டுக்கு ஒரு முறையும் மூன்று மாதங் களுக்கு ஒருமுறையும் அனுப்பி வைக்கின்றனர். இந்தத் தேவைக் குறிப்புகளை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைக்கும் போது எல்லா மாவட்டக் கருவூலங்களிலும், துணைக் கருவூலங் களிலும் தேவைகளை நிறைவு செய்யவும், அவசரத் தேவைக்கும், எதிர்பாராத் தேவைக்கும் போதுமான அளவு உள்ளதா என்றும் பலவகை மதிப்புகளிலும் உள்ளதா என்றும் கவனித்துக் கொள்கிறார். ஒரு குறிப்பிட்ட வகை மதிப்பு முத்திரைத்தாள் இல்லாவிடில், ஒரு துணைக் கருவூலத்திலிருந்து மற்றொன்றுக்கு கருவூல அதிகாரியும், மாவட்ட கருவூலம் ஒன்றி லிருந்து மன்றொன்றுக்கு முத்திரைத்தாள் கண்காணிப்பாளரும் மாற்றம் செய்கின்றனர்.

3. முத்திரைத்தாள்கள், உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மூலம் பொது மக்களுக்கு விற்கப்படுகின்றன. இந்த முத்திரைத்தாள் விற்பனைக்கேற்றவாறு அவர்களுக்குத் தரகு தொகை அளிக்கப்படுகிறது. நீதித்துறை சாரா முத்திரைத் தாள்கள் விற்பனையில் இருப்புகள் ஒரே இடத்தில் குவிந்திருப் பதையும். செயற்கையாக ஏற்படுத்தப்படக்கூடிய தட்டுப் பாட்டையும், கள்ளச் சந்தை விற்பனையையும் தவிர்க்கும் பொருட்டு நீதித்துறை சாரா முத்திரைத்தாள்களை மாநில



முழுவதுமுள்ள எல்லா பத்திரப் பதிவு அலுவலகங்களிலும் விற்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. மேலும், சில குறிப்பிட்ட வகை ஆவணங்களில் செலுத்தப்படவேண்டிய முத்திரைத் தீர்வையை பத்திரப் பதிவு அலுவலகங்களில் ரொக்கமாகச் செலுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் முத்திரைத்தாள் கட்டுப் பாட்டு அதிகாரி வழங்கும் முத்திரைத் தாள்களை மட்டும் பொது மக்கள் பெரும் அளவு நம்பியிருக்கத் தேவையில்லை. மேலும் குறிப்பிட்ட வகை மதிப்பு முத்திரைத்தாள்கள் பற்றாக் குறையாக இருக்கும்போது பொது மக்களுக்கு இன்னல் ஏற்படு வதும் தவிர்க்கப்படுகிறது. உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் பணியைக் கண்காணித்து கட்டுப்பாடு செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பதிவுத்துறைத் தலைவருக்கு மாற்றப்பட்டுள்ளது.

4. வருவாய்.— 1984–85ஆம் ஆண்டில் முத்திரைத்தாள் விற்பனையின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 94.37 கோடி. 1985–86ஆம் ஆண்டில் இது 115.04 கோடியாக உயர்ந் துள்ளது. 1986–87ஆம் ஆண்டில் இந்த வகையில் டிசம்பர் 1986 வரை அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 112.29 கோடி. 1986-87-ல் மொத்தமாக ரூ. 130 கோடி வருமானம் எதிர் பார்க்கப்படுகிறது. நிலம் முதலிய அசையாச் சொத்துக்களை மதிப்பிடுவதைக் கூர்ந்து கண்காணித்து வந்து அவ்வப்போது பத்திர வாயிலாகவும், பொதுவாகவும் ஏற்படும் மதிப்பு உயர்வை செயல்முறைப்படுத்தியதால் இந்த வருவாய் உயர்வு ஏற்பட்டது.

5. 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) நிர்வாகம்.— முத்திரைத் தீர்வை வருவாயில் பெரும்பகுதி அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல், உரிமை மாற்றம் செய்தல், உரிமையை விட்டுக் கொடுத்தல் அறுதியாவணம், முடிவடையும் காலம் குறிப்பிடாத குத்தகை மற்றும் சுவாதீன உரிமையுடன் கூடிய அடமானம் ஆகிய கட்டாய மான பதிவு செய்யப்படவேண்டிய ஆவணங்களைப் பதிவு செய்யும்போது செலுத்தும் முத்திரைத் தீர்வையின் மூலம் கிடைக்கிறது. இது போன்ற பத்திரங்களில் அதாவது விற்பனை உரிமம் மாற்றல் முதலியவற்றில் சொத்துக்களின் அங்காடி மதிப்பையொட்டி முத்திரைத் தீர்வை விதிக்கப்படுகிறது. இப்பத்திரங்களை எழுதிக் கொடுப்பவர்கள் அப்பத்திரத்தில் சம்பந்தப்பட்ட சொத்தின் அங்காடி மதிப்பைக் குறிப்பிட வேண்டும். பத்திரத்தில் குறிப்பிடப்படும் சொத்துக்களின் அங்காடி மதிப்பு சரியா என்பதை பத்திரப் பதிவு அதிகாரிகள் நன்கு அறியவும், பத்திரத்தில் குறிப்பிட்ட சொத்து குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதா முத்திரைத்தாள் தீர்வை செலுத்து வதினின்று எவரும் தந்திரமாகத் தப்பிக்க முயல்கின்றாரா என்ப தற்றை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவும், பத்திரப் பதிவு அதிகாரிகளுக்கு வழிகாட்டிப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பதிவேட்டில் நில அளவு, அந்நிலங்களின் மதிப்பு ஆகியவன் குறிப்பிடப்பட்டுள்ளது. பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின்

மதிப்பு சரியாகக் குறிப்பிடவில்லை என்று பதிவு அலுவலர் ஐயுறு வதற்கான காரணமிருப்பின் அச்சொத்தின் உண்மையான அங்காடி மதிப்பை நிர்ணயிப்பதற்காக இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47 (எ)-ன் கீழ் மாவட்ட ஆட்சியரிடம் ஆவணத்தை அனுப்ப இச்சட்டம் அவருக்கு அதிகாரமளிக்கிறது. இச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியரின் அதிகாரங்கள் தற்போது சம்பந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலர்கள், மாவட்ட உதவி ஆட்சியாளர்கள், மாவட்ட சார் ஆட்சியர்கள் ஆகியோரிடமும், சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரிடமும் நிலைபெற்றுள்ளன. இப்பணியை மேலும் விரைவு படுத்தும் பொருட்டு 1899-ம் ஆண்டின் இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 47-எ பிரிவின் கீழ் இப்பணியைக் கவனிக்க வேலூர், கடலூர், சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களை தலைமை இடங்களாகக் கொண்ட நான்கு மாவட்ட தனித்துணை ஆட்சியாளர்களை அரசு நியமித்துள்ளது. இத்தனித்துணை ஆட்சியர்கள் செங்கற்பட்டு, வடஆற்காடு, தென் ஆற்காடு—திருச்சிராப்பள்ளி சேலம்—தர்மபுரி, பெரியார் மற்றும் கோயம்புத்தூர் வருவாய் மாவட்டங்களின் மீது அதிகார வரம்பு உடையவர்கள். சொத்துக்களின் மீது உயர்மதிப்பு குறிப்பிட்டு ஆவணங்கள் பதிவு செய்யப்படும்போதெல்லாம் வழிகாட்டிப் பதி வேடுகளில் அந்த சொத்திற்கு அந்த உயர் மதிப்பு குறிப்பிடப் படுகிறது. கட்டிடம் அமைந்துள்ள பகுதியையும், கட்டிடத்தின் மதிப்பையும் சரிபார்ப்பதில் பத்திரப் பதிவு அலுவலர்களுக்கு உதவி செய்யவும், கட்டிட அமைப்பு மேற்கூரை முதலியவை தொடர்பாக கட்டிடத்தின் மதிப்பை நிர்ணயிக்கும் வகையில் பொதுப்பணித்துறையுடன் தொடர்பு கொள்ளவும் வகை செய்ய உதவி நிர்வாகப் பொறியாளர் பதவி ஒன்று பத்திரப் பதிவுத் துறைத் தலைவரின் கீழ் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த உதவி நிர்வாகப் பொறியாளர் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களை தல ஆய்வு செய்து மேற்கொண்ட தீவிரமான பணியினால் 1985-86 நிதி ஆண்டில் பதிவுக்கு ஏற்கப்பட்டு இவருக்கு அனுப்பப்பட்ட சில ஆவணங்களில் குறித்த சொத்துக்களின் மதிப்பு ரூ. 33.52 லட்சம் குறைவாக மதிப்பிடப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ளார். 1986—87-ல் டிசம்பர் 1986 வரை அவர் கண்டறிந்த குறைவு மதிப்பு ரூ. 31.04 இலட்சமாகும். சொத்துகளின் மதிப்பில் ஏற்படக்கூடிய குறைவு மதிப்பினை கண்டறிய மாதிரி Random சோதனையும் அவர் மேற்கொள்கிறார்.

6. உரிமை மாற்றுத் தீர்வை.—முத்திரைத் தீர்வையுடன் ஆவணங்களைப் பதிவு செய்வதற்காகச் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையைத் தவிர விற்பனை, பரிவர்த்தனை, தானம், உடைமை உரிமையுடன் கூடிய அடைமான ஆவணம், நிரந்தர மான குத்தகை முதலிய ஆவணங்களில் குறித்த சொத்து மதிப்பில் 5 சதவீதம் உரிமை மாற்றுத் தீர்வையாக வசூலிக்கும் பணியையும் பத்திரப் பதிவுத்துறை மேற்கொள்கிறது. இவ்வாறு



வசூலிக்கப்படும் தொகையில் 3 சதவீதத் தொகையை பணிக் கட்டணமாக அரசு எடுத்துக் கொள்கிறது. எஞ்சியுள்ள 97 சதவீதத் தொகை சம்பந்தப்பட்ட ஊராட்சிகள், நகரியங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், சென்னை மற்றும் மதுரை மாநகராட்சி களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. கோயம்புத்தூர் மாநகராட்சி பொறுத்தமட்டில் வசூலிக்கும் தொகையில் 5 சதவீதம் தொகை பணி கட்டணமாக அரசு எடுத்துக்கொண்டு 95 சதவீதம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதர நகராட்சிகளுக்கு 90 சதவீதம் பகிர்ந்தளிக்கப்பட்டு மீதி 10 சதவீதம் தொகையை பணிக்கட்டணமாக அரசு எடுத்துக் கொள் கிறது.

7. வருவாய்.—1986-87ஆம் ஆண்டில் முத்திரைத்தாள் நிர்வாகம் என்பதன் கீழ் வரவு-செலவு பற்றிய விபரங்கள்:—

| தொடர் எண்ணும் முத்திரைத் தாள்களின் வகைகளும். | 1985 ஏப்ரல் முதல் 1986 மார்ச் வரை. | 1986-87 ஆண்டு (1986 ஏப்ரல் முதல் டிசம்பர் 1986 வரை). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 நீதித்துறை சாரா முத்திரைத் தாள்கள் | 90,22,98,277.00 | 85,52,01,404.00 |
| 2 நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்கள் | 9,46,87,884.00 | 8,79,62,762.00 |
| 3 உண்டியல் முத்திரைத் தாள்கள் | 28,33,706.00 | 21,01,365.00 |
| 4 ஒட்டு முத்திரை வில்லைகள் | 3,46,59,424.00 | 2,60,34,820.00 |
| 5 பல்வகை வரவுகள் | 11,58,96,791.00 | 15,16,85,079.00 |
| பெரு மொத்த வரவுகள் | 1,15,03,76,082.00 | 1,12,29,85,430.00 |

| தொடர் எண்ணும் முத்திரைத் தாள்களின் வகைகளும். | 1985 ஏப்ரல் முதல் 1986 மார்ச் வரை | 1986-87 ஆம் ஆண்டு (1986 ஏப்ரல் முதல் டிசம்பர் 1986 வரை). |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| கழிப்பு. | | |
| (i) உள்ளாட்சி மன்றங்களுக்கு செலுத்தியவை உட்பட நீதித் துறை சாரா முத்திரைத் தாள்கள். | 33,66,15,829.00 | 28,72,62,330.00 |
| (ii) நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்கள். | 33,31,653.00 | 30,31,260.00 |
| திருப்பி செலுத்திய மொத்த தொகை. | 33,99,47,482.00 | 29,02,93,590.00 |
| 1. முத்திரைத் தாள் விற்பனையில் தள்ளுபடி | 68,94,049.00 | 58,33,447.00 |
| 2. பணியாளர்கள் செலவு | 14,29,991.00 | 12,90,982.00 |
| 3. நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் அச்சகத்திற்கு செலுத்தத்தக்க கட்டணம். | 26,91,335.00 | 21,83,264.00 |
| மொத்த செலவு. | 1,10,15,375.00 | 93,07,693.00 |
| மொத்த வரவுகள் | 1,15,03,76,082.00 | 1,12,29,85,430.00 |
| மொத்த செலவுகள் மற்றும் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகைகள் | 35,09,62,857.00 | 29,96,01,283.00 |
| நிகர வரவுகள்.. | 79,94,13,225.00 | 82,33,84,147.00 |



## இணைப்பு III.

(61ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை எண் 6.

### பத்திரப் பதிவுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு.

(1) பொது,—பத்திரப் பதிவுத்துறை, ஆவணங்களைப் பதிவு செய்தல், அந்த ஆவணங்கள் தொடர்பான பதிவேடுகளைப் பராமரித்தல் ஆகியவற்றை முறைப்படுத்துகின்ற பத்திரப் பதிவுச் சட்டத்தை முக்கியமாக நிர்வகித்து வருகின்றது. இத் துறை பின்வரும் சட்டங்களையும் நிருவகித்து வருகின்றது:—

1. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம்;

2. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டு பங்கு வாணிபச் சட்டம்;

3. 1986 ஆம் ஆண்டு பிறப்பு—இறப்பு, திருமணப் பதிவுச் சட்டம்;

4. 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்;

5. 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்;

6. 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம்;

7. தமிழ்நாடு, 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்

8. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்தியச் சட்டம் 40/1982).

9. 1969 ஆம் ஆண்டு பிறப்பு-இறப்புச் சட்டம்;

10. 1872 ஆம் ஆண்டு இந்தியக் கிறித்துவத் திருமணங்கள் சட்டம்;

11. 1936 ஆம் ஆண்டு பார்சி திருமணங்கள், விவாகரத்துச் சட்டம்;

12. 1972 ஆம் ஆண்டு வணிகஞ் சாரா கம்பெனிகள் சட்டம்; 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி, வருவாய் நிலைமை கட்டுப்பாட்டு அதிகாரிக்குள்ள அதிகாரங்களும் பத்திரப் பதிவுத் துறைத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ளது,

2. நிருவாக அமைப்பு.—(i) இந்திய ஆட்சிப் பணி பதவித் தரத்தில் உள்ள அலுவலர் ஒருவர் பத்திரப் பதிவுத்துறைத் தலைவராக உள்ளார். பிறப்பு-இறப்பு, திருமணங்கள் ஆகியவை குறித்து பதிவு செய்யும் தலைமைப் பதிவாளராகவும், சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் சீட்டு நிதிகள் பதிவாளராகவும், தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் சங்கங்களின் பதிவாளராகவும், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் வருவாய் தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரியாகவும் இவர் இருக்கிறார். இம்மாநிலத்திலுள்ள ஆவண எழுத்தர், நகல் எழுத்தர் ஆகியோருக்கு உரிமம் வழங்கும் அதிகாரியும் இவரே. இவருக்கு உதவியாக கூடுதல் பத்திரப் பதிவுத் துறை தலைவர், துணைப் பதிவுத்துறைத் தலைவர் பதிவுத் தரத்தில் சட்ட அலுவலர் ஒருவர், துணைப் பதிவுத்துறைத் தலைவர் பதவித் தரத்தில் சீட்டு நிதிகள் கூடுதல் பதிவாளர் ஒருவர், பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர் பதவித் தரத்தில் நேர்முக உதவியாளர் (பொது) ஒருவர், மாவட்டப் பதிவாளர் பதவித்தரத்தில் நேர்முக உதவியாளர் (சீட்டுகள்) ஒருவர், கருவூல கணக்குத் துறையிலிருந்து பெறப்பட்ட கணக்கு அதிகாரி ஒருவர், நிருவாக உதவிப் பொறியாளர் (பொதுப் பணித்துறை) ஒருவர், ஆகியோரும் பணியாற்றுகின்றனர். காவல் துறை துணை கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் காவல்துறை ஆய்வாளர்கள் நால்வர் கொண்ட ஒழுக்கக் கண்காணிப்பு சிறப்புப் பிரிவு ஒன்றும் பணியாற்றி வருகின்றது.

(ii) பத்திரப் பதிவுத்துறை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்ட 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டலங்கள் ஒவ்வொன்றும் பதிவுத்துறைத் துணைத் தலைவர் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டு வருகின்றன. இம்மண்டலங்கள் ஒவ்வொன்றும் மேலும் இரண்டு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றும் பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டு வருகின்றன. வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, மதுரை ஆகிய இடங்களிலுள்ள வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் தற்போது 8 பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர்கள் உள்ளனர். இம்மாநிலம், 46 பத்திரப் பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்திரப் பதிவு மாவட்டமும், ஒரு மாவட்டப் பதிவாளர் நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. இம்மாநிலத்தில் 521 சார்பதிவாளர்களும் உள்ளனர். மேலும், சார்பதிவாளர் அலுவலக் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக, 26 மாவட்டத் தணிக்கைப் பதிவாளர்களும் உள்ளனர். சீட்டு நிதிகள் சட்டத்தையும் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தையும் நிருவகிப்பதில், சீட்டு ஆய்வாளர் ஒருவரும் சங்கங்கள் சார் பதிவாளர் ஒருவரும் மாவட்டப் பதிவாளருக்கு உதவி செய்



கின்றனர். சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பதிவு செய்யப்படும் ஆவணங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும், சிக்கலானவையாகவும் இருக்கின்றன. இவற்றுக்கு சட்ட அறிவும் அனுபவமும் தேவைப்படுகிறது. இவற்றைக் கருதிப் பார்த்து இந்நகர்களில் உள்ள சார்பதிவாளர் பதவிகள் மாவட்டப் பதிவாளர் பதவிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

(iii) மாவட்டப் பதிவாளர்கள், சார்பதிவாளர்கள் ஆகியோரின் பணியை ஒட்டுமொத்தமாக மேற்பார்வையிடும் பணி, பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வரையறுத்த இலக்குகள், குறியீடுகளையொட்டி மாவட்டப் பதிவாளர் ஒவ்வொருவரின் சாதனைகளை இவர்கள் கண்காணிக்கின்றனர். நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் எய்தப்பட்டுள்ளதா என்றும் அவர்கள் கவனிக்கின்றனர். மேலும் சொத்துக்களின் மதிப்பைக் குறைத்து எழுதுவதாலும் பிற முறைகேடுகளாலும் வருவாய் இழப்பு ஏற்படாவண்ணம் காக்கின்றனர். மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களின் பத்திரப் பதிவுக் கிளை அலுவலகங்களையும், அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள நிலை உயர்த்தப்பட்ட அலுவலகங்களையும் சென்று பார்வையிடுகின்றனர். அவரவர்க்குரிய மண்டலங்களில் முத்திரைத்தாள் விற்பனையாளர் நியமனத்தில் மேல் முறையீட்டு அதிகாரிகளாகவும் உள்ளனர்.

(iv) பொதுவாக, பத்திரப் பதிவு அலுவலகத்தை மொத்தத்தில் மேற்பார்வையிடுவதில், பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர்கள் பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவருக்கு உதவி புரிகிறார்கள். அவர்கள் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு திடீரெனச் சென்று சொத்துக்களின் மதிப்பு குறைத்து எழுதப் பட்டுள்ளதா என்பதைக் கண்டறியும் பொருட்டு ஆவணங்களைச் சரி பார்த்தல், புகார்கள் பற்றி விசாரணை நடத்தல், அவர்களுடைய வட்டாரங்களில் உள்ள சீட்டு நிறுவனங்களையும், சங்கங்களையும் பார்வையிடுதல் ஆகிய பணிகளைக் கவனிக்கின்றனர். மேலும், கட்டிடங்களின் அங்காடி மதிப்பைக் கணக்கிட்டு, கட்டிடங்களின் மதிப்பு எதுவும் குறைத்து எழுதப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறியும் பொருட்டு, விற்கப்பட்ட கட்டிடங்களை நேரில் சென்றும் பார்வையிடுகின்றனர். மேலும் சார்பதிவாளர் அலுவலகங்களில் தணிக்கைப் பணி நடைபெற்றுள்ளதா என்பதை கவனிக்கும் பொருட்டு, அவரவர் பொறுப்பிலுள்ள நகர்களில் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகங்கள் ஒவ்வொன்றையும் சென்று பார்வையிடுகின்றனர்.

(v) மாவட்டப் பதிவாளர், மாவட்ட அளவில் நிருவாகத் தலைமை அதிகாரியாவார். சங்கங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றைப் பதிவுசெய்யும் பதிவாளராகவும் சீட்டு நிதிகளைப் பதிவு செய்யும் இணைப் பதிவாளராகவும், முத்திரைத்தாள்

சட்டத்தின் சில விதித்துறைகளின்படி வரித் தண்டலராகவும் (கலெக்டர்) முத்திரைத்தாள் விற்பவர்களை நியமிக்கும் அதிகாரியாகவும், வரதட்சணை தடுப்புச் சட்டத்தின்படி வழக்குத் தொடர அனுமதி அளிக்கும் அதிகாரியாகவும் அவர் உள்ளார். ஆவணங்களைப் பதிவு செய்ய மறுப்பது தொடர்பான வழக்குகளில் இவரே மேல் முறையீட்டு அதிகாரியாவார். மேலும் இவருடைய கட்டுப்பாட்டிலுள்ள சார்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்தையும் இவர் ஆண்டுதோறும் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

(vi) பத்திரங்களைப் பதிவு செய்தல், பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை வைத்து சொத்துக்களுக்கு வில்லங்கச் சான்றிதழ் வழங்குதல், பத்திரங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை வழங்குதல், இந்து திருமணச் சட்டத்தின்படி திருமணங்களைப் பதிவு செய்தல், சிறப்புத் திருமணச் சட்டத்தின்படி திருமணங்களை நடத்தி வைத்தல் ஆகியவை சார்பதிவாளரின் முக்கிய பணிகளாகும். நீதித்துறைச் சாராத முத்திரைத் தாள்கள், நீதிமன்றக் கட்டண ஒட்டு வில்லைகள் ஆகியவற்றை விற்கும் பணியும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிரயப் பத்திரம், அடைமானப் பத்திரம், அறுதியாவணம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 41 ஆம் பிரிவின்படி அவர்கள் முத்திரைத்தாள் தீர்வையை ரொக்கமாக வசூலிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார்கள்.

ஆவணங்கள் எழுதுவோர், மனுக்கள் எழுதுவோர், முத்திரைத் தாள் விற்பவர் ஆகியோரை மேற்பார்வையிட்டு, கட்டுப்படுத்தும் அதிகாரம் சார்பதிவாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. பணிச்சுமை அதிகமாக உள்ள 15 பத்திர பதிவு அலுவலகங்களில், ஆவணங்களை விரைந்து படி எடுப்பதற்கு வசதியாக "ஜெராக்ஸ்" படி பெருக்கி இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

3. தமிழ்நாடு சீட்டு நிதி நிறுவனம்:—தனியார் சீட்டு நிறுவனங்களின் முறைகேடுகளுக்கு பொது மக்கள் பலியாவதைத் தடுக்கும் நோக்கத்துடன் 11-1-1984 ஆம் நாளன்று தமிழ்நாடு சீட்டு நிதி நிறுவனம் தொடங்கப்பட்டது. மொத்தம் ரூபாய் [illegible] இலட்சம் தொகைக்கு 8 சீட்டுத் தொகுதிகளைக் கொண்டு 1-4-1984 ஆம் நாள் முதல் இந்நிறுவனம் தனது பணியைத் தொடங்கியது. இதன் தலைமை அலுவலகம், தற்போது சென்னை—17, தியாகராய நகரில் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் கிளை ஒன்று, சௌகார்பேட்டையில் திறக்கப்பட்டு தற்போது நுங்கம்பாக்கத்திற்கு மாற்றப்பட்டு அங்கு செயல்பட்டு வருகிறது. [illegible] தமிழ்நாடு சீட்டு நிதி நிறுவனத்தின் வருமானம் ரூ. 85,000 ஆகும். இந்த இரு கிளைகளிலும் நடத்தப்படும் சீட்டுத் தொகுதிகளின் விவரம் வருமாறு:—



| கிளை. | | தொகுதிகளின் எண்ணிக்கை. | சீட்டுத் தொகை. |
|---|---|---|---|
| 1. தி. நகர் | .. | 177 | ரூ. 15.32 இலட்சம் |
| 2. நுங்கம்பாக்கம் | .. | 17 | ரூ. 1.07 இலட்சம் |
| மொத்தம் | .. | 194 | ரூ. 16.39 இலட்சம் |

31-12-1986 ஆம் நாளன்றுள்ளபடி, 194 சீட்டுத் தொகுதிகளில் 6,150 சந்தாதாரர்கள் சேர்ந்துள்ளனர். கடந்த ஆண்டு இருந்த சந்தாதாரர்களின் எண்ணிக்கையும் சீட்டுத் தொகுதிகளின் எண்ணிக்கையும் முறையே 3,600, 130 ஆகும். 'கடினமாக உழைத்து பணம் சம்பாதிக்கும் நடுத்தர வர்க்க மக்களின் முதலீட்டுத் தொகைகளுக்கு ஓர் உறுதியான அமைப்பினை இந்த சீட்டு நிதி நிறுவனம் அளிக்கிறது. இந்த நிறுவனம் நடத்தி வரும் சீட்டுத் தொகுதிகளின் சில சிறப்புக் கூறுகள் வருமாறு:—

(அ) பிணையம் ஏற்றுக் கொள்ளப்பட்ட மறுநாளிலேயே பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

(ஆ) சந்தாதாரர்களுக்கு அனுமதிக் கட்டணம் ஏதும் கிடையாது.

(இ) சந்தா தொகை முறையாக செலுத்தத் தவறிய சந்தாதாரர்களுக்கு, அவர்களது பங்குத் தொகையை திருப்பிக் கொடுக்கும் போது தொகை எதுவும் கழிக்கப்படுவதில்லை. திங்கள்தோறும் ரூ. 50 முதல் ரூ. 2,500 வரை சந்தா செலுத்தும் வகையில் 20, 30, 40, 50 திங்கள் என்ற வெவ்வேறு காலஅளவில் பல சீட்டுத் தொகுதிகளை இந்த நிறுவனம் நடத்தி வருகிறது.

4. ஆவணங்கள் எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்கள்.—நகல் எழுதுவோர் உரிம விதிகள் 1971 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டன. ஆவணம் எழுதுவோருக்கு உரிமம் அளிப்பது தொடர்பான விதிகள் 14—4—1982 முதல் செயலுக்குக் கொண்டு வரப்பட்டன. 31—12—1986 ஆம் நாள் அன்றுள்ளவாறு ஆவண எழுத்தர் மற்றும் நகல் எழுத்தர் பணிபுரிய உரிமம் பெற்றோரின் எண்ணிக்கை வருமாறு:—

| | ஆவண எழுத்தர். | நகல் எழுத்தர். |
|---|---|---|
| 1. மாநில உரிமம் பெற்றுள்ளவர்கள் | 1,605 | 520 |

| | | | |
|---|---|---|---|
| 2. | மாவட்ட உரிமம் பெற்றுள்ளவர்கள். .. .. | 6,404 | 720 |
| 3. | துணை மாவட்ட உரிமம் பெற்றுள்ளவர்கள். .. | 3,493 | 7,148 |
| | மொத்தம் .. | 11,502 | 8,388 |

5. (அ) 1982 ஆம் ஆண்டு சிட்டு நிதிச் சட்டம் (மத்தியச் சட்டம் 40/1982):—1982 ஆம் ஆண்டு சிட்டு நிதிச் சட்டம் 13-4-1984 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிட்டு நிதிச் சட்டம் நீக்கம் செய்யப்பட்ட போதிலும் புதிய சட்டம் செயலுக்கு வந்த நாளன்று நடைபெற்று வந்த சிட்டுக்களை, சந்தாதாரர்களின் நலன்களைக் காக்கும் வகையில், அந்த சிட்டுக்களின் இயல்பான கால அளவு முடியும் வரையில் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

1984-85 ஆம் ஆண்டில் 2,089 சிட்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. 1985-86 ஆட் ஆண்டில் மொத்தம் 6,729 சிட்டு தொகுதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

31–3–1986 ஆம் நாளன்றுள்ளவாறு இந்தச் சட்டத்தின் கீழ், சிட்டு நிறுவனங்கள் முதலீடு செய்துள்ள பிணையத் தொகைகளின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒப்பீடு செய்வதற்காக 1984-85 ஆண்டுகளுக்கான விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | 1985–86. | 1984–85. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1. | குறித்தகால வைப்புத் தொகைகள். | 13.35,52,614.50 | 4,08,80,213.50 |
| 2. | அரசு பிணையத் தொகைகள். | 32,67,500.00 | 49,500.00 |
| 3. | இயங்காச் சொத்துக்கள். | 13,90,000.00 | 16,60.000.00 |
| | மொத்தம் .. | 13,82,10,114.50 | 4,25,89,713.50 |



(ஆ) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட்டு நிதிச் சட்டம்.—தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட்டு நிதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டு 31–12–1986 அன்றுள்ளபடி நடைபெற்று வந்த சிட்டுத் தொகைகளின் எண்ணிக்கை 2,211 ஆகும். 31–12–1986 ஆம் நாளன்றுள்ளவாறு, சிட்டுப் பதிவாளர்களிடம் உள்ள பிணைய வைப்புத் தொகைகளின் மதிப்பு ரூ. 4.03 கோடி ஆகும்.

31-12-1986 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டில், 153 சிட்டுகள் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட்டு நிதிச் சட்டத்தின் கீழ் அதிகாரபூர்வமற்ற முறையில் நடத்தப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. ஏனைய குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டவை 153 ஆகும். இவற்றில் 184 இனங்களில் தண்டனையும் 100 இனங்களில் அபராதமும் விதிக்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டு மத்திய சிட்டு நிதிச் சட்டத்தின் கீழ் 1986 ஆம் ஆண்டில் 630 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகள் தொகுக்கப்பட்டு, கூட்டுக் கட்டணமாக 22,015 ரூபாய் விதிக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் இவ்வாறு 136 இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, ரூபாய் 3,060 கூட்டுக் கட்டணம் விதிக்கப்பட்டது.

6. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975.)—கல்வி, சமூக, மத, கலாச்சார, பொழுது போக்கு, விளையாட்டு, அறிவியல், ஏனைய நோக்கங் களுக்காக அமைக்கப்படும் சங்கங்களைப் பதிவு செய்ய தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் வழி வகை செய்கின்றது. பத்திரப் பதிவுத் துறைத் தலைவரும், மாவட்டப் பத்திரப் பதிவாளரும் தங்களது ஆட்சி வரம்பெல்லைக்கு உட்பட்ட பகுதியில் இச்சட்டத்தை நிருவகிக் கின்றனர். ஆண்டு வருமானம்—செலவு 10,000 ரூபாய்க்கு மேல் உள்ள சங்கங்கள் இச்சட்டத்தின் கீழ் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். இச்சங்க உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுக்கு மேற்படக் கூடாது. ஒவ்வொரு சங்கமும் அதன் ஆண்டு வருமானம்—செலவு 10,000 ரூபாய்க்கு மெல் இருப்பின், அதன் கணக்குகளைப் பட்டயக் கணக்கர்களைக் கொண்டு தணிக்கை செய்ய வேண்டும். அதன் ஆண்டு வருமானம்—செலவு 2,500 ரூபாய்க்கு மேலும் 10,000 ரூபாய்க்குக் குறைவாகவும் இருப்பின் அச்சங்கத்தின் பட்டதாரி உறுப்பினர் ஒருவர் இக்கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டும். அதன் ஆண்டு வருமானம்—செலவு 2,500 ரூபாய்க்கும் குறைவாக இருப்பின் 10 ஆம் வகுப்பு அல்லது அதற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வில் தேர்ச்சிப் பெற்ற சங்க உறுப்பினர் ஒருவரால் அதன் கணக்குகள் தணிக்கை செய்யப்படும். இந்த விதித்துறைகள் இச்சங்க உறுப்பினர்களின் நலன்களைப் பாதுகாப்பதுடன், இச்சங்கங்கள் மேற்கொள்ளும் சமூகப்பணிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கின்றன.

கிட்டத்தட்ட அனைத்துச் சங்கங்களுமே, அலுவலக அல்லது சொந்தப் பணிகளுடன் சங்கப் பணிகளையும் கவனிக்கும் தனிப் பட்டவர்களால் நிருவகிக்கப்படுவதால் சங்கத்தின் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளையும், ஐந்தொகைக் கணக்கினையும், ஏனைய ஆவணங்களையும் அதன் நிதியாண்டு முடிவடைந்து ஆறு திங்கள் கால அளவிற்குள் ஆண்டுப் பொதுக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கவும் ஆண்டு பொதுக் குழுக் கூட்டம் நடந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள் சங்கங்கள் அந்த ஆவணங்களை பதிவாளர் முன் வைக்கவும் அரசு அனுமதித்துள்ளது.

7. வருவாய்.—பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்காகச் செலுத்தப்படத்தக்க முத்திரைத் தீர்வை இத்துறையின் முக்கிய வருவாய் ஆகும். இது தவிர 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் கட்டண வீத அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள வீதத்தில் செலுத்தப்படும் பத்திரப் பதிவுக் கட்டணம் பத்திரப் பதிவுத் துறை ஆற்றும் பணிக்கான பணிக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. மேலும் சீட்டு நிறுவனங்கள், சங்கங்கள், நிறுவனங்கள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்காகவும், இத்தகைய ஆவணங்களைத் தேடுதல், நகல் எடுத்தல், வில்லங்கச் சான்றிதழ் வழங்குதல் போன்ற பணிக் கட்டணங்கள் மூலமும் சிறிது வருவாய் கிடைக்கிறது.

1-4-1986 முதல் 31-12-1986 முத்திரைத் தீர்வை, பத்திரப் பதிவுக் கட்டணம் மூலமாக, பத்திரப் பதிவுத் துறைக்கு கிடைத்த மொத்த வருவாய் முறையே ரூபாய் 112.30 கோடியும் ரூபாய் 12.80 கோடியும் ஆகும்.

1985–86 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட முத்திரை, தீர்வை, பத்திரப் பதிவுக்கட்டணங்கள் முறையே ரூபாய் 115.60 கோடியும், ரூபாய் 13.99 கோடியும் ஆகும்.

## இணைப்பு IV.

(61-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**1987-88 ஆம் ஆண்டிற்கான பால்பண்ணை வளர்ச்சித் துறை மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம்.**



கோரிக்கை எண் 10.

பால்பண்ணை வளர்ச்சித் துறை 1958 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன் முதலில் நவீன பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால்பண்ணை நிறுவப்பட்டது. பால்பண்ணை வளர்ச்சித் துறையின் வணிக சம்பந்தமான பால் கொள்முதல், பக்குவப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாடு பால் வள நிறுவனத்திடம் 1972 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டன.

1978-ல் அரசு எடுத்த கொள்கை முடிவின்படி கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் சங்கமும், மாவட்ட அளவில் ஒருங் கிணைந்த பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமும், மாநில அளவில் அவ்வொன்றியங்களின் உறுப்பினர்களை அங்கத்தினர் களாகக் கொண்ட இணையமும் ஆகிய மூன்று அடுக்கு முறை மாநில அளவில் பின்பற்ற ஏற்படுத்தப்பட்டது. பால்பண்ணை தொழிலின் முக்கிய தொழிலான பால் கொள்முதல், பால் பதப் படுத்துதல், மற்றும் பாலையும் பால் சம்பந்தப்பட்ட பொருட் களையும் விற்பனை செய்தல் ஆகியவைகள் இவைகளின் முக்கிய இலக்காகும். கிராம அளவில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு உற்பத்திக்கு ஏற்ற நியாயமான விலை மற்றும் தொடர்ச்சியான வியாபார ஆதரவு வழங்குவதன் மூலமும், அதே சமயம் நகரத்தில் உள்ள நுகர்வோர்களுக்குத் தரமான பால் வழங்குவதன் மூலமும் இத்திட்டம் இவர்களுக்கிடையில் ஓர் முக்கிய இணைப்பைக் கொடுக்கிறது.

தற்போதுள்ள அரசு கொள்கையின்படி, கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் உறுப்பினர் களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை, மேற்படி சங்கங்கள் சேகரிக் கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங்கும் பாலை பரிசோதித்து அதன் தரத்தின் அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில், அவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. பால் உற்பத்தியாளர்களின் மாடுகளுக்கு, மருத்துவ வசதி, கொள்முதல் மற்றும் மருத்துவ வசதி குழுக்களில் இருக்கும் கால்நடை மருத்துவர்கள் மூலம் அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் செயற்கை முறை கருவூட்டல் வசதியும் வழங்கப்படுகின்றன. உறைவிந்து குச்சிகள், திரவ நைட்ரஜன் குப்பிகளில் செயற்கை முறை கருவூட்டல் செய்யும் வகையில் எப்போதும் தயாராக வைக்கப்படுகின்றன. இச்சங்கத்தின் செயலாளர்கள் சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும்

தங்கள் சொந்த செலவில் முதலுதவி பெட்டிகள் வைத்துள்ளனர். இக்கிராமச் சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில் உள்ளூர் உபயோகத்திற்கு வைத்துக் கொண்டது போக எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன. பால் உற்பத்தியாளர்களுக்கு வாரம் ஒருமுறை தரத்தின் அடிப்படையில் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றன.

மாவட்டங்கள் அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் பால் பண்ணை திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன. மாவட்ட ஒன்றியங்களின் முக்கிய பணி, கிராமங்கள் அளவில் உள்ள பால் உற்பத்தியாளர் சங்கங்களில் இருந்து பால் கொள்முதல் செய்து, அதனை பதப்படுத்தி, அந்தந்த மாவட்டங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. மாவட்டங்களில் இருக்கும் கூடுதலான பால் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு சென்னை நகரில் விற்பனை செய்யும் வகையில் அனுப்பி வைக்கப் படுகின்றன.

பால் உற்பத்தி அதிகமாக உள்ள காலங்களில், அனைத்து மாவட்டங்களில் கூடுதலாக உள்ள பாலை, பால் பொருள் உற்பத்தி செய்யும் ஆலைகளான மதுரை, சேலம், ஈரோடு மற்றும் கிருஷ்ணகிரிக்கு கொண்டு வரப்பட்டு பால் துகள்களாகவும் கொழுப்புச் சத்து, வெண்ணெய் மற்றும் நெய்யாகவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகள் ஒன்றியங்கள் மூலமாகவும், இணையம் மூலமாகவும் சிறிய பாக்கட்டுகளிலும், மொத்த மாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. பெரும்பாலும் மொத்த விற்பனையை இணையம் செய்து வருகின்றது.

மாநிலத்தில் உள்ள நான்கு பால் உபபொருள் உற்பத்தி செய்யும் ஆலைகள் 3,000 முதல் 4,000 டன் வரை ஆடை நீக்கிய பால் துகள்கள் மற்றும் 2,000 முதல் 3,000 டன் வரை வெண்ணெய் மற்றும் நெய் உற்பத்தி செய்கின்றன. பால் வற்று காலங்களில் ஆடை நீக்கிய பால்துகள்கள் மற்றும் வெண்ணெய் ஆகியவைகள் பால் உற்பத்தி செய்வதற்காக சென்னையில் பயன் படுத்தப்படுகின்றன. சென்னையில் உள்ள பால்பண்ணை ஆலைகள் மொத்தத்தில் இந்திய பால்பண்ணை கழகத்தால் குறைந்த விலையில் வழங்கிவரும் ஆடை நீக்கிய பால் துகள்கள் 6,000 டன் பால் உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்துகின்றன. பால் கொள்முதலுக்கும் மற்றும் பால் விற்பனைக்கும் இடையே உள்ள அளவு வித்தியாசம், தர அளவுப்பாடு மூலம் சரி செய்யப் படுகின்றன.

மாநில அளவில், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், இந்திய பால்பண்ணை கழக நிதி உதவியுடன் பால் பெருக்குத் திட்டங்களை நிறைவேற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவ்விணையம் சென்னையில் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனையை மேற்கொண்டு வருகின்றது. இவ்விணையம் சென்னையில் நாள் ஒன்றுக்கு 5 லட்சம் லிட்டர் தர அளவுப்பாடு செய்யப்பட்ட பால் விற்பனை செய்து வருகின்றது. பால் தேவையை பூர்த்தி செய்வதுடன், இவ்





விணையம் பாலிலிருந்து நறுமண பால், ஐஸ்கிரீம், கோவா, யோகர்ட், லஸ்ஸி ஆகியவைகளையும் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது. ஏர் இந்தியா' நிறுவனத்திற்கு யோகர்ட் விற்பனை செய்யப்படுவதன் மூலம் எல்லோராலும் பாராட்டப்பட்டு வருகின்றது மலேஷியா மற்றும் இதர நாடுகளிலும், இவ் விணையம் நெய் விற்பனை மூலம் வாணிகச் சந்தையை கைப்பற்றி உள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் தலைமை நிறுவனமாக இருந்து மாவட்ட ஒன்றியங்களுக்குக் தேவையான நிதி வசதியையும் மற்றும் முக்கியமான கொள்கை களின் அடிப்படையில் பால் கொள்முதல், விலை நிர்ணயம், தொழில் நுட்ப வசதி ஆகியவைகளில் முடிவு எடுக்கின்றது.

இணையத்தில் உள்ள அதிகாரிகள் மாவட்ட ஒன்றிய நிர்வாகத் குழுவில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, மாவட்ட ஒன்றியங்கள் சிறந்த முறையில் இயங்க உதவி புரிந்து வருகின்றனர்.

தற்போது கிராம அளவில் 5,626 உற்பத்தியாளர் சங்கங்களும் மாவட்ட அளவில் 16 பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும் மற்றும் மாநில அளவில் ஓர் இணையமும் உள்ளன. 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதியிலிருந்து தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பால்பண்ணை வளர்ச்சித் துறையின் வணிக சம்பந்தமான அனைத்துப் பணிகளும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பால் பெருக்குத் திட்டங்கள் இந்திய பால்பண்ணைக் கழக நிதி உதவியுடன் மாநிலத்தில் உள்ள 14 மாவட்டங்களான சென்னை, செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், உதகமண்டலம் பெரியார், மதுரை, அண்ணா, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகியவற்றில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள ஆறு மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார், இராமநாத புரம், பசும்பொன் முத்துராமலிங்கம், மற்றும் காமராசர் ஆகிய மாவட்டங்களில் பால்வளத் திட்டங்கள், மாநில திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி உதவியுடனும் மற்றும் மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவைகளின் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன.

### பால் பண்ணை வளர்ச்சித் துறை.

இத்துறை தற்போது முக்கியமாக கூட்டுறவு சங்கங்கள் மற்றும் ஒன்றியங்கள் அமைத்தல், பதிவு செய்தல், அவைகளை மேற் பார்வையிடுதல் மற்றும் ஊரக பால் கூட்டுறவுச் சங்கங்களை சட்ட முறையில் கட்டுப்பாடு செய்தல் ஆகியவைகளை மாநிலம்

முழுவதும் மேற்கொண்டு வருகிறது. எஞ்சியுள்ள இத்துறையின் வணிக சம்பந்தமான அனைத்து பணிகளையும் மேலே குறிப்பிட்ட மூன்றடுக்கு கூட்டுறவு கூட்டமைப்பு மூலம் நிறைவேற்றி வருகின்றது.

தமிழ்நாட்டில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 28.38 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நிதி உதவியுடனும் மற்றும் இதர சிறப்புத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளுடனும் கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் அடைந்துள்ளன:—

| வரிசை எண்ணும், பெயரும். | 6 வது ஐந்தாண்டு திட்ட முடிவில் உள்ள நிலைமை (லட்சம் லிட்டர்). | 1986-87ல் உள்ள முன்னேற்றம் (டிசம்பர் 1986 மாதத்தில்/முடிய நாள்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (1) பால் உற்பத்தி (சங்கங்கள் அளவில்) | 8.83 | 11.88 |
| (2) பால் கொள்முதல் (ஒன்றியம் அளவில்) | 6.28 | 10.04 |
| (3) சென்னை நகரத்தில் பால் விற்பனை | 4.13 | 5.00 |
| (4) பால் பண்ணை தொழிற்சாலை : எண் | 14 | 16 |
| திறன் லட்சம் லிட்டர்/நாள் | 10.28 | 12.48 |
| (5) குளிரூட்டும் நிலையங்கள் : எண் | 32 | 36 |
| திறன் லட்சம் லிட்டர்/நாள் | 5.80 | 6.78 |
| (6) தானியங்கி பால் நிலையம் : எண் | 26 | 100 |



பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி:—

தமிழ்நாட்டில் தற்போது 5,626 ஆரம்ப பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

1986-87-ல் புதியதாக 400 சங்கங்கள் அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, இதில் 230 சங்கங்கள் டிசம்பர் 1986 முடிய அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 1987-88-ல் கூடுதலாக 400 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பால் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்களும் புள்ளி விவரங்களும்.

(i) தமிழகத்தில் உள்ள செயல்படும் ஆரம்ப பால் கூட்டுறவுச் சங்கங்கள்/ஒன்றியங்கள்:—

| | | |
|---|---|---|
| (அ) | பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | 5,626 |
| (ஆ) | பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் | 40 |
| (இ) | கூட்டுறவு பால் பண்ணைகள் | 2 |
| (ஈ) | பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 44 |
| (உ) | கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியங்கள் | 5 |
| (ஊ) | பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் | 16 |
| | | 5,733 |

| | | |
|---|---|---|
| (ii) | பால் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை | 17,69 இலட்சம் |
| (iii) | பால் கூட்டுறவுச் சங்கங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ரூ. 385,16 இலட்சம் |
| (iv) | பால் கூட்டுறவு ஒன்றியங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை | 13,923 இலட்சம் |
| (v) | ஒன்றியங்களில் செலுத்தப்பட்ட பங்கு | ரூ- 452.11 இலட்சம் |

பால்பண்ணை வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் திட்ட வேலைகள்:—

(1) துறையின் நிர்வாக அமைப்பினை வலுப்படுத்துதல்:

1985-86 ஆம் ஆண்டு இறுதியில் மாவட்டங்கள் அளவில் 16 துணைப் பதிவாளர்கள் (பால்பதம்) அலுவலகங்கள் இயங்கி வந்தன. மதுரை மாவட்டம், மதுரையை தலைமையகமாகக் கொண்டு மதுரை மாவட்டமாகவும், திண்டுக்கல்லை தலைமையகமாகக் கொண்டு அண்ணா மாவட்டமாகவும் இரண்டாக பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரசு அண்ணா மாவட்டத்திற்கென தனியானதொரு துணைப்பதிவாளர் (பால்பதம்)

அலுவலகம் ஒன்றினை அங்கீகரித்து அந்த அலுவலகம் திண்டுக்கல்லைத் தலைமையகமாகக் கொண்டு 10—12—1986 முதல் இயங்கி வருகின்றது.

(2) பால் சேகரிப்புக் குழு:

பால் பெருக்குத் திட்டம் செயல்படாத காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம், திருநெல்வேலி கட்டபொம்மன், வ. உ. சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பால் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு ''பால் சேகரிப்புக் குழு'' ஏற்படுத்த வேண்டியுள்ளது. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ் கொண்டு வரப்பட்டன. இதைத் தொடர்ந்து இம்மாவட்டங்களில் இயங்கி வரும் பால் சேகரிப்புக் குழுக்கள் மற்றும் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் ஆகியவைகளை பால் பெருக்குத் திட்டம் செயல்படாத மாவட்டங்களுக்கு, அரசுக்கு கூடுதல் நிதி செலவு ஏதும் இல்லாதவகையில், மாற்றப்பட உள்ளது.

(3) பால் பண்ணை நிலையங்கள் நிறுவுதல்:

அரசு திருநெல்வேலியில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட பால் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 160 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அமைக்க ஒப்பளித்துள்ளது. இத்தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15—6—1986 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

(4) பால் குளிரூட்டும் நிலையங்கள் நிறுவுதல்:

(அ) புதுக்கோட்டையில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பாலை கையாளும் திறனுடைய ஒரு குளிரூட்டும் நிலையம் ஒன்று ரூ. 13.26 இலட்சம் செலவில் அமைக்க அரசு அனுமதித்தது. இந்நிலையம் கட்டி முடிக்கப்பட்டு 20—4—1986 முதல் இயங்கி வருகின்றது.

(ஆ) பட்டுக்கோட்டையில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட குளிரூட்டும் நிலையம் ஒன்று ரூ 19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவிலும், வள்ளியூரில் நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட குளிரூட்டும் நிலையம் ஒன்று ரூ. 28 இலட்சம் மதிப்பீட்டுச் செலவிலும் அரசு திட்ட நிதியிலிருந்து செலவு செய்ய ஒப்பளித்தது. இக்குளிரூட்டும் நிலையங்களை நிர்மாணிக்கும் பணி தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திடம் Turn key அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலைகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. விரைவில் முடிவடையும் நிலையில் உள்ளன.



(5) திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சி திட்டம்:

பால் பெருக்குத் திட்டம் செயல்படும் மாவட்டங்களில் இருக்கும் பால் பண்ணைக்கு இணையாக உள்ளீட்டு வசதிகளை திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கென ரூ. 7.05 கோடி திட்ட மதிப்புடன் கூடிய ஒரு பெரிய ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சி திட்டத்தினை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், புதுடில்லி ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கு இக்கழகம் திட்ட மதிப்பீட்டில் 70 சதவிகிதம் கடனாக வழங்கும். மீதி 30 சதவிகிதத்தை மாநில அரசு மானியமாக வழங்கும். இத்திட்டம் நிறைவேற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

(1) 651 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்.

(2) மேலும் கூடுதலாக 73,000 கால்நடைகளை கூட்டுறவு திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.

(3) 651 கூட்டுறவுச் சங்கங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி செய்தல்.

(4) மூன்று பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.

(5) தற்போதுள்ள திருநெல்வேலி பால்பதப்படுத்தும் நிலையத்தின் கொள்திறனை நாளொன்றுக்கு 50,000 லிட்டரில் இருந்து 1,00,000 லிட்டராக உயர்த்துதல்.

(6) நாளொன்றுக்கு 73,000 லிட்டர் பால்விற்பனை செய்தல்.

இத்திட்டம் 53,000 விவசாய உறுப்பினர்களுக்கு பயன்படும் என திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் நாளொன்றுக்கு 28,000 லிட்டரில் இருந்து 75,000 லிட்டருக்கு உயர்த்தப்படும். இத்திட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டு ரூ. 50 இலட்சம் 1987—88 ஆம் ஆண்டிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைப் போன்று, பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம், காமராசர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் உபகரணங்கள் வசதி ஏற்படுத்தும் வகையில் ரூ. 109.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(6) பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வசதி.

ஊரக பால் பண்ணை விரிவாக்கப் பணித் திட்டத்தின்கீழ் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆய்வுக் கூடம் மற்றும் கிடங்குகள் கட்டவும் கடன் உதவி வழங்கப்படுகிறது.

## பால் பண்ணை வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள்:—

### (1) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:—

மலைப் பகுதிகளில் பால்பண்ணை தொழில் வளம் பெருக அரசு கடன் உதவி மற்றும் பங்கு மூலதனம் உதவி முதலியன வழங்கி வருகிறது. 1986–87ல் அரசு நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு என ரூ. 16.90 இலட்சம் 50 சதவிகிதம் கடனாகவும் 50 சதவிகிதம் பங்கு மூலதனமாகவும் பின்வரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு என வழங்கியுள்ளது:—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) பசுந்தீவனம் வளர்ப்பு | .. | 4.90 |
| (2) பால் கொள்முதல் பணி | .. | 5.00 |
| (3) பசுங்கன்று வளர்ப்பு திட்டம் | .. | 2.00 |
| (4) பாலாடைகட்டி உறைய வைக்கும் கருவி அமைக்க | .. | 5.00 |
| மொத்தம் | .. | 16.90 |

### (2) மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டம்:—

மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அன்னூரில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் குளிர்விக்கும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை ரூ. 27 இலட்சம் செலவில் அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. மற்றும் இத்திட்டத்திற்கென ரூ. 7 இலட்சம் 1986-87 ஆம் ஆண்டிற்கென வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகை 1987-88-ல் வழங்கப்படும்.

### (3) வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:—

இத்திட்டத்தின்கீழ் தர்மபுரி மாவட்டத்தில் தென்கனி கோட்டையில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் குளிர்விக்கும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை ரூ. 23.20 இலட்சம் செலவில் அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. இதற்கான வேலைகள் முன்னேற்றமடைந்து வருகின்றன.

இதேபோல் 1986-87 ஆம் ஆண்டில் பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், திருநெல்வேலி கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார், இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பல பால் பண்ணை வளர்ச்சித் திட்டங்களை ரூ. 45.31 இலட்சம் செலவில் நிறைவேற்ற பின்வரும் வகையில் ஒப்பளித்துள்ளது:—



| | | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. பசும்பொன் முத்துராமலிங்கம் | | 11.32 |
| 2. காமராசர் | | 16.40 |
| 3. திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் வ.உ. சிதம்பரனார் | | 4.95 |
| 4. இராமநாதபுரம் | | 6.64 |
| 5. புதுக்கோட்டை | | 6.00 |
| மொத்தம் | .. | 45.31 |

### (4) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறையில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிறுவ அரசு ஒப்பளித்துள்ளது. இப்பால் குளிரூட்டும் நிலையம் விரைவில் செயல்படத் துவங்கும்.

(ஆ) பெரியார் மாவட்டத்தில் தாளவாடியில் நாள் ஒன்றுக்கு 5,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் (50 சதவிகிதம் மானியமாக) அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

### (5) ஆதி திராவிடர் நலத்திட்டம் மற்றும் சிறப்பு மத்திய உதவி:

இத்திட்டத்தின்கீழ் பால் கூட்டுறவு சங்கங்களில் உள்ள ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கு என ஆதிதிராவிடர் நல வரவு செலவு திட்டத்தின் கீழும், சிறப்பு மத்திய நிதி உதவியின் கீழும், மானியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆதி திராவிட உறுப்பினருக்கும் ஒவ்வொரு கறவை மாட்டு விலையில் 33 1/3 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. ஒரு கறவை மாட்டின் விலை 2,500 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீதித் தொகை வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்பட்டு வருகிறது.

ஆதி திராவிடர் நல வரவு-செலவு திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டு ரூ. 30 இலட்சம் வழங்கப்பட்டு, 3,634 நபர்கள் பயனடைந்தனர். 1986–87 ஆம் ஆண்டில் 3,935 நபர்கள் பயன் அடையும் வகையில் ரூ. 32.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 41.65 இலட்சம், 5,000 நபர்கள் பயன் பெறும் வகையில் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு மத்திய நிதி உதவியின் கீழ் 1985–86 ஆம் ஆண்டு ரூ. 78.30 இலட்சம் வழங்கப்பட்டு 9,431 ஆதி திராவிட உறுப்பினர்கள் பயன் அடைந்தனர். 1986–87 ஆம் ஆண்டில் 13,000 நபர்கள் பயன் அடையும் வகையில் ரூ. 108.29 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 70.80 இலட்சம் 8,500 நபர்கள் பயன் பெறும் வகையில் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.

பால் பெருக்குத் திட்டம் கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகிய மூன்று அடுக்கு ''ஆனந்த் முறையில்'' செயல்படுத்தப்படுகின்றன. தற்பொழுது பால் பெருக்குத் திட்டங்கள் மாநில இணையத்தின் உதவி கொண்டு சம்பந்தப்பட்ட மாநில ஒன்றியங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் பால் உற்பத்தியாளர்களுக்கு இலாபகரமான விலையைக் கொடுப்பதும், நகர்ப்புறங்களிலுள்ள பால் வாடிக்கையாளர்களுக்கு நியாயமான விலையில் தரமுள்ள பாலை விற்பதும் ஆகும்.

மேலும் மாநில இணையமானது உறுப்பினர் ஒன்றியங்களுக்காக திரவ நைட்ரஜன், உறை விந்து நிலையம் மற்றும் காளை மாட்டுப்பண்ணை முதலியவைகளைச் சொந்தமாகக் கொண்டு நிர்வகித்து வருகிறது. மற்றும் ஒன்றியங்களுக்காக மாநிலத்திற்குள்ளேயும், வெளியேயும் பால் பொருட்களான கொழுப்புச்சத்து நீக்கப்பட்ட பால் பவுடர், நெய், வெண்ணெய் இவைகளை விற்பனை செய்தும் உதவிபுரிகின்றது.

## இந்திய பால்பண்ணைக் கழகம்/தேசிய பால்வள வாரியத்தின் பணி:—

இத்திட்டத்திற்கு இந்திய பால் பண்ணைக்கழகம் (கடன்களை காலம் தாழ்த்திக் கொடுப்பதற்கான சட்ட இசைவுக் காலம் 5 வருடங்கள் உள்ளிட்ட) 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த கூடிய கடன் மற்றும் மானியம் 70.30 என்ற விகிதத்தில்கொடுத்து உதவுகிறது. தேசீய பால்வள வாரியம் தொழில் நுட்ப உதவி அளிப்பதுடன் திட்ட ஆக்க விபரம், ஒப்பந்தப்புள்ளி அட்டவணை மற்றும் இயந்திரத் தளவாடங்கள் பெறுதல் ஆகியவற்றுக்கும் உதவுகிறது. மேலும் இது பால் குளிரூட்டும் நிலையங்கள்/பால் பண்ணை நிறுவுதல் ஆகியவற்றை தானே மேற்கொள்வதுடன் தேவைப்படின் விஸ்தரிப்பு வேலையையும் இலாப நோக்கின்றி ஒருவர் சார்பில் மற்றவர் எடுத்துக்கொள்ளுவது போன்ற அடிப்படையில் மேற்கொள்கிறது,





## மாவட்ட ஒன்றியங்கள் வாரியாக கொள்முதல் செய்யப்பட்ட பால்:—

| | மாவட்டம். | 1985. | 1986. (மதிப்பீடு) | 1987. |
|---|---|---|---|---|
| | | (இலட்சம் லிட்டர்களில்.) | | |
| 1 | சென்னை—செங்கல்பட்டு | 146.38 | 205.65 | 223.13 |
| 2 | தென்னாற்காடு | 194.94 | 213.09 | 231.20 |
| 3 | வட ஆற்காடு | 432.74 | 562.24 | 610.03 |
| 4 | தர்மபுரி | 228.67 | 235.85 | 255.90 |
| 5 | சேலம் | 437.86 | 507.64 | 550.79 |
| 6 | பெரியார் | 371.30 | 416.93 | 452.37 |
| 7 | கோயம்புத்தூர் | 200.80 | 194.63 | 211.17 |
| 8 | நீலகிரி | 82.79 | 87.73 | 95.19 |
| 9 | மதுரை மற்றும் அண்ணா | 236.46 | 266.72 | 289.39 |
| 10 | திருச்சி | 126.81 | 129.30 | 140 29 |
| 11 | தஞ்சாவூர் | 44.64 | 39.07 | 42.39 |
| 12 | புதுக்கோட்டை | 7.47 | 8.89 | 9.65 |
| | மொத்தம் .. | 2,510.86 | 2,867.74 | 3,111.50 |

## பாலின் விலை:

22—8—1986 முதல் பால் கொள்முதல் விலையை எருமைப் பாலுக்கு 1 கிலோ கொழுப்புச்சத்துக்கு ரூ. 46 ஆகவும், பசும் பாலுக்கு 1 கிலோ மொத்த திடச் சத்துக்கு ரூ. 22 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. பொருட்களின் விலையேற்றம் காரணமாகவும், கொள்முதல் விலையுயர்வு காரணமாகவும், சென்னை நகரில் பால் விற்பனை விலை அட்டைதாரர்களுக்கு 1 லிட்டருக்கு 1—11—1986 முதல் ரூ. 3.80 லிருந்து ரூ. 4.10 ஆகவும் ரூ. 4 விதம் தானியங்கி மூலம் பால் பெறுபவர்களுக்கும் ரூ. 4.20 வீதம் காசு கொடுத்து பைகளில் வாங்குவோருக்கும் உயர்த்தப்பட்டுள்ளது.

## மாட்டுத் தீவன உற்பத்தி மற்றும் விற்பனை :

தற்போது மாதவரம் பால்பண்ணை, ஆம்பூர் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களிலுள்ள மாட்டுத்தீவன தயாரிப்பு ஆலைகளில் 1 மாதத்திற்கு சராசரியாக 2,396 டன்கள் உற்பத்தி செய்யப்

படுகின்றன ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான மாட்டுத்தீவன உற்பத்தி இயந்திரம் குத்தகைக்கு எடுக்கப்பட்டு, அக்குத்தகை இவ்வாண்டும் தொடரப்பெறுகிறது. மேலும் குச்சி வடிவ வகையிலான மாட்டுத்தீவனத்திற்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளது. அதனால் குச்சி வடிவ மாட்டுத்தீவனத்தை ஆம்பூர் ஆலையில் தயாரிக்க வழிவகை செய்யப்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தியாகும் மாட்டுத்தீவனம் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு கால்நடைப் பராமரிப்புத்துறையில் மாட்டுப் பண்ணைக்கும், மற்றும் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. 1985 முதல் 1987 வரை வருடவாரியாக விற்பனை செய்யப்பட்ட மாட்டுத்தீவனத்தின் அளவுகள் பின்வருமாறு:—

| | 1985. | 1986. | 1987. |
|---|---|---|---|
| | | (மதிப்பீடு). | |
| மாட்டுத் தீவனம் (டன்களில்) | 24,470 | 28,261 | 35,000 |

ஈரோட்டிலுள்ள மாட்டுத்தீவன தயாரிப்பு இயந்திரம் பெரியார் மாவட்ட ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. சேலம், பெரியார், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களின் தேவையை இது பூர்த்தி செய்கிறது. இது தவிர ஒரு புதிய மாட்டுத்தீவன இயந்திரம் (100 டன்கள் அளக்கக்கூடிய திறனுள்ளது) மதுரையில் தென் மாவட்டங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய நிறுவப்பட்டு வருகிறது.

## பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை:

சென்னையிலுள்ள பால் பண்ணைகள், 4.5 சதவிகித கொழுப்புச் சத்தும் 8.5 சதவிகிதம் இதர திண்மைச் சத்தும் கூடிய பதப்படுத்தப்பட்ட பாலை விற்பனை செய்து வருகின்றன. கடந்த ஆண்டில் சராசரியாக நாளொன்றுக்கு 5.00 இலட்சம் லிட்டர்கள் பால் விற்பனையானது. இவ்வாண்டு இது 5.20 இலட்சம் லிட்டர்களுக்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. பால் நுகர்வோர்கள் தங்களின் பால் தேவையை 513 பால் விற்பனை நிலையங்கள் 53 பாலகங்கள் மற்றும் 100 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மூலமாகப் பெற்றுவருகின்றனர். இவ்வாண்டு தானியங்கி பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை 130 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பால் நுகர்வோர்களை பால் விற்பனையில் ஈடுபாடு கொள்ளவும், உபயோகிப்பாளருக்கு தேவையின் தரத்தை உயர்த்தவும் 31 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

12—[illegible]



விற்பனை விபரம் பின்வருமாறு :

| இனங்கள் | 1985. | 1986. (மதிப்பீடு) (எண்கள் இலட்சத்தில்) | 1987. |
|---|---|---|---|
| பால் (லிட்டர்களில்) | 1,609 | 1,789 | 1,915 |
| நாளொன்றுக்கு சராசரி | 4.41 | 5.00 | 5.25 |
| வெண்ணெய் (கிலோ கிராம்களில்) | 9.58 | 10.49 | 12.55 |
| நெய் (கிலோ கிராம்களில்) | 0.86 | 1.91 | 0.80 |
| பால் பொடி (டன்களில்) | 5.92 | 8.81 | 7.20 |

1985-ல் விற்பனை, மொத்தம் ரூ. 70.46 கோடியாக இருந்தது. 1986-ல் இது ரூ. 82.35 கோடி இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசால் விளம்பரப்படுத்தப்பட்ட வைட்டமின் ஏ ஊட்டச் சத்தோடு பாலை வழங்கும் திட்டம் 14–1–1987 முதல் தானியங்கி விற்பனை இயந்திரங்கள் மூலமாக சென்னை நகரில் அமுல் படுத்தப்பட்டு வருகிறது.

### பால் பெருக்குத் திட்டம்.

1972 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் துவக்கப்பட்ட பால் பெருக்குத் திட்டம்—1-ல் அம்பத்தூரில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர்கள் பதப்படுத்தும் திறனுள்ள ஒரு பால் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. பால் உற்பத்தி மற்றும் சம நிலைப்படுத்தும் பண்ணை ஒன்றினை ஈரோட்டிலும் மற்றும் பெரியார் மாவட்டத்திலுள்ள சங்கராண்டான்பாளையம் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய இடங்களில் 2 பால் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் ஈரோட்டில் ஒரு கால்நடைத்தீவன ஆலையும் நிறுவப்பட்டுள்ளன. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆம்பூரில் ஒரு பால் குளிரூட்டு மையமும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள விழுப்புரம் மற்றும் சின்னசேலம் ஆகிய 2 இடங்களில் குளிரூட்டு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. மதுரை பால்பண்ணையில் நாளொன்றுக்கு 10 டன்கள் பால் பொடி தயாரிக்கும் திறனுடைய இயந்திரம் ஒன்றும் நிறுவப் பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலத்தில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும், மாடுகளைக் கொண்ட ஒரு ஜெர்ஸி வகைப் பண்ணை, நல்ல உயர்தரமுள்ள விந்துகளைப்பெற அமைக்கப்பட்டுள்ளது. ஆக இதற்கெல்லாம் ரூ. 15.64 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

### பால் பெருக்குத் திட்டம்—2 :

முதலில் 1–4–1982 முதல் 1988 ஆம் வருடம் வரை 6 ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் ரூ. 42.87 கோடி செலவு செய்ய ஏற்கப்பட்டது. ஆனால் பிறகு இது 7-வது ஐந்தாண்டுத் திட்டத்துடன் ஒன்றிப்

போகுமாறு பால் பெருக்குத் திட்டம்-2-ஐ, பால் பெருக்குத் திட்டம்-3 ஆக 1–4–1985 முதல் மாற்றியமைக்க இந்திய பால் பண்ணைக் கழகம் மற்றும் தேசிய பால்வள வாரியம் ஒரு கொள்கையை வகுத்தது. அதன்படி 1985 மார்ச் 31 ஆம் தேதி வரை ரூ. 13.59 கோடி நிதி பெறப்பட்டது. இது முழுவதுமாக உபயோகப்படுத்தப்பட்டது. திட்ட காலத்தில் கூட்டுறவின் கீழ் கூடுதலாக 1,462 'ஆனந்த்' மாதிரி சங்கங்கள் கூடுதலாக 1,80,390 உறுப்பினர்களுடன் நிறுவப்பட்டன. பால் கொள் முதல் விலையை 1 லிட்டர் எருமைப் பாலுக்கு ரூ. 2.30லிருந்து ரூ. 3.08 ஆகவும், 1 லிட்டர் பசும்பாலுக்கு ரூ. 2.14 லிருந்து ரூ. 2.73 ஆகவும் உயர்த்தப்பட்டது. பால் சேகரிப்பும் ஒரு நாளைக்கு 3,0?,500 லிட்டர்களிலிருந்து 5,22,440 லிட்டர் களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சேலத்தில் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர்கள் திறனுள்ள ரூ. 328 இலட்சம் மதிப்புடன் கூடிய ஒரு புதிய பால்பண்ணையும் பால் பெருக்குத்திட்டம்-1-ன் கீழ் முடிவுறா நிலையிலிருந்த பணிகளை அக்டோபர் 1983 மற்றும் மார்ச் 198?-ல் ஒன்றன்பின் ஒன்றாக முடித்து துவக்கப்பட்டது மேலும் ஈரோட்டில் சித்தோடு என்னுமிடத்தில் ரூ. 10 இலட்சம் மதிப்புடன் கூடிய ஒரு எருமை உறைவிந்து நிலையம் அமைக்கப் பெறும் வேலையும் முடிக்கப்பட்டது. கிருஷ்ணகிரியில் 1 இலட்சம் லிட்டர்கள் பதப்படுத்தக்கூடிய திறனுள்ள புதிய பால் பண்ணை யுடன் நாளொன்றுக்கு 10 டன்கள் பால் பொடி தயாரிக்கப் கூடிய ஆலை ஒன்றினை வறட்சி நிவாரண நிலை நிதியின் கீழ் ரூ. 325 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டது.

**பால் பெருக்குத் திட்டம்—3 :**

இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தை மூன்றாவது பால் பெருக்குத் திட்டமாக மாற்றியமைத்ததன் காரணமாக, பால் பெருக்குத் திட்டம்-3, ரூ. 53.86 கோடி செலவிட மதிப்பிட்டு 1985 ஏப்ரல் திங்கள் முதல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் இதுவரை ரூ. 11.99 கோடி கடந்த 31–12–1986 வரை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்வருமாறு :—

(அ) திட்ட காலத்திற்குள் 6,180 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட உத்தேசித்து இருந்ததில் 5,082 சங்கங்கள் 31–12–1986-ல் நிறுவப்பட்டன.

(ஆ) திட்ட கால முடிவுக்குள் 11,50,000 உறுப்பினர் களைக் கொண்டதாகச் சங்கங்கள் இருக்க வேண்டுமென உத்தேசித்திருந்ததில் ஏறக்குறைய 9.55 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.





(இ) பால் மாடுகள் மொத்தம் 12 இலட்சம் உள்ளடங்கிய இதில் 40 சதவிகிதம் செயற்கைக் கருவூட்டல் திட்டத்தின்கீழ் பயன் பெற திட்டம் தீட்டியதில் 31–12–1986 வரை 8,35,647 பால் மாடுகள் வரை இலக்கு எட்டப்பட்டுள்ளது.

(ஈ) 1986-87–ல் (டிசம்பர் வரை) நாளொன்றுக்கு 8.69 இலட்சம் லிட்டர்கள் பால் சேகரிக்கப்பட்டது. இது 12.94 இலட்சம் லிட்டர்களாக திட்ட முடிவிற்குள் உயர்த்தப்பட உள்ளது.

(உ) தற்போதுள்ள 9 பால் பண்ணைகளை விஸ்தரிப்பதுடன் மேலும் 2 பால் பண்ணைகளைக் கூடுதலாக இயங்க வைத்து தற்போதுள்ள உபயோகிக்கும் திறனை 6.98 இலட்சம் லிட்டர் களிலிருந்து 16.50 இலட்சம் லிட்டர்களுக்கு உயர்த்தப்பட உள்ளது.

(ஊ) நகர்ப்புற பால்பண்ணையின் திறனை நாளொன்றுக்கு தற்போதுள்ள 4.25 இலட்சம் லிட்டர்களிலிருந்து 7.75 இலட்சம் லிட்டர்களாக அதிகரிக்கப்படவுள்ளது. தற்போது உள்ள 28 பால் குளிரூட்டும் நிலையங்களை திட்டகாலத்திற்குள் 32 ஆக ஆக்கவும் அவைகளின் திறனை நாளொன்றுக்கு 5.98 இலட்சம் லிட்டர்களிலிருந்து திட்டகால முடிவில் 10.72 இலட்சம் லிட்டர் களாகவும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பால் விற்பனை :**

ஒரு இலட்சம் மக்கட் தொகைக்கு மேலுள்ள நகரங்களில் கோவை மாவட்டத்தில் உள்ள வால்பாறை ஒன்றைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் பால் விற்பனை நடைபெற்று வருகிறது. இதனைப்போல் 50,000 மக்கட் தொகையிலிருந்து 1,00,000 மக்கட் தொகை வரை உள்ள 28 நகரங்களில் 15 நகரங்களும், 50,000-க்குக் குறைவான மக்கட் தொகையுள்ள 39 நகரங்களும் பால் பெருக்குத் திட்ட பகுதியில் உள்ள இடங்களில் பால் விற்பனையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

**முடிக்கப்பட்ட திட்ட வேலைகள் :**

இத்திட்ட காலத்தில் ஊட்டியில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர்கள் பதப்படுத்தக் கூடிய ஒரு புதிய பால் பண்ணையும், அம்பத்தூரிலுள்ள பால்பண்ணைத் திறனை 2 இலட்சத்திலிருந்து 3 இலட்சமாக உயர்த்தியும், வட ஆற்காடு மாவட்டத்தில் அனகாவூர் என்னுமிடத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் என்னுமிடத்திலும் புதிய பால் குளிரூட்டு நிலையங்கள் முறையே நாளொன்றுக்கு 30,000 லிட்டர்களும், 50,000 லிட்டர்களும் குளிரூட்டும் சக்தியுடையதாய் அமைக்கப் பட்டுள்ளது. ஆத்தூரில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தின் திறனை 30,000-லிருந்து 50,000 லிட்டர்களுக்கு உயர்த்தப்

பட்டுள்ளது. வறட்சி நிவாரண நிதியின் கீழ் காரைக்குடியில் 50,000 லிட்டர்கள் பதப்படுத்தக்கூடிய ஒரு புதிய பால் பண்ணையும், மாநில திட்டத்தின் கீழ் திருநெல்வேலியில் அதே அளவு திறன் கொண்ட மற்றுமோர் புதிய பால் பண்ணையும் நிறுவப்பட்டுள்ளது. புதுக்கோட்டையில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர்கள் பாலைக் குளிரூட்டும் திறன் கொண்ட ஒரு புதிய நிலையமும் பரமக்குடியில் 6,000 லிட்டர்கள் திறன் கொண்ட நிலையத்தை 10,000 லிட்டர்களுக்கு உயர்த்தியும் முடிக்கப்பட்டுள்ளது.

முடிவுறாத திட்ட வேலைகள் :

1. கோவையில் ரூ. 352 இலட்சம் மதிப்புள்ள ஒரு புதிய பால் பண்ணை வேலை முடிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான பால் சேகரிப்பு தடங்களையும், செயல்களையும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

2. ஜூன் 1987 இறுதியில் ஈரோடு பால் பண்ணையின் திறனை நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர்களிலிருந்து 3 இலட்சம் லிட்டர்களாக உயர்ந்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. நடப்பு ஆண்டு இறுதியில் சேலம் பால் பண்ணையின் திறனை நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர்களிலிருந்து 3 இலட்சம் லிட்டர்களுக்கு உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

4. வேலூரிலுள்ள பால் பண்ணையை திறம்படச் செய்து அதன் திறனை நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர்களாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

5. மாநிலத் திட்டத்தின் கீழ் புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் கட்டப்படும் வேலை தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறையிலும், திருநெல்வேலியில் வள்ளியூரிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதியிலும் முடிக்கப்படவுள்ளது.

6. சேலத்தில் பதப்படுத்தப்பட்ட நறுமண பால் நிரப்பும் இயந்திரம் (TETRAPACK) அமைக்கப்பெறும் வேலை விரைவில் முடிவுபெறும் தருவாயிலுள்ளது. இப்பால் வெளி மார்க்கெட்டுக்கு விரைவில் வரும் நிலையில் உள்ளது.

புதிய வேலைகள் :

1. சென்னையில் மூன்றாவதாக ஒரு புதிய பால் பண்ணை மகாபலிபுரம் சாலையில் சோளிங்கநல்லூர் என்னுமிடத்தில் ரூ. 400 இலட்சம் மதிப்பில் நிறுவப்படவுள்ளது.

2. ஈரோட்டில் நாளொன்றுக்கு 30 டன்கள் பால்பொடி தயாரிக்கக்கூடிய ரூ. 615 இலட்சம் மதிப்புள்ள நிலையம் அமைக்கப்படவுள்ளது,



3. திருச்சி மற்றும் தஞ்சாவூரில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர்கள் பாலைப் பதப்படுத்தக் கூடிய திறன் கொண்ட ஒரு புதிய பால் பண்ணை ஏற்படுத்தப்படவுள்ளது.

4. திருவள்ளூரிலும், விழுப்புரத்திலும் உள்ள நாளொன்றுக்கு 50,000 லிட்டர்கள் மற்றும் 30,000 லிட்டர்கள் பால் குளிரூட்டும் திறன் கொண்ட நிலையங்களை ஒரு இலட்சம் லிட்டர்கள் கொண்ட பதப்படுத்தும் நிலையங்களாக மாற்றிட முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அம்பத்தூரிலுள்ள பால்பண்ணையின் திறனை 3 இலட்சம் லிட்டர்களிலிருந்து 4 இலட்சம் லிட்டர்களாக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

5. நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட கால்நடைத் தீவன ஆலை ஒன்று புதிதாக மதுரையில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தணிக்கை வாரியம்.

கூட்டுறவு பால் சங்கங்களின் செயல்முறைகள் மற்றும் தணிக்கைப் பணிகளை ஒருங்கிணைக்கும் வண்ணம், தற்போதுள்ள கூட்டுறவு பால் சங்கங்களின் தணிக்கை வாரியத்திற்குப் பதிலாக, தனியாக தணிக்கைத் துறை ஒன்று தலைமைச் செயலகத்தின் வேளாண்மைத் துறையின்கீழ் [illegible]–4–1987 முதல் இயங்க ஆணையிடப்பட்டுள்ளது.

## இணைப்பு V.

(507 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கால்நடைப் பராமரிப்பு கொள்கை விளக்கக் குறிப்பு

### கோரிக்கை எண் 22.

### 1987–88.

### பகுதி I.

பொது விவரங்கள்:

கால்நடைப் பராமரிப்பு நிலத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழில் அது கிராமப்புற வளர்ச்சிக்கு இன்றியமையாதது. மேம்பட்ட முறையில் கிராம வேலை வாய்ப்புகளை அளிக்கவும், நிலத்திலிருந்து அதிகமான வருவாயைப் பெறவும், நம் மக்களுக்கு சத்துள்ள உணவை அளிக்கவும், நவீன முறைகள் மூலம் சிறந்த அதிக அளவில் பலன்தரக்கூடிய கால்நடைகளை அபிவிருத்தி செய்தல் இன்றியமையாதது. சிறந்த கால்நடை வளர்ப்பு கொள்கைகளின் மூலம், அவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், சிறந்த சரிவிகித தீவனம் மற்றும் தீனி ஆகியவற்றை அளித்தல் மூலம் சத்துப் பொருள்களை அதிகரிக்கவும், நோய் தடுப்பு மற்றும் நோய்க்கான சிகிச்சையளிப்பது போன்றவற்றின் மூலம் கால்நடைகளின் நலனைப் பேணுவதும் [illegible]

அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்முறை யாகும். இம்மாநிலத்தின் கால்நடைத் தொகுதியின் உற்பத்தித் திறனை அதிகரிக்க இம்மூன்று வழிகளிலும் தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறை பணியாற்றி வருகிறது.

கால்நடை பராமரிப்புத் துறையின் நடவடிக்கைகளினால்
1977–78-ம் ஆண்டில் 16.80 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த
பால் உற்பத்தி 1985-86-ல் 31.18 லட்சம் மெட்ரிக் டன்னாகவும்,
1977–78-ல் 682 மில்லியனாக இருந்த முட்டை உற்பத்தி
1985-86-ல் 2,067 மில்லியனாகவும் அதிகரித்துள்ளது. இதன்
விளைவாக 1977-78 ஆம் ஆண்டில் நபர் ஒருவருக்கு நாள்
ஒன்றுக்கு கிடைத்த 98 கிராம் பால் அளவு 1985–86–ல் 165
கிராமாக உயர்ந்துள்ளது. இதைப்போன்று 1977-78-ல் நபர்
ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு கிடைத்து வந்த முட்டை
16–லிருந்து 1985-86-ல் 38 ஆக அதிகரித்துள்ளது.

198[illegible]-88 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு உற்பத்தியைப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பால்—3,200 (மெட்ரிக் டன் ஆயிரத்தில்)
முட்டை—2,200 (மில்லியன் எண்ணிக்கை)
இறைச்சி—34 (மில்லியன் கிலோகிராம்)

## பகுதி II.

## கால்நடைப் பராமரிப்புத் துறையின் முக்கியப் பணிகள்.

### 1. கால்நடை அபிவிருத்தி.

1982 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி
தமிழகத்தின் மொத்த கால்நடைத் தொகை 25.14 மில்லியன்
களாகும். இவற்றில் மாடுகளின் எண்ணிக்கை 13.57 மில்லியன்
களாகும். இதில் இனப்பெருக்கப் பசுக்கள் மற்றும் எருமைகள்
முறையே 3.49 மில்லியன்கள் மற்றும் 1.72 மில்லியன்களாகும்

இம்மாநிலத்தின் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கை
யுடைய உள்ளூர் இனங்களின் வம்சாவழி மேம்படுத்தப்படுகிறது.
இது தகுந்த அயலினங்களுடன் கலப்பின விருத்தி மூலம் கால்நடை
முனைப்பு மேம்பாட்டுத் திட்டம், கேந்திர கிராமத் திட்டம்
முதலிய திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

### 2. வளர்ப்புக் கொள்கை.

(i) காங்கேயம், உம்பளாச்சேரி மற்றும் ஹலிக்கார் இனங்
களில் தெரிவு செய்யப்பட்ட முறையில் வளர்க்கும் பணி இந்த
மாநிலத்தில் அந்த இனங்கள் வாழும் பகுதியில் மேற்கொள்ளப்
படும். அதாவது தர்மபுரி மாவட்டத்தில் ஹலிக்கார் இனத்
திலும், சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மாவட்டங்
களில் காங்கேயம் இனத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்தில்
உம்பளாச்சேரி இனத்திலும் தெரிவு செய்யப்பட்ட வளர்ப்பு
மேற்கொள்ளப்படும்.





(ii) எருமைகளைப் [illegible] பொறுத்தவரையில், [illegible] உள்ளூர் எருமைகள் முர்ரா அல்லது சுர்த்தி இனங்கள் [illegible] தப்படுகிறது.

(iii) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக உள்ளூர் கால் நடையைப் பொறுத்தவரையில், உள்ளூர் பசுக்களை முதலில் அயலினக் காளைகளான ஜெர்சி அல்லது ஹோல்ஸ்டைன் பிரிஸியன் போன்ற இனத்துடன் கலப்பின விருத்தி மேற் கொள்ளப்படும். மேற்கொண்டு கலப்பின அபிவிருத்தி முதலில் பிறந்த காளைகளின் மூலம் மேற்கொள்ளப்படும்.

### 3. கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம்.

இளையோர் மற்றும் முதியோர் ஆகியோர்களுக்கு புரதச்சத்து அதிகமுள்ள [illegible] நிறைந்த [illegible] உணவு பால் ஆகும். அயலினங்களின் [illegible] தரிப்பு செய்வதின் மூலம் உள்ளூர் மற்றும் இனப்பெயரற்ற கால்நடைகளின் தரத்தை உயர்த்தி பால் உற்பத்தியைப் பெருக்குவதும், திட்டப் பகுதியில் விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதும், கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இம்மாநிலத்தில் 11 கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் முறையே மதுரை, உசிலம்பட்டி, [illegible], தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, [illegible], தர்மபுரம், சிதம்பரம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு [illegible] கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்தின்கீழ் 4 மண்டல [illegible] முறை கருவூட்டல் நிலையங்களும், 100 கிளை நிலையங்களும் 1 இலட்சம் இனப்பெருக்கப் பசுக்களையும் எருமைகளையும் உள்ளடக்கியுள்ளன. இதர பத்துத் திட்டங்கள் ஒவ்வொன்றிலும் [illegible] கருவூட்டல் நிலையங்கள் உள்ளன. [illegible] 50 கிளை நிலையங்களையும், 50,000 இனப்பெருக்கப் பசுக்களையும் எருமைகளையும் உள்ளடக்கி [illegible]

[illegible] கால்நடை [illegible] மருத்துவர்களும், [illegible] செயற்கைமுறை கருவூட்டல், [illegible] கன்று [illegible] வழங்குதல், தடுப்பூசிகள் போடுதல், பயனற்ற காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல், தீவனப் பயிர் வளர்ப்பு போன்ற [illegible] செய்து [illegible] [illegible] கிராம [illegible] [illegible]

[1987 ஏப்ரல் 3

1986–87-ம் ஆண்டின் (31-12-1986 வரை) திட்டப்பணிகள் பின்வருமாறு:—

1. செயற்கை முறை கருவூட்டல்களின் எண்ணிக்கை 4,26,755
2. கன்றுகள் பிறப்பும், சோதிக்கப்பட்டவையும் 89,370
3. பசுந்தீவன நறுக்குகள் விநியோகிக்கப்பட்டவை 62,84,900
4. பசுந்தீவன மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டவை 15,35,620
5. பசுந்தீவன விதைகள் விநியோகிக்கப்பட்டவை 168,029 மெட்ரிக்டன்

1987-88-ல் திட்டப் பகுதிகளில் குறைந்தது 50 சதவிகிதம் இனப்பெருக்கப் பசுக்களுக்கும், எருமைகளுக்கும் உறைவித்து மற்றும் திரவ விந்து மூலம் கருவூட்டல் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.

4. <u>கேந்திரக் கிராம திட்டங்கள்:</u>

மாடுகளையும் எருமைகளையும் பால் உற்பத்திக்கும் உழைப்புக்கும் ஏற்ற வகையில் அதற்குரிய இருப்பிடங்களில், கலப்பின விருத்தி மூலமாகவோ அன்றி தூய இன விருத்தி மூலமாகவோ அவற்றின் தரத்தினை மேம்படுத்துவதே கேந்திரக் கிராமத் திட்டத்தின் நோக்கமாகும். இனப்பெருக்கப் பசுக்களும், எருமைகளும் மொத்தம் 10,000 எண்ணிக்கையுள்ள நன்கு அமைந்த நெருக்கமானப் பகுதிகளில் இத்திட்டம் செயல் படுகிறது.

இது தவிர, கீழ்க்கண்ட முக்கியப் பணிகளும் கேந்திர கிராமத் திட்டத்தின்கீழ் ஆற்றப்படுகின்றன. பயனற்ற காளைகள் அனைத்திற்கும் ஆண்மை நீக்கம் செய்யப்படுகின்றன. கேந்திர கிராம வட்டாரங்களில் பராமரிக்கப்படும் காளைகளைக் கொண்டு செயற்கை முறை கருவூட்டல் மூலம் இனவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதைத் தொடர்ந்து சினை பரிசோதனை, கன்று பிறப்பு பரிசோதனை, காலாகாலத்தில் தடுப்பூசி போடுதல், கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், பசுந்தீவன வளர்ப்பு போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப் படுகின்றன.

நாகர்கோவில், திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, மன்னார்குடி ஆகிய இடங்களில் கேந்திர கிராமத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. 62 கேந்திர கிராம வட்டாரங்கள் 620 கிளை நிலையங்களுடன் அவ்விடங்களில் இயங்கி வருகின்றன. அவை 30 லட்சம் இனவிருத்தி கால்நடைகளை உள்ளடக்கியுள்ளன.



1987 ஏப்ரல் 3]

1986–87 ஆம் ஆண்டின் (31–12–1986 வரை) திட்டப்பணிகள் பின்வருமாறு.

1. செயற்கைமுறைக் கருவூட்டல்களின் எண்ணிக்கை—2,91,874
2. கன்றுகள் பிறப்பும், பரிசோதிக்கப்பட்டவையும்—66,230

1987–88-ல் கேந்திர கிராம வட்டாரப் பகுதிகளில் குறைந்தது 50 சதவிகிதம் இனப்பெருக்கப் பசுக்களுக்கும், எருமைகளுக்கும் கருவூட்டல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. <u>பொலிகாளை நிலையங்கள்:</u>

நல்ல வம்சாவழியுள்ள பொலிகாளைகளைப் பராமரிப்பதும் கருவூட்டல் பணிக்காகத் துறை நிலையங்களுக்கு விந்து அனுப்புவதும் பொலிகாளை நிலையங்களின் நோக்கமாகும். இம்மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் 68 பொலிகாளை நிலையங்கள் உள்ளன. இந்நிலையங்களில் சேகரிக்கப்படும் விந்து பதப்படுத்தப்பட்டு துறையின் பல்வேறு செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

இந்நிலையங்களில் மொத்தமாக 724 காளைகள் உள்ளன. இவற்றில் 280 அயலினக் காளைகளும், 32 கலப்பினக் காளைகளும், 95 இந்திய இனக் காளைகளும் மற்றும் 317 முர்ரா கிடாக்களும் ஆகும்.

6. <u>உறைவித்த முறை விந்தளிப்பு:</u>

குறுகிய காலத்தில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இனப்பெயரற்ற உள்ளூர் கால்நடைகள் பால்வளமுள்ள அயலினங்களுடன் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. ஆற்றல் மிக்க பொலி காளைகளை மிகுந்த அளவில் இனப்பெருக்கப் பசுக்களுக்குப் பயன்படுத்துவதற்கு சாலச் சிறந்த முறை உறைவிந்து உத்தியாகும். நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் 55 சதவிகிதம் பங்கையளிக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இனவிருத்தி/உள்ளூர் எருமைகளைத் தரம் உயர்த்துதல் போன்ற வற்றிற்கும் இம்முறை ஏற்றது.

தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டை அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணையிலும், திருநெல்வேலி [illegible]

[illegible]

கலப்பின உயர்தர (உறைவிந்து முறை) மாநிலத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை உறைவிந்து செயற்கைமுறை கருவூட்டலுக்காக 1,294 நிலையங்களை துறை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இம்முறையை 1987-88 ஆம் ஆண்டில் கூடுதலாக 125 நிலையங்களுக்கு விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1987–88-ல் உறைவிந்து வங்கியுடன் கூடிய திரவ நைட்ரஜன் நிலையம் ஒன்று மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 100 இலட்சம் மதிப்பில் உதகமண்டலத்தில் அமைக்கப்படும்.

7. வம்சாவழி ஆய்வுத் திட்டம்:

தாய் மற்றும் அதன் கிடேரிகளின் பால் உற்பத்தியை ஒப்புநோக்கிப்பார்த்தல் மூலம் சிறந்த பொலி காளைகளை தேர்ந்தெடுத்தல் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. சிவப்பு சிந்தியின கால்நடைகளின் இனவிருத்தி ஆற்றலை மதிப்பீடு செய்வதே, ஒசூரிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் செயல்படும் வம்சாவழி ஆய்வுத் திட்டத்தின் நோக்கமாகும். ஆறு காளைகள் அடங்கிய, ஆறு அணிகள் இதுவரை ஆய்வு செய்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. எதிர்கால உபயோகத்திற்காக சிறந்த பொலி காளைகளில் இருந்து விந்து சேகரிக்கப்பட்டு உறைவிந்து வங்கிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

இதைப் போன்றதொரு திட்டம் முர்ரா எருமை கிடாக்கள் இனத்திற்காக ஒரத்தநாட்டிலுள்ள மாவட்டக் கால்நடை பண்ணையில் செயல்படுகிறது. இதுவரையிலும் முர்ரா எருமை கிடாக்களின் அணி ஒன்று ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. எருமையினக் கிடாக்கள் ஆற்றலுடையன என்று கண்டறியப்பட்ட பின்னர், பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக பல்வேறு முன்னேற்றத் திட்டங்களின் கீழ் பயன்படுத்தப்படும்.

8. கால்நடைக் கண்காட்சிகளும் கன்றுப் பேரணிகளும்:

கால்நடைக் கண்காட்சிகள் மூலம், கால்நடை உடைமையாளர்கள், விவசாயிகள் மற்று இதர பொதுமக்கள் ஆகியோர் அறிவியல் முறைப்படி கால்நடைகளைப் பேணுதல், இனவிருத்தி செய்தல், தீவனமிடுதல், தடுப்பூசிகள் போடுதல் முதலியவைபற்றி அறிவும் தெளிவும் பெறுகின்றனர். மேலும் மக்கள் இடையே தரமுள்ள கால்நடைகளைப் பேணுவது பற்றிய அறிவைப் பெறவும், வளர்ப்பில் ஊக்கத்தையும் போட்டி மனப்பான்மையையும் உருவாக்கவும் வேண்டி கால்நடை மேம்பாட்டு முன்னப்புத் திட்டம் பகுதிகளிலும், கிராம வட்டாரப் பகுதிகளில் கன்றுப் பேரணிகள் கால முறை



களில் நடத்தப்படுகின்றன. 1986-87 ஆம் ஆண்டில் 45 கால்நடைக் கண்காட்சிகளும் கன்றுப் பேரணிகளும் இத்துறை நடத்தியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் 1987-88 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு 73 கால்நடைக் கண்காட்சிகளும் கன்றுப் பேரணிகளும் நடத்தப்படும்.

9. மக்கள் தொடர்பு முகாம்:

கால்நடை பராமரிப்பு செயற்பாடுகளை கிராம மக்கள் அறிவதற்காக களப்பணியாளர்கள் கிராம அளவில் மக்கள் தொடர்பு முகாம்களை முறையாக நடத்தி வருகின்றனர். சிகிச்சை அளித்தல், பயனற்றக் காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல், தடுப்பூசிகள் போடுதல், கன்றுகள் செம்மறியாடுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்தல் போன்ற வழக்கமான பணிகளை ஆற்றுவதுடன், கால்நடை பராமரிப்பு விஸ்தரிப்புக்கானவற்றை அறிவுறுத்தும் சாதனமாக மக்கள் தொடர்பு முகாம் பயன்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டில் (31-12-1986 வரை) 7,397 மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

10. செம்மறி ஆடு வளர்ப்பு:

தமிழ்நாட்டின் கிராமப் பொருளாதாரத்தில் செம்மறியாடு வளர்ப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. கிராமப்புறங்களில் உள்ள நலிந்த பிரிவினர்களுக்கு அடிப்படைத் தொழிலாக செம்மறி ஆடு வளர்ப்பு இருந்து வருகிறது. கால்நடைப் பராமரிப்புத் துறையின் செம்மறி ஆடு அபிவிருத்தித் திட்டங்கள் அதிகமான வேலை வாய்ப்புக்கு உதவுகின்றன. மேலும் உற்பத்தி அதிகரித்து கிராம ஆடு வளர்ப்போரின் வருவாயும் அதிகரிக்க இத்திட்டங்கள் உதவுகின்றன. கால்நடைப் பராமரிப்புத் துறை நிறைவேற்றி வரும் செம்மறி ஆடுகள் அபிவிருத்திக்கான பல்வேறு திட்டப் பணிகள் பின்வருமாறு:

(அ) வேளாண்மை மறுநிதி அபிவிருத்தி கழகத் திட்டம்;

(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்;

(இ) சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம்;

(ஈ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்;

(உ) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்;

(ஊ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம்

இம்மாநிலத்தில் சின்னசேலத்தில் ஒன்றும் சாத்தூரில் ஒன்றும் ஆக இரண்டு செம்மறி ஆட்டுப் பண்ணைகள் உள்ளன. நான்கு செம்மறியாட்டுப் பிரிவுகள் ஒசூர், புதுக்கோட்டை, கொடுமுடி, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இப்பண்ணைகளில் உள்ளூர் இனங்களான மேச்சேரி, கீழக்கரிசல், இராமநாதபுரம்,

வெள்ளை, வேம்பூர், மாண்டியா இனங்கள் பராமரிக்கப்படு கின்றன. உள்நாட்டு இறைச்சி இன செம்மறியாடுகளின் தரத்தை மேம்படுத்துவதும், சிறந்த கிடாக்களை உற்பத்தி செய்து ஆடு வளர்ப்போருக்கு வழங்குவதும் இந்நிலையங்களின் நோக்கமாகும். 1986-87 ஆம் ஆண்டில் (31-12-1986 வரை) இந்நிலையங்களில் 836 செம்மறி கிடாக்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றில் 749 செம்மறிக் கிடாக்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

11. செம்மறி ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்:

ஆடு வளர்ப்போர் அனைவரையும் ஒன்று சேர்த்து, அதிகபட்ச பலனை அவர்கள் பெற்றுக் கொள்ளச் செய்யும்படி தமிழகத்தில் பல்வேறு திட்டங்களின் கீழ் இதுகாறும் 1,411 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இச்சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. குடற்புழு நீக்கம் செய்தல், தடுப்பூசிகள் போடுதல் போன்ற நோய் நீக்கப் பணிகள், கால்நடை பராமரிப்புத் துறை விஸ்தரிப்பு அலுவலர்களால் அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட 1,411 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களில், 39 சங்கங்கள் வேளாண்மை மறு நிதி அபிவிருத்திக் கழகத்தின் கீழும், 190 சங்கங்கள் சிறப்புக் கால்நடை பராமரிப்புத் திட்டத்தின் கீழும், 166 சங்கங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழும், 4 சங்கங்கள் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், 6 சங்கங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், 730 சங்கங்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும், 276 சங்கங்கள் திட்டங்கள் மேற்கொள்ளப்படாத பகுதிகளிலும் நிறுவப்பட்டுள்ளன.

2. செம்மறி ஆடுகளுக்கு தீவிர நோய் நீக்கப் பணிகள் அளிக்கும் திட்டம்.

செம்மறியாடுகளில் உடல் எடையை அதிகரிப்பதின் மூலம், இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பது மிகவும் அத்தியாவசியமாகிறது. எனவே, தீவிர நோய் நீக்கப்பணிகளை அளித்து, சிறந்த உற்பத்தியைப் பெறும்படி போதுமான தொடர்பணிகளை நிறைவேற்றும் திட்டமென்று 1982-83 முதல் சேலம், தென்னாற்காடு, வடாற்காடு, திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. 1983-84-ல் செங்கற்பட்டு, தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. செம்மறி ஆடுகளுக்கான தீவிரநோய் நீக்கப்பணி திட்டத்தின்கீழ் மருந்துகள் வாங்குவதற்காக 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 29.[illegible] இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.



13. வெள்ளாடு வளர்ப்பு:

பண்டைக்காலம் தொடங்கி இந்நாள் வரை வெள்ளாடு ஏழையின் பசு என மக்களால் கருதப்பட்டு வருகிறது. காட்டச் சத்துக்கும் நோய் தீர்க்கும் ஆற்றலுக்கும் வெள்ளாட்டுப் பால் பெயர் போனதாம். இது தவிர பெரும்பான்மையான கிராம வாழ் மக்களினால் வெள்ளாட்டுப் இறைச்சி பெரிதும் விரும்பப் படுகிறது.

வெள்ளாடு வளர்ப்புத் தொழிலை பரப்புவதற்கு புதுக்கோட்டையிலுள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் தலைச்சேரி வெள்ளாடுகளும் சின்னசேலத்திலுள்ள ஆட்டுப் பண்ணையில் ஜமுனாபாரி வெள்ளாடுகளும் வளர்க்கப்படுகின்றன. உள்ளூர் வெள்ளாடுகளுடன் கலப்பினவிருத்தி செய்வதற்காக இவ்வினக் கிடாக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவ நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன.

1986-87-ம் ஆண்டில் (31—12—1986 வரை) 90 தலைச்சேரி குட்டிகளும், 52 ஜமுனாபாரி குட்டிகளும் இப்பண்ணைகளில் பிறந்துள்ளன.

14. கோழி வளர்ப்பு:

கோழி வளர்ப்பில் பொதுமக்களுக்குத் தேவையான தொழில் நுட்பங்கள் அளிக்கும் பொருட்டு இரண்டு குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் காட்டுப்பாக்கத்திலுள்ள கோழிப் பண்ணையிலும், மற்றொன்று ஓசூரிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும் 29 கோழி விரிவாக்க நிலையங்களும் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. வெள்ளை லெக்கான் மற்றும் பாப்காக் கோழிகள் இந்நிலையங்களில் வளர்க்கப்படுகின்றன, தரமான கோழி குஞ்சுகளும், முட்டையிடும் பருவத்தில் உள்ள கோழிகளும் மற்றும் முட்டைகளும் இனப் பெருக்கத்திற்காகப் பொதுமக்களுக்கு விற்கப் படுகின்றன.

15. ஐரோப்பிய பொருளாதார அமைப்பு.

இம்மாநிலத்தில் வட மாவட்டங்களான செங்கல்பட்டு வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் ரூ. 1,618.13 இலட்ச மதிப்பீட்டில் செம்மறி ஆடுகள் அபிவிருத்தித் திட்டம் ஒன்று ஐரோப்பிய பொருளாதார அமைப்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதே போன்ற ஒரு திட்டம் இம்மாநிலத்தில் தென் மாவட்டங்களுக்காக தயாரிக்கப்பட்டு வருகிறது.

**16. தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடு:**

**(அ) குஞ்சு பொரிப்பு:**

மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூரில் [illegible] கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள [illegible] ஊரின் [illegible] இரண்டு கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையங்கள் தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படுகின்றன. [illegible] வாணிபத்திற்குரிய "பாப்காக்" என்னும் முட்டையிடும் கோழிக் குஞ்சுகளையும், "காப்" என்னும் பிராயிலர் கோழிக் குஞ்சுகளையும் உற்பத்தி செய்வதில் இந்த இரண்டு குஞ்சு பொரிப்பு நிலையங்களும் ஈடுபட்டுள்ளன.

**(ஆ) தீவனக் கலவை நிலையங்கள்:**

தீவனக் கலவை நிலையங்கள் சென்னையிலுள்ள நந்தனத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள திருப்பூரிலும், மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூரிலும் இயங்கி வருகின்றன. இந்த நிலையங்கள் ஆண்டுக்கு ஒன்று ஏறத்தாழ 5,000 மெட்ரிக் டன் தீவனத்தை தற்போது உற்பத்தி செய்து வருகின்றன.

**(இ) விற்பனைப் பிரிவுகள்:**

ஏழை விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட முட்டை மற்றும் இறைச்சி ஆகியவற்றிற்கு இலாபகரமான விலையை அளிக்கும் நோக்கத்திற்காகவே, இத்தகைய முட்டை மற்றும் இறைச்சிக்கான வியாபாரத்தில் தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டுள்ளது.

**(ஈ) திட்டங்கள்:**

(1) வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்.—தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகத்தின் வழக்கமான இயல்பான பணிகள் தவிர குறிப்பாக வறட்சிக்கு இலக்கான பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினர்களுக்காக தனியாக கோழி வளர்ப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. வறட்சிக்கு இலக்காகும் மாவட்டங்களில் கீழ்க்கண்ட திட்டப்பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படவுள்ளன:—

(i) கோழி அபிவிருத்தி செயல் விளக்கப் பண்ணை.

(ii) கோழி வளர்ப்பு குக்கிராமங்கள்.

(iii) சமுதாய கோழி வளர்ப்புக் கொட்டகை.

(iv) காடை மற்றும் குழிமுயல் வளர்ப்பு செயல்விளக்கப் பண்ணை.

(v) நடமாடும் நோய் நீக்கப் பிரிவுகள்.

(2) பழங்குடி மக்கள் அபிவிருத்தித் திட்டம்.—பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தென்ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலைப்பகுதியில் வாழும் பழங்குடி மக்கள் பயனடைவதற்காக கோழி அபிவிருத்திப் பிரிவுகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்கள் தமிழ்நாடு கோழி வளர்ச்சிக்





கழகத்தால் செயல்படுத்தப்படும். இந்நிலையங்கள் அப்பகுதியிலுள்ள பழங்குடி மக்களுக்கு பயிற்சிக்கும் வேலை வாய்ப்பிற்கும் வகை செய்யும். மேலும் அம்மக்களுக்கு சொந்தமாக கோழி வளர்ப்பு பிரிவுகளை ஆரம்பிப்பதற்கும் உதவி அளிக்கப்படும்.

(3) ஜப்பானியக் காடைக் குஞ்சுகளை சென்னையில் உற்பத்தி செய்தல்.—1987-88-ம் ஆண்டில் ஜப்பானியக் காடைக் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக ஒரு புதிய குஞ்சு பொரிக்கும் நிலையத்தைச் சென்னையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**17. கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம்:**

கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் ஒன்று ஈரோட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இத்த ஆய்வுக்கூடப் பணியாளர்கள் ஒரு மாதத்தில் 50 முதல் 75 கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள கோழி நோயின் அளவுபற்றி மதிப்பீடு செய்ய அங்குமிங்குமாக ஆய்வுக்கூடத்திற்கு தேவையானவற்றையும் இரத்த மாதிரிகளை யும் சேகரிப்பதோடு நோய் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் தெரிவிக்கின்றனர்.

1986-87 ஆம் ஆண்டில் (31-12-1986) வரை 282 கிராமங்களுக்கு அவர்கள் சென்றுள்ளனர். 388 தனியார் கோழிப் பண்ணைகள் பார்வையிடப்பட்டுள்ளன. 2,608 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டன. 18 நோய் திடீர் கிளர்ச்சிகள் களப்பணியாளர்களால் கவனிக்கப்பட்டன.

**18. பன்றி வளர்ப்பு:**

நான்கு பன்றி வளர்ப்புப் பிரிவுகள் முறையே, ஒசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, உதகமண்டலம் ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட கால்நடை பண்ணைகளிலும் மற்றும் ஒரு பிரிவு சைதாப்பேட்டையிலுள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்திலும் உள்ளன. இந்நிலையங்கள் மாதிரிப் பிரிவுகளாகவும், விரிவாக்க நிலையங்களாகவும் சேவை செய்கின்றன. இவற்றில் பெரிய வெள்ளை யார்க்ஷையர் பன்றிகள் வளர்க்கப்படுகின்றன. உள்ளூர் பன்றிகளின் தரத்தை உயர்த்தும் பொருட்டும் பன்றி இறைச்சி உட்கொள்ளுவதை அதிகரிக்கும் பொருட்டும் நல்ல தரமான ஆண் மற்றும் பெண் பன்றிகள் பல்வேறு திட்டங்களின் மூலம் இந்நிலையங்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

1986-87-ல் (31-12-1986 முடிய) உள்ளூர் பன்றிகளின் தரமுயர்த்துவதற்காக பல்வேறு கால்நடை பராமரிப்பு அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் 329 பன்றிகள் விற்கப்பட்டுள்ளன.

[1987 ஏப்ரல் 3

## 19. நாய் மற்றும் குதிரைகள் வளர்ப்பதற்கான புதிய திட்டங்கள்.

### (அ) நாய் வளர்ப்பு:

தரமான உள்ளூர் நாய்களை வளர்ப்பதற்காக சென்னை சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

தற்போது எட்டு இராஜபாளையம் நாய்களும் ஆறு கோம்பை நாய்களும் இப்பிரிவில் பராமரிக்கப்படுகின்றன. 1986–87-ல் (31-12-1986 முடிய) 140 இராஜபாளையம் குட்டிகளும், 49 கோம்பை குட்டிகளுமாக மொத்தம் 189 நாய்குட்டிகள் இந்நிலையத்திலிருந்து பொதுமக்களுக்கு விற்கப்பட்டுள்ளன. காவல் செய்வதற்கு தகுதியான அல்சேசியன், டொபர்மேன், லாபர்டர், டச்ஷிண்டு போன்ற இனங்களை வளர்ப்பதற்கு இந்த நாய் வளர்க்கும் பிரிவை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (ஆ) குதிரை வளர்ப்பு:

ஹோசூரில் உள்ள தற்போதைய அடிப்படை வசதிகளைக் கொண்டு குதிரை வளர்க்கும் நிலையம் ஒன்றை அமைக்கவும் குதிரைக் குட்டிகளை அபிவிருத்தி செய்வதற்கும் உத்தேசிக்கப் பட்டுள்ளது. இது சமுதாயத்திற்கு பயனுடையதாகும்.

## 20. பசுந்தீவனப் பயிர் வளர்ப்பு:

கால்நடை உற்பத்திக்கான அபிவிருத்தியில் உள்ள முக்கிய தடைகளில் ஒன்று, போதுமான சத்துள்ள தீவனம் மற்றும் தீவனப்பயிர் பற்றாக்குறையேயாகும்.

பால் மற்றும் இதர கால்நடை பொருட்களின் உற்பத்தியை உயர்த்துவதற்கு பெருமளவிலான கலப்பினத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறந்த சத்துணவு மூலம் உற்பத்திக்கான பணிகளை மேற்கொள்ளாவிடில் அவற்றின் முழுப் பயனை அடைய இயலாது. தேவையான தீவனப்பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் தீவனப்பயிர் விதைகள் மற்றும் நறுக்குகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் மற்றும் கேந்திர கிராம நிலயத் திட்டம், ஆகியவற்றின்கீழ் தீவனப்பயிர் நறுக்குகள், விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இம்மாநிலத்தில் 8 தீவனப்பயிர் விதை உற்பத்திப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. 1986-87 ஆம் ஆண்டில் (31-12-1986 வரை) 51.9 இலட்சம் புல்நறுக்குகளும், 3.3 மெட்ரிக்டன் தீவனப் பயிர் விதைகளும் 1.4 இலட்சம் தீவன மரக்கன்றுகளும் விவசாயிகளுக்கு பயிர் செய்வதற்காக விநியோகிக்கப்பட்டுள்ளன.



1987 ஏப்ரல் 3]

## 21. சிறப்புத் திட்டங்கள்:

கிராமப்புறங்களிலுள்ள நலிவுற்ற வகுப்பினருக்கு, குறிப்பாக சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் இலட்சியத்துடன் சிறப்புத் திட்டங்கள் மத்திய அரசின் 50 சதவீதம் உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பால், இறைச்சி, முட்டை போன்ற உயிரியல் மதிப்புமிக்க விலங்கின உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதே சிறப்புத் திட்டங்களின் நோக்கமாகும். இத் திட்டங்கள் பின்வருமாறு:

### (அ) சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம்:

சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம் நான்கு பெரும் கூறுகளைக் கொண்டுள்ளது. அவை வெவ்வேறு நிறுவனங்களின் மூலம், கீழ்க்கண்ட மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.—

| | திட்டம். | செயல்படுத்தும் அமைப்பு. | செயல்படுத்தப்படும் மாவட்டங்கள். |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1. | செம்மறி ஆடு உற்பத்தி. | கால்நடைப் பராமரிப்புத்துறை. | வடஆற்காடு, சேலம், திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார். |
| 2. | பன்றி உற்பத்தி | கால்நடைப்பராமரிப்புத் துறை. | மதுரை. |
| 3. | கன்று வளர்ப்பு | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம். | வடஆற்காடு, தென்னாற்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை. |
| 4. | கோழி உற்பத்தி | தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகம். | செங்கற்பட்டு, வடஆற்காடு, சேலம் மதுரை. |

### (i) செம்மறி ஆடு உற்பத்தித் திட்டம்:

வட ஆற்காடு, சேலம், திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் செயல்படும் சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக செம்மறி ஆடு உற்பத்தித் திட்டம் கால்நடை பராமரிப்புத் துறையால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. செம்மறி ஆட்டுப் பிரிவுகளை அமைப்பதற்கு ஒவ்வொரு பிரிவும் ரூ. 4,500 மொத்த உதவி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவும் ஒரு செம்மறி கிடாவையும் மதிப்பீட்டில் 20 பெட்டை ஆடுகளையும் கொண்டதாகும். 1976–77 முதல் 1985–86 வரை 19,210

ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு ரூ. 209.18 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டுள்ளன. 1986–87–ல், சேலம், வட ஆற்காடு, திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் ரூ 32.77 இலட்சம் செலவில் 900 பிரிவுகள் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

## (ii) பன்றி உற்பத்தித் திட்டம்:

இத்திட்டம் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம், வட ஆற்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், 3 பெண் பன்றிகள் கொண்ட மொத்தம் ரூ. 5,000 மதிப்புள்ள பன்றி வளர்ப்புப் பிரிவுகளை அமைக்க குறுநில விவசாயிகளுக்கு ரூ. 1,250-ம் வேளாண் தொழிலாளருக்கு ரூ. 1,665-ம் மானியம் அளிக்கப்படுகிறது.

1981-82 முதல் 1985-86 வரை, 200 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, ரூ. 3,065 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. 1986–87–ல், ரூ. 2.74 இலட்சம் செலவில் ரூ.0.50 இலட்சம் மானியத்துடன் 25 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## (iii) கன்று வளர்ப்புத் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு கலப்பினக் கன்றுகளைப் பேணுவதில் உதவும் பொருட்டு, கால்நடைத்தீவன மானியம் கொடுக்கப்படுகிறது. 1977–78 முதல் 1985-86 வரை 41,649 கன்றுகள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, ரூ. 486.863 இலட்சம் மானியமாகச் செலவிடப்பட்டுள்ளது. 1986-87-ம் ஆண்டிற்கு வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் 2,500 கன்றுகளுக்கு ரூ. 56,385 லட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## (ஆ) மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:

1986-87 ஆம் ஆண்டிற்கு கோயம்புத்தூர், பெரியார், அண்ணா, மதுரை, காமராஜர், திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பசுந்தீவன உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூ. 1 லட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் இதுவரையிலும் ரூ. 0.92 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 42 மெட்ரிக் டன் பசுந் தீவன விதைகளும், 4.38 இட்சம் பசுந் தீவனப் பயிர் நறுக்குகளும், மரக் கன்றுகளும், 31-12–1986 வரை வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 1987–88 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் புதிய கால்நடை மருந்தகம் ஒன்று ரூ. 2.95 இலட்சம் செலவில் திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## (இ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மலைப்பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கான அடிப்படை வசதிகளை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1985–86-ல் குருத்துக்குளி பண்ணை மற்றும் கூடலூர் கால்நடை மருந்தக அபிவிருத்திக்காக ரூ. 6.39 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1986–87–ல், 22 கால்நடை கிளை நிலையங்களில் உறைவிந்து உற்பத்தியைப் புகுத்தவும், குருத்துக்குளி பசுந் தீவனப் பண்ணையில் வேலி அமைக்கவும் ரூ.5.25 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஹோல்ஸ்டின் ப்ரிசியன் விந்து குழல்கள் கிடைக்கச் செய்யும்படி உதகமண்டலத்திலுள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் 1987-88–ல் ரூ. 100 இலட்சம் செலவில் உறைவிந்து வங்கி ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## (ஈ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ், கால்நடை பராமரிப்புப் பணிகள் மூலம் பழங்குடிப் பெருமக்களின் பொருளாதாரம் ஏற்றம் பெற தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. இத்திட்டம் சேலம், வட ஆற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

1986–87–ல் பழங்குடியினரின் நலனுக்காக கீழ்க்கண்டப் பணிகளை நிறைவேற்ற ரூ. 19.60 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | கறவை மாடுகள் வழங்கல் | 100 பிரிவுகள் |
| 2. | செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகள் வழங்கல். | 200 பிரிவுகள் |
| 3 | வேலை மாடுகள் வழங்கல் | 480 ஜதைகள் |
| 4. | கன்று வளர்ப்பு | 50 எண்ணிக்கை |

## (உ) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம்:

தொடர்ந்து நிலவும் வறட்சியினால் ஏற்படும் பிரச்சனையை குறைக்கும் வகையில் 50 சதவீதம் மத்திய உதவியுடன் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், தர்மபுரி, புதுக்கோட்டை, சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டங்களில் கால்நடைப் பராமரிப்பு பணிக்காக இத்திட்டத்தின்கீழ் 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 41.60 லட்சம் நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேலும் சில பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(ஊ) ஒருங்கிணைந்த ஊர்க் வளர்ச்சித் திட்டம்:**

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களுக்கு 50 சதவிகிதம் மத்திய அரசின் நிதி உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் கறவை மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், பன்றிகள் வழங்கப்படுகின்றன. சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதமும், குறு விவசாயிகள்/வேளாண் தொழிலாளர்களுக்கு 33–1/3 சதவீதமும் மானியம் இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படுகிறது.

1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் அடைந்த சாதனைகள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| (அ) கறவை மாடுகள் வழங்குதல் | 9,387 |
| (ஆ) செம்மறியாட்டுப் பிரிவுகள் அமைத்தல் | 5,723 |
| (இ) வெள்ளாடு பிரிவுகள் அமைத்தல் | 2,767 |
| (ஈ) கோழி வளர்ப்புப் பிரிவுகள் அமைத்தல் | 335 |
| (உ) வாத்து வளர்ப்புப் பிரிவுகள் அமைத்தல் | 428 |
| (ஊ) பன்றி வளர்ப்புப் பிரிவுகள் அமைத்தல் | 110 |

**22. ஒருங்கிணைந்த மாதிரி அளவீடுத் திட்டம் (மாநில அளவில்):**

பால், முட்டை, கம்பளம் கம்பளி, இறைச்சி ஆகிய முக்கிய கால்நடைப் பொருட்களின் வருடாந்திர உற்பத்தியை மதிப்பீடு செய்வதற்கும் கால்நடைகளைப் பேணும் செயல்முறைகளை ஆய்வு செய்வதற்கும் 1977–78 முதல் ஒருங்கிணைந்த மாதிரி அளவீடுத் திட்டம் இம்மாநிலத்தில் செயல்படுகிறது. 1977-78 முதல் 1985-86 வரை 2,085 கிராமங்களில் இந்த அளவீடுகள் முடிந்துள்ளன. 1985-86-ம் வருடத்திற்கான மதிப்பீட்டின் முடிவுகள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| (அ) பால் உற்பத்தி ('000' டன்) | 3,118.35 |
| (ஆ) முட்டை உற்பத்தி (மில்லியனில்) | 2,067.06 |
| (இ) இறைச்சி உற்பத்தி (மில்லியன் கிலோக்களில்) | 32.86 |

1986–87-ம் ஆண்டிற்கான இந்த மதிப்பீடு நடந்து வருகிறது. அது 1987–88 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**23. மாதிரி அளவீடுத் திட்டம் (மாவட்ட அளவில்):**

மாவட்ட மாதிரி அளவீடுத் திட்டம் 1983-84-ம் ஆண்டிலிருந்து மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. பால், முட்டை, கம்பளம், இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தி மதிப்பீட்டை மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில், அளவீடு செய்வதும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட



கிராமங்களில், பால் மற்றும் முட்டைகள் உற்பத்தி செலவை ஆய்வு செய்வதும் இந்த அளவீட்டின் நோக்கமாகும். தற்போது இத்திட்டம் வட ஆற்காடு, பெரியார், மதுரை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**24. கால்நடை இடைக்கால கணக்கெடுப்பு (மாநில அளவில்):**

இத்திட்டம் 1982-ம் ஆண்டு முதல் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. கால்நடை கணக்கெடுப்பு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை எடுக்கப்படுகிறது. இவ்விதம் மேற்கொள்ளப்படும் இரண்டு கணக்கெடுப்புகளுக்கு இடைப்பட்ட ஆண்டுகளில், கால்நடைகளின் எண்ணிக்கையில் ஏற்படும் மாறுதல் வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுகள் போன்றவற்றை மதிப்பீடு செய்வதே இக்கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

## பகுதி III.

### கால்நடைப் பண்ணைகள்.

கால்நடைகளின் மேம்பாட்டிற்காக கால்நடைப் பண்ணைகள் கால்நடை பராமரிப்புத் துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கும் மற்றும் பல்வேறு கால்நடைப் பராமரிப்பு பணிகளுக்கும், திட்டங்களுக்கும் தேவையான தரமான பொலிக் காளைகள், கறவை மாடுகள், செம்மறிக்கிடாக்கள், பன்றிகள் ஆகியவற்றை இப்பண்ணைகள் வழங்கி வருகின்றன. மேலும் இப்பண்ணைகள் விவசாயிகளுக்கு தீவனப் பயிர் விதைகளையும் பொருட்களையும் அளிக்கின்றன.

கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் 9 மாவட்ட கால்நடைப் பண்ணைகளும், 2 செம்மறி ஆட்டுப் பண்ணைகளும் ஒரு கோழிப் பண்ணையும் உள்ளன.

(அ) அயலின கால்நடைப் பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

(ஆ) மாவட்டக் கால்நடைப் பண்ணைகள், ஒரத்தநாடு, கொருக்கை, ஹோசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, அபிசேகப்பட்டி, உதகமண்டலம்.

(இ) அரசு பால்பண்ணை, மாதவரம்.

செம்மறி ஆட்டுப் பண்ணைகள் சாத்தூரிலும் (காமராசர் மாவட்டம்), சின்னசேலத்திலும் (தென்னாற்காடு மாவட்டம்); கோழிப் பண்ணை காட்டுப்பாக்கத்திலும் (செங்கல்பட்டு மாவட்டம்) உள்ளன.

1986–87-ல் (31-12-1986 வரை) பண்ணைகளில் 9.42 இலட்சம் கிலோ கிராம் பால் உற்பத்தி செய்யப்பட்டது. 881 கன்றுகள் பிறந்துள்ளன. 11,232 மெட்ரிக் டன் தீவனப் பயிர் உற்பத்தி செய்யப்பட்டது. ஆடு வளர்ப்புப் பிரிவுகளில் 1,603 ஆட்டுக்குட்டிகள் பிறந்தன. 1,407 செம்மறியாடுகள் இன விருத்திக்காக விநியோகிக்கப்பட்டன. பன்றி வளர்ப்புப் பிரிவுகளில் 602 பன்றிக்குட்டிகள் பிறந்தன. 329 பன்றிகள் பொதுமக்களுக்காக விற்கப்பட்டன.

(1) அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை

செயற்கை கருவூட்டல் மூலம் கலப்பினவிருத்திப் பணியாற்றுவதற்கு தூய ஜெர்ஸி இனக் காளைகளைப் பெருக்கி, விநியோகிப்பதே இப்பண்ணையின் நோக்கமாகும். கால்நடை மருத்துவ நிலையங்கள் கிளை நிலையங்களின் மூலம் படிப்படையாக உறைவிந்து உத்தியை விஸ்தரிக்கும் பொருட்டு, உறைவித்துக் குழல்களையும், திரவ நைட்ரஜனையும் உற்பத்தி செய்யும் பணியினை இப்பண்ணை மேற்கொண்டுள்ளது.

1985–86-ல் ஈச்சங்கோட்டையிலுள்ள இந்தப் பண்ணையிலும் அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலும் 23,000 லிட்டர் திரவ நைட்ரஜனும், 3,09,000 உறைவிந்து குழல்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

1986–87-ம் ஆண்டில் (31–12–1986 வரை) 19,400 லிட்டர் திரவ நைட்ரஜனும், 3,63,000 உறைவிந்து குழல்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

(2) அரசு பால்பண்ணை, மாதவரம்.

சென்னை மாநகரத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட கால்நடைகளை வைத்து பராமரிப்பதற்காக இப்பண்ணை முதன் முதலில் துவங்கப்பட்டது.

(அ) ஓங்கோல் கால்நடை வளர்ப்புப் பிரிவு.

பாலுக்கும், உழைப்புக்கும் ஏற்ற இரட்டைப் பயனுள்ள ஓங்கோல் இன ஆவினங்களை உற்பத்தி செய்து அவற்றை விவசாயிகளுக்கு விநியோகிப்பதே இப்பிரிவின் நோக்கமாகும். இப்பிரிவின் அடிப்படை மந்தை இருப்பாகிய 20 மாடுகள் தற்போது 88-ஆக அதிகரித்துள்ளது.

(ஆ) வற்றிய பசு மற்றும் எருமைகளை அழிப்பதிலிருந்து காத்தல்.

வற்றிய பசு மற்றும் எருமைகளை அழிப்பதிலிருந்து காக்கும் பணி இப்பண்ணையில் மேற்கொள்ளப்படுகிறது.



பகுதி IV.

கால்நடை நலப் பணிகள்.

1. கால்நடை மருத்துவ நிலையங்கள்.

(அ) கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள் முதலியன.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழி மனிதர்களுக்கு மட்டும் அன்றி கால்நடைகளுக்கும் பொருந்தும். கால்நடைகள் ஆண்டு முழுவதும் விஷக் கிருமிகளாலும், நோய் கிருமிகளாலும் தாக்கப்பட்டு, நோய் அடைகின்றன. அதனால் கணிசமான அளவில் கால்நடைகள் இறக்கின்றன. மேலும் உற்பத்தி குறைகிறது. எனவே, உயிரைக் கொல்லும் நோய்களிலிருந்து நம்முடைய கால்நடைகளைக் காப்பாற்றுவதற்காக தேவையான தடுப்பு முறைகளும், தகுந்த சிகிச்சை [illegible] அளிப்பது அத்தியாவசியமாகிறது. இதைக் கருத்திற்கொண்டு கால்நடைப் பராமரிப்புத் துறை 782 கால்நடை மருத்துவ நிலையங்களை இம்மாநிலத்தில் இதுவரையிலும் கீழ்க்கண்டவாறு திறந்துள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | கால்நடை பிரதம மருத்துவ நிலையங்கள் .. | 22 |
| 2. | கால்நடை மருத்துவ மனையுடன் கூடிய கேந்திர கிராம நிலையம் .. | 1 |
| 3. | கால்நடை மருத்துவ மனைகள் .. | 54 |
| 4. | கால்நடை மருந்தகம் கூடிய கேந்திர கிராம நிலையங்கள் | 21 |
| 5. | கால்நடை மருந்தகங்கள் .. | 684 |
| | மொத்தம் .. | 782 |

[illegible] (31-12-1986 வரை) 23.17 இலட்சம் [illegible] [illegible] அளிக்கப்பட்டுள்ளது. 3.80 இலட்சம் [illegible] [illegible] ஆண்மை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. [illegible] [illegible] கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

மேலும் கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம், கேந்திர கிராமத் திட்டம் செயல்படும் [illegible] [illegible] கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவை [illegible] [illegible] நோயுற்ற கால்நடைகளுக்கு [illegible]

[illegible]

—[illegible]

(ஆ) கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்.

தகுந்த நோய்த் தடுப்புப் பணிகளை ஆற்றுவதற்காக 12 கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நோய்க் கூறுகளைக் கண்டுபிடிப்பதற்காக மதுரையில் எக்ஸ்ரே பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சாணம், இரத்தம், சிறுநீர் மற்றும் பால் ஆகியவற்றின் மாதிரிகள் மொத்தம் 2,73,311 எண்ணிக்கை அளவில் பரிசோதிக்கப்பட்டன. மேலும் 1,130 கால்நடைகளுக்கு காசநோய் சோதனையும் 4,217 கால்நடைகளுக்கு ப்ருசல்லோசன் சோதனையும் நடத்தப்பட்டன. அதோடு பட்டுமல்லாது இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்திற்கு 960 மாதிரிகளும் சென்னை கால்நடை கல்லூரிக்கு 303 மாதிரிகளும் சோதனைக்காக அனுப்பப்பட்டன.

(இ) நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு.

பல்வேறு கால்நடை பராமரிப்புத் திட்டங்களின் கீழ் 46 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் இயங்குகின்றன. இவற்றின் மூலம் உள் அமைந்த கிராமங்களிலுள்ள விவசாயிகளின் இல்லத்திற்கே சென்று மருத்துவப் பணி ஆற்றப்படுகிறது. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு செய்த பணிகள் ஆவன:

| | |
|---|---|
| சிகிச்சை செய்யப்பட்டவை | 90,362 |
| ஆண்மை நீக்கம் செய்யப்பட்டவை | 15,996 |
| குடற்புழு நீக்கம் செய்யப்பட்டவை | 2,31,740 |
| தடுப்பூசிப் போடப்பட்டவை | 2,00,772 |
| செயற்கை முறை கருவூட்டப்பட்டவை | 8,236 |

(ஈ) மருந்து கிடங்குகள்.

கால்நடை பராமரிப்பு அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் கால்நடை நலப் பணிகளை சீரிய முறையில் செவ்வனே ஆற்றும் பொருட்டு போதுமான மருந்துகள் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுகின்றன. தற்போது 4 மருந்து கிடங்குகள், நாமக்கல், கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கற்பட்டு ஆகிய இடங்களிலுள்ளன. இந்த வசதிகள் வருங்காலத்தில் மண்டல அளவில் படிப்படியாக விரிவாக்கப்படும். மண்டல அளவில் ஆன மருந்து கிடங்கு ஒன்று திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், 1987–88-ம் ஆண்டில் மதுரையில் மற்றொரு கிடங்கு அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்:

கால்நடைகளுக்கிடையே பேரிழப்பையும், பால் மற்றும் இறைச்சி உற்பத்தியின் வீழ்ச்சியையும் உண்டு பண்ணும் கொடிய தொற்று நோய் வெக்கை நோயாகும். தற்போது தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட பிரிவுகள் மூலம் வெக்கை நோய் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன:—



| | |
|---|---|
| (i) மாவட்ட குழுக்கள் | 18 |
| (ii) கண்காணிப்புப் பிரிவுகள் | 10 |
| (iii) சோதனைச் சாவடிகள் | 10 |

(அ) வெக்கை நோய் மாவட்டக் குழுக்கள்.

வெக்கை நோய் தாக்கக்கூடிய யாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள் போன்ற கால்நடைகளுக்கு மாவட்டக் குழுக்களின் மூலம் தடுப்பூசிகள் போடப்பட்டு, அவற்றின் நோய் எதிர்ப்புத் திறன் அதிகரிக்கப்படுகிறது. கண்காணிப்புப் பிரிவுகள் பணியாற்றும் பகுதி நீங்கலான இடங்களில், மாவட்டம் முழுவதிலும் திட்டமிட்ட வழியில் தடுப்பூசிகள் போடப்படுகின்றன.

(ஆ) வெக்கை நோய் கண்காணிப்பு பிரிவு.

மாநில எல்லையோரப் பகுதிகளில் 15 கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள கால்நடைகளுக்கு, கண்காணிப்புப் பிரிவுகள் தடுப்பூசி நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன. இதன்மூலம் நோய் இல்லா நிலை உண்டாகி நோய் பரவுதல் தடுக்கப்படுகிறது.

(இ) வெக்கை நோய் சோதனைச் சாவடிகள்.

இம்மாநிலத்திற்குள் வருவதும், மாநிலத்திலிருந்து வெளியே செல்லவும் ஆகிய கால்நடைகளுக்கு வெக்கை நோய் சோதனைச் சாவடிகளில் உள்ள பணியாளர்களால் இந்நோய்க்கு எதிராக தடுப்பூசி போடப்படுகிறது.

1986–87-ல் (31–12–1986 வரை) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டப் பணியாளர் மற்றும் இதர பணியாளர்களால் 45.31 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசிகள் போடப்பட்டு, வெக்கை நோயிலிருந்து காக்கப்பட்டுள்ளன.

3. கோமாரி நோய் கட்டுப்பாட்டுத் திட்டம்:

(அ) துறை மூலம்

பல்வேறு முன்னேற்றத் திட்டங்களின் மூலம் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் கால்நடைகளைக் காக்கும் பொருட்டு 1976–77-ம் ஆண்டு முதல் மத்திய அரசு நிதி உதவியுடன் கோமாரி நோய்த் தடுப்பு திட்டம் செயல்பட்டு வருகிறது. தடுப்பூசி போடுவதற்கு 'பாலிவலண்ட்' தடுப்பு மருந்து பயன்படுத்தப்படும்பொழுது அம்மருந்தின் விலையில் 50 சதவீதத்தை மத்திய மற்றும் மாநில அரசும் சமமாக ஏற்றுக் கொள்கின்றன. மீதி விலை கால்நடை உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. ஆனால், மோனோவேலண்ட் தடுப்பு மருந்து பயன்படுத்தப்படுமாயின், முழுக் கிரயமும் 50 சதவீத அடிப்படையில் மத்திய, மாநில அரசுகளினால் சமமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன 1986–87-ல் (31–12–1986 வரை) 3.33 இலட்சம் கோமாரி நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

(ஆ) தேசிய பால்வள வாரியத்தின் மூலம்:

நம் மாநிலத்தில் கோமாரி நோயைக் கட்டுப்படுத்துவதற்காக ஏழாண்டு திட்டம் ஒன்றை தேசிய பால்வள அபிவிருத்தி வாரியம் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 20 கோடியாகும். இது 1983–84-ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இலவசமாக தடுப்பூசிகள் போடப்படுகின்றன.

1986–87 ஆம் ஆண்டில் திருநெல்வேலி—கட்டபொம்மன், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர் ஆகிய மாவட்டங்களிலும், மற்றும் கோயம்புத்தூர், பெரியார், மதுரை ஆகிய மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1986–87-ல் (31-12-1986 வரை) 12.7 லட்சம் கோமாரி நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

(இ) மத்திய அரசின் உதவி மூலம்:

கோமாரி நோய்த் தடுப்பூசி, சில தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் 'மோனோவேலண்ட்' தடுப்பூசி விலையில் 50 சதவீதம் மத்திய அரசு உதவியுடனும், 50 சதவீதம் மாநில அரசு உதவியுடனும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பாலிவேலண்ட் தடுப்பூசி விலையில் மத்திய அரசு 25 சதவீதமும் மாநில அரசு 25 சதவீதமும் ஏற்கின்றன. மீதி 50 சதவீதத்தை விவசாயிகளே ஏற்பார்கள்.

(ஈ) கால்நடை நோய் கண்காணிப்புத் திட்டம்:

கொள்ளை நோய் பரவுவதைக் கண்காணிக்கும் நிலையம் ஒன்று 1983–84-ல் சென்னையில் துவக்கப்பட்டது. கொள்ளை நோய்களின் தன்மை, நோய் ஆரம்பம், தொற்றும் வழிகள், பாதிப்பு, பரவும் விதம், இன்னும் கால்நடைகளை கண்டறிதல் போன்றவற்றைத் தெளிவுபடுத்துவதற்காக ஆய்வுகளை இப்பிரிவு மேற்கொள்கிறது. தமிழகத்தில் ஆங்காங்கே ஏற்பட்ட கொள்ளை நோய்கள் பற்றிய விவரங்களை 1983–84 முதல் 1986–87 வரை இந்நிலையம் சேகரித்துள்ளது. இவை பற்றிய வரைபடங்கள் தயாரித்தல், புள்ளி விவரங்களைப் பகுப்பாராய்தல் ஆகிய வேலைகள் தற்போது நடைபெறுகின்றன.

(உ) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களின் [illegible] கட்டுப்பாடும் சம்பந்தப்பட்ட இதர அம்சங்களும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களை கட்டுப்படுத்தும் திட்டம் ஒன்று 1984–85-ம் ஆண்டிலிருந்து ரூ. 35.66 லட்சம் செலவில் 50 சதவீதம் மத்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் இத்திட்டம் தொடரப்படும். இத்திட்டப் பணிகள் பின்வருமாறு:—



(அ) நோயற்ற மண்டலம் அமைத்தல்:

முதன் முதலில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நோயற்ற மண்டலப் பகுதி ஒன்றை ஏற்படுத்தி அதிலிருந்து கால்நடைகளை வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு வசதி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் கீழ்க்கண்ட மூன்று பகுதிகளை உடையது:—

(i) பெருமளவில் தடுப்பூசி போடுவது.

(ii) சோதனைச் சாவடிகள்.

(iii) நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு பிரிவுகள்.

(i) பெருமளவில் தடுப்பூசி போடுதல்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கால்நடைகள் அனைத்திற்கும் மற்றும் எல்லையோர மாவட்டங்களில் 40 கிலோ மீட்டருக்கு உள்ளான இடைப்பட்ட மண்டலத்தில் வெக்கை நோய், கோமாரி நோய்த் தடுப்பூசிகள் இலவசமாகப் போடப்படுகின்றன.

1986–87 ஆம் ஆண்டில் (31–12–1986 வரை) தடுப்பூசி போட்ட விவரங்கள் பின்வருமாறு:—

பெருமளவில் தடுப்பூசி 1,12,065.

இடைப்பட்ட மண்டலம் 1,15,578.

(ii) சோதனைச் சாவடிகள்:

மாவட்டங்களுக்கிடையேயுள்ள எல்லைகளின் வழியாக கால்நடைகள் வெளியேறுவதை தடுக்க தடுப்பு சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வெக்கை மற்றும் கோமாரி நோய்க்கு எதிராக தடுப்பூசிகள் போடப்பட்ட கால்நடைகள் மட்டும்தான் நோயற்ற மண்டலப்பகுதிகளில் நுழைய அனுமதிக்கப்படுகின்றன.

(iii) நோய்க் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு பிரிவுகள்:

பெருமளவில் தடுப்பூசி போடப்பட்ட பிறகு, தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளில் ஏதேனும் நோய் எஞ்சியிருக்கிறதா என்று கண்டறிவது அவசியமாகிறது. அப்படிப்பட்டவற்றைக் கண்டறிந்து அகற்ற நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு பிரிவுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

(ஆ) வெறிநாய் நோய்த் தடுப்புப் பிரிவு:

வெறிநாய் நோய் மனிதர்களுக்கு பரவும் தன்மையதாகும். இந்த வெறிநாய் நோய்க்கு எதிராக காக்கும் செயலுக்கு முதலில் கோயமுத்தூர் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா வளர்ப்பு நாய்களுக்கும் அவற்றின் சொந்தக்காரர்கள் செலவில்

கட்டாயமாக தடுப்பு ஊசி போடப்படுகிறது. அதன் பிறகு
உரிமம் வழங்கப்படுகிறது. தெருவில் அலையும் நாய்கள் பிடிக்கப்
பட்டு கொல்லப்படுகின்றன. 1986–87–ஆம் ஆண்டில் (31-12-1986
வரை) 2,300 நாய்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன. 1,232
நாய்கள் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டன.

(இ) கோழி நோய் கண்டறிதல்:

சேலம், பெரியார், கோயமுத்தூர் ஆகிய மாவட்டங்களில்
வாணிபத்திற்கான கோழிப் பண்ணைகள் அமைத்தல் பிரசித்த
மாகி வருகிறது. எனவே, ஒரு பிரதான இடத்தில் அதாவ.
ஈரோட்டில் ஒரு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடத்தை
அமைப்பதற்கான அவசியம் ஏற்பட்டது. இதன் மூலம் கோ
நோய்களைக் கண்டறிந்து அவற்றிற்கான தகுந்த தடுப்பு மற்று
சிகிச்சை முறைகளை தெரிவித்து விவசாயிகளுக்கு உதவி செய்ய
படுகிறது. இந்த ஆய்வுக்கூடம் விவசாயிகளுக்காக கோழி
தீவனத்திற்கான ஆராய்ச்சியையும் செய்து வருகின்றது.

பகுதி V.

கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை.

(1) தடுப்பூசி மருந்து உற்பத்தி:

இம் மாநிலத்தில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவதன்
மூலம் அவற்றின் நலனைப் பேணுவது கால்நடைப் பராமரிப்புத்
துறையின் அடிப்படை பணியாகும். கால்நடை நோய்களை
கட்டுப்படுத்தும் தடுப்பூசி மருந்துகள் முதன்முதலில் இசாத்
நகரில் உள்ள இந்திய கால்நடை நோய் ஆராய்ச்சி நிலையத்தி
லிருந்து விலைக்கு வாங்கப்பட்டன. குறுகிய காலத்தில் தேவை
யான தடுப்பூசி மருந்துகளை பெறுவதற்காக 1932–ஆம் ஆண்டில்
கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் ஏற்படுத்தப்பட்டது.
தற்பொழுது இராணிப்பேட்டையிலுள்ள இந்த நிலையம் கீழ்க்
கண்ட தடுப்பூசி மருந்துகளை வழங்கி வருகிறது:—

கால்நடை : வெக்கை நோய், தொண்டை அடைப்பான்,
சப்பை நோய், அடைப்பான் புருசல்லா.

செம்மறி ஆடு : செம்மறி ஆட்டு அம்மை, வெக்கை நோய்
துள்ளுமாரி.

கோழி : கோழி கழிச்சல், கோழி அம்மை, புறா அம்மை.

நாய் : டிஸ்டம்பர், வெறி நாய்க்கடி.



(2) நோய் கண்டறிதல் :

நோய்களைக் கண்டறிவது இத்துறையின் முக்கிய பணி
யாகும், இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு
மருந்து நிலையத்தில் விஷம் உண்டதால் கால்நடைகள் இறத்தல்
உட்பட கால்நடைகளுக்கான எல்லா நோய்களையும் ஆராய்
வதற்கு தேவையான பணியாளர்களும், உபகரணங்களும்
உள்ளன. கால்நடைகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள்,
கோழிகள் ஆகியவற்றை தாக்கும் நோய்களை ஆராய்வதற்காக
இந்நிலையத்தில் மூன்று அலுவலர்கள் பணிபுரிகின்றனர். அவர்
களுக்கு உதவி செய்ய நுண் ஆராய்ச்சியாளர், நோய்க் குறி
ஆய்வு வல்லுநர், உயிர் வேதியியல் வல்லுநர் ஆகியோர்
உள்ளனர்.

(3) பயிற்சி:

பலவிதமான நோய் காப்பு மற்றும் உயிர் வேதியியல்
ஆராய்ச்சிக்காக கால்நடை நிலையங்களில் நவீன கருவிகள்
உள்ளன. நோய் காப்பு, உயிர் வேதியியல் ஆகியவற்றில் பயிற்சி
அளிக்கப்படுகிறது. அதனால் களப் பணியாளர்கள் சோதனைக்
கான முறைகளை அறிகின்றனர். கால்நடை உதவி இயக்குநர்
களுக்கும் கால்நடை உதவி மருத்துவர்களுக்கும் இந்நிலையத்தில்
பயிற்சி அளிக்கப்படுகிறது. இதோடு கூட நிலையத்திலுள்ள
பணியாளர்களுக்கும் கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்
களுக்கும் மற்ற மாநிலங்களில் உள்ள விஞ்ஞானிகளுக்கும் கால்
நடை நோய் மற்றும் பொதுச் சுகாதாரம் பற்றியவற்றில் பயிற்சி
அளிக்கப்படுகிறது.

இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து
நிலையத்தில் கால்நடைகளின் நோய்களை தகுந்த நேரத்தில்
சரியாக ஆராய்ந்து நோய்கண்டறிய தேவையான மருந்துகள்
உற்பத்திச் செய்யப்படுகின்றன. இவற்றில் புருசல்லா ஆண்டிஜன்,
சால்மொநெல்லா ஆண்டிஜன், டியூபர்க்குளின், ஜோனின்
பி.பி.எல்.ஓ. ஆண்டிஜன் ஆகிய மருந்துகளும் அடங்கும்.

(4) மருந்து தயாரிக்கும் நிலையம் :

இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து
நிலையத்தில் உருவாக்கப்பட்ட மருந்து தயாரிக்கும் நிலை
யத்தின் மூலம் பலதரப்பட்ட மருந்துக்கலவைகள் தயாரிக்கப்பட்டு
களப் பணியாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. இந்
நிலையத்தில் கீழ்க்கண்ட களிம்புகள் தயாரிக்கப்படுகின்றன:—

(அ) சாலிசில்க் களிம்பு.

(ஆ) அயோடின் களிம்பு.

(இ) துத்தநாக களிம்பு.

(ஈ) டர்பன்டைன் தைலம்.

1987-88 ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்படும் திட்டங்கள்.

வரிசை
எண்.

1987-88-ல் செலவு.
(ரூபாய் இலட்சத்தில்)

1. உறைவிந்து முறையை விஸ்தரித்தல் (125 நிலையங்கள்)

2. அனரோபிக் தடுப்பு மருந்துப் பிரிவு இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் நிறுவுதல் .. 11.72

3. இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள உறைய் உலர் பிரிவை வலுப்படுத்துதல் .. 9.50

4. இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள கோழி நோய்த் தடுப்பு மருந்துப் பிரிவை வலுப்படுத்துதல் .. 10.00

5. விவசாயிகளின் நிலங்களில் தீவனப் புல் செயல் விளக்கப் பாத்திகளை அமைத்தல் (500 பாத்திகள்) .. 2.75

6. எந்திர இயக்கப் புல்வெட்டிகள் விநியோகித்தல் (50 எண்ணிக்கை) .. 1.25

7. தென்னை மரங்களுக்கிடையில் தீவனப் பயிர் நடுதல் (50 ஹெக்டேர்) .. 0.50

8. தீவனப் பயிர் விதைகள் துண்டுக்குகள், மரக்கன்றுகள் விநியோகித்தல் .. 0.25

9. கொல்லைப்புறக் கோழி வளர்ப்புப் பிரிவுகள் நிறுவுதலும், அபிவிருத்தியும் (2,000 பிரிவுகள்) .. 1.50

.. 2.50

10 'ஸ்பிரிங்' கோழிக் குஞ்சுப் பிரிவுகள் ஏற்படுத்துதல் (2,000 பிரிவுகள்)

11. உறைவிந்து கருவூட்டு முறையில் பயிற்சி அளித்தல் (350 பேருக்கு) .. 1.10

12. மதுரையில் மருந்துக் கிடங்கு ஒன்று ஏற்படுத்துதல் .. 0.10

.. 1.87



(ரூபாய் இலட்சத்தில்.)

13. கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்களில் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் (10 அலுவலகங்கள்) .. 1.70

.. 4.12

14. சேலம் மண்டலத்தை இரண்டாகப் பகுத்தல்.

15. கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் ஏற்படுத்துதல் (ஒன்று) .. 25.00

மொத்தம் .. 73,96

## அரசு நிறுவனங்கள்.

### (ஆ) தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகம்.

கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு வருவாயைப் பெருக்கவும் வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் கோழி வளர்ப்புத் தொழிலை ஊக்குவிப்பதற்காக 'டாப்கோ' நிறுவனம் தொடங்கப்பட்டது.

2. தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம் (டாப்கோ): 12-7-1973 ஆம் நாளன்று கோழி வளர்ப்பினை மேம்படுத்தி பல வளர்ச்சித் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தவும், வணிக முறையில் இத்தொழிலினை விரிவாக்கவும் ரூபாய் 100 இலட்சங்களை மூலதனமாகக் கொண்டு ஓர் அரசு நிறுவனமாகத் துவக்கப்பட்டது. தலைமை அலுவலகத்தை சென்னையில் கொண்டுள்ள இந்நிறுவனம் கீழ்க்கண்ட அலகுகளைப் பெற்றுள்ளது:—

1. தீவனக்கலவை நிறுவனம் .. நந்தனம், திருப்பூர், கப்பலூர்.
2. குஞ்சு பொரிப்பகம் .. அரசூர், கப்பலூர்.
3. விற்பனை மையம் .. சென்னை, செங்கல்பட்டு, வேலூர், சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி.
4. கோழி வளர்ப்பு மற்றும் விரிவாக்க மையம் .. செங்கல்பட்டு, சேசன்சாவடி, பெருந்துறை, கொட்டப்பட்டு.

3. தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் கோழித் தீவனம், விரிய இன முட்டையிடும் கோழிக் குஞ்சுகள், மற்றும் பிராய்லர் இறைச்சிக் கோழிக் குஞ்சுகள், இளம் பெட்டைக்கோழி வளர்ப்பு மற்றும் முட்டைகள், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றி இறைச்சி/பன்றி இறைச்சியின் துணைப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனையிலும் ஈடுபட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 3

4. தமிழ்நாடு கோழி வளர்ச்சி கழகத்தின் நோக்கங்களை
ஈடேற்ற 1987-88ல் இப்போதுள்ள திட்டங்களுடன் கூடுதலாக
கோழிக் குஞ்சு மற்றும் கோழித் தீவன உற்பத்தியை விரிவாக்க
உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1987-88ஆம் ஆண்டில் ரூ. 4.00
இலட்சத்தில் திருப்பூர் மற்றும் நாமக்கல்லில் இரண்டு நடமாடும்
கோழி நோய் சிகிச்சை நிலையம் அமைக்க திட்டமிடப்
பட்டுள்ளது, மேலும் சென்னையில் ரூ. 1.50 லட்சம் முதலீட்டில்
ஜப்பானியக்காடை குஞ்சுகள் உற்பத்தி செய்ய புதிய குஞ்சு
பொரிப்பகம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது மலைவாழ்
பகுதி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் முதன்முறையாக
ரூ. 5.00 லட்சத்தில் முயல்குட்டி உற்பத்தி மற்றும் முயல்
வளர்ப்பு விளக்கப்பண்ணை நிறுவப்பட உள்ளது. ஆதிதிராவிடர்
நல சிறப்புத் திட்டத்தின்கீழ் மூன்று மாவட்டங்களில்
திராவிடர்களின் நலனுக்காக இறைச்சி கோழிப் பண்ணைகள்
அமைத்து கொடுக்கப்பட்டு வருகிறது. கால்நடை அபிவிருத்தி
திட்டத்தின் கீழ் 100 கோழிகள் கொண்ட முட்டையிடும் கோழிப்
பண்ணைகள் டாப்கோ மூலம் 4 மாவட்டங்களில் அமைத்து
கொடுக்கப்படுகிறது. 1986-87-ல் தமிழக அரசு முதன்முதலாக
தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், சிறப்பு கூட்டுத் திட்டம்
மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஆதி
ஆதிராவிடர்களுக்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் சமுதாய
கோழி வளர்ப்பு பேட்டைகள் அமைக்க அனுமதியளித்துள்ளது.
1987-88-ல் மற்ற மாவட்டங்களுக்கும் இத்திட்டங்கள் விரிவு
படுத்தப்படும். வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத்
திட்டத்தின் கீழும் கோழி வளர்ப்பை ஊக்குவித்து வேலை
வாய்ப்பைப் பெருக்க டாப்கோ நிறுவனம் 1985-86 முதல் கோழி
வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இம்
மாநிலத்தில் கோழி வளர்ப்பை அதிகரிக்க பல்வேறு பகுதிகளிலும்
கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களில் ஆலோசனை பெறு
வதற்காக அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சார்பற்ற உறுப்
பினர்கள் கொண்ட ஒரு குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.

(ஆ) தமிழ்நாடு இறைச்சிக் கழகம்.

சென்னை மற்றும் புறநகர் வாழ்மக்கட்கு ஆரோக்கியமான
சத்துள்ள ஆடு, மாடு இறைச்சியினை வழங்கும் முகத்தான் தமிழ்
நாடு இறைச்சிக் கூட நிறுவனம் 1979-ல் நிறுவப்பட்டது. இந்த
நிறுவனத்தின் மூலப்பணியானது இதுநாள்வரை சென்னை
மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த நான்கு இறைச்சிக்
கூடங்களை குத்தகை அடிப்படையில் எடுத்து அவற்றினை
செயல் முறைப்படுத்துவது ஆகும். இந்த கூட்டு நிறுவனத்தின்
இதர தலையாய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றும்
முகத்தான் சென்னையிலிருந்து 27 கிலோ மீட்டர் தொலைவி
லுள்ள கொடுவள்ளி கிராமத்தில் பெரும் அளவிலான நவீன
இறைச்சிக் கூடம் ஒன்று கட்டப்படுவதற்கு திட்டமிடப்பட்டது.
சென்னை மாநில சுற்றுப்புற சூழல் மற்றும் பாதுகாப்பு உயர்
மட்டக் குழுவானது 24-3-1986—ல் நடைபெற்ற கூட்டத்தில்



1987 ஏப்ரல் 3]

சுற்றுப்புறச் சூழலுக்கு பங்கம் விளைவிக்கக்கூடும் என்னும் அடிப்
படையில் கொடுவள்ளியில் நவீன இறைச்சிக் கூடம் கட்டும்
திட்டத்தை கைவிட முடிவெடுத்து இதன் அடிப்படையில் அரசு
ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இதனை அடுத்து மாற்று
இடங்களை தேர்ந்தெடுத்து தமிழக அரசுக்கு பரிந்துரை செய்யு
மாறும் இந்த கூட்டு நிறுவனத்தின் தலைவர் கேட்டுக் கொள்ளப்
பட்டார். இவ்வாண்டிலேயே திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை
மாநகராட்சிகளில் நடத்தி வரக்கூடிய ஆடு மாடு இறைச்சிக்
கூடங்களை நவீனப்படுத்தும் பணியானது மேற்கொள்ளப்படும்.

மேற்காணும் தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகம் மற்றும்
தமிழ்நாடு இறைச்சிக் கழகம் ஆகிய இரண்டு கழகங்களையும்
இணைப்பதால் ஏற்படும் அனுகூலங்களைக் கருத்திற் கொண்டு
தமிழ்நாடு இறைச்சிக் கழகம், தமிழ்நாடு கோழி வளர்ச்சி
கழகத்துடன் இணைந்து ஒரே மேலாண் இயக்குநர் மற்றும்
தலைவரின்கீழ் இயங்க அரசு தீர்மானித்து உள்ளது.

136512
சென்னை 600 008.
Y21,31 N87
N87.36-3